# பகுதி II

## பகுதி II

### இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் நிதியும் | (1) |
| வங்கி மேற்பார்வை | (47) |
| வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | (51) |
| தொடர்பூட்டல் | (51) |
| நூலகமும் தகவல் நிலையமும் | (53) |
| நாணயம் | (53) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (55) |
| பொருளாதார ஆராய்ச்சி | (59) |
| ஊழியர் சேமநிதியம் | (62) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (65) |
| நிதியியல் உளவறிதல் பிரிவு | (67) |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | (69) |
| மனித வளங்கள் முகாமைத்துவம் | (71) |
| பயிற்சி | (73) |
| தகவல் தொழில்நுட்பம் | (77) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (79) |
| முகாமைத்துவ கணக்காய்வு | (81) |
| கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | (83) |
| கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | (87) |
| பணிமனை | (89) |
| மாகாண அலுவலகங்களின் கண்காணிப்பு | (90) |
| பொதுப்படுகடன் | (91) |
| பிரதேச அபிவிருத்தி | (96) |
| செயலகம் | (101) |
| பாதுகாப்புப் பணிகள் | (102) |
| புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள் | (102) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | (104) |
| நலன்புரி | (110) |

## பகுதி II

### இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் நிதியும் | (1) |
| வங்கி மேற்பார்வை | (47) |
| வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | (51) |
| தொடர்பூட்டல் | (51) |
| நூலகமும் தகவல் நிலையமும் | (53) |
| நாணயம் | (53) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (55) |
| பொருளாதார ஆராய்ச்சி | (59) |
| ஊழியர் சேமநிதியம் | (62) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (65) |
| நிதியியல் உளவறிதல் பிரிவு | (67) |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | (69) |
| மனித வளங்கள் முகாமைத்துவம் | (71) |
| பயிற்சி | (73) |
| தகவல் தொழில்நுட்பம் | (77) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (79) |
| முகாமைத்துவ கணக்காய்வு | (81) |
| கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | (83) |
| கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | (87) |
| பணிமனை | (89) |
| மாகாண அலுவலகங்களின் கண்காணிப்பு | (90) |
| பொதுப்படுகடன் | (91) |
| பிரதேச அபிவிருத்தி | (96) |
| செயலகம் | (101) |
| பாதுகாப்புப் பணிகள் | (102) |
| புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள் | (102) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | (104) |
| நலன்புரி | (110) |

1. கணக்குகளும் நிதியும்

## இலங்கை மத்திய வங்கி

### நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு அறிக்கை

நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு மூன்று அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது: 2009 ஆம் ஆண்டில், காணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக திருமதி மனோ ராமநாதன், நாணயச் சபையின் நியமன அங்கத்தவர் (கணக்காய்வுக் குழுவின் தவிசாளர்), திரு. எம்.ஆர். மிஹுஸ்லார் (பங்காளர் - கே.பி.எம்.ஜீ. போர்ட், ரோட்ஸ், தோர்டன் அன்ட் கம்பனி), திருமதி. ஏ.எம்.ஜே. பற்றிக் (பங்காளர் - எஸ்.ஜே. எம்.எஸ். அசோசியேட்ஸ்), கலாநிதி ரி.டபிள்யூ.ஆர்.பீ.ஏ.யூ. ஹேரத் (2009 மாச்சு வரை), திரு. பி.டீ.ஜே. பர்னாந்து (2009 ஏப்பிறல் முதல்), உதவி ஆளுநர், குழுவின் செயலாளர், ஆகியோர் பணியாற்றினார்கள்.

2009 ஆம் நிதி ஆண்டினுள் கணக்காய்வுக் குழு தடவைகள் கூடி பின்வரும் பணிகளை மேற்கொண்டது.

- 2008 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் இறுதிக் கணக்குகளின் வரைவினை கணக்காய்வாளர்கள் கையொப்பமிடுவதற்கு முன்னர் மீளாய்வு செய்து ஒருசில வெளிப்படுத்தல்கள் தொடர்பில் இணங்கியது.
- இலங்கை மத்திய வங்கியின் 2008 கணக்குகள் தொடர்பிலான வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- முகாமைத்துவக் கடிதத்தில் எழுப்பப்பட்டிருந்த விடயங்களுடன் தொடர்புடையதாக கணக்காய்வுக் குழுவினால் பின்வரும் விதப்புரைகள் மேற் கொள்ளப்பட்டன.
  - முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளரால் வெளிவாரி அறிக்கைகளின் சுயாதீனமான சான்றுப்படுத்தல்
  - சர்வதேச நிதி அறிக்கையிடல் முறைமை களுக்கமைய எந்தவொரு எதிர்கால சலுகைக் கடனையும் நியாய மதிப்பிடல்
  - ராஜகிரிய, தங்கு விடுதித் தொகுதியை சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் கீழ் பதிதல்
- நோக்கெல்லை வரையறைகளுக்கமைய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2010 கணக்காய்வுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
- வெளிவாரிக் கணக்காய்வாளர்களது 2009 கணக்காய்வுத் திட்டத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.
- 2009 ஏப்பிறல் மாதத்தில் பநா நிதியத்தின் பாதுகாப்பு மதிப்பாய்வுக் குழு இலங்கைக்கு வருகை தந்திருந்த போது அவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு, பாதுகாப்பு மதிப்பீட்டுக் குழுவின் பின்வரும் விதப்புரைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.
  - அங்கத்தவர்களின் தகைமைகள், குழுவுக்கான நியமனத்தைப் புதுப்பித்தல் தொடர்பிலான நிபந்தனைகள், முடிவுறுத்தல்கள், நியமன விதிகளுக்கான அளவீடுகள், மற்றும் இடர் முகாமைத்துவ வரைச்சட்டகத்தின் மேற்பார்வை ஆகியவை தொடர்பிலான தேவைகளைக் கூட்டிணைத்து கணக்காய்வுக் குழுவின் சேவை நியமங்களைத் திருத்தியமைத்தல்.
  - பகநி தர நியமங்களுக்கமைய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் தொடர்பில் தர மதிப்பீட்டு மீளாய்வினை மேற்கொள்ளல்
  - தகவல் தொழில்நுட்ப முறைமை போன்ற விடயங்களில் நிபுணத்துவம் பெறுதல் தொடர்பிலான பயிற்சித் திட்டங்களை 2009 திசெம்பரில் கணக்காய்வு செய்தல்
  - இடர் அடிப்படையிலான விதிமுறையின் கீழ் 2011 கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை 2009 செப்தெம்பரில் இடம்பெறச் செய்தல்.
- இலங்கை மத்திய வங்கி ஐந்தொகையின் முடக்க மதிப்பீட்டு வரைச்சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது.
- பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் தொடர்புடைய எறிவுகள் மீளாய்வு செய்யப்பட்டதோடு ஆயுட்கால மதிப்பீடு மற்றும் பணியாளர் கடன் திரட்சிகளின் கணிப்பீடுகளில் கழிவு வீதங்களைப் பயன்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.
- முன் கணக்காய்வுச் செயற்பாடுகளுக்கான தோற்றப்பாடுகள் தொடர்பில் விதப்புரைகள் மேற் கொள்ளப்பட்டன.
- முகாமைத்துவக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் கொள்ளளவு மற்றும் தர அபிவிருத்தி மீளாய்வுக் குள்ளாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு பநி கணக்காய்வுகளை அறிமுகப்படுத்துவதற்கான விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.
- விபரமான இடர் மதிப்பீட்டு ஆவணம், தொழிற்பாட்டு மற்றும் கொடுக்கல் வாங்கல் மட்டத்திலான இடர்நேர்வுகள் மற்றும் அவற்றின் தணித்தல் நடைமுறைகள் ஆகியவற்றைத் தொகுத்தல் தொடர்பில் விதந்துரைக்கப்பட்டன.
- முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளரின் முன்னேற்ற அறிக்கை தொடர்பில் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன.

# இலங்கை மத்திய வங்கி

## 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

## முகாமைத்துவக் கூற்று

**இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றுகையும்.**

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச்சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால் மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத்தன்மைக்கான பொறுப்புடைமையின் அடிப்படையானது அதன் பிரதானமான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு, வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளின் ஊடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக்கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்கு உள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக்கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமைவாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோளிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப்பின்னணியில் மத்திய வங்கியின் நிதிக் கூற்றுகளில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல், ஆகியவற்றை அமுலாக்குகின்றபோது உருவாகின்ற இலாபம் மற்றும்/அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவுசெய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச்சூழமைவிற்கிணங்க வரைவிலக்கணமளிக்கப்படுதலும் புரிந்துகொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43 ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு ஏர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } ஈஎப்/ஜே/சீபீ/எவ்ஏ/2010

ඔබේ අංකය / உமது இல / Your No. }

දිනය / திகதி / Date } 18 மார்ச்சு 2010

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான (இல 1 தொடக்கம் 41 வரையான) ஏனைய விளக்கக் குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு மற்றும் நாணயச் சட்ட அதிகாரச் சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு என்னால் நியமனம் செய்யப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

**நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக் கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரிப்பது மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்புக்களுக்களில் உள்ளடங்குகின்றன.

**கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இக்கணக்காய்வு சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் போதியளவான பிழைகள் அற்றவை என்பது தொடர்பாக நியாயமாக உறுதிப்படுத்தக் கூடியவாறு கணக்காய்வினைத் திட்டமிட்டு அமுல்படுத்துவது இந்நியமத்தின் பிரகாரம் அவசியமானவையாக உள்ளது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள், வெளிப்படுத்தல்கள் என்பவை தொடர்பான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளை அமுல்படுத்தல் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தவறுகள் மற்றும் மோசடிகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவான தவறான கூற்றுக்கள் தொடர்பான எச்சரிக்கையினை மதிப்பீடு செய்வதையும் உள்ளடக்கி கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் இடரை மதிப்பீடு செய்யும் போது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் சந்தர்ப்பதிற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை கணக்காய்வாளர் கருத்திற் கொள்ளவேண்டிய போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள், முகாமையால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய கணக்காய்வு நவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெறப்பட்டன என்றும் அதற்கமைய எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகிறேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகராச்சட்டதின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பினையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகராத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

**அபிப்பிராயம்**

இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் வங்கியின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைகளையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன்நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க அனைத்து பொருண்மையான அம்சங்களையும் நியாயமாக வழங்குகின்றது என நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்

எஸ் ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி } 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail } oaggov@sltnet.lk

# இலங்கை மத்திய வங்கி
## ஐந்தொகை
### திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | குறிப்பு | 2009 (ரூபா '000) | 2008 (ரூபா '000) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச்சமமானவையும் | | **147,871,157** | 167,338,807 |
| நிதியியல் சொத்துக்கள் | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | **56,275,323** | 50,381,845 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | **315,342,452** | 41,733,314 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்து பெறத்தக்கவை | | **2,429,319** | 1,427,899 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 6 | **76,509,781** | 72,399,875 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **598,428,032** | 333,281,740 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| முதலீட்டுப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | | **43,450,557** | 159,771,674 |
| அரசுக்கான முற்பணங்கள் | 7 | **73,880,500** | 76,307,700 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 8 | **1,136,596** | 1,577,301 |
| ஏனைய உள்நாட்டுப் பெறத்தக்கவை | | **595,444** | 659,770 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 9 | **43,855** | 50,729 |
| ஏனைய சொத்துக்கள் | | **1,497,973** | 1,364,690 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **120,604,925** | 239,731,864 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **719,032,957** | 573,013,604 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தூய்மை செய்யப்பட்ட தங்க இருப்பு | | **84,834,269** | 10,427,432 |
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | |
| பொருட்களின் இருப்பு | 10 | **2,157,200** | 1,961,687 |
| நானாவிதச் சொத்துக்கள் | | **4,092,428** | 2,405,922 |
| சொத்து, பொறிகள், இயந்திரங்கள் | 11 | **9,342,947** | 9,242,988 |
| அருவச் சொத்துக்கள் | 12 | **16,383** | 15,717 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழில்நிலைக்குப் பிந்திய நன்மைத் திட்டங்கள் | 36 | **293,476** | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | **100,736,703** | 24,053,746 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **819,769,660** | 597,067,350 |
| **பொறுப்புக்களும் பங்குகளும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 13 | **18,068,841** | 336,091 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை | 14 | **29,836,531** | 91,354,909 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 15 | **218,171,021** | 95,133,658 |
| ஏனைய வெளிநாட்டுச் செலுத்தப்பட வேண்டியவைகள் | 16 | **5,008,035** | 1,517,077 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **271,084,428** | 188,341,735 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 17 | **86,085,866** | 82,311,214 |
| அரச, அரச முயற்சிகளிலுள்ள மீதிகள் | 18(அ) | **2,347,709** | 1,245,624 |
| மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 18(ஆ) | **84,022,645** | 13,743,000 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 19 | **1,050,255** | 1,155,061 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | | **25,981,654** | 1,664,352 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **199,488,129** | 100,119,251 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **470,572,557** | 288,460,986 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 20 | **217,429,835** | 186,098,914 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | 21 | **567** | - |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய வேலைக்குப் பின்னைய நன்மைத் திட்டங்கள் | 36 | **-** | 1,026,698 |
| நானாவிதப் பொறுப்புக்களும் ஒன்றுசேர்ந்தவையும் | | **66,895** | 531,960 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **217,497,297** | 187,657,572 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **688,069,854** | 476,118,558 |
| **பங்குகள்** | | | |
| மூலதன நிதியம் | 22 | **25,000,000** | 25,000,000 |
| ஒதுக்குகள் | | **106,699,806** | 95,948,792 |
| **மொத்தப் பங்கு** | | **131,699,806** | 120,948,792 |
| **மொத்தப் பொறுப்புக்களும் பங்குகளும்** | | **819,769,660** | 597,067,350 |

இந்நிதிக் கூற்றுகளை வெளியிடுதல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2010 மாச்சு மாதம் 08 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

அஜித் நிவாட் கப்ரால் - ஆளுநர்

கே.எம்.ஏ.என். தவுலகல - முதன்மைக் கணக்காளர்

(பகுதி II - 8) தொடக்கம் (பகுதி II - 47) ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

## வருமானக் கூற்று

### திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2009 ரூபா "000 | 2008 ரூபா "000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டிவருமானம் | 24 | **4,595,856** | 11,129,190 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | **(4,177,107)** | 2,211,883 |
| விலை மாற்றங்களிலிருந்தான தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | **6,689,834** | 6,648,280 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **7,108,583** | 19,989,353 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 25 | **(1,832,436)** | (1,301,552) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(1,832,436)** | (1,301,552)) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் (நட்டம்) | | **8,842,035** | (22,810,925) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம் (நட்டம்)** | | **14,118,182** | (4,123,124) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 24 | **28,111,337** | 7,043,031 |
| வட்டிச் செலவு | 25 | **(2,534,820)** | (511,709) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **25,576,517** | 6,531,322 |
| ஏனைய வருமானம் | 26 | **544,217** | 454,250 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம் (நட்டம்)** | | **40,238,916** | 2,862,448 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| **ஆளணிச் செலவுகள்** | 27 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(2,128,264)** | (1,718,302) |
| - வரைவிலக்கணம் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(276,101)** | (215,066) |
| - ஓய்விற்குப் பின்னரான வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டச்செலவு | | - | (1,333,944) |
| | | **(2,404,365)** | (3,267,312) |
| பெறுமானத் தேய்வும் கடன்தீர்ப்பனவும் | | **(295,759)** | (302,977) |
| பொருட்பட்டியல் செலவு | | **(1,350,463)** | (926,586) |
| நிர்வாகச் செலவுகள் | 28 | **(913,307)** | (1,472,257) |
| **மொத்த தொழிற்பாட்டு செலவுகள்** | | **(4,963,894)** | (5,969,132) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)** | | **35,275,022** | (3,106,684) |
| வருமானவரி | 29 | **(1,636,373)** | (1,937,740) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம் / (நட்டம்)** | | **33,638,649** | (5,044,424) |

**விரிவான வருமானம் பற்றிய ஒன்றிணைந்த கூற்று**

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | **33,638,649** | (5,044,424) |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய நியாயப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **(2,887,636)** | 2,603,850 |
| மீள்மதிப்பிடல் இலாபம் | - | - |
| காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பிடல் | - | - |
| | **30,751,013** | (2,440,574) |

## இலங்கை மத்திய வங்கி

### உரிமை மூலதன அசைவுக் கூற்று

### 2009 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா “000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா “000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா “000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா “000 | திரட்டிய இலாபங்கள் ரூபா “000 | மொத்தம் ரூபா “000 |
|---|---|---|---|---|---|---|
| **2008 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | - | 2,706,067 | 102,147,926 | 26,520,374 | 131,389,367 |
| தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - | (5,044,424) | (5,044,424) |
| அதேநேர மொத்த தீர்ப்பனவின் கடன்கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 63,294 | (63,294) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 7,308,252 | (7,308,252) | - |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 4,413,887 | (4,413,887) | - |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றல் | - | - | - | (22,810,925) | 22,810,925 | - |
| இம வங்கி விசேட ஒதுக்குக்கான மாற்றல் | - | - | - | 150,377 | (150.377) | - |
| அரசுக்கான இலாப மாற்றல் | - | - | - | - | (8,000,000) | (8,000,000) |
| பொது ஒதுக்கிலிருந்து மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கிற்கான மாற்றம் | - | 24,985,000 | - | (24,985,000) | - | - |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய சந்தைப்பெறுமதி/ (நட்டம்) | - | - | - | 2,603,850 | - | 2,603,850 |
| **2009 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | 24,985,000 | 2,706,067 | 68,891,661 | 24,351,065 | 120,948,793 |
| தேறிய இலாபம் (நட்டம்) | - | - | - | - | 33,638,649 | 33,638,649 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 95,043 | (95,043) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 2,211,883 | (2,211,883) | - |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றல் | - | - | - | 8,842,035 | (8,842,035) | - |
| இம வங்கியின் விசேட ஒதுக்குக்கான மாற்றல் | - | - | - | 269,798 | (269,798) | - |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி /(நட்டம்) | - | - | - | (2,887,636) | - | (2,887,636) |
| அரசுக்கான இலாபமாற்றல்கள் | - | - | - | - | (20,000,000) | (20,000,000) |
| **2009 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 15,000 | 24,985,000 | 2,706,067 | 77,422,784 | 26,570,955 | 131,699,806 |

# இலங்கை மத்திய வங்கி

## காசுப் பாய்ச்சல் கூற்று

### திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2009 ரூபா '000 | 2008 ரூபா '000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| **மூலம்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **3,620,945** | 11,970,696 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **452,164** | 688,187 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **6,992,343** | 6,648,280 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம் / (இழப்பு) | | **673,475** | (269,850) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **468,899** | 454,182 |
| | | **12,207,825** | 19,491,495 |
| பகிர்ந்தளிப்புக்கள்: | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **1,963,574** | 1,447,241 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **2,156,462** | 507,687 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **3,747,815** | 3,608,251 |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவு | | **(21,256,640)** | 2,747,377 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **1,857,983** | 2,240,921 |
| | | **(11,530,806)** | 10,551,477 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்:** | 30 | **23,783,631** | 8,940,018 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு | | **(1,879,364)** | (304,851) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் அறவீடுகள் | | **2,688,756** | 252,307 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை / மீட்டல் | | **6,874** | (594) |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **1,367** | - |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | **-** | - |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **70,279,645** | 13,725,000 |
| | | **71,097,278** | 13,671,863 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **286,976,540** | (86,444,960) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **1,496,343** | (541,626) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ குறைப்பு | | **40,717,160** | (33,914,788) |
| ஏனைய உள்;ர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு மற்றும் கொடுபடத்தக்கவை | | **4,290** | (4,861) |
| கொடைகள் தவிர்ந்த சொத்துப் பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **387,795** | (2,269,492) |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | **75,691,109** | 206,080 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **2,203,105** | - |
| | | **407,476,342** | (122,969,647) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(336,379,064)** | 136,641,510 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **மூலம்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல் | | **(218,514,268)** | 219,507,915 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல் | | **249,845,187** | (206,772,722) |
| சுற்றோட்டத்திலுள்ள தேறிய நாணய வழங்கல் | | **31,330,919** | 12,735,193 |
| **கழிக்குக:** | | | |
| அரச கொடுக்கல் வாங்கல் மீதான சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | 31 | **(147,556,788)** | 125,419,584 |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றுறோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | 32 | **(4,149,819)** | 8,741,810 |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | | **(151,706,607)** | 134,161,394 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | **183,037,526** | (121,426,201) |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(121,365,370)** | 8,313,981 |
| ஏனைய நிதிகளின் கொடுப்பனவுகள் | | **-** | - |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | **20,000,000** | 8,000,000 |
| | | **(101,365,370)** | 16,313,981 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **284,402,896** | (137,740,182) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | | **(28,237,537)** | 7,841,345 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **8,769,887** | (554,517) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **167,338,807** | 160,051,979 |
| **31 திசெம்பரில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 33 | **147,871,157** | 167,338,807 |

## 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

### 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதித்தளம்

இவை இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பான அதிகாரம் வாய்ந்த நிறுவனமாக 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் (வங்கி அல்லது இ.ம.வ.) பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய விசேட நோக்கத்தையுடைய நிதிக் கூற்றுக்களாகும். இலங்கை மத்திய வங்கியானது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு, கொழும்பு 01, சனாதிபதி மாவத்தை, 30 ஆம் இலக்கத்தில் அமையப்பெற்றுள்ளது.

மேற்படி நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2010 மாச்சு 08 திகதி நாணயச் சபையின் சார்பில் அங்கீகாரமளிக்கப்பட்டது.

### 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 தயாரிப்பு அடிப்படை

இந்நிதிக் கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டிடம், மற்றும் ஒருசில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அறிக்கையிடல் முறை**

வங்கியானது நிதிச் சொத்துக்களையும், நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத் தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4 இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**இணக்கக் கூற்று**

2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக் கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (IFRS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ப.நி.அ.நியமங்களின் ஒருசில தேவைப்பாடுகளின் காரணமாக, வகைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடையதான தொகைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை விட இந் நிதிக் கூற்றுக்களில் வித்தியாசமானதாக அமையலாம்.

**சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்**

வேறு விதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய, அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்தில் தரப்பட்டுள்ளன.

#### 2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன் முறைகளிலே, நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது, மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மதிப்பீடுகளுடன் சம்பந்தப்பட்டவை தவிர்ந்தனவற்றில், வங்கி பின்வரும் தீர்ப்புக்களை மேற்கொண்டுள்ளது.

**விற்பனைக்குள்ள முதலீடுகளின் முடக்கம்**

நியாயப் பெறுமதியானது அதன் கிரயத்திற்கு கீழே கணிசமான அளவு, அல்லது நீண்டகாலப் போக்கில், வீழ்ச்சியடையும்போது வங்கியானது, விற்பனைக்குள்ள முதலீடுகளின் முடக்கத் தன்மையை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப் போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு அவதானிப்புக்கள் அவசியமாகின்றது.

**ஓய்வூதியமும் ஊழியர் நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்**

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால இழப்பீட்டு அதிகரிப்புகள், இறப்பு வீதம் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள், ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சயமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 36 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.3 கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிலான மாற்றங்கள்

வங்கியினால் பின்பற்றப்பட்ட பின்வரும் நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் தவிர்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்டவற்றுடன் ஒத்திசைவானவை யாகும். நிதிச் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தல்கள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள) தொடர்பிலான IAS 39 மற்றும் IFRS. 7 க்கான திருத்தங்கள் தவிர்ந்ததாக, மேற்படி நியமங்கள், திருத்தங்கள், மற்றும் வரைவிலக்கணங்கள் பின்பற்றப்படுவதன் மூலம் நிதிச் செயலாற்றுகையில் அல்லது வங்கியின் நிலைமையில் எவ்விதத் தாக்கமும் ஏற்படவில்லை.

**ப.க.நி. (IAS) 1 - நிதிக் கூற்றைச் சமர்ப்பித்தல்**

இந் நியமமானது ஒரு நிறுவனம் முதலீட்டிலான அனைத்து உரிமையாளர் மாற்றங்கள் மற்றும் அனைத்து உரிமையாளரல்லாத மாற்றங்களை விபரமான ஒரு வருமானக் கூற்றின் ஊடாக அல்லது வருமானம் மற்றும் விபரமான வருமானம் ஆகிய இரண்டு கூற்றுக்களின் ஊடாக சமர்ப்பிப்பதை தேவைப்படுத்துகின்றது. மேலும் திருத்தப்பட்ட நியமமானது ஒவ்வொரு விபரமான வருமான ஆக்கக்கூறிலுமான வருமான வரியின் தாக்கத்தின் வெளிப்படுத்தலையும் தேவைப் படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, நிறுவனமானது நிதிக் கூற்றுகளில் உள்ள விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பின்னோக்கியதாகப் பிரயோகத்துள்ளபோது அல்லது பின்னோக்கியதாக மீள்கூற்றொன்றை செய்துள்ளபோது அல்லது பின்னோக்கியதாக மீள்வகைப்படுத்தியுள்ளபோது முந்திய ஒப்பீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலுள்ளவாறு நிதி நிலைமையின் ஒப்பீட்டு ரீதியிலானதொரு கூற்றைச் சமர்ப்பிப்பதையும் தேவைப்படுத்துகின்றது.

வங்கியானது வருமானம் மற்றும் விரிவான வருமானம் ஆகிய இரண்டு வெவ்வேறான கூற்றுக்களின் மூலம் விரிவான வருமானத்தைச் சமர்ப்பிப்பதைத் தெரிவு செய்துள்ளது.மேலும் வங்கியானது விரிவான வருமானத்தின் ஒப்பீட்டுக் கூற்றினையும் வழங்குகின்றது.

**ப.க.அ.நி. (IFRS) 7 க்கான திருத்தங்கள் - நிதிக் கருவிகள் : வெளிப்படுத்தல்கள் - நிதிக் கருவிகள் தொடர்பிலான வெளிப்படுத்தல்களை மேம்படுத்தல்**

நியாயப் பெறுமதி மற்றும் திரவத்தன்மை வெளிப்படுத்தல்களை மேம்படுத்துவதற்காக 2009 மார்ச் மாதத்தில் ப.நி.அ.நி.7 க்கான திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

நியாயப் பெறுமதியைப் பொறுத்தவரை, நியாயப் பெறுமதியில் இனம்காணப்பட்ட அனைத்து நிதிக் கருவிகள், படிநிலையின் மட்டங்களுக்கு இடையிலான மாற்றல்களுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் மற்றும் நியாயப் பெறுமதிப் படிநிலையின் 1வது மட்டத்துடன் தொடர்புடைய விபரமான வெளிப்படுத்தல்கள் என்றவாறு வகுப்பு அடிப்படையில் மூன்று மட்ட நியாயப் பெறுமதிப் படிநிலையின் வெளிப்படுத்தலை திருத்தங்கள் தேவைப்படுத்துகிறது. இதற்கு மேலதிகமாக திரவத்தன்மை முகாமைத்துவத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட உருவாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலான தேவைப்படுத்தப்பட்ட திரவத்தன்மை வெளிப்படுத்தல்களையும் திருத்தங்கள் மாற்றியமைக்கிறது.

நிதிக் கருவிகளுக்கான நியயாயப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான பெறுமதியிடல் நுட்பங்களின் படிநிலைகள் பின்வருமாறு:

மட்டம் 1 : செயலூக்கம்மிக்க சந்தையில் முழு நிலையிலுள்ள சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான விலைக் குறியீடு (சீர்செய்யப்படாத)

மட்டம் 2: அனைத்து உள்ளீடுகளினதும் பதியப்பட்ட நியாயப் பெறுமதியில் நேரடியாக அல்லது மறைமுகமாக குறிப்பிடத்தக்க தாக்கம் உள்ளதென்பதை அவதானிக்கக் கூடியதாயிருப்பின் வேறுவிதமான நுட்பங்கள்,

மட்டம் 3: அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளின் அப்படையிலல்லாத உள்ளீடுகளின் பதியப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் உள்ளபோது பயன்படுத்தும் நுட்பங்கள்.

நிதிக் கூற்றுகளில் வகுப்பு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள நிதிக் கருவிகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான அனைத்து வகுப்புகள் தொடர்பிலும் நியாயப் பெறுமதிப் படிநிலையின் முதலாவது மட்டத்தை வங்கி பின்பற்றியுள்ளது.

**ப.ந.அ.நி.(IFRS) 8 - தொழிற்பாட்டுக் கூறுகள்**

மேலாண்மையின் தொழிற்பாட்டுக் கூறுகள் பற்றிய தகவல்களின் வெளிப்படுத்தல்களை இந்நியமம் தேவைப்படுத்துவதோடு மேலாண்மையின் முதல்நிலை (வர்த்தகம்) மற்றும் இரண்டாம் நிலை (புவியில் ரீதியிலான) அறிக்கையிடும் கூறுகளைத் தீர்மானித்தலுக்குரிய தேவைப்பாட்டை பதிலீடுசெய்கின்றது. ப.நி.அ.நி. 8 இற்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட தொழிற்பாட்டுக் கூறுகள் ப.க.நி.(IAS) 14 இன் கீழ் முன்னர் அடையாளம்காணப்பட்ட அதே வர்த்தகக் கூறுகளாகும் என வங்கி முடிவு செய்தது.

**ப.க.நி. (IAS) 39க்கான திருத்தங்கள் - நிதிக் கருவிகள் : அங்கீகரித்தலும் அளவிடுதலும் மற்றும் ப.நி.அ.நி. (IFRS) 7 நிதிக் கருவிகள்: வெளிப்படுத்தல்கள் - நிதிச் சொத்துக்களின் மீள் வகைப்படுத்தல்**

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுகின்ற நிதிச் சொத்துக்களில், அண்மிய காலத்தில் விற்பனைக்கு அல்லது மீள்கொள்வனவு நோக்கத்திற்காக தொடர்ந்தும் வைத்திருக்காத பட்சத்தில் அவற்றில் சிலவற்றை மீள்வகைப்படுத்துவதற்கு இத்திருத்தம் நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கிறது:

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை என்றவாறு மீள்வகைப் படுத்தலுக்கு தகுதியுள்ள நிதிச் சொத்துக்களை (அதாவது அண்மிய தவணைகளில் விற்பனை நோக்கத்தில் வைத்திருக்கப்படாத சொத்துக்கள், கொடுப்பனவுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள அல்லது தீர்மானிக்கப்படவுள்ள, செயலூக்கம்மிக்க சந்தையில் முன்னிலைப்படுத்தப்படாத, கடன் தரக்குறைவாக்கலானவை தவிர்ந்த வைத்திருப்பவரால் ஆரம்ப முதலீட்டின் உள்ளபடியான அனைத்துத் தொகைகளையும் மீளப்பெற முடியாத இயல்பைக் கொண்டுள்ள) வங்கி எதிர்கால முன்னுணர்த்தலுக்காகக் பேணும் நோக்கத்தையும் அதற்கான இயலுமையையும் கொண்டிருக்கும் பட்சட்த்தில் "வர்த்தகத்திற்காக வைத்திருத்தலில்" இருந்து "கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கு" மாற்றலாம்.

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை என வகைப்படுத்துவதற்குத் தகுதியில்லாத நிதிச் சொத்துக்கள், அரிதான சந்தர்ப்பங்களில் மாத்திரம் "வர்த்தகத்திற்காக வைத்திருத்தலில்" இருந்து "விற்பனைக்காக உள்ளவைக்கு" அல்லது "முதிர்ச்சிக்காக வைத்திருத்தலுக்கு" மாற்றப்படலாம்.

வங்கி அத்தகைய நிதிச் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தலை மேற்கொள்ளவில்லை.

**ப.நி.அ.நி (IFRS) க்கான மேம்படுத்தல்கள்**

2008 மே மாதத்திலும் 2009 ஏப்பிறல் மாதத்திலும் ப.க.நி.ச. முக்கியமாக ஒவ்வாதவற்றையும் சொற்களுக்கான விளக்கங்களையும் நீக்கும் நோக்கத்துடன் அதன் நியமங்களுக்கான பல திருத்தங்களை வெளியிட்டது. ஒவ்வொரு நியமங்களுக்குமான இடைமாறுகால ஏற்பாடுகள் அதிலுள்ளன. பின்வரும் திருத்தங்களை பின்பற்றியதால் வங்கியின் நிதி நிலமைகளில் அல்லது செயலாற்றுகையில் எவ்வித உணரத்தக்க தாக்கங்களும் ஏற்படவில்லை.

- ப.நி.அ.நி. 8 தொழிற்பாட்டுக் கூறுகளின் தகவல்கள்
- ப.க.நி. 1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்: ப.க.நி. 39 நிதிக் கருவிகளுக்கு இணங்குகின்றவாறு வர்த்தகத்திற்காக வைத்திருத்தல் என்றவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வகைப்படுத்தல்
- ப.க.நி. 7 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று : அங்கீகாரமளித்தலின் பெறுபேறாக எழுகின்ற ஐயத்திற்கிடமற்ற நிலையிலுள்ள செலவை மட்டும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தலாம்
- ப.க.நி. 36 சொத்துக்களின் முடக்கம்
- ப.க.நி. 20 அரச அளிப்புகளுக்கான கணக்கீடுகள் மற்றும் அரச உதவிகளின் வெளிப்படுத்தல்கள்
- ப.க.நி. 38 அருவச் சொத்துக்கள்

**2.4. நியமங்கள் நடைமுறைப்படுத்தப்படாத வெளியிடப்பப்பட்ட நியமங்களுக்கான வரைவிலக்கணங்களும் திருத்தங்களும். (இற்றைப்படுத்தப்படாதவை)**

2009 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வங்கியின் கணக்கீட்டுக் காலப்பகுதிக்குப் பிரயோகிக்கத்தக்க தற்போதுள்ள நியமங்களுக்கான குறித்த சில புதிய நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் முன்னர் வங்கியினால் பின்பற்றப்படவில்லை. அவை வருமாறு:

ப..நி.அ.நி. 9, நிதிக் கருவிகள் (2013 சனவரி 1 முதல் நடைமுறைக்குவரும்) - ப.நி.அ.நி. 9 நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதலுக்கான புதிய தேவைப்பாடுகளை குறித்துரைக்கின்ற இது ப.க.நி. 39 நிதிக் கருவிகள்: அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதலை பதிலீடு செய்கின்றது.

**3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

**3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்**

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்துக்கு ஏற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| | 2009 ரூபா | 2008 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **101.9909** | 78.0495 |
| 1 கனேடிய டொலர் | **109.2914** | 92.7604 |
| 1 யூரோ | **163.7184** | 159.4536 |
| 1 யப்பானிய யென் | **1.2413** | 1.2524 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ.) | **178.6670** | 174.2660 |
| 1 ஸ்டர்லிங் பவுண் | **181.7454** | 163.2777 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **114.3844** | 113.1398 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

**3.2 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்.**

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித் தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர் நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வழியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வழியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்கு விதிகளில் அல்லது சந்தையின் மரபுவழி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

**இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் பிணையங்கள்**

வர்த்தகப்படுத்தக்கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலான பிணையங்கள் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதே நேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக/(நட்டமாக) அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக/(நட்டமாக) அறிக்கையிடப்படும்.

**வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்.**

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டம் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும்வரை அல்லது முதலீட்டினை

இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை மூலதனப்பங்கின் (நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள) தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய மூலதனப்பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானமாக உள்ளடக்கப்படும்.

**நிதிப் பெறுமதிக் கருவிகள்**

பெறுமதிக் கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையதாயுள்ளது. அத்தகைய நிதிப் பெறுமதிக் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக, இதையொத்த முதிர்ச்சித் தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்புடைய வீதங்களில் கணிக்கப்படுகின்றன. இலாப அல்லது நட்டம் நிலையிலுள்ள அனைத்துப் பெறுமதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது நிதி நிலைமை பற்றிய கூற்றிலுள்ள விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப் படுகின்றன.

**பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இந்நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா.நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கிற்காக ப.நா.நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா.நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும், வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும், வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும், பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள், மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப்பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதிக் கூற்றில் 30, 31, ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணயவிதிச் சட்டத்திற்கு இணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பபட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுப்பட்ட பணம் கொடுபடவேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்பில் அல்லது வர்த்தக வங்கிகளுடனான மீதிகளுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை

விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

### இ.ம.வ. பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக்கொள்ளும் பொருட்டு காலத்துக்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் வருமாக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள்

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச்சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

### அரசிற்கான முற்பணங்கள்

1949 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89 இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

### ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்ப தொகையிலிருந்து அறவிட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

### பிணையங்களைக் கடனாக வழங்குதல்

கடன் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் மறுதரப்பினர்களுக்கான மாற்றலானது, இடர்நேர்வுகளினதும், வெகுமதிகளினதும் உரிமை மாற்றப்படுமெனில் மட்டுமே நிதி நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படும்.

### நிதிச்சொத்துக்களின் முடக்கம்

ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றுத் திகதியிலும் ஒரு நிதிச்சொத்து முடக்கப்பட்டுள்ளதா என வங்கி மதிப்பிடுகிறது.

### கடன்தீர் நிதி கிரயத்தில் சொத்துக்களை எடுத்துச் செல்லல்

கடன் மீதான நட்டத்தின் முடக்கம், மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச் சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (ஏற்படாத எதிர்காலக் கடன் நட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை) நிதிச் சொத்துக்களின் அசல் தாக்கமிகு வட்டி வீதம் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. (தாக்கமிகு வட்டிவீதம் ஆரம்ப அங்கீகாரத்தில் கணிக்கப்பட்டுள்ளது). சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும். வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையில் உள்ள முடக்கத்தின் புறவுண்மை சான்றுகளா, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச்சொத்துக்களுக்காக, தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா, என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மை சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்கும் இடத்து, அச்சொத்தானது ஒத்த கடன் அபாய குணாம்சங்களைக் கொண்ட நிதிச்சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச்சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டுக்குள் அவைகள் உள்ளடக்கப்பட மாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் முடக்க இருப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இருப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இருப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன் தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகிறது.

### விற்பனைக்குள்ள முதலீடுகள்

விற்பனைக்கு தயாராக உள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசத்தை உள்ளிட்ட தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்கு தயாராக உள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது

புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் ஓர் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப்பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை மீள் பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத நட்டமாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள் கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டங்களாக (இலாபமாக) பதிவு செய்யப்படுகிறது.

**நிதிப் பிணைகள்**

நிதிப் பிணைகள் ஏனைய செலுத்தப்படத்தக்க நியாயப் பெறுமதியின் கீழ் நிதிக் கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஒவ்வொரு பிணையின் கீழான வங்கியின் பொறுப்பும், பிணையின் விளைவாக எழுகின்ற நிதிக் கடப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான செலவினங்களின் மிகச் சிறந்த மதிப்பீட்டின் மீதே அளவிடப்படுகின்றன.

**ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

### 3.3 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்

**தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2009 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூபா. 84,834,269 ஐ தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. வருமான ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**துணை நிறுவனங்களில் முதலீடு**

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச் செலவு முறையில் கணிக்கப்படுகின்றன.

**இருப்புக்கள்**

இருப்புக்கள் குறைந்த கிரயச் செலவிலும் விற்றுப் பெறக்கூடிய பெறுமதியிலும் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. கொடுப்பனவு மெதுவாக அசையும் இருப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

**ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்**

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமான தேய்வு ஏற்பாட்டைக் கழித்து பெறுமதியின் முடக்கத்தை ஒன்று சேர்த்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும்போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள் பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி தவிர்ந்த ஏனையவற்றில் பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள இருப்புக் காலத்தில், பெறுமானத் தேய்வானது நேர்கோட்டு முறையில் கணிக்கப்படுகிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியின் மீதான கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகள் மீதான கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | |
| தளபாடங்கள் மற்றும் | 20 வருடங்கள் |
| உபகரணங்கள் | 10 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 5 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டும்பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள் மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயப் பெறுமதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின்தொடர்ந்துவந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்துவந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமானம், அதனுடைய எடுத்துச் செல்லும் தொகையில் இருந்து உள்ளடக்க ரீதியில் பெரிதும் வேறுபடாது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, பெறுமதி மதிப்பீடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள் மதிப்பீட்டு ஒதுக்கில் வரவு வைக்கப்படுகிறது. வருமானக் கூற்றிலே

முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சி, மறுதலையாகாத அளவிற்கு, அந்த நிலைமைகளிலே அந்த அதிகரிப்பானது வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறை மீள்மதிப்பீட்டு மறுதலையின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகைநிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. கழிக்கும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக்கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், எதிர்கால பொருளாதார நன்மைகளை எதிர்பார்த்து உபயோகிக்கப்படாத போது இனங்காணல் முடிவடைகிறது. அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை நடைமுறைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

**அருவச் சொத்துக்கள்**

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட கால பயனுள்ள ஆயுட் கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்எடுத்துச் செல்லப்படுகிறது.

**பெறக்கூடியவை**

புலப்படத்தக்க சான்றுகளின் அடிப்படையில், பெறக்கூடியவை ஐயக்கடனுக்கான ஏற்பாட்டினைச் செய்த பின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

**நானாவிதச் சொத்துக்கள்**

**- பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி கடன்கள் ப.க.நி. 39 இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப் பாய்வைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

<u>கழிவு வீதம் -</u> மேற்படி வீதமானது இ.ம.வ. யின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஐ.அ.டொ. - வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது. (15 ஆண்டுகள் வரை 10.67% 15 தொடக்கம் 30 ஆண்டுகள் வரை 9.62%).

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்கு சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

<u>நியாயப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்</u>

- 2009 ஆம் ஆண்டினுள் பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்டதாகக் கருதுதல்.
- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக 2009 சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது தீர்ப்பனவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

ஏனைய நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப் பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நிதிசாராச் சொத்துக்களின் முடக்கம்**

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் தொகை அதன் மீளப்பெறக்கூடிய தொகையை விட அதிகமாகக் காணப்படின், அந்தச் சொத்து முடக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

**ஏற்பாடுகள்**

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியும். ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

**சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் மற்றும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்**

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 36 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்**

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகிறது.

சேவைக்குப் பின்னரான செலவானது, நன்மை கிடைக்கும் வரை சராசரிக் காலப்பகுதி மீதான நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவீனமாக இனங்காணப்படுகிறது. நன்மைகள் ஏற்கனவே நலத்திட்டத்தின் அறிமுகத்தைத் தொடர்ந்தோ அல்லது மாற்றங்களினாலோ உடனடியாகக் கிடைக்கப் பெற்றிருப்பின் சேவைக்குப் பின்னரான செலவு உடனடியாக இனங்காணப்படுகிறது.

அனுபவ அடிப்படையிலான சீராக்கங்கள் மற்றும் திட்டமிடல் சொத்துக்களின் பெறுமதியில் 10 சதவீதத்திலும் விஞ்சியதான ஆயுட்கால எடுகோள்களின் மாற்றங்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் 10 சதவீதம் என்பவற்றிலிருந்து எழுகின்ற ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஊழியர்களுடைய எதிர்பார்க்கப்படும் மிதமாக உள்ள சராசரி வேலைக்காலத்தின் மீதான வருமானத்திற்கு எதிராக ஓர் ஒழுங்கு முறையில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும். இதன் விளைவாக ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் விரைவாக இனங்காணப்படுகிறது.

**நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்**

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க ஊழியர் சேமநிதியப் பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்துக்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிறுவகிக்கப்பட்டுவரும் நிர்ணயிக்கப்பட்ட உதவு தொகைத் திட்டங்களாகும்.

**கொடைகள்**

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, நியாயப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக் கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

**ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

**வருமான வரி**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகள் பெரும்பாலும் கொண்டுவரக்கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டுநடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

**வட்டி**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்றுசேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

**பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப் பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்கள் எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் உள்ளடங்கலாக**

நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

**4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை 1949 ஆம் ஆண்டின் 58 அம் இலக்க திருத்தப்பட்ட நாணயவிதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- நாணய வெளியீடு.
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப் பாட்டையும் ஏற்படுத்துதல்.
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்.
- வங்களுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமுகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்.
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படுதல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதி முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப் பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்துக்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத் தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத் தன்மை முகாமைத்துவமானது வங்கித் தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித் தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்ளையாகும்

**பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**5. நிதிச் சொத்துக்கள்**

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியிலான பிணையங்கள் | **56,275,323** | 50,381,845 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | **315,342,452** | 41,733,314 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **371,617,775** | 92,115,159 |

**6. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்**

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வைத்திருத்தல் | **2,286,331** | 220,853 |
| ப.நா.நி. பங்கு | **73,860,938** | 72,041,564 |
| ப.நா.நி.யுடனான வைப்புகள் | **140,929** | 137,458 |
| முன்கூட்டிச் செலுத்தப்பட்ட கடப்பாட்டுக் கட்டணம் | **221,583** | - |
| **மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்** | **76,509,781** | 72,399,875 |

**சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் கொண்டிருத்தல்**

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந்நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக்கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந்நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉக்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉவைக் கொள்வனவு செய்வதற்குப் பலம்வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட நாணயங்களில் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு ஏற்புடையதான தினத்தில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை காட்டப்பட்டுள்ளது.

**ப. நா. நி. அனுமதிப் பங்கு**

பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி.) 186 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பன்னாட்டு அமைப்பொன்றாகும். பன்னாட்டு நாணய ஒத்துழைப்பு, செலாவணி நிலைப்பாடு மற்றும் ஒழுங்கு முறையான செலாவணித் திட்டமிடலை மேம்படுத்துவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியையும் தொழில் நிலையையும் மேல் மட்டத்திற்குக் கொண்டு வருவதனை விருத்தி செய்வதற்காகவும், சென்மதி நிலுவையின் சீராக்கலை இலகுபடுத்தும் பொருட்டு நாடுகளுக்குத் தற்காலிக உதவிகளை வழங்குவதற்காகவும் இது நிறுவப்பட்டது. ப.நா.நிதியத்தின் அடிப்படை மூலம் மூலதனப் பங்காகும். ப.நா.நி. வளங்கள் அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. பரந்தளவில் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையையும் அதற்குச் சமமான நாடுகளின் அனுமதிப் பங்குத் தொகைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் பங்களிப்பு அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா.நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

ஒரு அங்கத்தவரின் அனுமதிப் பங்கின் மூலம் ப.நா. நிதியத்துடனான நிதி மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான தொடர்பு பற்றிய அடிப்படை அம்சங்கள் எடுத்துக் காட்டப்படுவதோடு அவற்றில் பின்வருபவையும் உள்ளடங்குகின்றன.

- **பங்களிப்பு:** ப.நா. நிதியத்துக்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா.நி.க்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நி. தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துகளிலிருந்து (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) செலுத்துதல் வேண்டும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

- **வாக்களிக்கும் உரிமை:** பநா.நி. தீர்மானங்களின்போது அங்கத்தவரின் வாக்களிக்கும் உரிமையானது அனுமதிப் பங்கின் மூலம் வரைவிலக்கணமளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் 250 அடிப்படை வாக்குகளுக்கும் அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவார்.

- **நிதியாக்கலில் பிரவேசித்தல்:** அங்கத்தவரால் பெற்றுக் கொள்ளக்கூடிய நிதி வசதிகளுக்கு (பிரவேசிக்கும் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஏற்ப அங்கத்தவரால் நடைமுறை ரீதியில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு பிரவேசமானது இதைவிட அதிகரிக்கலாம்.

- **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

ஆதலால் சிஎஉ பங்கு ஒரு சொத்தாகும். வங்கியினால் ப.நா. நிதியத்துடன் நடத்தப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை அரசின் முகவராண்மை என்ற ரீதியிலன்றி தனது அதிகாரங்களின் பிரகாரம் நடத்தப்படுவதால் ப.நா.நி. அனுமதிப் பங்கு வங்கியின் சொத்தாக அதன் நிதியில் கூற்றுக்களில் காட்டப்படுகிறது. ப.நா. நி. அனுமதிப் பங்குக்காகச் செலுத்தப்பட வேண்டிய நாணயத் தொகை 15 வது குறிப்பில் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**PRGF-HIPC நம்பிக்கைப்பொறுப்பு வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு(SCA)-2 இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பில் இருந்து சிஎஉ 788,783ஐ மாற்றுவதன் மூலம் 2000 ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் PRGF-HIPC நம்பிக்கைப்பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. SCA-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்டபோது, இலங்கைக்கெதிராக SCA-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. SCA-2 இற்குப் பிந்திய கணக்கில் உள்ள மீதிகளை முழுமைமையான நன்கொடையாக அல்லது PRGF/ HIPC கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக PRGF-HIPC நம்பிக்கைப்பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில்கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், SCA-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாக அன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக PRGF-HIPC நம்பிக்கைப்பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

**7. அரசுக்கான முற்பணங்கள்**

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| சுழலும் கொடுகடன் | 73,880,500 | 76,307,700 |
| **அரசுக்கான மொத்த முற்பணங்கள்** | 73,880,500 | 76,307,700 |

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் 89 ஆம் வாசகத்தின் பிரகாரம், வழங்கப்பட்ட ஒவ்வொரு முற்பணமும் ஆறு மாதத்துக்குள் மீளச் செலுத்தப்படுமெனில், அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீதியாயுள்ள மொத்த முற்பணத் தொகை, முற்பணம் வழங்கப்படுகின்ற வருடத்தினுள் இலங்கை அரசின் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் பத்து சதவீதத்தைத் தாண்டாதிருப்பின் ஒன்று திரட்டிய நிதியத்தினால் ஏற்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கு நிதியிடுவதற்காக இலங்கை அரசுக்கு நேரடியான அதேநேர முற்பணங்களை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் முடியுமாயுள்ளது. வங்கியினால் அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளில் காட்டப்பட்டுள்ளது.

**8. ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| நிலுவை மூலதனம் | **45,919** | 48,058 |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **2,104,829** | 2,148,718 |
| - ஏனையவர்கள் | **2,150,748** | 2,196,776 |
| சுசகன சுனாமி கடன் திட்டத்தின் கீழ் பெறத்தக்கவை | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **604,632** | 821,613 |
| - ஏனையவர்கள் | **512,558** | 737,404 |
| பெறத்தக்க வட்டி | **4,217,766** | 4,220,236 |
| கழிக்குக: இடைநிறுத்தப்பட்ட வட்டி | **(4,217,766)** | (4,220,236) |
| ஐயக்கடன் ஏற்பாடு | **(2,131,342)** | (2,178,492) |
| **தேறிய பெறத்தக்கவை** | **1,136,596** | 1,577,301 |

ஐயக்கடன் ஏற்பாட்டிலுள்ள அசைவு பின்வருமாறு:

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 |
| ஆண்டின் ஆரம்பத்தில் | 2,178,492 | 2,178,492 |
| ஐயக்கடன் ஏற்பாட்டிலுள்ள அசைவு | (47,150) | - |
| ஆண்டின் இறுதியில் | 2,131,342 | 2,178,492 |

2009 திசெம்பர் 31 இல் வட்டி சேர்க்கப்படாத செயலிழந்த கடன்களின் கூட்டுத் தொகை ரூபா. 2,150,748 ஆகும். (2008 இல் ரூபா. 2,196,776). 2009 திசெம்பர் 31 இல் இக் கடன்களுடன் தொடர்புடைய இனங் காணப்படாத வட்டி ரூபா. 4,217,766 (2008 இல் ரூபா. 4,220,236) ஆகும்.

**9. நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடுகள்**

(அ) திருத்தப்பட்டவாறான, இலங்கையின் 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம், இலங்கை மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதையோ அல்லது ஏதாவது வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய நிறுவனங்களில் நேரடியான உரிமைகளைக் கொண்டிருப்பதையோ அல்லது அதன் வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது ஏனைய வங்கித் தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதையோ குறிப்பாகத் தடை செய்கிறது. எனினும் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித் தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக் கம்பனி களிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு இச்சட்டம் அங்கீகாரமளிக்கிறது.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டத்தின் 8(5) (அ) வாசகத்தின் பிரகாரம், நாணயச் சபையானது பணியகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பதினைந்து சதவீதத்துக்குக் குறையாத அளவினை தடுத்து வைத்திருக்கலாம். இதற்கிணங்க நாணயச் சபையானது அத்தகைய பங்குகளில் 19.9% ஐ தடுத்து வைத்திருக்கும் என்பதோடு, எஞ்சியவற்றை அரசுக்குச் சொந்தமான அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கும். 2009 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி வைத்திருந்தவற்றில் 22.53% ஐ மீள ஒப்படைத்ததோடு, எஞ்சிய 8.51% ஐ மீள ஒப்படைப்பதற்காக ஒருசில நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. அவை விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. இவை பின்னர் விற்பதற்காக வைத்திருக்கப்படுவதால், முதலீடானது கிரயச் செலவு முறையில் கணிப்பிடப்படும்.

| | காணியும் கட்டடமும் ரூ.000 | இயந்திரங்கள் இயந்திரப் பொறிகள் ரூ.000 | தளபாடங்களும் பொருத்துகளும் ரூ.000 | உந்து ஊர்திகள் ரூ.000 | கணனி வன் பொருட்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 | மொத்தம் ரூ.000 2009 | மொத்தம் ரூ.000 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த எடுத்துச்செல்லப்படும் பெறுமதி | | | | | | | | |
| கிரயச் செலவில் | **8,367,062** | **1,061,420** | **604,440** | **214,713** | **752,416** | **283,012** | **11,283,063** | **2.739,731** |
| மீள் பெறுமதியிடலில் | - | - | - | - | - | - | - | 8,166,968 |
| திரண்ட தேய்மானம் | | | | | | | | |
| கிரயச் செலவில் | **(253,847)** | **(373,512)** | **(435,155)** | **(169,231)** | **(682,002)** | **(26,366)** | **(1,940,115)** | **(1,533,462)** |
| மீள்பெறுமதியிடலில் | - | - | - | - | - | - | - | (130,250) |
| தேறிய எடுத்தச் செல்லப்படும் பெறுமதி | **8,113,214** | **687,907** | **169,285** | **45,482** | **70,414** | **256,645** | **9,342,947** | **9,242,988** |

காணிகள் கட்டடங்களுக்கான ஏட்டுப் பெறுமதி நியாயமான பெறுமதிக்கேற்ப குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. பி. பீ. கலுகலகெதர (பட்டயம்பெற்ற மதிப்பீட்டாளர்) அவர்களால் 2007 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு:

| | **எடுத்துச் செல்லும் பெறுமதி 2009 ரூ. 000** | **எடுத்துச் செல்லும் பெறுமதி 2008 ரூ. 000** |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **2,942,747** | 2,839,300 |
| சொந்த உரிமைக் காணிகளில் கட்டடங்கள் | **5,078,799** | 5,149,326 |
| குத்தகைக் காணிகளில் கட்டடங்கள் | **91,668** | 68,336 |
| | **8,113,214** | 8,056,962 |

மீளப் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூபா. 6,944,193 (2007 ரூபா. 6,765,745) ஆகும்.

## 12. அருவச் சொத்துக்கள்

| | **2009 ரூ. 000** | 2008 ரூ. 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1 இல் உள்ளவாறு | **484,459** | 464,420 |
| கொள்வனவு | **6,712** | 20,039 |
| நீக்குதல் | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **491,171** | 484,459 |
| **கடன்தீர் நிதி மற்றும் முடக்கம்:** | | |
| சனவரி 1 இல் உள்ளவாறு | **468,742** | 463,467 |
| ஆண்டுக்கான கடன்தீர் நிதிக் கட்டணம் | **6,046** | 5,275 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **474,788** | 468,742 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி:** | | |
| சனவரி 1 இல் உள்ளவாறு | **15,717** | 953 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **16,383** | 15,717 |

## 13. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை

| | **2009 ரூ.000** | 2008 ரூ. 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 17,709,419 | - |
| ஏனைய வெளிநாட்டு நிதி நிறுவனங் களுக்குச் செலுத்த வேண்டியவை | 359,422 | 336,091 |
| **வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தம்** | 18 ,068,841 | 336,091 |

## 14. ஆசிய தீர்ப்பனவுச் சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை

| | **2009 ரூ. 000** | 2008 ரூ. 000 |
|---|---|---|
| **ஆண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய தொகை** | 29,836,531 | 91,354,909 |

ஆசிய தீர்ப்பனவு சங்கமானது, 1974 ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை ஒரு பங்குபற்றும் நாடாகும். பங்களாதே‘, ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் ஆகியன ஏனைய பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் காலகட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக் கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுனர்களால் 0.18% சதவீதத்துக்கும் 0.14% சதவீதத்துக்கும் இடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும், (2008 இல் 0.27% மற்றும் 3.94%) 0.28% சதவீதத்துகும் 0.30% சதவீதத்துகும் இடையிலான

வட்டி யூரோவிலும் இவ்வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன் இது, தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுனர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம் குறிப்பிட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்கு ஆசிய தீர்ப்பனவுச் சங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

### 15. பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய பொறுப்புகள்

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 |
| வட்டியுடனான கடன்கள்- நடைமுறையற்ற | 78,899,615 | 7,534,695 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | 3,301,811 | 11,543,903 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | 70,655,689 | 12,349,883 |
| ப. நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | 41,627,642 | 39,987,545 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | 23,686,264 | 23,717,632 |
| | 139,271,406 | 87,598,963 |
| **ப. நா. நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள்** | 218,171,021 | 95,133,658 |

வட்டியுடனான கடன்களில் ப.நா. நிதியத்துடனான வறுமைத் தணிப்பு மற்றும் வளர்ச்சி வசதிகளும் நீடிக்கப்பட்ட நிதிய வசதிகளும் அதேபோன்று அவசரகால உதவி வசதிகளும் உள்ளடங்குகின்றன.

#### வறுமைத் தணிப்பு மற்றும் வளர்ச்சி வசதிகள் (வ.த.வ.வ)

வ.த.வ.வசதியானது, குறைந்த வருமானம் பெறுகின்ற அங்கத்தவர்களுக்கு ப.நா.நி. யினால் வழங்கப்படுகின்ற நீண்டகால நிதியாக்கல் வசதியாகும். இத்திட்டமானது, மேம்படுத்தப்பட்ட உள்ளமைப்பு ரீதியிலான சீர்செய்தல் வசதிகள் என முன்னர் குறிப்பிடப்பட்டது. வறுமையைக் குறைத்து நீண்டு நிலைத்திருக்கக்கூடிய அடிப்படையில் அதிக வளர்ச்சியொன்றை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் உயர் வாழ்க்கை நிலையை அடைந்து கொள்ளல் இவ்வேலைத் திட்டத்தின் இலக்காகும். வ.த.வ.வ. கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டி வீதம் ஆண்டிற்கு 0.5 சதவீதம் ஆகும். இக் கடனுக்கு ப.நா.நி. ஆல் வழங்கப்படுகின்ற மீளச் செலுத்துவதற்கான ஆகக் கூடுதலான காலகட்டம் 10 வருடங்களாகும்.

வறுமைத் தணிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழ் நடைபெறும் சீர்திருத்தங்களில் பின்வருவன அடங்குகின்றன.

- தொடர்ச்சியான அரச நிதியின் பலப்படுத்தல்
- தொழிற் சந்தையின் மறுசீரமைப்பு
- அரச தொழில்முயற்சிகளின் மீள்கட்டமைப்பும் தனியார்மயப்படுத்தலும்
- பொது நிர்வாகச் சீர்திருத்தங்கள்
- வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்குள்ள தடைகளை நீக்குதல்
- அடித்தள அபிவிருத்திக்கான அரச செலவுகளைக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தல்

#### நீடிக்கப்பட்ட நிதிய வசதிகள் (நீ.நி.வ.)

நீ.நி.வசதியானது பேரண்டப் பொருளாதார சமமின்மை மற்றும் உள்ளமைப்பு ரீதியிலான பிரச்சினைகளின் மூலம் எழுகின்ற சென்மதி நிலுவை வசதியீனங்களை அடக்கியாளும் பொருட்டு நடுத்தரகால வேலைத் திட்டங்களுக்கு உதவி வழங்கும் நிதி வசதியாகும். இது முன்னேற்றப்பட்ட உள்ளமைப்பு ரீதியிலான சீர்செய்தல் வசதிகளின் விஸ்தரிப்பாகும். இதன் கீழ் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் வருடத்துக்கு 0.5 சதவீதமாகும். ப.நா. நிதியத்தினால் இதன் கீழ் பெறப்பட்ட கடன்களைச் செலுத்துவதற்கு 4 1/2 வருடகால அனுசரணைக் காலகட்டத்துடன் சேர்த்து 10 வருட காலம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் நடைபெறும் சீர்திருத்தங்களில் பின்வருபவை உள்ளடங்குகின்றன.

- அரச நிதியின் பலப்படுத்தல்
- நிதித் துறைச் சீர்திருத்தம்
- அரச தொழில் முயற்சிகள் மற்றும் வர்த்தக முறைச் சீர்திருத்தம்
- தொழிற் சந்தை ஒழுங்குபடுத்தல்கள்
- பேரண்டப் பொருளாதாரக் கொள்கைக் காரணிகள் மற்றும் நிறுவனங்களைப் பலப்படுத்துதல்

#### அவசரகால உதவி வசதிகள் (அ.உ.வ.)

பன்னாட்டு நாணய நிதியமானது இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகின்ற தனது அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவை நிதித் தேவைகளுக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கும் உதவி செய்யும் வகையில் அவசரகால உதவிகளை வழங்குகின்றது. ப.நா. நிதியத்தின் நிறைவேற்றுக் குழு இலங்கைக்கு சி.எ.உ. 103,350ஐ அவசரகால உதவியாக அங்கீகரித்துள்ளது. அவசரகால உதவியானது பணம் கொடுக்கப்பட்ட தினத்திலிருந்து 3 1/4 தொடக்கம் 5 வருட காலத்தினுள் சம பங்குகளாக எட்டுத் தவணைகளில் மீளச் செலுத்தப்படும்.

12 மாத காலத்தினுள் மற்றும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டிவீதம் % | முதிர்ச்சி | 2009 ரூ. 000 | 2008 ரூ. 000 |
|---|---|---|---|---|
| **நடைமுறை** | | | | |
| நீ.நி.வ. | 1.23 | | 307,754 | 1,200,693 |
| வ.த.வ.வ.2 | 0.5 | | 685,903 | 1,338,014 |
| அ.உ.வ. | 1.23 | | 2,308,154 | 9,005,196 |
| | | | 3,301,811 | 11,543,903 |
| **நடைமுறையற்ற** | | | | |
| து.ஒ.வ | | 2014 | 73,860,937 | - |
| வ.த.வ.வ.2 | 0.5 | 2013 | 4,115,416 | 4,683,050 |
| நீ.நி.வ. | 1.23 | 2010 | 923,262 | 600,346 |
| அ.உ.வ. | 1.23 | 2010 | - | 2,251,299 |
| | | | 78,899,615 | 7,534,695 |
| **மொத்த வட்டியுடன் கூடிய கடன்கள்** | | | 82,201,426 | 19,078,598 |

### சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடுகள்

சிஎஉ என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா.நி ஆல் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா.நி இன் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா.நி. க்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா.நி. ஆல் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா.நி. ஆல் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கு ஏற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா.நி. ஆல் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 6 வது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும், அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா.நி. சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா.நி. க்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

### ப.நா.நி க்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள்

தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல் வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா.நி க்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

### அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்

6ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா.நி அனுமதிப் பங்குக்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப்பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### துணைநில் ஒழுங்கு வசதி (து.ஒ.வ.)

இலங்கைக்கு ப.நா.நி.யினால் வழங்கப்பட்ட மிகக் கூடுதலான கடன் வசதி இதுவாகும். சென்மதி நிலுவைக்கு உதவும் வகையில் இலங்கைக்கு 2009 யூலை மாதம் 24 ஆம் திகதி சிஎஉ 1.65 பில்லியனுக்கு சமனான (அமெரிக்க டொலர் 2.6 பில்லியன்) தொகை 20 மாத துணைநில் ஒழுங்கு வசதி ப.நா.நி. யின் நிறைவேற்றுச் சபையால் அனுமதிக்கப்பட்டது. 2009 யூலை மாதம் 28 ஆம் திகதியும் 2009 நவெம்பர் மாதம் 10 ஆம் திகதியும் மொத்தமாக சிஎஉ 413.4 மில்லியனுக்கு (அ.டொலர் 644.4 மில்லியன்) சமனான இரண்டு கடன் தொகுதிகள் இலங்கையினால் பெறப்பட்டது. எஞ்சிய தொகை நாட்டின் பொருளாதார செயலாற்றுகையின் காலாண்டு மீளாய்வைப் பொறுத்து ஆறு தொகுதிகளாக வழங்கப்படும். ப.நா.நி.யினால் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் வசதி 400% சதவீத இலங்கையின் அனுமதிப் பங்குக்குச் சமனாகும்.

20 மாத துஒவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறுதித் தொகை 2011 மார்ச் மாதத்தில் வழங்கப்படும். கடன் தொகையை 2012 ஏப்பிறல் மாதத்தில் ஆரம்பித்து 4 வருடங்களினுள் மீளச் செலுத்த முடியும். துஒவ வசதிக்கான வட்டி வீதமானது, சேவைக் கட்டணம் மற்றும் நிலையான எல்லை ஆகிய இரண்டு ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளது.

### துஒவ யின் முக்கியமான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவுதல்.
- முரண்பாட்டுக்குப் பிந்திய புனரமைப்பு மற்றும் நிவாரண முயற்சிகளுக்கு அதிகளவில் தேவையான வளங்களின் இருப்பினை உறுதி செய்கின்ற அதேவேளை அரச நிதி நிலைமையினைப் பலப்படுத்தல்.
- பன்னாட்டு ஒதுக்குகளை மீளக் கட்டியெழுப்பத் திட்டமிடுதலும் இலங்கையின் உள்நாட்டு நிதி முறைமையினைப் பலப்படுத்தலும்
- முரண்பாட்டுக்குப் பிந்திய புனரமைப்புகளுக்கு பன்னாட்டு சமூகத்தின் நிதியுதவியைப் பரந்தளவில் பெறுகின்ற மேலாண்மைகளின் அணுகுமுறைகளுக்கு உதவுகின்றதான பலமான பேரண்டப் பொருளாதார அடிப்படையினை இடுதல்.
- மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை இவ்வாண்டின் மொஉஉ யின் 7% சதவீத இலக்கிலிருந்து 2011 ஆம் ஆண்டாகின்றபோது மொ.உ.உ. யின் 5% சதவீதமாகக் குறைத்தல்.
- நடைமுறை ஒழுங்குமுறையாக்கல் வரைச்சட்டத்தினை மேம்படுத்துவதன் மூலமும் வங்கி மேற்பார்வையினை மேம்படுத்துவதன் மூலமும் வங்கித்தொழில் முறைமையைப் பலப்படுத்தல்.

## 16. வெளிநாட்டுக்குச் செலுத்தவேண்டிய ஏனையவை

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ.000 |
|---|---|---|
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புகள் | 2,148,425 | 1,517,077 |
| சீன அபிவிருத்தி வங்கிக் கடன் | 2,859,610 | - |
| **வெளிநாட்டுக்குச் செலுத்த வேண்டிய ஏனையவற்றின் மொத்தம்** | **5,008,035** | **1,517,077** |

### சீன அபிவிருத்தி வங்கிக் கடன் (சீஅவ)

இமவ சீன அபிவிருத்தி வங்கியுடன் (சீஅவ) இரண்டு நிறுவனங்களுக்கிடையிலும் நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் பொருட்டு 2009 யூலை மாதம் 25 ஆம் திகதி உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டது.

இவ்வுடன்படிக்கையின் கீழ் சீஅவ அமெரிக்க டொலர் 25 மில்லியன் கடப்பாட்டினைக் கொண்ட திரண்டதொரு தொகைக்கான கடன் வசதியை வழங்கும் என்பதோடு, இமவ சந்தையின் திரவத் தன்மையை மேம்படுத்துதல், மற்றும் இலங்கையின் கமத்தொழில் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மூலம் நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டின் நோக்கத்திற்காக வசதியி-னைப் பயன்படுத்தும்.

6 மாத ஐ.அ.டொலர் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான விற்பனை வீதத்துடன் 4% சதவீத எல்லையினைப் பயன்படுத்தி வட்டி கணிப்பிடப்படும்.

இமவ பயன்பாட்டிற்குப் பின்னர் (14.08.2009) முப்பத்தாறு மாதங்களில் வருகின்ற இறுதி முதிர்ச்சித் திகதியன்று மேற்படி வசதியினை முழுமையாக மீளச்செலுத்த வேண்டியுள்ளது.

## 17. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் வைப்பிலிடப்பட்டவை

அதேநேர மொத்தத் தீர்ப்பனவுப் பொறிமுறையின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமநிதியம் உட்பட பங்குபற்றுபவர்களால் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவையான நிதியங்களை வட்டியற்ற, பூரணமான மேலதிகப் பிணையுடன் கூடியதாக நாளினுள் திரவத் தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாயுள்ளது. அவ்வாறான நாளினுள் திரவத் தன்மை வசதி-களைப் பெற்றுக்கொள்வதற்கு, பங்குபற்றுபவர்கள் வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்களை அடகு வைத்தல் வேண்டும். நாளினுள் திரவத் தன்மை வசதியின் கீழ் முற்பணங்களின் மூலம், வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்கள் மீது வழங்கப்பட்ட முற்பணங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டு இறுதிகளிலும் இவை பூச்சியப் பெறுமதியைக் கொண்டுள்ளன.

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகளால் வைப்பிலிடப்பட்டவை | | |
| -தொடர்புடையோர் | 36,556,496 | 33,347,603 |
| -ஏனையோர் | 49,525,894 | 48,960,685 |
| | 86,082,390 | 82,308,288 |
| நிதி நிறுவனங்களால் வைப்பிடப்பட்டவை | | |
| -தொடர்புடையோர் | 132 | 91 |
| -ஏனையோர் | 3,344 | 2,836 |
| | 3,476 | 2,926 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களால் வைப்பிலிடப் பட்டுள்ள மொத்தம் | 86,085,866 | 82,311,214 |

## 18. (அ) அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள்

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | 1,414,039 | 341,343 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | 933,670 | 904,281 |
| **அரச மற்றும் அரச நிறுவனங் களுடனான மொத்த நிலுவைகள்** | 2,347,709 | 1,245,624 |

### (ஆ) மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | 6,000,000 | 13,743,000 |
| இ.ம.வ. பிணையங்கள் | 78,022,645 | - |
| **அரச மற்றும் அரச நிறுவனங் களுடனான மொத்த நிலுவைகள்** | 84,022,645 | 13,743,000 |

## 19. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களின் வங்கியாளர் என்ற ரீதியில் செயற்படுகின்றது. வங்கியின் தனியாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் நன்மைத் திட்டங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு.

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| ஊழியர் சேமநிதியம் - தொடர்புடையோர் | 1,083 | 2,563 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - தொடர்புடையோர் | (481,359) | (482,438) |
| விதவைகள்/விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - தொடர்புடையோர் | 667,955 | 704,166 |
| பணிக்கொடைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | 19,162 | 39,337 |
| மருத்துவ நலத் திட்டங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | 843,415 | 891,433 |
| **ஏனைய மொத்த வைப்புக்கள்** | 1,050,255 | 1,155,061 |

## 20. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுத் திகதியன்று சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தொகைகள் பின்வருமாறு:-

| | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| **இனம்** | | |
| **குத்திகள்** | | |
| சதம் 1 | 3,631 | 3,631 |
| சதம் 2 | 5,702 | 5,701 |
| சதம் 5 | 23,249 | 23,247 |
| சதம் 10 | 39,220 | 39,217 |
| சதம் 25 | 120,754 | 120,339 |
| சதம் 50 | 184,190 | 182,833 |
| ரூபா 1 | 574,058 | 539,674 |
| ரூபா 2 | 811,255 | 762,381 |
| ரூபா 5 | 2,501,296 | 2,372,090 |
| ரூபா 10 | 447,287 | 405,241 |
| ஏனைய நினைவு தினக் குத்திகள் | 546,535 | 337,454 |
| | 5,257,177 | 4,791,808 |

| | 2009 ரூ. 000 | 2008 ரூ. 000 |
|---|---|---|
| தாள்கள் | | |
| ரூபா 1 | 4,981 | 4,981 |
| ரூபா 2 | 26,699 | 26,700 |
| ரூபா 5 | 37,208 | 37,211 |
| ரூபா 10 | 1,806,776 | 1,904,330 |
| ரூபா 20 | 2,068,244 | 1,899,290 |
| ரூபா 50 | 3,052,438 | 2,773,091 |
| ரூபா 100 | 12,254,788 | 11,415,696 |
| ரூபா 200 | 176,231 | 174,796 |
| ரூபா 500 | 18,171,292 | 15,693,067 |
| ரூபா 1000 | 101,922,111 | 93,189,087 |
| ரூபா 2000 | 72,651,890 | 54,188,857 |
| | 212,172,658 | 181,307,106 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | 217,429,835 | 186,098,914 |

## 21. தள்ளிவைக்கப்பட்ட அளிப்புகள்

ஆண்டினுள் வங்கியானது கனணிகள், தளபாடங்கள், மற்றும் பொருத்துக்களை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து எவ்வித ஈடுமின்றிப் பெற்றது. இச் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளதுடன், ஒத்திசைவான கடன் அட்டுறு வருமானமாக இனங்காணப்பட்டது. அட்டுறு வருமானமானது, மேற்படி சொத்துக்களுக்குரிய தேய்மானக் கொள்கைக்கு ஏற்றவாறான காலகட்டத்தினுள் கடன்தீர் நிதிய அடிப்படையில் தேய்மானமளிக்கப்படுகிறது. அளிப்பின் மொத்தப் பெறுமதி ரூபா.639 ஆவதோடு வருமானக் கூற்றில் (ஏனைய வருமானத்தின் கீழ்) ஆண்டினுள் இனங்காணப்பட்ட தொகை ரூபா 72 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 22. மூலதனம்

### மூலதன விடயத்தின் இயல்பு

### மூலதன நிதியம்

பங்களிப்பு மூலதனம்: நாணயவிதிச் சட்டத்தின் 6வது வாசகத்தின் பிரகாரம் வங்கியின் மூலதனத்தை மூலதனக்கணக்கிலுள்ள ரூபா 15,000 பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

### மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்குகள்

நாணயச் சபையின் தீர்மானம் MB/F/22/12/2008 இன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டில் பொது ஒதுக்கங்களிலிருந்து ரூபா.24,985,000 மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

வைத்திருக்கப்படுகின்ற ஈட்டப்பட்டவைகளுக்கு மேலதிகமாக, ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

**பொது ஒதுக்கம்:** பின்வரும் ஒதுக்கங்களுக்காக நாணயச் சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் பொது ஒதுக்கங்களில் உள்ளடங்குகின்றன. அவை மூலதனப்பங்களிப்பு, நீண்டகால மற்றும் நடுத்தர காலக் கடன்கள், கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கங்களாகும். நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு செய்யப் பயன்படுகின்ற நிதியத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு மூலதனப் பங்களிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**மிகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கம்:** இது மிகை ஒதுக்கத்தையும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கத்தையும் உள்ளடக்கியுள்ளது. மிகை ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒரு ஒதுக்கமாவதோடு, இதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் மொத்த மூலதனமானது, வங்கியின் மொத்தச் சொத்துக்களுக்கும் தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலான சொத்துக்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தின் 15 சதவீதத்தை விடக் குறையலாகாது. ஏனைய மூலதன ஒதுக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படாத வரலாற்று ரீதியிலான மிகைகளும் பற்றாக்குறைகளும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கங்களுக்கு உரியவையாகும்.

**மீளக் கணிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம்:** மீளக் கணிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் வாசகத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற உண்மையிலேயே ஈட்டப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காகக் கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் மீளக் கணிப்பிடப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்தி வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணை-களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, முறைமையினுள் மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கி பிணையங்கள் மற்றும் ஐ.அ./இரு பிணையங்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப் பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

## 36. ஓய்வூதியமும் ஊழியத்திற்குப் பின்னரான ஏனைய நலவுரிமைத் திட்டங்களும்

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக்கூடியவாறான திட்டவட்டமான ஐந்து நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றது. ஊழியா் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னா் வங்கியில் சோ்ந்த ஊழியா்கள், 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னா் இதற்குத் தகுதி பெறுகின்றனா். ஊழியா் ஓய்வூதியத் திட்டமானது பங்களிப்புத் தொகை செலுத்தப்படாத ஓய்வூதியத் திட்டமாக உள்ளதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியா்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும், பெண் ஊழியா்களுக்கான விதுரா்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னா் வங்கியில் சேவைக்குச் சோ்ந்த ஊழியா்களுக்குத் திறந்ததாயுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற ஊழியா்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வாா்கள்.

வங்கியில் ஐந்து வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியா் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியா்களுக்காக பணிக்கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப் பொறுப்புக்கான ஏற்பாடுகளாக, ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

ஊழியா் நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியா்களால் அவா்கள் பெயரில் அல்லது அவா்க-ளது துணைவா் பெயரில் மற்றும் ஊழியா்களது விதவைகள்/ விதுரா்களாலும் ஏற்கப்படுகின்ற ஒருசில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியா் ஓய்வூதியத் திட்டத்தின், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் மற்றும் விதுரா்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின், பணிக்கொடைகள் திட்டத்தின் மற்றும் மருத்துவ நலத் திட்டத்தின் திட்டவட்டமான நன்மைகளைப் பகிா்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடா்புடைய நடைமுறைச் சேவை கிரயச் செலவுகள் தொடா்பான ஆயுட்கால மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான ஆயுட்கால மதிப்பீட்டாளரான திரு. கே.ஏ. பன்டிற், ஆலோசகா் மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டாளா் (மும்பாய்) ஆண்டினுள் சேவையின் பொருட்டு வங்கியினால் அமா்த்தப்பட்டாா்.

உரிய திட்டங்களுக்கான ஆயுட்கால மதிப்பீடாக நடைமுறைச் சேவைச் செலவு, வட்டிச் செலவு, திட்டச் சொத்துக்கள் மீதான எதிா்பாா்க்கப்பட்ட தேறிய வருமானம், ஆயுட்கால இலாபம் /(நட்டங்கள்) மற்றும் இடைக்காலத் திருத்தங்களும் வரையறுக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளும் தொடா்பாக வங்கியினால் வருமானக் கூற்றில் காட்டப்பட்ட தேறிய நன்மைகள் செலவுத் தொகையின் ஆக்கக்கூறுகளைப் பின்வரும் அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

அறிக்கையிடல் காலகட்டத்தின் இறுதியில் உள்ளவாறான, அனைத்து நலவுரிமைக் கடப்பாடுகளினதும் நடைமுறைப் பெறுமதியான ரூபா 22,484,718 திட்டச் சொத்துகளின் நியாயப் பெறுதியான ரூபா 23,331,568 விட ரூபா. 846,850 ஆல் அதிகரித்துள்ளது. முந்திய அறிக்கையிடல் கால கட்டத்தில் அனைத்து நலவுரிமைக் கடப்பாடுகளினதும் மொத்த நடைமுறைப் பெறுமதி திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறமதியை விட ரூபா 2,031,226 ஆல் அதிகரித்திருந்தது.

| 2009<br>நலவுரிமைப் பொறுப்புக்கள்/ (சொத்துகள்) | ஊழியர் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | பணிக் கொடை திட்டம்<br>ரூ. 000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ. 000 | மொத்தம் 2009<br>ரூ. 000 |
|---|---|---|---|---|---|---|
| நலவுரிமைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 18,511,015 | 2,523,147 | 473,914 | 48,507 | 928,135 | 22,484,718 |
| திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி | (16,580,964) | (4,274,381) | (1,272,455) | (45,669) | (1,158,099) | (23,331,568) |
| **இனங்காணப்படாத தேறிய ஆயுட் தொகை இலாபம்/ (நட்டம்)** | (1,447,688) | 1,238,342 | 644,226 | 3,781 | 114,714 | 553,374 |
| இனங்காணப்படாத நிலைமாறுகால பொறுப்புகள் | - | - | - | - | - | - |
| **நடைமுறையற்ற நலவுரிமைப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்)** | **482,363** | **(512,892)** | **(154,316)** | **6,618** | **(115,250)** | **(293,476)** |

## 36. ஓய்வூதியமும் ஊழியர் நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைத் திட்டங்களும் (தொடர்ச்சி)

| நலவுரிமைப் (சொத்துகளின்)/பொறுப்புக்களின் அசைவு | ஊழியர் ஓய்வூதிய திட்டம் | விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் | பணிக் கொடை திட்டம் | மருத்துவ நலன்கள் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| 2099 சனவரி 01 இல் உள்ளவாறு | 1,380,171 | (207,397) | (55,998) | (4,051) | (86,028) | 1,026,697 |
| நலவுரிமைகளுக்கான செலவு | 316,319 | 39,368 | 23,848 | 10,669 | (29,222) | 360,983 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (1,214,127) | (344,863) | (122,165) | - | - | (1,681,156) |
| **2009 திசெம்பர் 31இல் உள்ளவாறான -நடைமுறையல்லாத** | **482,363** | **(512,892)** | **(154,316)** | **6,618** | **(115,250)** | **(293,476)** |
| **நலவுரிமைகளுக்கான செலவுகள்** | | | | | | |
| நலவுரிமைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 1,584,768 | 364,307 | 111,064 | 4,319 | 86,616 | 2,151,074 |
| திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | (1,392,879) | (340,724) | (98,679) | (5,055) | (110,615) | (1,947,952) |
| ஆண்டினுள் இனங்காணப்பட்ட தேறிய ஆயுட் தொகை (இலாபம்) / நட்டம் | - | 15,785 | 11,463 | - | (8,418) | 18,830 |
| நிலைமாறுகால சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சேவைச் செலவினங்கள் | 124,430 | - | - | 11,405 | 3,195 | 139,030 |
| சேவைக்குப் பிந்திய செலவுகள் | - | - | - | - | - | - |
| **தேறிய நலவுரிமைகளுக்கான செலவுகள்** | **316,319** | **39,368** | **23,848** | **10,669** | **(29,222)** | **360,983** |
| **திட்டமிடப்பட்ட சொத்தின்உண்மையான வருவாய்** | **2,339,910** | **674,626** | **174,043** | **4,655** | **133,656** | **3,326,889** |
| **திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலானமாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி | 13,928,786 | 3,407,239 | 986,792 | 50,552 | 1,106,147 | 19,479,516 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,339,910 | 674,626 | 174,043 | 4,655 | 133,656 | 3,326,889 |
| பெறப்பட்ட பங்களிப்புகள் | 1,214,127 | 344,863 | 122,165 | - | - | 1,681,156 |
| செலுத்தப்பட்ட நலவுரிமைகள் | (901,859) | (152,348) | (10,544) | (9,538) | (81,704) | (1,155,993) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி** | **16,580,964** | **4,274,381** | **1,272,455** | **45,669** | **1,158,099** | **23,331,568** |

36. ஓய்வூதியமும் ஊழியர் நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைகளும் (தொடர்ச்சி)

| 2008<br>நலவுரிமைப் பொறுப்புக்கள் | ஊழியர் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம்<br>ரூ. 000 | பணிக் கொடை திட்டம்<br>ரூ. 000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ. 000 | மொத்தம்<br>ரூ. 000 |
|---|---|---|---|---|---|---|
| நலவுரிமைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 15,847,675 | 3,643,074 | 1,110,636 | 43,194 | 866,162 | 21,510,741 |
| திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி | (13,928,786) | (3,407,239) | (986,792) | (50,552) | (1,106,147) | (19,479,515) |
| இனங்காணப்படாத தேறிய ஆயுட் தொகை இலாபம்/ (இழப்பு) | (538,718) | (443,232) | (179,842) | 3,307 | 153,957 | (1,004,528) |
| இனங்காணப்படாத நிலைமாறுகால பொறுப்புகள் | - | - | - | - | - | - |
| **நடைமுறைகளல்லாத நலவுரிமைப் பொறுப்புக்கள்** | **1,380,172** | **(207,397)** | **(55,999)** | **(4,051)** | **(86,028)** | **1,026,698** |
| **நலவுரிமைப் பொறுப்புக்களின் அசைவு** | | | | | | |
| 2008 சனவரி 01 இல் உள்ளவாறான | 732,154 | (247,154) | (78,927) | (7,925) | (73,967) | 324,182 |
| நலவுரிமைகளுக்கான செலவு | 908,051 | 39,757 | 22,928 | 3,874 | (12,061) | 962,550 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (260,034) | - | - | - | - | (260,034) |
| **2008 திசெம்பர் 31இல் உள்ளவாறான - நடைமுறையல்லாத** | **1,380,172** | **(207,397)** | **(55,999)** | **(4,051)** | **(86,028)** | **1,026,698** |
| **நலவுரிமைகளுக்கான செலவுகள்** | | | | | | |
| நலவுரிமைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 1,121,626 | 238,553 | 69,038 | 2,660 | 61,191 | 1,493,067 |
| திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | (902,112) | (224,217) | (62,297) | (3,421) | (73,252) | (1,265,299) |
| ஆண்டினுள் இனங்காணப்பட்ட தேறிய ஆயுட் தொகை (இலாபம்) / நட்டம் | 457,705 | 24,045 | 15,349 | - | - | 497,100 |
| நிலைமாறுகால சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சேவைச் செலவினங்கள் | 230,832 | 1,376 | 838 | 4,635 | - | 237,682 |
| பிந்திய சேவைச் செலவினங்கள் | - | - | - | - | - | - |
| **தேறிய நலவுரிமைகளுக்கான செலவுகள்** | **908,051** | **39,757** | **22,928** | **3,874** | **(12,061)** | **962,550** |
| **திட்டச் செலவுகள் மீதான உண்மையான வருவாய்** | **2,386,690** | **536,912** | **158,574** | **8,213** | **185,968** | **3,276,357** |
| **திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி | 12,028,159 | 2,989,565 | 830,632 | 45,608 | 976,689 | 16,870,653 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,386,690 | 536,912 | 158,574 | 8,213 | 185,968 | 3,276,357 |
| பெறப்பட்ட பங்களிப்புகள் | 260,034 | 16,679 | 7,346 | - | - | 284,059 |
| செலுத்தப்பட்ட நலவுரிமைகள் | (746,097) | (135,917) | (9,759) | (3,269) | (56,511) | (951,553) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி** | **13,928,786** | **3,407,239** | **986,792** | **50,552** | **1,106,147** | **19,479,515** |

### 36. ஓய்வூதியமும் ஊழியர் நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைகளும் (தொடர்ச்சி)

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நலவுரிமைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு

| | 2009 | 2008 |
|---|---|---|
| கழிவு வீதம் | 10.00% | 10.00% |
| சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட விளைவு வீதம் | 10.00% | 7.50% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | 8.50% | 8.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | 7.50% | 6.50% |
| எஞ்சியுள்ள சராசரி சேவை ஆண்டுகள் - இமவ ஓய்வூதியம் | **2 ஆண்டுகள்** | 2 ஆண்டுகள் |
| விதவை அனாதை. ஓய்வூதியத் திட்டம் | **5 ஆண்டுகள்** | 5 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **6 ஆண்டுகள்** | 5 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **15 ஆண்டுகள்** | 15 ஆண்டுகள் |
| இமவ மருத்துவ நலத் திட்டம் | **8 ஆண்டுகள்** | 8 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 வயது** | 60வயது |

### 37. நிதிக் கருவிகள்

#### நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதி

நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதி என்பது, புரிந்துணர்வும் விருப்பமுமுள்ள தரப்பினர்களிடையே நடைபெறுகின்ற நெருங்கிய கொடுக்கல் வாங்கலின் போது, சொத்தொன்றைப் பரிமாறிக்கொள்வதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடைதான பணத் தொகைகளாகும். நிதிக் கருவியொன்றை விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல் வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத் தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதிக் கருவியை விற்பனை செய்கின்ற போது அதன் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப் பெறுமதி நியாயப் பெறுமதியாகும்.

#### நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விளக்கப்பட்டுள்ளவாறு, கீழே விளக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர, குறிக்கப்பட்டுள்ள சந்தை விலை அல்லது சந்தை விளைவு வளையியின்படி மதிப்பிடப்படுகின்றன.

மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்.

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக அண்மிய நியாயப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. 2009 திசெம்பர் 31இல் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் எடுத்துச் செல்லப்பட்ட பெறுமதி ரூபா 6,000,000 ஆக இருந்ததோடு (2008 இல் ரூபா13,743,000) இமவ பிணையங்கள் ரூபா 78,022,645 ஆக இருந்தது.

சுற்றோட்டத்திலுள்ள நாணயம்.

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

வைப்புக்கள்.

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் எடுத்துச் செல்லப்படும் பெறுமதியானது நியாயப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

#### சொத்துக்களுக்கான உத்தரவாதங்கள்

பிணையங்கள் தீர்ப்பனவுச் செயற்பாட்டு வசதியின் பொருட்டு, வங்கியினால் யூரோ தீர்ப்பனவு வங்கிக்கு அவுஸ்திரேலிய டொலர் 39,000 மற்றும் பிரித்தானிய பவுண் 10,000 (எடுத்துச் செல்லும் பெறுமதி அவுத்திரேலிய டொலர் 36,953 மற்றும் பிரித்தானிய பவுண் 10,223) பெறுமதியான பிணையங்கள் (2008 இல் யூரோ 50,000 - எடுத்துச் செல்லும் பெறுமதி 49,609) உத்தரவாதமளிக்கப்பட்டதோடு, ஐக்கிய அமெரிக்க டொலர் 35,000 (2008 இல் ஐ.அ.டொ. 35,000) கடன் வசதியும் பெறப்பட்டது. உத்தரவாதப் பிணையங்கள் யூரோ தீர்ப்பனவில் தனியானதொரு கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

### 38. தொடர்புடைய தரப்பினர்கள்

#### 38.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

வங்கி பொதுவான தொழிற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றபோது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல் வாங்கலில் பிரவேசிக்கின்றது. இலங்கை அரசாங்கமும் (அரசு: வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்புடைய தரப்பினர்களில் உள்ளடங்குகின்றன. அரசு மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| கொடுக்கல் வாங்கலின் இயல்பு | 2009<br>ரூ. 000 | 2008<br>ரூ. 000 |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்களின் முதலீட்டுப் பட்டியல் (அ) | 43,450,557 | 159,771,674 |
| அரச பிணையங்களின் முழுமையான விற்பனை | 26,804,878 | 3,355,535 |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இமவ மற்றும் அரச பிணையங்கள் | 1,751,900,559 | 135,561,027 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (ஈ) | 972,801 | 817,910 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான இமவ யினால் வழங்கப்பட்ட பிணைகள் (குறிப்பு 39) | 1,148,253 | 898,129 |
| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் திரட்டப்பட்ட நிதியங்கள் (உ) | 17,552 | 16,890 |
| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், பண்டங்கள் சேவைகள் வரி ((ஊ) | 847,278 | 638,947 |
| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் அரசுக்குச் செலுத்தப்பட்ட இலாப முற்பணம் (குறிப்பு 23) | 20,000,000 | 8,000,000 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசுக்கான முற்பணங்கள் (குறிப்பு 7) | 73,880,500 | 76,307,700 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | 1,497,973 | 1,364,690 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் (ஏ) | | |
| - விற்பனை | 94,689,937 | 173,314,334 |
| - கொள்வனவு | 89,021,263 | 76,267,539 |
| - SWAP - ஐஅடொ இ.ரூபா விற்பனை - கொள்வனவு | 21,876,817 | - |
| மீள்நிதியிடல் (ஒ) | 781,958 | 1,051,017 |

அ உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949 ம் ஆண்டு 58 ம் இலக்க திருத்தப்பட்டதான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92 ம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன், நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடைமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2009 திசெம்பர் 31 ம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 17 மற்றும் 18 இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளது.

ஆ நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும், ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. அறிக்கையிடும் காலகட்டத்தினுள் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 2 உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் 13 சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது நிதியிடப்பட்ட வங்கிகள் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் உள்ளன.

இ நாணய விதிச் சட்டத்தின் 113 ம் பிரிவின் பிரகாரம் நிதிச்சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப் படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப் படுகடன் திணைக்களமானது பொதுப் படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித்தேவைகளை உறுப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பண செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

ஈ. நாணய விதிச் சட்டத்தின் 49 ம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம.வ. யின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40% பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டிலாரோ லங்கா கரண்சி என்ட் செக்குரிட்டி (பிரைவட்) லிமிட்டெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

உ நாட்டுக்கு உள்வரும், வெளிச்செல்லும் வெளிநாட்டுச் செலவாணியின் பெறுகைகள் கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தி, முகாமைத்துவம் செய்யும் முக்கிய தொழிற்பாடு, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு உரியதாகும். இத் தொழிற்பாட்டை ஆற்றும்போது விதிக்கப்படும் அபராதங்கள், நிதி அமைச்சு சார்பாக சேகரிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியில் வரவு வைக்கப்படுகிறது.

ஊ வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடு உள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

எ மத்திய வங்கியானது, குறிப்பு 40 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புகள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது.

ஏ வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்குள்ளான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது, வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டுவருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடைவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

ஐ வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

ஒ வங்கியானது 39.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடன் பிணையங்கள் வழங்கப்பட்டுள்ள இமவ யினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூபா 781,958 (2008 இல் ரூபா 1,051,017) தொகை மற்றும் அரசினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூபா 2,970,035 (2008 இல் ரூபா 5,748,653) தொகை என்றவாறு மீள்நிதியிடல் கடன்களை வழங்குகின்றது.

### 38.2 வங்கி குறிப்பிடத்தக்க முதலீடுகளைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்.

9ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறு, ஆண்டினுள் வங்கியானது, பங்காண்மையைக் கொண்டுள்ள நிறுவனங்களின் முதலீடுகளின் மூலம் ரூபா. 25,163 (2008 இல் 9,048) பங்கிலாபமாகப் பெற்றது.

### 38.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கி நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் வரையறுக்கின்றது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

நாணயச் சபை அங்கத்தவர்களுக்கான பணிக் கொடைகள்:

| | **2009** | 2008 |
|---|---|---|
| | **ரூ. 000** | ரூ. 000 |
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **57,641** | 47,136 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கு அமைய கம்பனியினால் காசலலாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

### 38.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 |
| பிரதம முகாமைத்துவ ஆளணி யினருக்கான கடன்கள் | **13,536** | 4,426 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்தம் மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 19 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளது.

### 38.5 ஊழியர் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்.

| | 2009 | 2008 |
|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 |
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகள் | **20,605** | 16,440 |

குறிப்பு 36 இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஊழியர் நிலைக்குப் பின்னரான திட்டங்களுக்கு பல்வேறு தொகைகளையும், ஊழியர் சேம நிதியத்திற்கு ரூபா. 113,065 ஐயும் (2008 இல் ரூபா 190,927) பங்களிப்புச் செய்துள்ளது. 2009 ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதியம் மிகை வருவாயைக் கொண்டிருந்ததால் வட்டி உதவு தொகை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை (2008 இல் வட்டி உதவு தொகை ரூபா 468,165). மேற்படி ஊழியர் நிலைக்குப் பிந்திய திட்டங்களுக்கு வங்கியின் பொதுவான அலுவல்களிடையே வங்கிச் சேவைகளும் நிதிச் சேவைகளும் வழங்கப்படுகின்றன. மேற்படி திட்டங்களுடனான மீதிகள் குறிப்பு 19 இல் தரப்பட்டுள்ளன.

## 39. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்.

### 39.1 நிதிப் பிணை ஒப்பந்தங்கள்.

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இமவ க்கு வழங்கப்பட்டுள்ள பதில் பிணைகளைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் பிணைகளை வழங்குகின்றது. 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 39.2 கடன் பிணைகள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகியன மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன் பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப் பத்திரமல்லவென்பதோடு, நட்டங்களுக்காக மட்டுமே ஆகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு.

உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் பிணைகள் சார்பில்

| பிணை பெறுநர்கள் | தீர்க்கப்படாதுள்ள பிணைகளின் தொகை | |
|---|---|---|
| | 2009 | 2008 |
| | ரூ. 000 | ரூ. 000 |
| தொடர்புடைய தரப்பினர்கள் | | 898,129 |
| - இமவ நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | 213,659 | |
| - இலங்கை அரசாங்கம் நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | 934,594 | |
| ஏனையோர் | | 1,841,706 |
| - இமவ நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | 1,387,591 | |
| - இலங்கை அரசாங்கம் நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | 326,457 | |
| **மொத்த கடன் பிணைகள்** | 2,862,301 | 2,739,835 |

எவ்வாறாயினும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் பராமரிக்கப்படுகின்ற கடன் பிணை நிதியத்திலிருந்து மொத்த கடன் பிணைப் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டன.

### 39.3 வைப்புக் காப்புறுதியின் கீழான பிணைகள்

தன்னார்வ அடிப்படையிலான வைப்புக் காப்புறுதித் திட்டங்களைத் திறப்பதற்கு இ.ம.வ.ஆல் உரிமம் வழங்கப்பட்டுள்ள, வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற வங்கி நிறுவனங்களினதும் 1972 ம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களினதும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தை வங்கி நிர்வகிக்கின்றது. திசெம்பர் மாதம் 31 ம் திகதியுள்ளவாறு வங்கி ஒரு நிறுவனம் சார்பில் இத்திட்டத்திற்குத் தகைமை பெறுவதற்காகத் தொடர்ந்து செலுத்திவர வேண்டியுள்ள கட்டணத் தொகையான ரூபா 887,857 (2008 இல் ரூபா 880,352) க்கு பிணையாக நின்றது.

### 39.4 பொறுப்பாளரின் செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது பொறுப்பாளரின் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ்வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச்செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 39.5 சட்ட உரிமை கோரல்கள்.

சட்ட உரிமையுடன் ரூபா. 44,021 கோரல் சம்பந்தப்பட்ட பங்கீடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட 88 வழக்குகளில் வங்கி ஒரு எதிர் தரப்பாக உள்ளது. வங்கியினால் இவ்வழக்குகள் வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுகளில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் 2009 திசெம்பர் 31 இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதெனும் அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### 39.6 கடப்பாடுகள்.

(அ) 2009 திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ரூபா51,230 (2008 இல் ரூபா 41,296 ) மூலதனக் கடப்பாடொன்று வங்கியினால் ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) 2009 திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு ஐ.அ. டொலர் 245,000 மற்றும் யப்பான் யென் 500 தொகையிலான முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தது.

(இ) திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுச் செலவாக ரூபா 1,310,525 (முகப்புப் பெறுமதி ரூபா 1,410,000) வையும் அவ்வுண்டியல் மீதான வட்டி தொடர்பிலான தடுத்து வைத்தல் வரியாக ரூபா 8,560 தொகை கடப்பாடொன்றையும் கொண்டிருந்தது.

### 39.7 இறைமை வதிவிடங்களுக்கு எதிரான எதிர்பாராப் பொறுப்புகள்

இறைமை வதிவிடங்களைத் தொழிற்படுத்துதல் தொடர்பிலான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் எஸ். டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த நிதியத்திற்கும் இடையிலான குத்தகை உடன்படிக்கையைத் தொடர்ந்து

இரண்டு தரப்பினர்ராலும் இணங்கப்பட்ட நிலமனையிடங்களுக்கு குத்தகை பெற்றவர் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற போது குத்தகைக்கு விடுபவர் என்ற வகையில் இமவ, தொழிற்படு ஆண்டில் முதலீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் இணங்கப்பட்டதொரு வீதாசாரத்தினை செலுத்த வேண்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டின் இறுதியில் குத்தகைக்கு விடுபவரான, இலங்கை மத்திய வங்கியின் எதிர்பாராப் பொறுப்புகளாக, முதலாவது தொழிற்படு ஆண்டின் இறுதியில் மதிப்படபட்டிருந்த முதலீட்டுப் பெறுமதியில் 60 சதவீதமான ரூபா 26,319 (2008 இல் - இல்லை) கருதப்பட்டது

## 40. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புகள், ஒய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியின் முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:-

(அ) வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியுதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திை-றசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

(ஆ) வங்கியே உழியர் சேம நிதியத்தின் காப்பாளர் ஆகும். இச் சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகை அறவீடுகளை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணிவருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல் அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

(இ) மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972 ஆம் ஆண்டின் 5 இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்புடையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டத்தை வங்கியே நிர்வகிக்கின்றது.

(ஈ) நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் கவனிக்கின்றது. இத்தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் தவறும் நிதிக்கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுக்கின்றது. அந்தக் கம்பனிகளின் கட்ட முடியாத முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களின் அதிகாரத்தை எடுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(உ) நாணய விதிச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் தற்காலிக திரவத்தன்மை வசதிகள்

நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிவருதல் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. ஆதலால், 2008 திசம்பர் மாதத்தில் இ.ம.வங்கியானது திரவத் தன்மைப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கி தொடர்பில், அதன் முக்கியத்துவத்தினைக் கவனத்திற்கொண்டு நாணய விதிச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கையெடுத்தது. மேற்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு இலங்கை மத்திய வங்கி ஐ.அ.டொ. 18 மில்லியன் பெறுமதியான திரவத் தன்மை வசதியினை பரிமாற்ற வடிவில் 3 மாத காலத்திற்கு வழங்கியதோடு, 2009 சனவரியில் ரூபா 2,200,00 ஐ 14 நாட்களுக்கு வழங்கியது.

(ஊ) 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலுள்ள, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களின் அடையாளம்காணல், அறிக்கையிடல், முடிவுறுத்தல், பராமரித்தல் ஆகிய வற்றுக்கான வழிகாட்டல்களுக்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 371,222 தற்காலிக கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்தை கட்டளை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான ஆரம்ப மூலதனப் பங்களிப்பாக அரச திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு மாற்ற வேண்டியுள்ளது.

## 41. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் தொடர்பான திகதியன்று உள்ளவாறான முதலீடுகள்.

| முதலீடுகள் செய்யப்பட்டுள்ள கம்பனி | வர்த்தக நடவடிக்கை | கொண்டிருக்கும் உடமை % | | ஆண்டு இறுதி |
|---|---|---|---|---|
| | | 2009 | 2008 | |
| லங்கா க்ளியர் (பிறைவேட்) லிமிட்டட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | 19.66 | 19.66 | மார்ச் 31 |
| பிச் ரேட்டிங் லங்கா லிமிட்ட் | கொடுகடன் தரமிடல் | 10.00 | 10.00 | திசெம்பர் 31 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதி மாற்றல் | 7.50 | 7.50 | திசெம்பர் 31 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | 19.9 | 19.9 | திசெம்பர் 31 |
| விற்பனைக்காக வைத்திருத்தல் வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | 8.51 | 31.04 | திசெம்பர் 31 |

(இ) ஒவ்வொரு நிறுவனத்தினதும் முதலீடுகளின் எடுத்துச் செல்லப்படும் பெறுமதி பின்வருமாறு:

| | 2009 ரூபா 000 | 2008 ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | 6,027 | 6,027 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டட் | 29,500 | 29,500 |
| பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டட் | 3,500 | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | 2,250 | 2,250 |
| **நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்** | 41,277 | 41,277 |
| விற்பனைக்கான வைத்திருத்தல் வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | 2,578 | 9,452 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களிலான மொத்த முதலீடுகள் | 43,855 | 50,729 |

## 10. இருப்புக்கள்

| | 2009 ரூபா.000 | 2008 ரூபா.000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | 1,687,046 | 1,539,696 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | 391,615 | 440,791 |
| இடைநிலையிலுள்ள நாணயக் குத்திகள் | 68,587 | 7,739 |
| | 2,147,248 | 1,988,226 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புகளுக்கான ஏற்பாடு | (25,000) | (55,300) |
| | 2,122,248 | 1,932,926 |
| காகிதாதிகளும் நானாவிதப் பொருட்களும் | 34,952 | 28,761 |
| **மொத்த இருப்புக்கள், குறைந்த கிரயச் செலவு மற்றும் பெறத்தக்க தேறிய பெறுமதிகளில்** | 2,157,200 | 1,961,687 |

## 11. ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்

| | காணியும் கட்டடமும் ரூ.000 | இயந்திரங்கள் இயந்திரப் பொறிகள் ரூ.000 | தளபாடங்களும் பொருத்துகளும் ரூ.000 | உந்து ஊர்திகள் ரூ.000 | கணனி வன் பொருட்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 | மொத்தம் ரூ.000 2009 | மொத்தம் ரூ.000 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | 8,056,962 | 730,657 | 176,669 | 71,413 | 47,230 | 160,056 | 9,242,987 | 9,354,647 |
| கொள்வனவு | 178,448 | 9,915 | 40,565 | 1,323 | 53,332 | 98,142 | 381,724 | 199,674 |
| நீக்கப்பட்டவை | | | (4,592) | - | (770) | - | (5,362) | (13,635) |
| மீள்வகைப்படுத்தல்களின் தேறிய தாக்கம் /பதிவழித்தல்கள் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | (122,195) | (52,665) | (43,357) | (27,254) | (29,378) | (1,553) | (276,401) | (297,698) |
| **திசெம்பர் 31ஆம் நாள் உள்ள வாறான தேறிய திரண்ட பெறுமானத் தேய்வு** | 8,113,214 | 687,907 | 169,285 | 45,482 | 70,414 | 256,645 | 9,342,947 | 9,242,988 |

## 2. வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது, நாணயச்சபையினால் உரிமம் வழங்கப்பட்ட எல்லா வங்கி நிறுவனங்களையும், தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காகவும் மற்றும் காலத்திற்குக் காலம் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்காகவும் நாணயச் சட்டத்தின் பிரிவு 28(1)இன்கீழ் உருவாக்கப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முக்கியமாக வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் அவை வைப்பாளர்களினதும் மற்றும் ஏனைய கடன் கொடுநர்களினதும் நலன்களை பாதுகாப்பதாகவும் இருந்தது. 2009ஆம் ஆண்டின் இறுதியில் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 14 உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளும் உள்ளடங்கலாக 36 உரிமம் பெற்ற வங்கிகள் தொழிற்படுகின்றன. இத்தகைய வங்கிகளின் பெயர்கள் ஆங்கில அகர வரிசையின்படி இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் முன்மதியுடனான ஒழுங்கு விதிகளை உருவாக்குவதும் அமுல்படுத்துவதும் தொடர்ச்சியான மேற்பார்வையினை மேற்கொள்ளுவதும், உண்மை நிலையினை அறிந்து கொள்வதற்காக காலத்திற்குக் காலம் வங்கிகளைப் பரீட்சிப்பதும், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகளுக்கான கோரிக்கைகளை செயல்முறைப்படுத்துவதும் மற்றும் சுயவிருப்பிலான வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நிருவகிப்பதுமாகும். வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் 2009ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட செயற்பாடுகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2.1 இடர்நேர்வு முகாமைத்துவத்தினை பலப்படுத்துவதற்கான முன்மதியுடைய ஒழுங்கு விதிகள்

திணைக்களமானது உரிமம் பெற்ற வங்கிகளுக்கு புதிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்த அதேவேளை ஏற்கனவே உள்ள ஒழுங்கு விதிகளில் பல திருத்தங்களையும் செய்தது. இம் முன்மதியுடைய ஒழுங்கு விதிகளின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை முக்கியமான மாற்றங்களின் ஒரு சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) வங்கிகளில் 15% இற்கு கூடுதலான உரிமையாண்மையை குறைப்பதற்கான ஆகக் கூடுதலான காலப்பகுதி: 2007ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பணிப்புரையானது குறிப்பிட்ட விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் கீழ் 15% மேற்பட்டதாக வாங்கப்பட்ட பங்கினை கொண்டிருப்பதனை குறைப்பதற்கான ஆகக் கூடுதலான காலப்பகுதியினை ஒவ்வொரு விடயமாக தீர்மானிப்பதற்கு நாணயச் சபையினை இயலச் செய்வதற்காக திருத்தப்பட்டது.

(ஆ) இறக்குமதிகள் மீதான அளவுத் தேவைப்பாடுகளை நீக்கியமை: தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் இறக்குமதிகள், உந்து ஊர்திகளின் தெரிந்தெடுக்கப்பட்ட வகைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தம் என்பன மீது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினாலும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினாலும் கூட்டாக விதிக்கப்பட்ட அளவுத் தேவைப்பாடுகள் புறக்கீடு செய்யப்பட்டன.

(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவம்: கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பில் ஆளுநர் சபை மட்டத்திலான ஈடுபாட்டை கட்டாயமாக்குவதனையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான வலிமை மிகுந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை ஏற்படுத்துவதனையும் வங்கிகளில் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களின் தகுதி மற்றும் பொருத்தம் என்பவற்றை உறுதிப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் சார்ந்த இடர் முகாமைத்துவம் தொடர்பிலான பணிப்புரை வெளியிடப்பட்டது.

(ஈ) இயக்குனர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் அவர்களின் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்ட தொடர்பிலான பிரிவினர்/நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான அனுமதியளிக்கப்பட்ட பிணையங்கள்: அவ்வாறான கடன்களை வழங்குவதற்கான அனுமதி யளிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கைச் சான்றிதழ்/குத்தகை பெறுவனவுகள் என்பவற்றை கருத்திற் கொள்வதற்கு வங்கிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

(உ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள கைவிடப்பட்ட சொத்துக்கள்: வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளை மேலும் பலப்படுத்துவதற்காக, கைவிடப்பட்ட சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் சொத்து மாற்றல் செய்வதற்கான செயன் முறைகளை வழங்குவதற்காக, அதாவது மிக நீண்டகாலத்திற்கு எந்தவித கொடுக்கல் வாங்கல்களும் அற்ற நிலையில் வங்கிகளில் உள்ள பணம் மற்றும் பொருட்கள் அத்துடன் வங்கிகளின் வாடிக்கையாளர் அவற்றை மீளக் கோரும்போது திருப்பிக் கொடுத்தல் என்பவை சம்பந்தமாக புதிய பணிப்புரை வெளியிடப்பட்டது.

(ஊ) குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்: குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளை திருப்தி செய்ய முடியாத வங்கிகளுக்கு (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ரூபா 2.5 பில்லியனும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு ரூபா 1.5 பில்லியனும்) இத் தேவைப்பாடுகளை அடைவதற்கான இறுதி நீடிப்புக் காலமாக 2010 யூன் வரை வழங்கப்பட்டுள்ளது.

### 2.2. வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித் தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள் (கொடுக்கப்பட்ட தரவுகள் தற்காலிகமானவை):

(அ) இவ்வாண்டுக் காலப்பகுதியில் 103 புதிய கிளைகள், விரிவாக்கல் அலுவலகங்கள் மற்றும் மாணவர் சேமிபபு அலகுகள் என்றவாறான 406 ஏனைய வங்கித் தொழில் நிலையங்கள் என்பவற்றைத் திறப்பதற்கும், 41 கிளைகள் மற்றும் 19 விரிவாக்கல் அலுவலகங்களை என்பவற்றை இடம் மாற்றுவதற்கும், 07 விரிவாக்கல் அலுவலகங்கள் முழுத் தொழிற்பாட்டுடனான கிளைகளாக தரமுயர்த்துவதற்கும் 45 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை அலுவலகத்திற்கு வெளியே நிறுவுவதற்கும் ஒரு கூற்றுப் பொறியினை இடைநிறுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இவற்றுள் "வடக்கின் வசந்தம்" மற்றும் கிழக்கின் உதயம்" நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாகவும் நிதி வளங்களை அணுகக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்கும் 75 புதிய கிளைகளை நிறுவுவதற்கும் 72 விரிவாக்கல் அலுவலகங்களை திறப்பதற்கு அளிக்கப்பட்ட அனுமதிகளும் உள்ளடங்குகின்றன. இதன்படி, 2009ஆம் ஆண்டின் இறுதியில் 1,833 கிளைகளும் 3,844 ஏனைய வங்கித் தொழில் நிலையங்களும் 1,856 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் செயற்பட்டன.

(ஆ) இஸ்லாமிய வங்கித் தொழில் சேவையை மட்டும் வழங்கும் முதலாவது வர்த்தக வங்கியான அமானா இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டெட்டிற்கு அதனுடைய தொழிற்பாட்டினை தொடங்குவதற்காக வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிக் கடிதத்தின் செல்லுபடியான காலப்பகுதி 31.12.2010 வரை நீடிக்கப்பட்டது. இலங்கையில் ஒரு கிளையை நிறுவுவதற்கான இன்னுமொரு தற்காலிக அனுமதிக்கடிதம் இந்தியாவின் மும்பையில் உள்ள அக்ஸிஸ் பாங் லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்டது.

### 2.3 வங்கிகள் மீதான தொடர்ச்சியான மேற்பார்வை

அதே நேரத்தில் கணனி வழி அறிக்கையிடும் முறைமையூடாக வங்கிகளால் சமர்ப்பிக்கப்படும் காலாந்தர தகவல்களின் அடிப்படையில் வங்கிகளின் நிதி நிலைமைகளில் ஏற்படும் முக்கியமானதும் பெறுமதி வாய்ந்ததுமான மாற்றங்களை தொடர்ச்சியாக கண்காணிக்கும் செயல்முறையை இது அவசியமாக்குகின்றது. இச் செய்முறையினை வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது மேலும் விசாரணைகள், பரீட்சிப்புக்கள் மற்றும் திருத்திக் கொள்வதற்கான செயற்பாடுகள் தேவைப்படும் வங்கிகளின் இடர்நேர்வு தோற்றப்பாடு பிரச்சனைகளை அறிந்து கொள்வதற்குரிய ஒரு முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையாக பயன்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, பரீட்சிப்பின்போது எடுக்கப்பட்ட முக்கியமான மேற்பார்வை பிரச்சனைகளை திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக வங்கிகளினால் அறிக்கையிடப்படும் முன்னேற்றங்களில் கவனம் செலுத்துவதோடு குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான அறிக்கைகள் தொகுக்கப்பட்டதுடன் செயற்படுத்தப்பட்டது.

வேகமாக வளரும் வங்கிச் செயற்பாடுகளினால் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் வங்கித் தொழில்முறைமை திறம்பட செயற்படுவதற்கு உதவுவதனையும் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்வதனையும் நோக்கமாகக் கொண்டு 2009 ஆம் ஆண்டில் வங்கிகளின் பணிப்பாளர் சபைகளுடனும் மூத்த முகாமையாளர்களுடனும் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுடனும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### 2.4 வங்கிகள் மீதான பரீட்சிப்பு

வங்கிகள் மீதான பரீட்சிப்பை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளுமாறு நாணயச் சட்டம் மற்றும் வங்கிச் சட்டம் என்பன, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தை கேட்டுள்ளது. இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதற்கு, வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது தொடர்ந்து இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையை, இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கொள்வதற்கும், இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்கும், வளங்களை மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்துகின்றது. 2008ஆம் ஆண்டில் தொடங்கிய 17 வங்கிகளின் பரீட்சிப்புக்களையும், 2009ஆம் ஆண்டில் தொடங்கிய 14 வங்கிகளின் பரீட்சிப்புக்களையும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. அந்த வகையில், 2009ஆம் ஆண்டில் 13 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் தொடர்பில் அந்தந்த வங்கிகளின் முகாமைத்துவத்துடன் சம்பிரதாயபூர்வமாக கலந்துரையாடிய பின் நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் 18 பரீட்சிப்புக்கள் முடிவடையும் நிலையில் உள்ளது. இதற்கு மேலதிகமாக அந்நேரத்தில் காணப்படும் பிரச்சனைகள் தொடர்பில் வரையறுக்கப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் பல்வேறு பரீட்சிப்புக்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொண்டது.

### 2.5 தீர்மான நடவடிக்கைகள்

(அ) 2008 திசெம்பரில் செலான் வங்கி பீஎல்சி மீதான வைப்பாளர்களினதும், கடன்கொடுநரினதும் நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக நாணயச்சபையால் எடுக்கப்பட்ட காலத்திற்கேற்ற நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக 2009இல் செலான் வங்கி மீள் மூலதனப்படுத்தப்பட்டதுடன் (அண்ணளவாக ரூபா 3 பில்லியன்)திரவத்தன்மை இடர்பாடுகளை தொடர்ச்சியான தீர்மான நடவடிக்கைகள் மூலம் நிவர்த்தி செய்தது. வங்கியானது தற்போது அதன் வழமையான நடவடிக்கைகளை சுதந்திரமாக அதன் பங்குதாரர்களினால் நியமிக்கப்பட்ட நிருவாக சபையால், புதிய பங்குதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிருவாகிகள் உள்ளடங்கலாக மேற்கொள்ளுகின்றது.

(ஆ) மேலும், நாணயச்சபையானது, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியான சிலிங்கோ சேமிப்பு வங்கியின் பலயீனமான நிதியியல் நிலைமையினை சீர் செய்வதற்காகவும் வழமையான தொழிற்பாடுகளை மீள ஏற்படுத்துவதற்காகவும் அதன் முகாமைத்துவ முகவராக இலங்கை மேர்ச்சன்ட் வங்கி பி.எல்.சி இனை நியமித்தது. பின்னர் முகாமை பிரதிநிதியாலும் வங்கியாலும் மேற்கொள்ளப்பட்ட மூலதன உட்பாய்ச்சலை (ரூபா 100 மில்லியன்) தொடர்ந்து, வங்கியானது வரையறுக்கப்பட்ட எம்பீஎஸ்எல் சேமிப்பு வங்கி என மீள் பெயரிடப்பட்டது. இவ் வங்கியானது தற்போது புதிய நிர்வாக சபையின் கீழ் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அதன் நிதி நிலைமைகள் ஆரோக்கியமான நிலைக்கு முன்னேற்றமடைந்துள்ளது.

### 2.6 வங்கி முதன்மை நிறைவேற்று அலுவலர் கூட்டங்கள்

வங்கித்தொழில் தொழில்துறையுடன் தொடர்பான முன்மதியுடைய ஒழுங்கு வசதிகள் கொள்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கான அரங்கமாகத் தொழிற்படும் உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் மாதாந்தக் கூட்டங்கள் 2009இலும் தொடர்ந்தன. முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அவர்களது தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக பொருளாதாரம் மற்றும் நாணய அபிவிருத்திகள் வங்கித் தொழில் செயலாற்றம் பற்றி மதிப்பீடு செய்தனர். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 இனைப் பின்பற்றுதல், வங்கித் தொழில்

சட்டத்திற்கான திருத்தங்கள், செயற்படா முற்பணங்களின் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள், கடன் வழங்கல் வீதங்களைக் குறைத்தல் தனியார் துறைக்கான கடன் வழங்கலை விரிவாக்குதல், மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை வெளிப்படுத்துதல் என்பன அவ்வாறு ஆராயப்பட்ட விடயங்களில் சிலவாகும்.

## 2.7 ஏனைய நடவடிக்கைகள்

### (அ) முறிவடைந்த கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிட்டெட்டின் சொத்துக்களை அடையாளப்படுத்தலும் வைப்பாளர் விபரங்களை தயார்படுத்தலும்:

கோல்டன் கீ கிறடிட் காட் கம்பனி லிமிட்டெட் முறிவடைந்தமையினைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் விளைவாக, இம் முதலீட்டாளர்களுக்கு மீள் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக உச்ச நீதிமன்றம் சொத்துக்களின் பட்டியலொன்றினைத் திரட்டுமாறு நாணயச்சபையைப் பணித்தது. இதற்கமைய கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிட்டெட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினை அடையாளப்படுத்துவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கும் “விசேட செயலணி குழு” உருவாக்கப்பட்டது. அதற்கு ஏற்ப வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி மற்றும் அதனுடன் தொடர்புடைய கம்பனியின் கணக்குகள் மற்றும் பதிவுகள் தொடர்பாக பல பரீட்சிப்புக்களை நடத்தியதுடன் மற்றும் தோல்வியுற்ற கோல்டன் கீ கிறடிற் காட் கம்பனி லிமிட்டெட்டின் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள், அதனுடைய பணிப்பாளர்கள், மூத்த அலுவலர்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பொருத்தமான பிரிவினருடைய சொத்துக்களின் விபரங்கள் தயாரிக்கப்பட்டதுடன் அவை உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. தேவையான நடவடிக்கைக்காக உயர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளரின் குழுவிற்கு கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனியின் பொறுப்புக்களின் விபரம் சமர்ப்பிக்கப்பட்டது.

### (ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 44 மற்றும் 45இனை பின்பற்றுதல்:

2009இல் இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 32 மற்றும் 39 இற்கு தொடர்புபட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமம் 44 மற்றும் 45 இனை வங்கிகள் பின்பற்றுவதற்கு வசதி செய்வதனை தொடர்ந்தது. அதன் பிரகாரம் வங்கி அலுவலர்களுக்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் 5 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. மேலும் இலங்கை வங்கியாளர் சங்கம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் வங்கி கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு புதிய கணக்கீட்டு நியமத்திற்கு மாறுவதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இரு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வங்கிகளை தயார்படுத்துவதற்கான முன்னேற்றம் வங்கிகளினால் அறிக்கையிடப்பட்ட சமாந்தர தரவுகளை பரிசோதிப்பதன் மூலம் மீளாய்வு செய்யப்பட்டது. மேலும் நியமங்களைப் பின்பற்றுவதற்காக, முன்னுரிமை அடிப்படையில் கொள்கைகள், நடைமுறைகள், அலுவலர் திறமைகள், மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமை ஆகிய துறைகளில் பொருள் சார்ந்த இடைவெளியினைக் கட்டுப்படுத்தும் விதத்தில் விபரமான இடைவெளிப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுமாறும் காலம் குறிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களை வடிவமைக்குமாறும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

### (இ) வேளாண்மைத் துறைக்கு கட்டாயமாக்கப்பட்ட கடன் வழங்குவதனை கண்காணித்தல்:

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வேளாண்மைத் துறைக்கு கட்டாயமாக்கப்பட்ட கடன் வழங்கும் தேவைப்பாடான 10%இனை உரிமம் பெற்ற வங்கிகளினால் எய்துவது தொடர்பான முன்னேற்றத்தினை கண்காணிப்புச் செய்வதனை தொடர்ந்தது. 31.2.2009அளவில் 70% இற்கு மேற்பட்ட வங்கிகள் 10% கட்டாயமாக்கப்பட்ட இலக்கினை அடைந்திருந்தன. நாணயச் சபை மேற்குறிப்பிட்ட இலக்கினை அடையமுடியாத வங்கிகளை மீள வேளாண்மைத்துறைக்கு கடன் வழங்குமாறு வேண்டியது. அத்தகைய முறையில் இவ்விலக்கினை அடைய முடியாத வங்கிகள் எஞ்சிய நிதியினை மத்திய வங்கியில் நிறுவப்பட்டுள்ள நிதிக்கு மாற்றுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டன.

### (ஈ) கடன் வழங்குதலைக் கண்காணித்தல்:

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையின் விளைவாக பணச்சந்தை வீதங்களில் ஏற்பட்ட குறைப்பினைத் தொடர்ந்து கடன் வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் கடன் மீள் கொடுப்பனவு என்பனவற்றிற்கு வசதியளிக்கும் கிழக்கு வங்கிகள் அவற்றின் கடன் வழங்கல் வீதத்தினைக் குறைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடன் செயற்பாட்டை முன்னேற்றுவதற்கும் சிறிய நடுத்தர கைத்தொழில் துறைக்கு கடன் வழங்கலினை உயர்த்துவதற்கும் கூடியளவு கவனம் செலுத்துமாறு வங்கிகள் வேண்டிக் கொள்ளப்பட்டன.

### (உ) வங்கித் தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள்:

சிறப்பான நடைமுறைகள் மற்றும் நியமங்களிற்கு ஏற்ப மேற்பார்வை ஒழுங்குபடுத்தற் கட்டமைப்புக்களை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித் தொழிற் சட்டத்திற்குப் பல்வேறு சீர்திருத்தங்களை முன்மொழிந்ததுடன் அவற்றைப் பூர்த்தி செய்தது. இத் திருத்தங்கள் வலுவான மேற்பார்வைக்கு வசதியளிப்பதனையும் வங்கித் தீர்மானக் கட்டமைப்பு உட்பட மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதனையும், புதிய கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கேற்ப வங்கித் தொழிற் சட்டத்தின் ஏற்பாடுகளை இணைப்பதனையும் இலக்காகக் கொண்டிருந்தன. புதிதாக முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பான கருத்துக்களை வழங்குவதற்கு வங்கிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அதேவேளையில் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் வங்கிப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு சீர்திருத்தங்களை இறுதிப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

**(ஊ) உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபை**

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் சபையின் குழு உறுப்பினராக தொடர்ந்தும் 2009இல் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். இச்சபையானது, நிதியியல் சந்தைகளின் ஒழுங்கான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கைப் பணிப்புரைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களும் இணைக்கப்படுவதற்கும் பரந்தளவு நிதியியல் முறை உறுதிப்பாட்டினைக் கவனத்திற் கொண்டு தகவல்களைப் பரிமாறிக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்பானதாகும். தகவல்களைப் பரிமாறிக் கொள்வதிலுள்ள கட்டுப்பாடுகளை வெற்றி கொள்வதில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல், உள்ளூர் நிதியியல் முறையில் பொதுமக்கள் நம்பிக்கை கொள்வதற்கான வழிமுறைகளைப் பேணுதல் மற்றும் அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நடவடிக்கைகளுடன் தொடர்பான தொழிற்பாடுகளைத்தடை செய்தல், நுண்பாக நிதியியல் நிறுவனங்களுக்காக ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை வடிவமைத்தல், ஒழுங்கு நெறிப்படுத்தப்பட்ட கம்பனிகளில் காத்திரமான தன்மையினை வலுப்படுத்தல், மற்றும் மூலதனச் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**(எ) தடை செய்யப்பட்ட திட்டங்கள் மீதான நடவடிக்கைகள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித் தொழிற் சட்டத்தின் 83 “இ” பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பான புலனாய்வுகளை தொடர்ந்தும் நடத்தியது. இது தொடர்பாக மேற்பார்வைத் திணைக்களம் வழக்கு விசாரணைகளை நடத்தியதுடன் அநுராதபுரம், பலப்பிட்டிய, மாகோ, குருநாகல், பன்வில, தெல்தெனியா, அத்தனகல, மினுவாங்கொட ஆகிய இடங்களிலுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்துவோருக்கும் வசதிகளை வழங்கியது.

**(ஏ) சட்ட நடவடிக்கை**

மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் பிணக்குப் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் மீதான சட்ட நடவடிக்கை தொடர்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் அதனுடைய வேலையினை தொடர்ந்தது. 2009ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 24 நீதிமன்ற விசாரணைகளை கையாண்டது. ஆண்டிறுதியிலுள்ள நிலைமைகளின்படி 13 விசாரணைகள் நிலுவையாகவும், 3 விசாரணைகள் தள்ளுபடி செய்யப்பட்டும், 3 விசாரணைகள் மனுதாரரினால் மீளப்பெறப்பட்டும், 2 வழக்குகளை மத்திய வங்கி இடைநிறுத்தியதுடன், 2 விசாரணைகளுக்கு இடப்பட்டும் ஒரு விசாரணை தீர்த்தும் வைக்கப்பட்டிருந்தன.

**(ஐ) வருடாந்த அனுமதிக் கட்டணம்**

நாணயச்சபை வங்கி மேற்பார்வைத் திணைக்களச் செலவினை பகுதியளவில் பெற்றுக் கொள்ளும் வகையில் வருடாந்த அனுமதிக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் 2010இல் உள்நாட்டு வங்கித்தொழில் வாணிபம் மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரம் போன்ற இரண்டையும் நடாத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வருடாந்த அனுமதிக் கட்டணமாக ரூ.1,000,000 ஆகவும் கரைகடந்த வாணிபத்தை மட்டும் நடாத்தும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு ரூ.600,000 ஆகவும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு ரூ.300,000 ஆகவும் இருக்கும்.

**(ஒ) விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிப் பணிப்பாளர்களிடையே அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காகவும் புதிய அபிவிருத்திகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய நாளதுவரையான அவர்கள் அறிவினை உயர்த்தும் பொருட்டு “புதிய யுகத்தில் சவால்களை எதிர் கொள்ளல்” என்ற தொனிப் பொருளில் இரண்டாவது வங்கிப் பணிப்பாளர் ஆய்வரங்கினை நடத்தியது. நிதியியல் நிறுவனங்களுடன் பொதுமக்கள் மேற்கொள்ளும் தங்கள் நடவடிக்கைகளை அறிவூட்டும் வகையில் 2009இல் தகவல்களைப் பொதுமக்களுக்கும் பரப்புவது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் வைப்புக்களை ஏற்கக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வங்கிகளின் விபரங்கள், தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டத்தின் வழிமுறைகளின் மோசடிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்களில் பங்குபற்றுதலில் ஏற்படும் இடர்நேர்வுகள் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக மக்களுக்கு அறிவிக்கும் வகையில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டது.

**(ஓ) சுயவிருப்பிலான வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம்:**

1987ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுயவிருப்பின் பெயரிலான வைப்புக் காப்புறுதித் திட்டமானது தொடர்ச்சியாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் நிருவாகம் செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்ட வங்கித் தொழில் நிறுவனங்களாலும் மற்றும் (வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும்) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களாலும் மேற்கொள்ளக்கூடியது. தற்போது ஒரேயொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தானாக முன்வந்து இத்திட்டத்தின் கீழ் அதனுடைய கிராமிய வங்கியின் வைப்புப் பொறுப்புக்களுக்கான காப்புறுதியினைச் செய்துள்ளது. வைப்புக் காப்புறுதி நிதியானது காப்புறுதிக் கட்டணமாக சேர்க்கப்பட்ட தொகை மற்றும் மத்திய வங்கியினால் 1997ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியன் என்பனவற்றை உள்ளடக்கி 31 திசெம்பர் 2009 திகதியன்று மொத்தமாக ரூ.291.6 மில்லியனாக காணப்பட்டது.



உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**இணைப்பு I**

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

- இலங்கை வங்கி
- சிற்றி பாங்க் என்.ஏ
- கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட்
- டொயிச் பாங்க் ஏஜி
- டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிஸ்டெட்
- ஹபீப் பாங்க் லிமிடெட்
- ஹட்டன் நசனல் பாங்க் லிமிடெட்
- ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
- இந்தியன் வங்கி
- இந்தியன் ஓவசீஸ் வங்கி
- எம்சிபி பாங்க் லிமிடெட்
- நெசனல் டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
- நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் லிமிடெட்
- பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
- மக்கள் வங்கி
- பப்ளிக் பாங்க் பெர்காட்
- சம்பத் வங்கி லிமிடெட்
- செலான் பாங்க் லிமிடெட்
- ஸ்ரான்டட் சார்ட்டட் வங்கி
- ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
- த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
- யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

- டிஎவ்சீசீ வங்கி
- இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- கந்துரட்ட அபிவிருத்தி வங்கி
- லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்
- தேசிய சேமிப்பு வங்கி
- எம்பீஎஸ்எல் சேமிப்பு வங்கி லிமிட்டெட்
- ரஜரட்ட அபிவிருத்தி வங்கி
- றுகுண அபிவிருத்தி வங்கி
- சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
- வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி
- அரச ஈட்டு முதலீட்டு வங்கி
- ஊவா அபிவிருத்தி வங்கி
- வயம்ப அபிவிருத்தி வங்கி

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் 2009இல் வங்கித் தொழில் மற்றும் நிதியியற்துறை நிறுவனங்களிலுள்ள தொழில் நடத்துனர், மாணவர் மற்றும் பொது மக்களுக்காக உயர் மட்டத்திலான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பயிற்சிச் செயலமர்வுகள், ஆய்வரங்குகள், மாநாடுகள் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் 88 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. இதில் 56 அட்டவணையிடப்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்களாகவும் 27 கேள்வியின் நிமித்தம் வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களாகவும் காணப்பட்டன. இந் நிலையம், பிராந்தியத்தில் பன்னாட்டுப் பங்கேற்பாளர்களை உள்வாங்கியதன் மூலம் 5 பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தக்கூடியதாக இருந்தது. 2,500இற்கும் கூடுதலான பங்கேற்பாளர்கள் இவ்அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டனர். நிதியியல் துறையில், பல்தேர்ச்சி தொழிற்படையை உருவாக்கும் நோக்குடன் ஆய்வு நிலையம் அதன் முக்கிய பயிற்சித் துறைகளுக்கு அப்பால் அதன் நிகழ்ச்சித் திட்டங்களின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை அண்மைய ஆண்டுகளில் எடுத்துள்ளது. இதன்படி, அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் வங்கித் தொழில் மற்றும் நிதி, கணக்கீட்டு மற்றும் நாணய முகாமைத்துவம், நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான சட்டங்கள்/ஒழுங்கு விதிகள், தகவல் தொழில்நுட்பம், மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள், நுண்பாக நிதி மற்றும் மனித வளங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் பொது முகாமைத்துவம் ஆகிய துறைகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், முக்கிய கொள்கைப் பிரச்சனைகள் மற்றும் நிதியியற்துறை அபிவிருத்திகள் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் இவ்வாண்டில் நடத்தப்பட்டன. பங்கேற்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, இந்நிலையத்தால் இவ்வாண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் உயர்தரம் வாய்ந்தவை எனத் தரமிடப்பட்டன.

வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் பகிரங்க விரிவுரைகள், மாலைநேர விளக்கச் சொற்பொழிவுகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கான சிறப்புக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் பொது மக்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் அதன் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் பின்னணியிலுள்ள பிரதான குறிக்கோள் யாதெனில் பங்கேற்பாளர்களிடையே அறிவைப் பரப்புவதும் பொதுமக்கள் அவர்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் அவர்களுக்கு ஒரு அரங்கத்தை வழங்குவதாகும். 2009ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 6,000 மக்களின் பங்கேற்புடன் 10 பகிரங்க விரிவுரைகள், 3 மாலைநேர விளக்கச் சொற்பொழிவுகள் மற்றும் 27 பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும், அறிவு மற்றும் தேர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்துடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் பல்கலைக்கழகங்கள், பன்னாட்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுடன் புதிய தொடர்களை உருவாக்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.

சிறந்த கற்கைச் சூழலை வழங்கும் பொருட்டு, இந்நிலையம் பன்னாட்டு நியமங்களுக்கு இசைவாக அதன் வசதிகளைத் தரமுயர்த்துவதற்கும் அதன் ஆர்வலர்களுக்குப் பணிபுரிவதற்கும் சிறந்த பன்னாட்டு நிலையமாக சிறந்து விளங்குவதற்கான நடவடிக்கைகளை நோக்கிய அதன் பயணத்தினை தொடர்ந்தது.

## 4. தொடர்பூட்டல்

2009ஆம் ஆண்டு உலகெங்கிலுமுள்ள அநேகமான மத்திய வங்கிகளுக்கு சவால்மிக்க ஆண்டாக விளங்கியது. இலங்கையின் நிலைமையும் விதிவிலக்காக இருக்கவில்லை. வங்கியின் தொடர்பூட்டல் வெவ்வேறான ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களையும் ஊகங்களையும் ஏனைய மத்திய வங்கிகளுடன் இணங்கிச் செல்லும்

விதத்தில் முகாமைப்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்க வேண்டியிருந்தது. உயர் தரங்கள் மற்றும் துல்லியத்தைப் பேணும் அதேவேளை சாத்தியமான நெருக்கடி நிலையை கட்டுப்படுத்துவதற்காக தொடர்பூட்டல் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன.

திணைக்களத்தால் பேணப்படும் வங்கியின் வெப்தளம் உலகம் முழுவதுமுள்ள சபையோரை வங்கியுடன் இணைக்கும் முக்கிய தொடர்பூட்டல் நுழைவாயிலாக முக்கிய பங்கை வகித்தது. இது மொத்தமாக 53.7 மில்லியன் பார்வையாளர்களை ஆய்விற்குரிய ஆண்டில் பெற்று சாதனைமிக்க எண்ணிக்கை கொண்ட பார்வையாளர்களைப் பதிவு செய்தது. நாளொன்றுக்கான பார்வையாளர்களின் சராசரி எண்ணிக்கை 2008இல் 103,012 உடன் ஒப்பிடுகையில் 2009இல் 146,398 இற்கு 42 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. பார்வையாளர்கள் அதேநேர விற்பனை வசதியினூடாக ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதேநேர விற்பனைகள் 223 ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் நாணயத்தாள்கள், 35 நாணயக் குத்தி உறைகள் மற்றும் 5 வெளியீடுகளின் விற்பனைகளைப் பதிவு செய்தன. வெப்தளத்திற்கு கூடிய பண்புகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அது கிரமமாக புதுப்பிக்கப்படுகிறது. 2010ஆம் ஆண்டில் அதேநேர சாதாரண கூட்டு வசதி மற்றும் ஒளிப்பதிவு நறுக்குகளை அறிமுகப்படுத்துவதற்கும் ஒழுங்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தளம் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் பேணப்படுகிறது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே திணைக்களம் நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளியற் குறிகாட்டிகள், இலங்கை வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதங்கள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் ஏலங்கள் போன்ற அரச பிணையங்கள் மீதான தகவல் தொடர்பான செய்தியைத் தொடர்ந்து வெளியிட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் 1,854 பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டவேளை, 147 பத்திரிகை விளம்பரங்கள் 6 வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டுள்ளது. கிரமமான பத்திரிகை வெளியீடுகள் மற்றும் அறிவித்தல்களுக்கு மேலதிகமாக, பலதரப்பட்ட பொருளாதார மற்றும் நிதியியல் பிரச்சனைகள் தொடர்பாக உறுதியான பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக திணைக்களம் 37 ஊடக மாநாடுகளை ஏற்பாடு செய்ததுடன் மத்திய வங்கியின் மூத்த அலுவலர்களுடன் ஒன்றுக்கு - ஒன்று ஊடக நேர்காணல் பலவற்றையும் ஒழுங்குசெய்தது.

குறிப்பாக, பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிதியியல் நிறுவனங்கள் தொடர்பாக பொது மக்களால் அடிக்கடி கேட்கப்படும் விசாரணைகளுக்கு, பதிலளிக்கும் குறிக்கோளுடன் "உதவிப்பீடம்" ஒன்று நிறுவப்பட்டது. சராசரியாக, உதவிப்பீடம் நாளொன்றுக்கு 50 - 55 விசாரணைகளுக்குப் பதிலளித்ததுடன் உச்ச நாட்களில் கிட்டத்தட்ட 200 அழைப்புக்களுக்குப் பதிலளித்தது.

அலுவலர்களின் உள்ளக தொடர்பூட்டல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, திணைக்களம், வானிலை அறிக்கையிலிருந்து வங்கித் தொழில் மற்றும் நிதி, முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள், விரிவுரைகள், அறிவித்தல்கள் மற்றும் ஊழியர்களுக்கான அறிவித்தல்கள் மற்றும் ஏனைய திணைக்கள வெப்தளங்களுக்கான இணைப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டின் சகல செய்திகளையும் வழங்கும் சிபிஎஸ்எல் டெயிலி வெப் நுழைவாயிலை தொடர்ந்து புதுப்பித்தது. திணைக்களம் உள்ளக செய்திகள் மற்றும் சிறப்பு அம்சங்களைக் கொண்ட சஞ்சிகையான "கவுலுவ" வைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் வங்கியில் தொழில்புரியும் ஊழியர்கள் மற்றும் கழகங்கள் பலதரப்பட்ட தொடர்பான பிரச்சனைகள் தொடர்பாக அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புக்களை வழங்கியது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே தேசிய செய்தித் தாள்களில் வெளிவந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கி தொடர்பான செய்திகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்கள் அபிப்பிராயங்களைத் திரட்டி நிருவாக முகாமைத்துவத்திற்கு நாளாந்தம் வழங்கியது. பலதரப்பட்ட பொருளாதார, நிதியியல் மற்றும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக மொத்தம் 1,359 செய்தி விடயங்கள் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மத்திய வங்கி தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகள் ஊடகங்களில் மத்திய வங்கி எவ்வாறு வர்ணிக்கப்பட்டது என பகுப்பாய்வு செய்வதற்கு சுருக்கப்பட்டதுடன் கண்டறியப்பட்டவை தொடர்பான அரை ஆண்டு அறிக்கையொன்று முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஊடகங்களில் வெளியிடப்பட்ட தவறான அறிக்கைகள் சரியானமுறையில் தீர்க்கப்பட்டு இவை உரிய திணைக்களங்களின் உதவியுடன் திருத்தப்பட்டன.

மத்திய வங்கித் தொழில் தொடர்பான விடயங்களில் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பொருளாதாரம், வங்கித் தொழில் மற்றும் நிதி தொடர்பாக இவ்வாண்டில் 30 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடசாலைக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வேண்டுகோளின்படி இலாபகரமான குடியிருப்பாளர் பொருளாதாரச் செயற்பாடாக வனிலா மற்றும் ஆட்டுப் பண்ணையை ஊக்குவிக்கும் இரண்டு விபரண ஒளிப்பதிவுப் படங்கள் தயாரிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்கள் பொது மக்களின் நன்மைக்காக தேசிய தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்டதுடன் ஒளி இறுவட்டுப் பிரதிகள் உள்ளார்ந்த வளம்மிக்க பண்ணையாளர்களுக்கு இலவசமாக கிடைக்கச் செய்யப்பட்டன. திணைக்களம் பொருளாதாரம், நிதி, மற்றும் வங்கியின் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பல கண்காட்சிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியது. கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியது. கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி மற்றும் தெயற்ற கிருல கண்காட்சிகள் குறிப்பிடத்தக்களவில் பொது மக்கள் பங்கேற்பைப் பதிவு செய்தது. மகாபொல மற்றும் புலம் பெயர்ந்த இலங்கையரின் மாநாடு திணைக்களத்தால் ஒருங்கிணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட வங்கியின் பங்கேற்புக்கான குறிப்பிடத்தக்க ஏனைய கண்காட்சிகாளக விளங்கின. திணைக்களம் இக் கண்காட்சிகளில் பங்குபற்றுவதனூடாக கொள்கை மாற்றங்கள் மற்றும் நடைமுறைப் பிரச்சனைகள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கக் கூடியதாக இருந்ததுடன் அதன் வெளியீடுகள் பலவற்றையும் விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது.

திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ் மொழி பெயர்ப்புப் பிரிவு இவ்வாண்டில் வங்கியின் அனைத்துத் தமிழ் மொழிபெயர்ப்புத் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்தது. தமிழ் மொழிமூல வெப் தளத்தைப் பேணுவதற்கு மேலதிகமாக இப்பரிவு 223 தமிழ் மொழியெப்ர்ப்பு ஒப்படைப்புக்களைப் பூர்த்தி செய்தது. இப்பிரிவு பத்திரிகை வெளியீடுகள், விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வங்கியின் வெளியீடுகளை தமிழ் மொழியில் வெளியிடக்கூடியதாக இருந்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே திணைக்களம் வங்கியால் வெளியிடப்படும் ஏனைய வெளியீடுகளுக்கான வெளியீட்டு முகவராக தொழிற்படுவதற்கு மேலதிகமாக, சற்றகன மற்றும் செய்தி அளவீடு போன்ற அதன் சொந்த வெளியீடுகளைத் தொடர்ந்து வெளியிட்டது. மத்திய வங்கி அச்சகம், வங்கியின் பெரும்பாலும் அனைத்து அச்சிடல் தேவைகளையும் தொடர்ந்து மேற்கொண்டது. இலங்கை சமூக பொருளாதாரத் தரவு இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகபுள்ளி விபரம், செய்தி அளவீடு, சற்றகன, கவுலுவ, அலுவலர் ஆய்வுகள், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு, வழிகாட்டல், உபாயத்திட்டம், பொதுப்படுகடன் செய்தித் திரட்டு மற்றும் வருகையாளர் முகவரிச்சீட்டு, வாழ்த்து மடல்கள், குறிப்புப் புத்தகங்கள், கோவை அட்டைகள், இலங்கை மத்திய வங்கி தினக்குறிப்பு போன்ற ஏனைய அச்சிடல் தேவைப்பாடுகள் மற்றும் திணைக்களங்களின் ஆராய்ச்சி வெளியீடுகள் என்பன அச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில அச்சிடல் வேலைகளாகும்.

வங்கியால் நடத்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளைப் புகைப்படமெடுத்தல் திணைக்களத்தின் புகைப்படப் பிரிவால் கையாளப்பட்டது. இது இவ்வாண்டில் வங்கிப் பணிமனையினுள்ளும் வெளியேயும் அத்தகைய 130 சம்பவங்கள் படமாக்கப்பட்டன.

**நூலகமும் தகவல் நிலையமும்**

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இது அதன் புத்தகச் சேகரிப்புக்களை 21,907 இலிருந்து 23,476 இற்கும், அறிக்கைகளை 14,663 இலிருந்து 15,229 இற்கும் இறுவட்டுக்களை 1,143இலிருந்து 1,430 இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் இவ்வாண்டில் ஒன்று திரட்டப்பட்டுக் கட்டப்பட்ட 500 தொகுதிகளும் சேர்க்கப்பட்டன. வங்கித் தொழில் கற்கைகள் திலையத்திலுள்ள நூலகமும் அதன் நூல்களை 5,517 இலிருந்து 5,683 இற்கும் அதிகரித்தது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பொருளாதாரம், அளவுப் பொருளாதாரம் மற்றும் நிதி தொடர்பான 100இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகளை அதே நேரத்தில் அணுகத்தக்க விதத்தில் “விஞ்ஞான வழி காட்டல்” தரவுத் தளத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டது. நூலகம் மற்றும் தகவல் நிலையத்தால் சந்தா செலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் எண்ணிக்கை முறையே 115 ஆகவும், 52 ஆகவும் விளங்கியது. இது அண்மைய சேர்க்கைகள் (அதாவது புதிய நூல்கள்) தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் பட்டியல், மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள், நியூஸ் அலேட் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளைத் திரட்டி இணையத்தளமூடாக அவற்றைப் பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவற் பரம்பல் பணி பேணப்பட்டது.

வங்கி அலுவலர்கள் அதேநேர நூலக வசதிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு 6 திணைக்களங்களை உள்ளடக்கும் 6 பயன்பாட்டாளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. ஊழியர்களின் நன்மை கருதி பலதரப்பட்ட முக்கியமான விடயங்கள் மற்றும் தலைப்புக்களில் ஏழு (07) விவரணப் படங்கள் நூலகத்தின் மண்டபத்தில் மதியபோசன இடைவேளையின்போது காண்பிக்கப்பட்டன. பொருளாதார மற்றும் வங்கித் தொழில் நூலகவலையமைப்பு பேணப்பட்டதுடன் அதன் 23 உறுப்பினர் நூலகங்கள் மின்னஞ்சல் மூலமாக தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் நன்மையடைந்தன. நூலகமும் தகவல் நிலையமும் தேசிய வாசகர் மாதமான ஒத்தோபரில் ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்கு செய்து புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட 450 நூல்களைக் கண்காட்சிக்கு வைத்தது. இந்தக் கண்காட்சிக்கு அலுவலர்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்தது. புத்தக ஆய்வுரைப் போட்டி மற்றும் மின்னஞ்சல் மூலமான கேள்வி பதில் நிகழ்ச்சித் திட்டம் என்பன தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டங்களை நினைவு கூரும் ஏனைய பிரபல்யமான விடயங்களாக விளங்கின.

நூலகமும் தகவல் நிலையத்தின் உசாத்துணைப் பிரிவில் அமைந்துள்ள சுய அணுகல் மொழி ஆய்வு கூடமானது இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளது. 2008இல் நூலகமும் தகவல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட ஐஎஸ்ஓ 9001:2000 சான்றிதழுடன் இணங்கிச் செல்லும் வகையில் நூலகப் பணிகள் பேணப்பட்டன.

## 5. நாணயம்

### 5.1. நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவம்

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரம் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2009ஆம் ஆண்டிலும் சட்டரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2009 இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் பெறுமதி ரூ.217 பில்லியனாக விளங்கியது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் மொத்தப் பெறுமதியில் சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் 98 சதவீதத்தைக் கொண்டிருந்தன. 2009ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளுக்கு நாணயத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட புதிய மற்றும் பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களின் பெறுமதி முறையே ரூ.49 பில்லியன் மற்றும் ரூ.169 பில்லியனாகக் காணப்பட்டன. மத்திய வங்கிக்குக் கிடைத்த வர்த்தக வங்கிகளிடமிருந்தான நாணயத்தாள் வைப்புக்களின் பெறுமதி ரூ.187 பில்லியனாக விளங்கியது. இதன்படி, 2009 இறுதியில் சுற்றோட்டத்திற்கான நாணயத்தாள் மற்றும் நாணயக் குத்திகளின் தேறிய வழங்கல் முறையே ரூ.31 பில்லியனாகவும், ரூ.207 மில்லியனாகவும் விளங்கியது.

### 5.2 நாணய வழங்கல் மற்றும் முகாமைத்துவத்துக்கான செலவுச் சிக்கனம் வாய்ந்த வழிமுறைகள்

நாணயக் குத்திச் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இறுதி இரு மாவட்டங்களான கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியதன்மூலம் வீட்டுத்துறையில் சேர்ந்துள்ள பாவனையில் இல்லாத நாணயக்

குத்திகளை சேகரிப்பதை நோக்கமாகக் கொண்ட நாடு தழுவிய நாணயக்குத்தி சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2009இல் பூர்த்தி செய்யப்பட்டது. இம்முழு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சேகரிக்கப்பட்ட நாணயக் குத்திகளின் மொத்த முகப்புப் பெறுமதி கிட்டத்தட்ட ரூ.56.4 மில்லியனாக விளங்கியது. சேகரிக்கப்பட்ட நாணயக் குத்திகளின் இருப்பின் வார்ப்புச் செலவை நாணயக்குத்தி சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நாணயத் திணைக்களத்திற்கு ஏற்படும் செலவுடன் ஒப்பிட்டு கவனத்தில் எடுக்கையில் சேமிப்பு நியதிகளிலான மொத்தத் தேறிய நன்மைகள் கிட்டத்தட்ட ரூ.87.2 மில்லியனாக விளங்கியது.

நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக மத்திய வங்கியின் முக்கிய தொழிற்பாடுகள் புதிய நாணயத் தாள்களையும் நாணயக் குத்திகளையும் சுற்றோட்டத்திற்கு விடுவதும் பாவனைக்குதவாத நாணயத்தாள்களையும் நாணயக் குத்திகளையும் சுற்றோட்டத்திலிருந்து மீளப் பெறுவதுமாகும். எனினும், மேற்கூறப்பட்ட இரு முக்கிய தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக இலங்கை மத்திய வங்கி பாவிக்கக்கூடிய தாள்களை வைப்புக்களாக ஏற்று கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு திரும்பவும் வழங்குகிறது. 2009வரை வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அனைத்து நாணய பணிகளும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன. எனினும், அத்தகைய பணிகளை வழங்குவதில் ஏற்படும் செலவு அதிகரித்துச் செல்வதால் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அத்தகைய பணிகளின் செலவைக் குறைக்கும் பொருட்டு நாணயச்சபை வர்த்தக வங்கிகளிடமிருந்து சேவைக் கட்டணமொன்றை அறவிட தீர்மானம் எடுத்தது. இதன்படி, வங்கிகளால் மேற்கொள்ளப்படும் பாவிக்கத்தக்க நாணய வைப்புக்கள் மீது வங்கி சேவைக் கட்டணத்தை அறவிட தொடங்கியது. இதன்படி, 2009 மாச்சு 2 இலிருந்து ரூ.500 மற்றும் இதற்குக் கூடிய பெறுமதிகளின் ஒவ்வொரு கட்டிற்கும் ரூ.200 உம் மற்றும் ரூ.100 மற்றும் இதற்குக் குறைந்த பெறுமதிகளின் ஒவ்வொரு கட்டிற்கும் ரூ.100 உம் கட்டணமாக அறவிடப்பட்டது.

### 5.3 நாணயத்தில் பொதுமக்கள் நம்பகத் தன்மையைப் பேணுதல்

வங்கியின் பொறுப்புக்களில் ஒன்றான நாணயத்தில் பொதுமக்கள் நம்பகத் தன்மையைப் பேணுவதற்கு நாணயத் திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. இதுபோல், நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்கள் தொடர்பான 48 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது. 2009ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு வங்கியின் உறுதிப்படுத்தலுக்காகத் தொடர்பு கொள்ளப்பட்ட போலி நாணயங்களின் எண்ணிக்கை சுற்றோட்டத்திலுள்ள ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் கிட்டத்தட்ட 3 தாள்களாகக் காணப்பட்டது. சட்ட நடைமுறைப்படுத்தல் அலுவலர்கள், காசைக் கையாளுபவர்கள் மற்றும் பொது மக்கள் உண்மையான தாளுக்கும் போலித் தாளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டுவதில் அவர்களை இயலச் செய்யும் அறிவை அதிகரிப்பதற்கு உண்மையான நாணயத் தாள்களின் புதிய பாதுகாப்புப் பண்புகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நாணயத் திணைக்களம் நடத்தியது. இதேவேளை, 2010 ஓகத்தில் வெளியிடுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள புதிய நாணயத் தாள் தொடரில் முன்னேற்றகரமான பாதுகாப்புப் பண்புகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 5.4 சுத்தமான நாணயத்தாள் கொள்கையை ஊக்குவித்தல்

சுற்றோட்டத்திலுள்ள சுத்தமான தாள்களைப் பேணுதல் நாணய வெளியீடு மற்றும் முகாமைக்குப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட நன்மைகளைக் கொண்டுள்ளது. சுத்தமான தாள்கள் உண்மையான தாள்களுக்கும் போலித் தாள்களுக்கிடையேயான வேறுபாட்டை வேறுபடுத்த உதவும். இவை வெளிநாட்டவர்களிடையே நாட்டின் மதிப்பையும் உயர்த்தும். தாள்களை நல்ல பழக்க வழக்கங்களுடன் கையாளல் தாள்களின் வாழ்க்கைக் காலத்தை நீடிப்பதுடன் புதிய தாள்களை அச்சிடுவதற்கான செலவைக் குறைக்கவும் உதவும். நாணயத் திணைக்களம் சுற்றோட்டத்துக்கு புதிய தாள்களைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் சுத்தமான தாள்கள் கொள்கையினை ஊக்குவிக்கும் ஒரு பகுதியாக பயன்படுத்த முடியாத தாள்களை அகற்றியது. மேலும், நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளைக் கையாளும் நல்ல பழக்க வழக்கங்கள் தொடர்பான விடயங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டது. நாணயத் தாள்களுக்கான தர நியமங்களைப் பிரித்தெடுப்பது பற்றி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வர்த்தக வங்கிகளால் வைப்புச் செய்யப்பட்ட தாள் கட்டுக்களின் மாதிரிகள் நாளாந்த அடிப்படையில் எழுமாறி அடிப்படையில் பரிசோதனை செய்யப்பட்டன.

### 5.5 நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய செயற்றிட்டங்கள்

"அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக்காரர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் புதிய நாணயத்தாள் தொடரின் ஆரம்ப வடிவமைப்புச் செயல்முறை பூர்த்தி செய்யப்பட்டது. புதிய தொடர் இலங்கை மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவின்போது 2010 ஓகத்தில் வெளியிடுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

இலக்கம் 58, சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தையில் உள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலைய வளவில் தற்போது அமைந்துள்ள மத்திய வங்கியின் முதலாவது நாணய நூதனசாலை மிகப்பிந்திய நவீனத்துவம் வாய்ந்த விதத்தில் புதுப்பிக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. இது இலங்கை மத்திய வங்கியின் 59ஆவது ஆண்டு நிறைவின்போது 2009 ஓகத்து 28ஆம் நாளன்று பொதுமக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

### 5.6 நாணயம் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தல்

நாணயத் திணைக்களம் வங்கி அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் போலித் தாள்களை அடையாளம் காணல், தூய நாணயத்தாள் கொள்கை மற்றும் நாணயக் குத்திகளின் மீள் சுற்றோட்டம் தொடர்பான விழிப்புணர்வு

நிகழ்ச்சித் திட்டங்களை பகிரங்க விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்தினூடாக நடத்தியது. 2009இல் நடத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 30ஆக விளங்கியது. மேலும் நாணயத் திணைக்களம் நாணயத்தாள்களை உருச்சிதைத்தல், போலிகளைத் தயாரித்தல் என்பன தொடர்பான விளைவுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக தேசிய செய்தித்தாள்களினூடாக விளம்பரப் பிரச்சாரங்களை மேற்கொண்டது. நாணயத் திணைக்களம் நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் இலங்கையில் அதன் வரலாற்று ரீதியான விருத்திகளை அதிகரிக்கும் நோக்கில் 6 பொருட்காட்சிகளில் பங்குபற்றியது. இக் கண்காட்சிகள் பள்ளிக்கூடப் பிள்ளைகள் மற்றும் பொதுமக்களின் நல்லாதரவைப் பெற்றிருந்தன.

### 5.7 ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் தாள்களின் விற்பனை

இலங்கை மத்திய வங்கி இரு புதிய ஞாபகார்த்தக் குத்திகளை வெளியிட்டது. முதலாவது இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் 200ஆவது நிறைவு விழாவை குறிக்கும் முகமாக ரூ.200 இன நாணய வகையில் வெளியிடப்பட்ட வெள்ளி நாணயக் குத்தியாகும். இரண்டாவது தொகுதி இலங்கை இராணுவத்தின் 60ஆவது நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்காக ரூ.1,000 நாணய வகையில் வெளியிடப்பட்ட வெள்ளி நாணயம் மற்றும் செப்பு/நிக்கல் நாணயக் குத்தியாகும். இலங்கையில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தியதைக் குறிக்கும் முகமாக ரூ.1,000 நாணய வகையிலான ஞாபகார்த்தத் தாளும் நவெம்பரில் வெளியிடப்பட்டது. இது இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட இரண்டாவது ஞாபகார்த்த தாளாகும்.

திணைக்களம் பயனுள்ள விற்பனை ஊக்குவிப்பு உபாயங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஞாபகார்த்த நாணயக் குத்திகள், உறைகளிலிடப்பட்ட நாணயம் மற்றும் ஞாபகார்த்த தாள் என்பனவற்றை நாணயங்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் தொடர்ந்து விற்பனை செய்தது.

### 5.8 மனிதவள அபிவிருத்தி

நாணயத் திணைக்களத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்காக மொழி மற்றும் விளக்கவுரைத் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளக நிகழ்ச்சித் திட்டங்களாக நடத்தப்பட்டன. 2009இல் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் நாற்பத்தாறு நாணயத் திணைக்கள அலுவலர்கள் பங்கேற்றதுடன் ஆறு அலுவலர்கள் 05 பன்னாட்டு ஆய்வரங்குகள்/ மாநாடுகளில் பங்கேற்கும் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர்.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முக்கிய தொழிற்பாடுகளான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை நடைமுறைப்படுத்தலூடாக மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், அரசாங்கத்துக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராகத் தொழிற்படுவது என்பவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. நாட்டின் இலத்திரனியல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ் தீர்ப்பனவுகளுக்கான நிதியங்களின் கிடைப்பனவை வழங்கும் துணைப் பணியையும் திணைக்களம் உறுதிப்படுத்தியது.

### 6.1. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் முன்னெப்போதும் இல்லாத சவால் 2009இல் எதிர்கொள்ளப்பட்டது. உலக நிதியியல் குழப்ப நிலையால் உருவாக்கப்பட்ட கடுமையான அழுத்தத்தால் தோற்றுவிக்கப்பட்ட மூலதன வெளிப்பாய்ச்சல்கள் இவ்வாண்டின் முதலாம் காலாண்டிலும் தொடர்ந்து இடம்பெற்றது. அளவுக்கதிகமான தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவைப்பட்ட வெளிநாட்டு நாணய திரவத்தன்மையை வழங்குவதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கை ரூபாவின் சந்தைத் திரவத் தன்மையில் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. இந்நிலைமையத் தீர்ப்பதற்கு சந்தைக்கு ரூபாத் திரவத்தன்மையை வழங்குவதில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட விரைவானதும் வலிதானதுமான கொள்கைப் பதிலிறுப்பு சந்தையில் திரவத்தன்மைப் பற்றாக்குறையின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் கருவியாக விளங்கியது. எனினும், இப்போக்கு குறுகிய காலத்திற்கே காணப்பட்டதுடன், குறிப்பாக வழமையான நிலைமை மீள ஏற்படுத்தப்பட்டமையால் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டின் இரண்டாம் காற்பகுதியிலிருந்து மாற்றமடைந்தது. முக்கிய வெளிநாட்டு நாணயங்களின் வட்டி வீதங்கள் கிட்டத்தட்ட பூச்சியமாக இருந்தமையால், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் தோற்றம் பெற்றுவரும் பாரிய சந்தை முதலீட்டாளர்களால் இலாபகரமானது என கருதப்பட்டது. இலங்கை அரசின் ரூபாப் பிணையங்களில் முதலீடுகளைத் தேடும் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களினால் சந்தையில் ஏற்படுத்தப்பட்ட மிகையான ரூபாத் திரவத்தன்மையை ஈர்த்துக் கொள்வதற்கு மாற்றுக் கருவிகளை எடுப்பதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியது. மத்திய வங்கி அதன் ரூபாத் திரவத் தன்மையை ஈர்க்கும் செயற்பாட்டில் அரச பிணையங்களின் (இரண்டாம் காலாண்டு ஆரம்பத்தில் ரூ.220 பில்லியன் அளவில்) முழு இருப்பும் தீர்ந்து போனதால் தொடர்ச்சியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் மீதான சவாலைத் தீவிரப்படுத்தின. அதன் திரவத் தன்மை ஈர்க்கும் செயற்பாட்டிற்கு கையில் எதுவித அரச பிணையங்களும் இல்லாததால் அதிகரித்துச் செல்லும் திரவத் தன்மையைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கி அதன் சொந்தப் பிணையங்களை வழங்கத் தவறியமை நடைமுறையிலுள்ள ஈர்க்கும் சாதனங்களைப் பற்றிய புதிய தோற்றத்தைத் தேவைப்படுத்தியது. இதன் விளைவாக மத்திய வங்கி அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்றல்களை அறிமுகப்படுத்தியது. இம்மரபற்ற வழிமுறைகளைக் கருத்திற் கொள்ளாது, ரூபாச் சந்தையிலான உயர் திரவத் தன்மை மிகைகள் குறையாது தொடர்ந்ததுடன் ஆண்டின் இறுதியில் அதன் உச்சமட்டத்தை அடைந்தது.

வரைபடம் II - 1
2008 இல் சந்தைத் திரவத்தன்மை




இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையை படிப்படியாகத் தளர்த்தியது. இதன் அடிப்படையில் மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட வட்டியின் தண்ட வீதத்தை 19 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்தற்கு 600 அடிப்படைப் புள்ளிகளால் நான்கு தடவைகள் குறைத்ததுடன் அது 2009 யூனில் முழுமையாக மீளப்பெறப்பட்டது. வட்டிவீத அமைப்பினுள் வங்கிகளுக்கிடையேயான வட்டி வீதங்களை உறுதியாகப் பேணுவதற்கு 2009 நடுப்பகுதியில் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியைப் பெறுவது தொடர்பான அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மத்திய வங்கி நீக்கியது. இதனால், கொள்கை வீத அமைப்பு மீள அமைக்கப்பட்டது, இதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதி கொள்கை வட்டி வீதங்கள் குறைவடைந்ததை எடுத்துக்காட்டியது. பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களிலான வீழ்ச்சியைக் கவனத்திற் கொண்டு பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு பல முறைகளில் மீள்கொள்வனவு வீதங்கள் 10.50 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கு 300 அடிப்படைப் புள்ளிகளினாலும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 12 சதவீதத்திலிருந்து 9.75 சதவீதத்திற்கு 225 அடிப்படைப் புள்ளிகளினாலும் குறைக்கப்பட்டன. வர்த்தக வங்கிகள் அவற்றின் மிகையான நிதியங்களை மத்திய வங்கியின் மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் உள்ளிட்ட குறைந்த இடர்நேர்வுடைய சொத்து வகுப்புக்களில் முதலிடுவதைப் பார்க்கிலும் வாடிக்கையாளர்களுக்கு அதைக் கடன்வழங்குவதன் மூலம் வர்த்தக வங்கிகளின் கடன்வழங்கும் செயற்பாடுகளில் மீண்டும் எழுச்சி ஏற்படுவதை வசதிப்படுத்தும் நோக்கில் இவ்வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் பற்றாக்குறையைக் கொண்டிருந்த வங்கித் தொழில் முறையிலான திரவத்தன்மை படிப்படியாக வீழ்ச்சியடைந்து இவ்வாண்டின் இறுதியை நோக்கி மிகையாக மாறியது. (வரைபடம் II.1) 2009ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.5 பில்லியன் பற்றாக்குறையைக் கொண்டிருந்த சந்தைத் திரவத்தன்மை அவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் முன்னேற்றமடைந்து ரூ.20 பில்லியன் கொண்ட மிகையாக மாறியது. 2009இன் முதலரைப் பகுதியில், நேர்மாற்று மீள்கொள்வனவு துணைநில் வசதி ஊடாக ஓரிரவு அடிப்படையிலும் பங்கேற்ற நிறுவனங்களிடமிருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதன்மூலம் நிரந்தர அடிப்படையிலும் நிதியங்கள் சந்தைக்கு விடப்பட்டன. அதேவேளை, தேவையேற்படும் போது உலகளாவிய திரவத்தன்மை இறுக்கமடைந்த காலப்பகுதியில் கூடியளவில் தேவைப்பட்ட திரவத்தன்மையை வழங்கியதன் மூலம் வங்கிகளின் உறுதித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கும் மேலாக பணச் சந்தைக்கு கிட்டத்தட்ட ரூ.9.0 பில்லியன் கொண்ட திரவத் தன்மையை வழங்குவதற்காக வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு விகிதம் 7.75 சதவீதத்திலிருந்து 7.00 சதவீதத்திற்கு 75 அடிப்படைப் புள்ளிகளால் பெப்புருவரி 27ஆம் நாளன்று மேலும் குறைக்கப்பட்டது.

சந்தைத் திரவத்தன்மையை ஈர்த்தல் தற்காலிக அடிப்படையில் ஓரிரவு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுடாகவும் நிரந்தர அடிப்படையில் வங்கிவசமுள்ள திறைசேரி உண்டியல்களின் உடன் விற்பனைகளூடாகவும் நடத்தப்பட்டது. மேலும், சார்புரீதியில் நீண்ட கால அடிப்படையில் 2008 கொடுக்கல் வாங்கல்களுடாகவும் ஈர்த்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. உயர்சந்தைத் திரவத்தன்மை மற்றும் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான திரவத்தன்மை உள்வாங்கல் மத்திய வங்கி வசமுள்ள அநேகமாக அனைத்து திறைசேரி உண்டியல்களின் இருப்பையும் இல்லாமற் செய்தது. இதன் விளைவாக, மத்திய வங்கி 2009 ஒத்தோபரிலிருந்து அதன் சொந்தப் பிணையங்களை வழங்குவதற்குத் தீர்மானித்தது. எனினும், உயர் திரவத்தன்மை மிகை குறைவடையாது தொடர்ந்து காணப்பட்டதுடன், திசெம்பரில் அதன் உச்ச மட்டத்தை அடைந்தது. இதன் விளைவாக, 2009 நவெம்பரிலிருந்து உள்நாட்டுச் சந்தையில் மிகையான திரவத்தன்மையை உள்வாங்குவதற்கு மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களை அறிமுகப்படுத்தியது. நடைமுறையிலிருக்கும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களுடன் சேர்ந்து வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்றல்கள் திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகளில் மேம்பாடடைந்த வினைத்திறனையும் பயனுறுதியையும் அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரச பிணையங்களைக் கூடிய அளவில் வைத்திருப்பவர்களிடமிருந்து அப் பிணையங்களைக் கடன்பெறுவதற்காக பிணையங்களைக் கடன்பெறும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான கட்டமைப்பு ஒன்றையும் மத்திய வங்கி ஏற்படுத்தியது. இத் திட்டத்தின்கீழ் கடன் பெறப்பட்ட பிணையங்களை சந்தையில் மிகையான திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இக் கடன்பாடுகள் உரிய பிணையங்களின் கேள்வி மற்றும் வழங்கல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு இணங்கிய கட்டணத்தில் மேற்கொள்ளப்படும். தொடர்ச்சியான திரவத்தன்மை ஈர்த்தல் செயற்பாட்டை வசதிப்படுத்தும் அதேவேளை பிணையங்கள் கடன்வாங்கும் மற்றும் கடன் வழங்குவதற்கான சந்தையை நிறுவுவதன் மூலம் அத்தகைய திட்டம் அரச பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தகம் செய்வதன் வினைத்திறனை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கி புதிய முன்னெடுப்பு பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவூட்டும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.

## 6.2 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

### (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஏலங்கள்

#### அ. ஓரிரவு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

வங்கித் தொழில் முறைமையிலுள்ள திரவத்தன்மை மிகையை நாளாந்த அடிப்படையில் ஈர்ப்பதற்கு ஓரிரவு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏலங்களை திணைக்களம் தொடர்ந்து நடத்தியது. குறிப்பாக, இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மிகைத் திரவத்தன்மை மீள்கொள்வனவு அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை விற்பதன் மூலம் நாளாந்த ஏலங்களுடாக ஈர்க்கப்பட்டது. மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல் உடைமைகளின் போதுமானதற்ற தன்மை காரணமாக 2009 இலிருந்து இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களுக்கான வகை மத்திய வங்கிப் பிணையங்களுக்கு மாற்றப்பட்டது. இவ் ஏலத்தில் 2009ஆம் ஆண்டு முழுவதும் நாளொன்றுக்குச் சராசரியாக ரூ.12.2 பில்லியன் வழங்கப்பட்ட வேளையில் மதிப்பிடப்பட்ட திரவத் தன்மையின் 89 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூ.11.1 பில்லியன் இவ் ஏலத்திலிருந்து ஈர்க்கப்பட்டது. வரைபடம் II-2இல் காட்டப்பட்டவாறு ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் மத்திய வங்கியின் குறைக்கப்பட்ட கொள்கை வட்டிவீதங்களுடன் இணைந்து செல்லும் வகையில் இவ்வாண்டின் இறுதியில் 8.50 சதவீதத்திற்கு வீழ்ச்சிடைந்தது. நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் இக்காலப்பகுதியில் வட்டிவீத வீச்சின் கீழ் மட்ட அளவிலேயே (வட்டிவீத வீச்சுக்கு சராசரியாக 90 அடிப்படைப் புள்ளிகள் மேலே) காணப்பட்டது.

#### தவணை மீள் கொள்வனவு மீள் கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களம் நீண்ட தவணை அடிப்படையில் திரவத் தன்மையை ஈர்ப்பதற்கான உபாயமாக திறைசேரி உண்டியல்களை விற்பதற்காக 2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தவணை மீள் கொள்வனவு ஏலங்களைத் தொடர்ந்து நடத்தியது. தவணை மீள் கொள்வனவு ஏலத்தின் காலம் ஒரு வாரத்திலிருந்து ஒரு மாதமாக இருக்கையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 8.13 சதவீதத்திலிருந்து 9.96 சதவீதம்வரை வேறுபட்டது.

#### நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களம் நேர்மாற்று மீள் கொள்வனவு அடிப்படையில் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் கொள்வனவு செய்வதற்கு இரு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை மட்டுமே நடத்தியது. சராசரியாக, ஏலத்திலிருந்து ரூ.1.46 பில்லியன் புகுத்தப்பட்டிருக்கையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 10.56 சதவீதத்திலிருந்து 11.0 சதவீதம்வரை வேறுபட்டது.

வரைபடம் II - 2
திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக்கள் - 2008 (மாதாந்த சராசரி)




#### தவணை நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களம் சார்புரீதியில் நீண்ட தவணை அடிப்படையில் திரவத்தன்மையை உட்புகுத்துவதற்கான உபாயமாக அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தை 2009 மாச்சில் அறிமுகப்படுத்தியது. நேர்மாற்று மீள் கொள்வனவு ஏலத்தின் தவணைக் காலம் 14 நாட்களிலிருந்து 30 நாட்கள் வரை வேறுபட்ட வேளையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 11.93 சதவீதத்திலிருந்து 13.14 சதவீதம் வரை வேறுபட்டது.

### *(ii)* துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையேயான பணச்சந்தை மற்றும் /அல்லது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான நாளாந்த ஏலங்களுடாக பங்கேற்கும் நிறுவனங்களின் குறுகிய தவணை திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை முகாமை செய்ய இயலாத அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்களுக்கான வழிவகையாக துணைநில் வசதிகள் தொடர்ந்து விளங்கின. இவ்வசதிகள் மத்தியவங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களில் வழங்கப்பட்டன.

#### மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

மீள் கொள்வனவு ஏலங்களில் வெற்றிபெறாத அல்லது மீள் கொள்வனவு ஏலங்களில் பங்குபற்ற இயலாத பங்கேற்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வங்கிகளுக்கிடையேயான தொழிற்பாடுகள் மீது தாமாகவே விதிக்கப்பட்ட இடர்நேர்வு வரையறைகள் காரணமாக பணச் சந்தையில் கடன் வழங்குவதற்கு மிகை நிதியங்களைப் பயன்படுத்த முடியாத நிறுவனங்கள் மத்திய வங்கியின் மீள் கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதிகளை நாடின. மாச்சு நடுப்பகுதியிலிருந்து இலங்கை மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் நேர்மாற்று மீள் கொள்வனவை வழங்கும்போது, கிடைக்கத்தக்க மீள்கொள்வனவு வசதி பங்கேற்கும் நிறுவனமொன்றுக்கு நாளொன்றுக்கு ரூ.100 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இம் மட்டுப்படுத்தல் சந்தையிலான அதிகரித்த திரவத்தன்மையுடன் இணங்கிச் செல்லும் வகையில் 2009 மே 21 இல் தளர்த்தப்பட்டது. 2009இல் மிகைத் திரவத் தன்மையின் பெரும்பகுதி திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஓரிரவு மீள் கொள்வனவு ஏலத்தினூடாக ஈர்க்கப்பட்டமையால் துணைநில் வசதியின் கீழான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ.3.0 பில்லியனாக விளங்கியது.

#### நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் நோக்கம் நிதியங்களின் மாற்று மூலங்களைப் பெறுதல் கிடைக்காதவிடத்து இறுதி வழிமுறையாக, பங்கேற்பாளரின் அவசியத் திரவத்தன்மைத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதாகும். அதற்கமைய நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் அளவுக்கதிகமான பயன்பாட்டை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களின் திரவத்தன்மைத் தேவைபாடுகளை எதிர்கொள்வதற்குமிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதற்கும் மத்திய வங்கி முயற்சி செய்தது. இதன்படி, முறைமையில் திரவத்தன்மைப் பற்றாக்குறை காணப்படும் நாட்களில் மட்டும் மத்திய வங்கி பங்கேற்பாளர் ஒருவருக்கு கலண்டர் மாதமொன்றுக்கு மூன்று தடவைகள் வரை நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியை வழங்கவும் இவ்வரையறைக்குப் பின்னர்

2008 பெப்புருவரி 22ஆம் நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு தண்ட வீதமான 19 சதவீதத்தில் வழங்குவதற்கும் தீர்மானித்தது. இத்துடன், முறைமையின் திரவத்தன்மை பரந்தளவில் சமநிலையாக இருக்கும் நாட்களிலும் தண்ட வீதத்திலான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

வங்கித் தொழில் முறைமையில் நிலவிய கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் வசதியின் கீழ் குறிப்பாக 2009இன் முதலாம் காலாண்டில் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியை பெருமளவில் பயன்படுத்தின. மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தை 19 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு 600 அடிப்படைப் புள்ளிகளால் 2009இன் முதலாம் காலாண்டில் குறைத்ததுடன் மே மாதத்தில் முழுமையாக நீக்கியது. இவ்வாண்டில், நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் மற்றும் தண்டவீதத்தில் வழங்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி முறையே ரூ.228.9 பில்லியனாகவும் ரூ.620.1 பில்லியனாகவும் விளங்கின.

**தவணை நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்**

ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவு தண்ட வீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு அடிப்படையிலான கூட்டு வட்டி வீதத்தில் ஒரு மாத முதிர்ச்சி வரையிலான தவணை நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி 2009 சனவரி 15இலிருந்து துணைநில் வசதியின் கீழ் வழங்கப்பட்டது. எனினும், வங்கித் தொழில்துறை மீள் சமநிலைப்படுத்தப்பட்டதுடன் இவ்வசதியின் பயன்பாடு மிகக் குறைவாகவே காணப்பட்டது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட வசதிகள் ரூ.113.59 பில்லியனாகக் காணப்பட்டன.

***(iii)*** **மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல்**

மத்திய வங்கியிடம் போதுமானளவு திறைசேரி உண்டியல்கள் இல்லாததால் மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கி அதன் சொந்தப் பிணையங்களை (இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள்) ஓரிரவு அடிப்படையிலும் தவணை அடிப்படையிலும் வழங்கியது. தவணை ஓரிரவு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வழங்குவதற்கான முதலாவது ஏலம் 2009 ஒத்தோபர் 6ஆம் திகதியன்று நடத்தப்பட்டதுடன் இப் பிணையங்கள், முறைமையில் உள்ள மிகை திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு ஆண்டின் எஞ்சிய பகுதியில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டன.

சராசரியாக, இவ்வாண்டில் ரூ.27.56 பில்லியன் பெறுமதியான இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஏலத்தில் வழங்கப்பட்டிருக்கையில் மதிப்பிடப்பட்ட திரவத் தன்மையின் 90.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூ.25.4 பில்லியன் இக்காலப்பகுதியில் ஏலமூடாக ஈர்க்கப்பட்டது. ஏலங்களின் நிறைவேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 2009 ஒத்தோபரிலிருந்து திசெம்பர்வரை 8.23 சதவீதத்திலிருந்து 8.51 சதவீதம் வரையான வீச்சினுள் காணப்பட்டன. மீள் கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதியின்கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு சராசரியாக கிட்டத்தட்ட ரூ. 2.1 பில்லியனாக விளங்கியது.

நீண்ட தவணை அடிப்படையில் திரவத்தன்மையை ஈர்க்கும் உபாயமாக உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு பல தவணை ஏலங்களையும் நடத்தியது. வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.169 பில்லியனாக விளங்கியது. தவணை ஏலங்களின் காலப்பகுதி 14 இலிருந்து 91 நாட்கள் வரையிலான வீச்சினுள் காணப்படுகையில் நிறைவேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 8.10 சதவீதத்திலிருந்து 9.62 சதவீதம் வரையிலான வீச்சினுள் காணப்பட்டது.

***(iv)*** **உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்**

நிரந்தர அடிப்படையில் அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்க்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பதற்கு உடனடி ஏலங்களை நடத்தியது. உடனடி ஏல விற்பனைகளூடாக விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ.70.26 பில்லியனாக விளங்கியது. விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் காலம் 14 நாட்களிலிருந்து 53 நாட்கள் வரையிலான வீச்சினுள் காணப்பட்டிருக்கையில் விளைவு வீதங்கள் 8.1 சதவீதத்திலிருந்து 17.1 சதவீதத்திலான வீச்சினுள் காணப்பட்டன.

***(v)*** **வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களம் சந்தையில் மிகையான (குறுகிய) திரவத்தன்மையை ஈர்ப்பதற்கான (உட்புகுத்தல்) ஒரு கருவியாக வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களை 2009 நவெம்பர் 4ஆம் நாளன்று அறிமுகப்படுத்தியது. இது சந்தைப் பங்கேற்பாளர்களிடையே பிரபல்யமடைந்ததுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வட்டி வீத வேறுபாடுகள் காரணமாக கணிசமான கழிவு வீதத்தில் வர்த்தகம் செய்யப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலூடாக ஈர்க்கப்பட்ட மிகைத் திரவத்தன்மையின் மொத்த அளவு ரூ.57.5 பில்லியனாக (ஐ.அ.டொலர் 502 மில்லியன்) விளங்கியது.

**(ஆ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் நாணயக் கொள்கைக் கருவியாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கிறது. வங்கித் தொழில் முறைமையில் நீடித்துக் காணப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறை, உள்நாட்டுச் சந்தையில் கேள்வியை எதிர் கொள்வதற்கு மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தினை உட்புகுத்தியதன் மூலம் மேலும் தீவிரமாக்கப்பட்டது. இப்பிரச்சனையைத் தீர்க்கும் பொருட்டு நிரந்தர அடிப்படையில் மேலதிக ரூபாத் திரவத்தன்மையை உட்புகுத்துவதற்கு மத்திய வங்கி வழிமுறைகளை ஆரம்பித்தது. இது நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைக் குறைப்பதன் மூலம் மேலும் வசதிப்படுத்தப்பட்டது. இதன்படி, 2008இல் 7.75 சதவீதம்வரை இரண்டு தடவைகள் குறைக்கப்பட்ட நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2009 பெப்புருவரி 27இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வைப்புப் பொறுப்புக்களின் 7 சதவீதத்திற்கு 75 அடிப்படைப் புள்ளிகளால் மேலும் குறைக்கப்பட்டது. இவ்விடுவிப்புக் காரணமாக சந்தைக்குச் சேர்க்கப்பட்ட திரவத்தன்மை ரூ.9.0 பில்லியனாக விளங்கியது.

**(இ) வங்கி வீதம்**

நாணயச் சட்ட விதியின் 87ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக

வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதமானது (வங்கிவீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், எந்தவொரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாததினால் இவ்வீதம் தொழிற்படாமலிருந்தது.

## 6.2 வர்த்தக வங்கிகளுக்கும், அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

### 6.2.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வர்த்தக வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறை வினைத்திறனுடன் தொழிற்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்கியது. 2009இன் இறுதியில் உள்ளவாறு, இலங்கை மத்திய வங்கி 22 வர்த்தக வங்கிகள் 9 முதனிலை வணிகர்களுக்குமான கணக்குகளைப் பேணியது. இக் கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைமைக்கமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.2.2 அரச கணக்குகள்

அரசுக்கான வங்கியாளராகத் தொழிற்படுகின்ற உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பனவற்றின் கணக்குகளையும் பேணி தேவையான வங்கித் தொழில் வசதிகளையும் வழங்கியது. அரசின் வேண்டுகோளின்படி ஆறு புதிய கணக்குகள் திறக்கப்பட்டு நான்கு கணக்குகள் மூடப்பட்டதன் மூலம் 2009 இறுதியில் மத்திய வங்கியால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 54ஆக விளங்கியது. நாணயச் சட்ட விதியின் பிரிவு 89இன் நியதிகளில் மத்திய வங்கி அரசுக்கு முற்பணங்களை வட்டியில்லாமல் வழங்குகின்றது. அத்தகைய முற்பணங்கள் மீதான வரையறை மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் 10 சதவீதமாக இருக்கிறது. 2009இல் தற்காலிக முற்பணத்தின் பெறுமதி ரூ.87.82 பில்லியனுக்கு ரூ.10.65 பில்லியனால் அதிகரித்தது.

## 6.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடு

வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாட்டை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளைப் பிணையாகக் கொண்டு கட்டணமெதுவுமின்றி வழங்கப்படுவதுடன் இவை அதே நாளில் விலைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான இலாபம் ஒன்றிற்கேற்ப இப்பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்படுகின்றன.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும், சராசரிப் பெறுமதியும் முறையே ரூ.2,725 பில்லியனாகவும், ரூ.11.3 பில்லியனாகவும் (வரைபடம் II-3) விளங்குகையில் முன்னைய ஆண்டிற்கான தொடர்பான எண்தொகைகள் முறையே ரூ.2,186 பில்லியனாகவும், ரூ.9.07 பில்லியனாகவும் விளங்கின. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் அதிகரித்த எடுப்பனவிற்கான முக்கிய காரணம் யாதெனின் முதலாந்தர ஏலங்களூடாக கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் தீர்ப்பனவிற்கு வசதியளிப்பதற்காக முதனிலை வணிகர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையே ஆகும். வங்கி வீதத்திலான தண்டவீதம் மற்றும் திரும்பத் திரும்ப செலுத்தத் தவறுவதற்காக வசதியை இடைநிறுத்துவது போன்ற கடுமையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியமை லங்கா செற்றிலின் வியாபாரத்தை மூடுவதற்கு முன்பு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு உரிய முறையில் எதிர்மாற்றமடைந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, இவ்வாண்டில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியில் செலுத்தத் தவறிய நிகழ்வுகள் எதுவும் காணப்படவில்லை.

வரைபடம் II - 3




எடுக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி - 2009

## 7. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2009இல் காணப்பட்ட சவால்மிக்க உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அதன் நியதிச் சட்டப் பொறுப்புக்களை நிறைவேற்றியது. அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற விதத்தில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்ததுடன், நாணயக் கொள்கை வழிமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைக்கிடுதல் மற்றும் நிறைவேற்றுவதில் மத்திய வங்கியின் முகாமைத்துவத்திற்கும் நாணயச் சபைக்கும் உதவுவதற்காக இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தின் மீதான புள்ளி விபரங்களையும் மற்றைய தகவல்களையும் சேகரித்து பகுப்பாய்வு செய்வதுடன் உலகப் பொருளாதார அபிவிருத்திகளையும் நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றது. அத்துடன் அரசாங்கத்திற்கான பொருளாதார மதியுரையாளர் என்ற அதன் பொறுப்புக்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. பல்வேறுபட்ட விடயங்கள் மற்றும் அபிவிருத்திகளின் மீது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள் சிறந்த கொள்கைப் பயன்களை உருவாக்கிக் கொள்வதற்கான இன்றியமையாத உள்ளீடுகளாக உதவியிருக்கின்றன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கும் வெளியிலுள்ள பல்வேறு முகவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் கொள்கை விதந்துரைப்புக்களை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. பொருளாதார ஆராய்ச்சித்

திணைக்களம் பொதுமக்களின் நன்மை கருதி பல்வேறுபட்ட வழிமுறைகளினூடாக, பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை உரிய நேரத்தில் தொடர்ந்தும் பரப்புவதனை உறுதிப்படுத்தியது.

**7.1 நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கு உதவுவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்**

சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்கையிலும், நாட்டின் பரந்தளவு பொருளாதாரக் குறிக்கோள்களுக்கு இசைவாக நாணயக் கொள்கையினை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கைகளைத் தயாரிக்கும் பொழுதும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முயற்சிகள் அவற்றின்மீது மிகமுக்கிய கவனத்தினைச் செலுத்துகின்றன. குறிப்பாக, நாணயச்சபையின் பரிசீலனைக்கான நாணயக் கொள்கையின்மீது விதந்துரைப்புக்களை மேற்கொள்ளும் நாணயக் கொள்கைக் குழுவின் ஆழ்ந்த கருத்துக்களுக்கு வசதியளிப்பதிலும் வலுவூட்டுவதிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கியமான பங்கினை நோக்கிச் செயலாற்றும் விதத்தில் இப் பெருமுயற்சிகள் முக்கியமாக நெறிப்படுத்தப்பட்டன. மேலும், பொருளாதாரத்தின் ஆகப் பிந்திய தகவல்களை நாணயச்சபைக்கு அறிவிக்கும் விதத்தில் பொருளாதார நிலை மீதான கிரமமான பிந்திய தகவல்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் குறிப்பிட்ட பிரச்சனைகள் தொடர்பாக பல்வேறு சபைப் பத்திரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

நாணயக் கொள்கையினை காத்திரமான முறையில் மேற்கொள்வதற்கு நம்பகரமான பணவீக்க எதிர்வுகூறல் மிகவும் முக்கியமானது என்பதனால் 2008இல் விருத்தி செய்யப்பட்ட இலங்கையின் பணவீக்க எதிர்வுகூறல்கள் தொடர்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளியல் அளவையில் மாதிரிப்படுத்தல் கட்டமைப்பு 2009இல் மேலும் மெருகூட்டப்படுகின்ற முறையில் உருவாக்கப்பட்டது. மேலும், நாணயக் கொள்கை உபாயங்கள் அடிப்படைப் பணவீக்கத்தின் போக்குகளினால் வழிநடத்தப்பட வேண்டியிருப்பதனாலும் பணவீக்கத்தினை பொருத்தமான முறையில் அளவிடுவது தவிர்க்க முடியாததாக இருப்பதனாலும் வேறுபட்ட அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட மாற்று மையப்பணவீக்க அளவீட்டுத் தொடரானது 2009இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்பட்டது. 2009இல் திரட்டப்பட்ட மாற்று வழிமுறைகளின் தொடர்களிலிருந்து திரட்டப்பட்ட மையப் பணவீக்கத்தின் புதிய வழிமுறையொன்றுக்கு நாணயச் சபையினால் ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்டிருப்பதுடன் புதிய கூட்டுப்பணவீக்க அணுகுமுறையானது 2010இல் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தற்போதுள்ளதற்குப் பதிலாக வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

பிராந்திய மத்திய வங்கியிடையேயும் கொள்கை வகுப்போரிடையேயும் ஆராய்ச்சிப் பெறுபேறுகளை பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் "மத்திய வங்கித் தொழிலும் நிதியியல் சந்தைகளும்" என்ற பொருளிலான இரண்டாவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இணைத்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் தென்கிழக்காசிய மத்திய வங்கி நிலையம் போன்ற பன்னாட்டு அமைப்புக்களுடன் கூட்டு ஆராய்ச்சிகளை நடத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் பங்குபற்றும் விவாதத்திற்குரிய முக்கிய விடயங்கள் மீதான கருத்துக்களை தெரிவிக்கும் வாராந்த கலந்துரையாடல் தொடர்கள் தொடர்ந்தும் இடம்பெற்ற அதே வேளையில் ஆளுநர் மற்றும் வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்காக, திணைக்களம் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும் அநேக விரிவுரைகளையும் தயாரித்தது.

சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் மீது மேற்கொள்ளப்படும் பொருளாதார ஆராய்ச்சி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, 2009இல் வங்கி அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட பின்வரும் ஆய்வுக் கட்டுரைகள் வங்கி உயர் அலுவலர் ஆய்வுகள் தொகுதி 39, 2009இன் இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 இல் வெளியிடப்பட்டன.

(அ) இலங்கையில் பணவீக்கத்தினை முக்கியமாக நிர்ணயிப்பவைகள்: தன்னியக்க காவி இறங்கு முக முறையின் அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு - திரு. எச்.பி.ஜி.எஸ். ரத்னசிறி

(ஆ) கொள்கைக் கருவியொன்றாக வட்டி வீதங்கள்: இலங்கையின் அண்மைக்கால அனுபவங்கள் - முனைவர் டபிள்யு.எம். ஹேமச்சந்திரா

(இ) கொடுகடன் தேவைகளின் பிரதேச பகுப்பாய்வும் நுண்பாக நிதிக்கான பூர்த்தி செய்யப்படாத கேள்வியும்- செல்வி. ஏ.எஸ்.த அல்விஸ்

(ஈ) "இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தகம் பங்காளர்களுக்குமிடையிலான இருபுடை "ஜே" வளையி- திருமதி. டபிள்யு.ரி.கே. பெரேரா

வெளியிலுள்ள நிபுணர்களின் நிபுணத்துவத்தினை பெறுவதனூடாகவும் நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையினை மேலும் பலப்படுத்துவதற்கு நிறுவப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக்குழு தொடர்பான வேலைகளையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு பேராசிரியர் ஏ.வி.டி.த.எஸ். இந்திரரத்ன, (தலைவர்) திரு. சோரி கப்டன், திரு யோசன் பெரேரா, திரு. மகேன் தயானந்த, திரு. ஆர்.எம். பீ. சேனநாயக்க, திரு.எம்.பி. ஜயவர்த்தன, திரு. குப்பி விஜேதுங்க மற்றும் முனைவர் ஜி. உஸ்வத்தை ஆராய்ச்சி ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் நாணயக் கொள்கை ஆலோசனைக்குழு பொருளாதார அபிவிருத்திகளை மீளாய்வு செய்வதற்கு மாதாந்த அடிப்படையில் கூடியதுடன் நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையினை அதிகரிப்பதற்கு பெறுமதி மிக்க பங்களிப்புக்களையும் வழங்கியது.

இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் தொழிற்சாலைக் கைத்தொழில் அளவீடு, வீடமைப்புத் தொடர்பான அளவீடு என்பன உட்பட பல்வேறுபட்ட அளவீடுகளையும், தொடர்பான துறைகளின் செயலாற்றம், தோற்றப்பாடு மற்றும் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காக நடத்தியது. மேலும், பொருளாதாரத்திலுள்ள பல்வேறு துறைகளிலுமுள்ள பிரதிநிதிகளினதும் உலகளாவிய நிதியியல் நெருக்கடி, மற்றும்

உலகளாவிய பொருளாதார மந்தம் என்பனவற்றின் காரணமாக அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் மற்றும் இடர்பாடுகள், அத்துடன் நீண்ட உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமையின் காரணமாக உருவாகியிருக்கும் புதிய வாய்ப்புக்கள் என்பன உள்பட பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக அவர்கள் பங்கேற்கும் பலசிறப்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

### 7.2 அரசாங்கத்திற்கான கொள்கை மதியுரை ஏற்பாடுகள்

அரசாங்கத்திற்கு பொறுப்புக்களை ஏற்பதற்கு தயார்படுத்தும் கொள்கை மதியுரைகளை வழங்கும் விதத்தில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயச்சபைக்கு அநேக கொள்கை சார்ந்த பத்திரங்களைச் சமர்ப்பித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்புடை மற்றும் இருபுடை கொடை வழங்குனர்களிடமிருந்தும் வர்த்தக மூலங்களிலிருந்தும் அரசாங்கம் பெறும் அனைத்து வெளிநாட்டுக் கடன்களினதும் நியதிகளையும் நிபந்தனைகளையும் தொடர்ந்தும் மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் நாணய தாக்கங்களையும் விதந்துரைப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்ற சபைப் பத்திரங்களையும் நாணயச் சபைக்குச் சமர்ப்பித்தது. முக்கியமாக பொருளாதார தாக்கங்களைக் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் மீது சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிக்கும் ஏற்பாடுகள் தொடர்ந்தும் காணப்பட்டன.

### 7.3 நியதிச் சட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் வெளியீடுகளைத் தயாரித்தல்

மத்திய வங்கியின் நியதிச்சட்ட மற்றும் அறிக்கைகளைத் தயாரிப்பது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாகும். இதற்கமைய திணைக்களம் 2008ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2009 இன் முக்கிய பண்புகளும் 2010இற்கான வாய்ப்புக்களும் மற்றும் மாதாந்தச் செய்தித் திரட்டு என்பனவற்றின் வெளியீடுகளை 2009இல் ஒருங்கிணைப்புச் செய்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இன்னொரு நியதிச் சட்ட அறிக்கையினை அதாவது வரவு செலவுத் திட்டத்தினை அரசாங்கம் தயாரிப்பதனை வசதிப்படுத்துவதற்காக நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 116 (1) ஆம் பிரிவின் கீழுள்ள ஏற்பாடுகளின்கீழ் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையினை (செத்தெம்பர் 15 ஆம் நாள் அறிக்கை) நிறைவு செய்தது. மேலும் பொருளாதார விடயங்கள் மீதான தகவல்களில் பொதுமக்களுக்கு பரப்புகின்ற அதன் பொறுப்பின் முக்கிய பகுதியாக நாணயக் கொள்கை, சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு வர்த்தகம் என்பன தொடர்பான பத்திரிகை வெளியீடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வெளியிட்டது. மேலும், மோதலுக்குப் பின்னர் இலங்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டாளர் வாய்ப்புக்கள் தொடர்பான பன்னாட்டு முதலீட்டாளர்களின் அறிவினை அதிகரிக்கும் விதத்தில் "இலங்கைக்கு - ஒரு புதுயுகம்" என்ற நூலினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2009 சனவரி 2இல் ஆர்வலர்களுக்கு அறிவிக்கப்பட்ட மத்திய வங்கியின் பகிரங்க கொள்கை அறிக்கையான "2009இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல்துறைக்கான வழிகாட்டல்" இனைத் தயாரித்தது. இவ் வழிகாட்டலானது பொருளாதார அபிவிருத்திகளின் மீதான பகுப்பாய்வு, 2008இல் நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கை நடத்தை, 2009இற்கான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு இலக்குகளையும் அவற்றை அடைவதில் உள்ள சவால்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இவ்வறிக்கையின் நோக்கம் யாதெனில் எதிர்வரும் காலத்தில் ஆர்வலர்கள் தமது திட்டங்கள் மற்றும் உபாயங்களை உருவாக்குவதற்கும் சிறந்த முறையில் வரையறுப்பதற்கும் அவர்களுக்கு உதவக்கூடிய கொள்கை ஊகங்களையும் வெளிப்படையான தன்மைகளையும் உணர்த்துவதேயாகும். தொடர்ந்து நான்காவது ஆண்டாக, இதே போன்றதொரு கொள்கை அறிக்கை 2010இற்காகவும் தயாரிக்கப்பட்டதுடன் 2010 சனவரி 4ஆம் நாள் இது அறிவிக்கப்பட்டது.

### 7.4 அறிவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் நிபுணத்துவத்தினை பகிர்ந்து கொள்வதற்குமான பங்களிப்பு

மத்திய வங்கிக்கு உள்ளேயும் வெளியேயும் பொருளாதாரப் பிரச்சனைகளின் அறிவினை மேம்படுத்துவதற்கான அதன் நிபுணத்துவப் பணியை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. இதற்கமைய, வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தினதும் பள்ளிக்கூடம் உள்ளிட்ட மற்றைய பல்வேறு நிறுவனங்களினாலும் நடத்தப்பட்ட விரிவுரைகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் மூலவள ஆட்களாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பணியாற்றினர். வங்கிக்கு வருகைதரும் பல்வேறு தூதுக் குழுக்களுக்கும் மத்திய வங்கித் தொழில் அதேபோன்று பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளிலும் விளக்கங்களை வழங்குவதில் ஈடுபட்டிருந்தனர். அதேவேளை, வங்கியின் பட்டப்பின்படிப்பினை படிக்க விழைகின்றவர்களுக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் வழிகாட்டுவதன் மூலமும் அவர்களது ஆராய்ச்சிப் பத்திரங்களை மதிப்பிடுவதன் மூலமும் திணைக்களத்தின் மூத்த அலுவலர்களது உதவி வழங்கப்பட்டது.

பொருளாதார விடயங்கள் மீதான அநேக குழுக்களிலும் பல்வேறுபட்ட மற்றைய வெளிக்குழுக்கள் மற்றும் சபைகளிலும் உறுப்பினர்களாகப் பணியாற்றுவதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் அவர்களது நிபுணத்துவத்தினை வழங்குகின்றனர். இவை இலங்கை முதலீட்டுச்சபை, முதலீட்டுச்சபைக் கணக்காய்வுக் குழு, உயர் கல்வி அமைச்சிலுள்ள தேசிய உயர்கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை முகாமைத்துவக்குழு, எம் 7 வகுப்பு தொடர் புகைவண்டிகளைப் புதுப்பிப்பதன் மீதான குழு, பொருளாதர அபிவிருத்திக்கான தேசிய சபை, புதுப்பிக்கத்தக்க வலு மீதான சனாதிபதி ஆணைக்குழு, பிரதேசங்களுக்குள்ளேயான ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கான மாகாண ரீதியிலான வளர்ச்சியை மேம்படுத்துவதன் மீதான நிதி ஆணைக்குழு வழி காட்டல்குழு, தேசிய தொழில் முயற்சிகள் அதிகார சபையிலுள்ள கொள்கை பரிந்துரை மீதான தொழிற்பாட்டுக்குழு, வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான இலங்கைச் சபையில் சமூக பொருளாதார மற்றும் கொள்கைப் பகுப்பாய்வின் மீதான தேசிய குழு, இலங்கையின் தொழிலாளர் மற்றும் சமூகப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்வதன் மீதான பன்னாட்டு தொழிலாளர் அமைப்புக்குழு - 2009, மக்கள் வங்கியின் பொருளாதார

மீளாய்வு மதியுரைக்குழு, நலக் கவனிப்பு நிதியிடல் மீதான வழிகாட்டல் குழு, மற்றும் திறைசேரியிலுள்ள நிதியியல்துறை கண்காணிப்புக்குழு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் தேசிய பொருளாதார ஆணைக்குழு மற்றும் உணவுப் பாதுகாப்பு வாழ்க்கைச் செலவுக்குழு உட்பட பல்வேறுபட்ட மற்றைய கூட்டங்களிலும், அத்தகைய குழுக்களின் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் பங்கேற்றனர்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தின் சார்பில் பன்னாட்டு பல்புடை நிதியியல் அமைப்புக்களுடன் தொடர்ந்தும் உறவுகளை இணைத்துக் கொண்டிருந்தது. இதற்கமைய 2009இல் ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐந்து ப.நா. நிதிய குழுக்கள் தொடர்பான வேலைகளை இணைத்தது. இவை பெப்புருவரியில் இடம்பெற்ற ப.நா.நிதிய உறுப்புரை iv ஆலோசனையுடன் தொடர்பான பின் தொடரும் பணியினை இணைத்தல், மார்ச்சிலும் யூலையிலும் இடம்பெற்ற ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதியின் ஒப்புதலுக்காக இடம்பெற்ற இரண்டு ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்ட பேச்சுவார்த்தைக் குழுக்கள் என்பனவற்றுடனான இணைத்தல் வேலைகளை உள்ளடக்கியிருந்தது. இவற்றின் கீழ் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கான கொடுகடன் வசதிகளை வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்களுக்குத் தேவையான தகவல்களை கிரமமான அடிப்படையில் தொடர்ந்தும் வழங்கிய வேளையில் நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்களான பிட்ச்றேரிங், எஸ்அன்ட் பி றேரிங் சேர்விசஸ் போன்றவற்றுடன் நெருங்கிப் பணியாற்றியது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் ஏனைய பல்வேறுபட்ட பல்புடை மற்றும் இருபுடைப் பங்காளர்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் திணைக்களம் அதன் உதவியை நிதி திட்டமிடல் அமைச்சிற்கு வழங்கியது. மேலும் திணைக்களம் அணிசேரா அமைப்பின் உச்சி மாநாடு, ஜி 15 கூட்டங்கள் , மற்றும் உலகளாவிய நெருக்கடி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு போன்ற பல்வேறுபட்ட பன்னாட்டுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாடு பற்றிய தொகுப்பினை தயாரிப்பதற்கான தகவல்களையும் வழங்கியது. பேரண்டப் பொருளாதார பகுப்பாய்வுகளையும் இவ்வமைப்புக்களினால் வழங்கப்பட்ட விரைவுக் கூற்றுக்களின் மீதான பதில் கருத்துக்களையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது.

## 8. ஊழியர் சேம நிதியம்

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளில் ஊழியர் சேம நிதியத்தின் பாதுகாவலனாக விளங்கும் நாணயச்சபையிடம் நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பான அதிகாரம், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமநிதியத்தின் தொழிற்பாடுகள், ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நாணயச்சபை அதன் பாதுகாவலனுக்குரிய அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை அது மேற்கொள்வதற்கு வசதியளித்தது. இதன்படி, ஊழியர் சேமநிதியத் திணைக்களம் உறுப்பினர் உதவு தொகைகளையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல், சட்டத்தின்கீழ் தொழில் ஆணையாளர் மற்றும் நாணயச்சபை தங்களுடைய கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்படும் செலவினை நிதியத்தின் வருமானத்திற்கு விதித்தல், நிதியத்தின் நன்மை பெறுநர்களுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், உறுப்பினர்களின் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், மற்றும் நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் திரட்டுதல் அவற்றினை ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் இறுதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் அமைச்சருக்கு சமர்ப்பித்தல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ளது. 2009இல் ஊழியர் சேமநிதியத் திணைக்களம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின் நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்டதுடன் தொழில் ஆணையாளருடன் மிக நெருக்கமாகவும் ஒத்துழைத்தது.

### 8.1 உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2008இறுதியின் 12.5 மில்லியனிலிருந்து 2009 இறுதியில் 12.7 மில்லியனுக்கு சிறிதளவில் அதிகரித்தது. உதவு தொகை செலுத்துகின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2008இன் 2.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இறுதியில் 2.0 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, உதவு தொகை செலுத்துகின்ற தொழில் தருநர்களின் எண்ணிக்கை 60,000 ஆகக் காணப்பட்டது. 2008இன் 62,625 தொழில்தருநர்களுடன் ஒப்பிடுகையில் இது 4.2 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். 2009 இறுதியில் நிதியம் (அதாவது உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு) ரூ.752.2 பில்லியன்களாக அமைந்து 2008 இறுதியில் காணப்பட்ட ரூ.645 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 16.6 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது. (அட்டவணை II.1) உதவு தொகை செலுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் உதவுதொகை ஆகிய இரண்டிலும் காணப்படும் அதிகரிப்பு இவ்வாண்டுக் காலத்தில் நிதியத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தது. உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்குமான மீளளிப்பின் மொத்தத்தொகை 2008இன் 25.9 பில்லியனிலிருந்து 2009இல் ரூ.31.9 பில்லினுக்கு 23.0 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செய்முறைப்படுத்தப்பட்ட மீளாய்வு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2009இல் 108,066 இற்கு 5.4 சதவீதத்தினால் அதிகரித்தது. தேறிய உதவுதொகைகள் (நன்மைகளின் மீளளிப்புக் கழித்த உதவுதொகைகள்) 2008இன் ரூ.20.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் ரூ.16.8 பில்லியனாகக் காணப்பட்டது.

அட்டவணை II - 1

நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முதன்மைத் தகவல்கள்

| விடயம் | 2008 | 2009(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்லியன்) | 12.46 | 12.68 | 1.8 |
| உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்லியன்) | 2.3 | 2.0 | (13.0) |
| உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்லியன்) | 10.16 | 10.68 | 5.0 |
| உதவி தொகை செலுத்தும் தொழில் தருநர்கள் | 62,625 | 60,000 | (4.2) |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 45,951 | 48,712 | 6.0 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 25,931 | 31,901 | 23.0 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 102,496 | 108,066 | 5.4 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு(ரூ.பில்) | 645.0 | 752.2 | 16.6 |
| நிதியின் மொத்தப் பெறுமதி(ரூ.பில்) | 653.2 | 769.4 | 17.8 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.2 நிதியங்களின் முதலீடும் வருமானமும்

(i) **முதலீட்டுச் சொத்துப் பட்டியல்:** நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உறுப்பினர்களுக்கான நீண்டகால நேர்க்கணிய உண்மை வருமானத்தினை உழைப்பதன் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்திய வேளையில் மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக போதியளவு திரவத் தன்மையும் பேணப்பட்டது. 2009 இறுதியில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் ரூ.737.1 பில்லியனாக அமைந்து 2008இறுதியில் காணப்பட்ட ரூ.627.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 17.5 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தது. (அட்டவணை II.2) ஆண்டின் இறுதியில் 97.1 சதவீதமான சொத்துப் பட்டியல் அரசாங்கப் பிணையங்களில் வைத்திருக்கப்பட்ட வேளையில், 2.4 சதவீதமானவை கம்பனித் தொகுதிக் கடன்களிலும் பங்குகளிலும் வைத்திருக்கப்பட்டன. மீதி 0.5 சதவீதம் திரவத் தன்மையினைப் பேணுவதற்காக அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள் கொள்வனவு போன்ற உயர் திரவத் தன்மை கொண்ட சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டன.

அட்டவணை II - 2
முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

| முதலீட்டின் வகை | 2008 | | 2009 | |
|---|---|---|---|---|
| | ரூ. பில். | பங்கு% | ரூ. பில். | பங்கு% |
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 539.6 | 86.0 | 658.9 | 89.4 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 68.5 | 10.9 | 56.6 | 7.7 |
| கம்பனி தொகுதிக்கடன்கள் | 8.8 | 1.4 | 8.3 | 1.1 |
| உரிமை முதல் | 6.9 | 1.1 | 9.8 | 1.3 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 3.5 | 0.6 | 3.5 | 0.5 |
| மொத்தம் | **627.3** | **100.0** | **737.1** | **100.0** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

**(ii) வருமானம்:** 2009இல் நிதியத்தின் மொத்த வருமானம் 2008இன் 79.5 பில்லியனிலிருந்து ரூ.109.6 பில்லியனுக்கு 37.9 சதவீதத்தினால் அதிகரித்தது. கடந்த காலங்களைப் போன்றே, கடன் தீர்ப்பனவு இலாபம் உள்ளிட்ட வட்டி வருமானம், நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 97.7 சதவீதம்) விளங்கியது. 2009இல் கடன்தீர்ப்பனவு இலாபம் உள்ளிட்ட வட்டி வருமானம் 2008இன் ரூ.78.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.107.1பில்லியனுக்கு ரூ.28.2 பில்லியனால் அதிகரித்தது. (அட்டவணை II.3) நிதியத்தின் 97.1 சதவீதம் பல்வேறுபட்ட வட்டி வீதங்களுடனும் முதிர்ச்சிக் காலங்களுடனும் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளமையினால் முதலீடுகள் மீதான மொத்த வருமானம் அரச பிணையங்களின் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றத்துடன் கூடியளவிற்கு தொடர்புபட்டிருந்தது. 2009 இறுதியில் ஊ.சே.நிதியத்தினால் வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வீத வருமானம் 14.98 சதவீதமாகவும் அப்பிணையங்களின் விளைவுகள் அவற்றின் முதிர்ச்சியைப் பொறுத்து 12.60 சதவீதத்திற்கும் 16.61 சதவீதத்திற்குமிடையிலும் வேறுபட்டன. (அட்டவணை II.4) வங்கிச் சொத்துப் பட்டியலிலிருந்து அடையப்பட்ட மூலதன இலாபங்களும் பங்கு இலாபங்களும் 2008 இன் ரூ.225 மில்லியனிலிருந்து 2009இல் ரூ.374.8 மில்லியனுக்கு 54.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தமைக்கு ஆண்டின் பின்னரைப்பகுதியில் பங்குச் சந்தையில் காணப்பட்ட முன்னேற்றமே முக்கிய காரணமாகும். (அட்டவணைII.3) இதன்படி, சராசரி பங்குச் சந்தைச் சொத்துப் பட்டியல் மீதான வருமான வீதம் 2008இன் 3.8 சதவீதத்திற்கெதிராக 8.6 சதவீதமாகக் காணப்பட்டது. பொதுவாக, மொத்தச் சொத்துப் பட்டியல் மீதான வருமான வீதம் 2008இன் 13.8 சதவீதத்திலிருந்து 2009இல் 16 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அட்டவணை II - 3
முதலீடு மீதான வருமானம்

| முதலீட்டின் வகை | 2008 | | 2009 | |
|---|---|---|---|---|
| | ரூ. பில். | பங்கு% | ரூ. பில். | பங்கு% |
| வட்டி | 61,445 | 77.3 | 79,810 | 72.8 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 17,504 | 22.0 | 27,337 | 24.9 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் (அ) | 24 | 0.03 | 1,920 | 1.8 |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் (அ) | 30 | 0.07 | 235 | 0.2 |
| பங்கு இலாபங்கள் | 153 | 0.2 | 133 | 0.1 |
| ஏனையவை | 307 | 0.4 | 182 | 0.2 |
| மொத்தம் | **79,463** | **100.0** | **109,617** | **100.0** |

(அ) சந்தை அடிப்படையிலான இலபாம் உள்ளடங்கலாக

மூலம்: ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II - 4
அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சித் தோற்றம் - 2009இறுதி

| முதிர்ச்சி | தொகை ரூ.மில் | பங்கு% | நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு% |
|---|---|---|---|
| 1 ஆண்டிலும் குறைந்தது | 120,963 | 15.6 | 15.85 |
| 1- 2 ஆண்டுகள் | 324,574 | 41.8 | 16.61 |
| 3- 4 ஆண்டுக ள் | 209,061 | 27.0 | 13.34 |
| 4 ஆண்டுகளுக்கும் கூடியது | 121,122 | 15.6 | 12.60 |
| மொத்தம் | **775,720** | **100** | **14.98** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### (இ) செலவுகள்

**நிதியத்தின் மொத்த செயற்பாட்டுச் செலவினம் 2008இன் ரூ.637 மில்லியனிலிருந்து 2009இல் ரூ.763 மில்லியனுக்கு19.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது. (அட்டவணை II.5) நிதியமானது அதன் மொத்த தொழிற்பாட்டு செலவினத்தினை 2009இன் மொத்த வருமானத்தில் 0.7 சதவீதத்திற்குப் பேணக்கூடியதாக இருந்தது. தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்கும் குறைவாகப் பேணுவதென்று கடந்த ஆண்டுகளில் நிதியத்தின் முக்கிய பண்பாக இருந்து வருகின்றது.**

அட்டவணை II - 5
தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| செலவின விடயம் | 2008 ரூ.மில். | 2009 (அ) ரூ.மில். | % மாற்றம் |
|---|---|---|---|
| ஆளணிச் செலவினங்கள் | 323.1 | 370.2 | 14.6 |
| நிர்வாகச் செலவினங்கள் | 289.0 | 357.0 | 23.5 |
| ஏனைய செலவினங்கள் | 24.7 | 35.9 | 45.3 |
| மொத்தம் | **636.8** | **763.1** | **19.8** |
| மொத்த அரசிறையின் % ஆக மொத்தச் செலவினங்கள் | **0.8** | **0.7** | **(0.1)** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.3 உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு

2009இல் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட்டியினைப் பகிர்ந்தளிப்பதற்கு ரூ.90,709 மில்லியன் கிடைக்கத்தக்கதாக இருந்தது. (அட்டவணை II.6) இதன்படி உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், மொத்த உறுப்பினர் நிலுவைகளின் மீது 13.75 சதவீதமாகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் 13.20 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 55 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பாகக் காணப்பட்டது. இது ஊ.சே. நிதியம் தொடங்கப்பட்டதன் பின்னர் பிரகடனப்படுத்தப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த வீதமாகக் காணப்பட்டதுடன் இது 2008ஆம் ஆண்டுப் பகுதியிலும் 2009இன் முதலரைப் பகுதியிலும் நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களின் பெறுபேறாகக் காணப்பட்டது. (அட்டவணை II - 7) முழு ஆண்டிற்கும் ஆண்டின் இறுதியில் காணப்படும் நிலுவையின்மீது வட்டி செலுத்தப்படுவதனால் பயனுறு வட்டி வீதம்[1] 13.92 சதவீதமாக மதிப்பிடப்படுகிறது.

அட்டவணை II - 6
உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்

| விடயம் | 2008 ரூ.மில் | 2009 ரூ.மில் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| மொத்த அரசிறை | 79,463 | 109,617 | 37.9 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 637 | 763 | 19.8 |
| வருமான வரி | 5,426 | 7,604 | 40.1 |
| பங்கீட்டுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 73,618 | 101,690 | 38.1 |
| நடைமுறை மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 1,152 | 1,656 | 43.7 |
| பகிர்ந்தளிப்புக்கான கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுக்குப்பின்) | 72,466 | 100,034 | 38.0 |
| ஒதுக்குகளில் இருந்து/(இற்கு) மாற்றல்கள் | 3,000 | (9,325) | (410.8) |
| ஒதுக்குகளிலிருந்து மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக் காகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 75,466 | 90,709 | 20.2 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 75,027 | 90,691 | 20.9 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 439 | 18 | (95.9) |
| உறுப்பினர் நிலுவைகள்மீது செலுத்தப்பட்ட வட்டி % | 13.2 | 13.75 | 0.55 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II - 7
உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு வீதம்
ரூ.மில்

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டி வீதம் (%) | பயனுறு வட்டி வீதம் |
|---|---|---|
| 2000 | 11.50 | 11.69 |
| 2001 | 11.50 | 11.69 |
| 2002 | 12.10 | 12.26 |
| 2003 | 12.00 | 12.07 |
| 2004 | 9.50 | 9.59 |
| 2005 | 9.00 | 9.13 |
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.40 |
| 2009 | 13.75 | 13.92 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

1. பயனுறு வட்டி வீதம் = (உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி )/[ஆண்டின் ஆரம்பத்திலான உறுப்பினர் நிலுவைகள் +ஆண்டின் இறுதியிலான உறுப்பினர் நிலுவைகள்)]/2

### 8.4 உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2009இன் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள், 2009 திசெம்பர் காலப்பகுதியில் அவர்களின் தொழில் தருநர்களூடாக வழங்கப்பட்டன. 2009இன் பின்னரைப் பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2010 யூலை இறுதியளவில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### 8.5 வீடமைப்புக் கடன் வசதி

1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன்திட்டம் 6 பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கான வசதிகளை வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஊ.சே. நிதியம் அவர்களது ஊ.சே.நிதிய நிலுவைக்களுக்கெதிராக உறுப்பினர்களுக்கு உத்தரவாத சான்றிதழ்களைத் தொடர்ந்தும் வழங்கியது. 2009இல் ஊ.சே.நிதியத் திணைக்களம் ரூ.2,680 மில்லியன் பெறுமதியான வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 10,383 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்களை வழங்கியது. (அட்டவணை II.8) மேலும் சொத்தின் ரூ.1,551.8 மில்லியன் கொண்ட தொகை தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டு, 2009ஆம் ஆண்டிற்காக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அட்டவணை II - 8
வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்
ரூ.மில்

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009(அ) | 10,383 | 2,680 | 1,552 |
| மொத்தம் | **147,109** | **26,031** | **8,551** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

கடந்த காலங்களினைப் போன்றே ஊ.சே. நிதியம் 2009இலும் அதன் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கமைய ஊ.சே.நிதியம் இலத்திரனியல் ஊடகமூடாக உறுப்பினர் தகவல்களைச் சேகரிப்பதற்காகவும் உறுப்பினர்களை மீளப் பதிவு செய்தற்காகவுமான முக்கிய நோக்கங்களுக்காகவும் 13 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. மேலும் 2 பொதுமக்களுக்கான பொருட்காட்சிகள் (தயற்றகிருள மற்றும் மனித வளப்பணி வழங்குவோரின் பொருட்காட்சி) உட்பட

5 நடமாடும் சேவைகளை ஊ.சே. நிதியம் நடத்தியது. அதேவேளை அரையாண்டு உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குவது பற்றி உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்காக மூன்று பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

### 8.7 கணனி முறைமையினை அபிவிருத்தி செய்தல்

2009இல் ஊ.சே.நிதியத் திணைக்களம் மத்திய வங்கியின் தகவல் தொழில் நுட்பத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஊ.சே.நிதிய வெப்தளத்தின் 3ஆம் கட்டத்திற்கான வேலையில் ஏறத்தாள 40 சதவீதத்தினை பூர்த்தி செய்துள்ளது. 3ஆம் கட்டத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் ஊ.சே.நிதிய வெப் தளத்தினூடாக உதவுதொகைகளையும் உறுப்பினர்களின் தகவல்களையும் சேகரிப்பதேயாகும். மீளாய்விற்குரிய ஆண்டில் ஊ.சே. நிதியத் திணைக்களம் அதன் எஸ்எம்எஸ்/வெப் தகவல் பணியில் 1,033 உறுப்பினர்களைப் பதிவு செய்துள்ளமையின் மூலம் உறுப்பினர் கணக்கு நிலுவை விசாரணைகள், தற்போதைய உதவு தொகை விபரங்கள் மீளாய்வு விண்ணப்பங்களின் மற்றும் வீடமைப்பு கடன் விண்ணப்பங்களின் நிலை போன்ற தகவல்களை இணையத்தளம் மற்றும் குறுஞ்செய்திப் பணிகளூடாகப் பெறுவதற்கு உறுப்பினர்களை இயலச் செய்திருக்கிறது. ஊ.சே.நி. நிதியத்தின் மீளப் பதிவு செய்தல் செயற்றிட்டமானது மிகப் பாதுகாப்பான, அதேவேளை கணனி வழி கணக்கு முறையினை இயலச் செய்யுமென்பதுடன் இது உறுப்பினர் பணிகளினதும் நிதிய முகாமைத்துவத்தினதும் வினைத்திறனையும் உயர்த்தும்.

### 8.8 உறுப்பினர்களின் மீள்பதிவு

மீள்பதிவுச் செயற்றிட்டமானது ஊ.சே. நிதியத் திணைக்களத் திற்கும் தொழில் திணைக்களத்திற்குமிடையிலான கூட்டு செயற்றிட்டமாகக் காணப்படுவதுடன் முழுமையாக தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர் கணக்குகளையும் நிதிய முகாமைத்துவ முறையினையும் நோக்கி நகரும் நோக்குடன் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச் செயற்றிட்டத்தின்கீழ், நிதியத்தின் அனைத்து உறுப்பினர்களும் தேசிய அடையாள அட்டையில் காணப்படும் அவர்களது பெயரின்படி மீளப் பதிவு செய்யப்படுவதுடன், அவர்களது முன்னைய உறுப்பினர் கணக்குகளை ஒருங்கிணைப்பதனை வசதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள இலக்கங்கள் தொடர்பான உறுப்பினர் கணக்குகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பதிவேடுகளைப் பேணுவதில் முன்னேற்றங்கண்ட பாதுகாப்பு வழிமுறையொன்றாக உறுப்பினர்களின் பெருவிரல் அடையாளம் எண்ணியல் வடிவில் மேற்கொள்ளப்படும். 2009 இறுதியில் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் “சி” வகை ஊழியர்களின் உதவு தொகைக்கு (உ-ம் 150 இற்கு குறைவான மக்கள் வேலை செய்யும் நிறுவனமொன்றின் ஊழியர்கள்) தனி உறுப்பினர் இலக்கங்களை ஒதுக்குகின்றமையுடன் தொடர்பான வேலைகளில் 70 சதவீதம் முடிவடைந்திருக்கிறது. மீதி 30 சதவீதமான வேலைகளும் 2010இன் முதற் காலாண்டுப் பகுதியில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஊ.சே. நிதியத் திணைக்களம் செயற்படுகின்ற “சி” 3 வகை உறுப்பினர்களுக்கு (உ-ம் 150 அல்லது அதற்குக் கூடுதலான ஆட்கள் தொழில் புரிகின்ற நிறுவனங்களின் ஊழியர்கள்) தனி உறுப்பினர் இலக்கங்களை ஒதுக்குகின்ற வேலைகள் 2009ஆம் பகுதியில் தொடங்கியிருக்கின்றன.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிக்கும் விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அரசாங்கத்தின் முகவரான இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய, 2009ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஏனையோருக்கும் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பான புலனாய்வுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

2009ஆம் ஆண்டில் மேலதிக தாராளமயமாக்கலுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும், பன்னாட்டு முதலீட்டாளர் நம்பகத் தன்மையை ஊக்குவிப்பதற்கும் வழிமுறைகள் மேற் கொள்ளப்பட்டன.

### 9.1 புதிய பணிப்புரைகளை/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 2009இல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்) மற்றும் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடும் ஏனையோருக்கும் பல புதிய பணிப்புரைகளை/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கியது.

அத்தகைய பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் சுருக்கம் பின்வருமாறு (அப் பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன)

(அ) **வெளிநாட்டில் வதியும் இலங்கையர் மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் தொழிற்படையினரால் மேற்கொள்ளப்படும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதலீட்டுக்கான அனுமதி** : வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள்/வியாபாரிகள் உள்ளிட்ட வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள்; வெளிநாட்டுச் செலாவணியில் சம்பாதிக்கும் இலங்கை மற்றும் வெளிநாட்டில் வதியும் இலங்கையின் தொழில்சார் நிபுணர்கள்; அவர்களது வதிவிடத்தைக் கருத்திற் கொள்ளாது இரட்டைப் பிரஜா உரிமையைக் கொண்ட இலங்கைப் பிரஜைகள், மற்றும் மேற்கூறிய வகையினர் சார்பாக நம்பகரமான தன்மையுடன் தொழிற்படும் வங்கிகள் என்பன வெளிநின்ற மொத்தத் திறைசேரி உண்டியல்களின் இருப்பின் 10 சதவீதத்தை விஞ்சாத அளவிற்கு **“திறைசேரி உண்டியல்கள் முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு (தேசாபிமானி)”** என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கூடாக ரூபாவில்

குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம், விற்கலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

(ஆ) **வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வட்டிமீது ரூபாவில் மேலதிக வட்டிக் கொடுப்பனவு:** 2009 பெப்புருவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போருக்கு இலங்கை ரூபாவில் மிகையூதிய வட்டியைச் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது.

வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கை வைத்திருப்போருக்கு 2009ஆம் ஆண்டு ரூ.779.5 மில்லியன் கொண்ட தொகை செலுத்தப்பட்டது.

நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இத்திட்டம் 2009 ஒத்தோபர் 01 இலிருந்து மீளப் பெறப்பட்டது.

(இ) **வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் பட்டியலில் நியூசிலாந்து டொலர் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் டியூஸ் மார்க், பிரென்சு பிராங் மற்றும் நெதர்லாந்து கில்டர் என்பன பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

(ஈ) **இலங்கையில் இரட்டைப் பிரஜா உரிமையைப் பெறல்:** இரட்டைப் பிரஜா உரிமைக்கான தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், இரட்டை பிரஜா உரிமை விண்ணப்பத்தாரிகளுக்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் மேற் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறந்திருக்கின்ற அல்லது திறப்பதற்கு விருப்பம் கொண்டுள்ள வெளிநாட்டுப் பிரஜா உரிமையைக் கொண்டுள்ள முன்னாள் இலங்கையரினால் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்துள்ள / முதலீடு செய்ய விரும்புகின்றவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பவற்றிலுள்ள நிதியங்களை ஒருங்கிணைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 9.2 அரசாங்க அறிவித்தல்களை வழங்குதல்

காலத்துக்குக் காலம் நிதி அமைச்சரால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டு 2007 மற்றும் 2009 ஆண்டுகளில் இலங்கை அரசால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் மாற்றல் செல்வதற்கும் இலங்கையில் வதியும் ஆட்களுக்கும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஆட்களின் சபைகளுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) 17ஆம் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட கட்டளை மூலம் நிதி திட்டமிடல் அமைச்சர் அனுமதியை வழங்கினார்.

### 9.3 வெளிநாட்டு முதலீடுகளுக்கும் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்குமான ஒப்புதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடு என்பவற்றின் ஒப்புதலுக்கான 70 கோரிக்கைகளை ஆராய்ந்ததுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகளின் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள 39 கோரிக்கைகளுக்கு ஒப்புதல்களை வழங்கியது.

(அ) பெரும்பாலும் முதலீட்டு வங்கித் தொழில், வர்த்தகம் செய்தல், கப்பற்படுத்தல், சில்லறைத் தொழிற்பாடுகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் துறைகளில் ஐ.அ.டொலர் 84.51 மில்லியன் கொண்ட தொகையை வெளிநாட்டில் முதலிடுவதற்கு 25 வதிவிடக் கம்பனிகளுக்கான ஒப்புதல்கள்.

(ஆ) கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 62.05 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையை வெளிநாட்டிலிருந்து கடன்பெறுவதற்கு 14 வதிவிடக் கம்பனிகளுக்கான ஒப்புதல்கள்

### 9.4 சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள்/ உரிமங்களை வழங்குதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மற்றைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கும் கீழே காட்டப்பட்டவாறு அனுமதிப் பத்திரங்களைத் தொடர்ந்தும் வழங்கியது.

(அ) இருபத்துநான்கு புதிய கம்பனிகள் சரக்கு அனுப்புவோராக பதிவு செய்யப்பட்டதுடன் 2009 இறுதியில் சரக்கு அனுப்புவோரின் மொத்த எண்ணிக்கையானது 301 இனை அடைந்தது.

(ஆ) எட்டு புதிய நாணய மாற்றுனர் உரிமங்கள் வழங்கப்பட்டு மூன்று உரிமங்கள் மீளப் பெறப்பட்டதுடன் நாணய மாற்றுனர்களின் மொத்த எண்ணிக்கை 75இனை அடைந்தது. மேலும் ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்குக் கூடுதலான வெளிநாட்டு நாணயத்தை வெற்றிகரமாகக் கொள்வனவு செய்த 14 நாணய மாற்றுனர்கள் வெளிநாட்டு நாணயத்தை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். நாணய மாற்றுனர் அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த ஆண்டுப் புரள்வு ஐ.அ.டொலர் 600,000 இலிருந்து 2010 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஐ.அ.டொலர். 1 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

(இ) தீர்வையற்ற கடைகள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு நாற்பத்தேழு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமையுடன் அத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 747 இனை அடைந்தது.

### 9.5 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் மீதான கண்காணிப்பு:

செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களம் உயர்ந்த சந்தை ஒழுக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்கள் மற்றும் நாணய மாற்றுனர்கள் போன்ற தொடர்பான பகுதியினரால் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான அதன் கண்காணிப்பை தொடர்ந்தும் பலப்படுத்தியது.

அறிவிக்கப்பட்ட தகவல்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் திட்டங்களின் பல வகைகளூடான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களின் விற்பனைகளையும் கொள்வனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. இணையத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவிக்கும் முறைமை வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களின் அளவை மதிப்பிடும் விதத்தில் அதே நேர கண்காணிப்பு முறைமையை விருத்தி செய்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை இயலச் செய்தது.

### 9.6 செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது பற்றிய புலனாய்வுகள்

வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் சந்தைப் பங்கேற்பாளர்களின் ஒழுங்கு முறையான தொழிற்பாடு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடும் வணிகர்கள் மற்றும் பலதரப்பட்ட ஏனைய தரப்பினரால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகத் தவறியமை மற்றும் மேற்கூறிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டமை தொடர்பாக புலன் விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதன்படி, 2009இல் 121 புலன் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அத்தகைய குற்றமிழைத்தோர் மீது விதிக்கப்பட்ட தண்டங்களாக ரூ.17,552,311.08 சேகரிக்கப்பட்டது. அத்தகைய புலன் விசாரணைகளில் பெரும்பாலானவை வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்படாது ஏற்றமை மற்றும் கொள்வனவு செய்தமை, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியில் குறிப்பிட்டுள்ள நடைமுறைக்கு முரணாக வதியாதோருக்கு பிணையங்களை வழங்கியமை மற்றும் இலங்கையில் வதியும் நபர்களால் வதியாதோருக்கு வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமின்றிக் கொடுத்தமை என்பன தொடர்பாகக் காணப்பட்டன.

### 9.7 ஏனைய செயற்பாடுகள் - தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான விழிப்புணர்வு

வங்கித் தொழில் மற்றும் பல வழிகளிலான ஏனைய முறைசார் வழிமுறைகளூடாக தொழிலாளர் பணவனுப்பல்களை மேம்படுத்து வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வங்கிகளுடன் இணைந்து மாத்தறையில் வாய்பைப் பெற்ற 320 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 1 நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் வாய்ப்புப் பெற்ற புலம் பெயர்ந்த தொழிலாளர்களில் அநேகமானோர் வெளிநாட்டு நாணய பணவனுப்பல்கள் தொடர்பாக அவர்களின் ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொண்டனர்.

## 10. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் நியதிகளில் அதன் தொழிற்பாடுகளை இவ்வாண்டிலும் தொடர்ந்து மேற்கொண்டது. அதன் முக்கிய தொழிற்பாடுகள் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தகவலைச் சேகரித்தல், சந்தேகத்திற்கிடமான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துதல் சட்டத்தை இயற்றல்/ நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை தொடுப்பதற்குப் பொருத்தமான ஒழுங்கமைப்பு மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரசபைகளுக்கு புலன்விசாரணைகளின் தகவல் மற்றும் விபரங்களைப் பரப்புதல், தொடர்பான நியதிச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்ட குற்றங்களைத் தவிர்ப்பதற்கு உங்களது வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளுங்கள் / வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல், மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றி பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகளை வழங்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. 2009இல் நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளின் பண்புகள் பின்வருமாறு.

### 10.1 தகவலைச் சேகரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்

முன்னைய ஆண்டைப் போலவே நிதியியல் உளவறிதல் பிரிவால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் கீழ், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் பங்குத் தரகு நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் ரூ.1.0 மில்லியன் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தினை அறிவித்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு அத்தகைய காசுக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை (உள்வரும் மற்றும் வெளிச் செல்லும்) தொடர்ந்து அறிவித்து வந்தன.

அறிக்கையிடும் நிறுவனங்களால் அறிவிக்கப்பட்ட தகவல்கள்/ தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட "லங்காவின்" என்ற தகவல் தொழில்நுட்ப முறைமை, வெப்பை அடிப்படையாகக் கொண்ட இடைமுகத்தைப் பயன்படுத்தி 2009 யூலை1இலிருந்து விரிவுபடுத்தப்பட்டதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் 2009 திசெம்பர் 1இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காசுக் கொடுக்கல் வாங்கல்கள், இலத்திரனியல் மூலமான

நிதிய மாற்றல்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை அதே நேரத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு சமா்ப்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவு நிறுவனங்களால் அறிவிக்கப்படும் தகவல்/தரவை "லங்காவின்" ஐப் பயன்படுத்தி தொடா்ந்து பகுப்பாய்வு செய்ததுடன் 1.6 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை நுணுக்கமாக ஆராய்வதற்கும் 272 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை பரீட்சிப்பதற்கும் நிதியியல் உளவறிதல் பிரிவை இயலச் செய்தது. இத்துடன், அறிக்கையிடும் நிறுவனங்கள் 111 சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கைகளைச் சமா்ப்பித்தன. ஆரம்ப புலன் விசாரணையை நடத்திய பின்பு சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் 31 மற்றும் 8 மேலதிக புலன் விசாரணைக்காக சட்டத்தை நடைமுறைக்கிடும் முகவா்களுக்கும், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்டத்தை நடைமுறைக்கிடும் முகவா்களுக்கு அறிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதில் தற்போது ஈடுபட்டுள்ளது.

### 10.2 பணிப்புரைகளை /ஒழுங்கு விதிகளை வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

நிதியியல் உளவறிதல் பிரிவு பின்வரும் விதிகள்/ பணிப்புரைகளை வழங்கியுள்ளதுடன் இவை இவ்வறிக்கையின் பகுதி III இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

(i) நிதிசாா் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2 உடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கான சுற்றுநிருபம் உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது.

(ii) ஐக்கிய அமெரிக்காவின் பயங்கரவாத நிறுவனங்கள் பட்டியலினுள் தமிழ் அமைப்பை உள்ளடக்கியது பற்றிய சுற்றுநிருபம் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. தமிழ் அமைப்பால் வசதிப்படுத்தப்பட்டு/ வசதிப்படுத்தப்படவிருக்கும் பணவனுப்பல்களின் விபரங்களைக் கண்காணித்து அறிவிக்குமாறு அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

(ii) காப்புறுதிக் கம்பனிகளின் பணம் தூய்தாக்கலுக்கெதிரான நடவடிக்கை/பயங்கரவாத நிதியிடலை முறியடித்தல் பற்றி சிறந்த ஆளுகையைப் பலப்படுத்துவதற்கும், ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் இலங்கைக் காப்புறுதிக் கம்பனியின் பணிப்பாளா் நாயகத்திற்கு சுற்றுநிருபம் வழங்கப்பட்டது.

### 10.3 ஏனைய செயற்பாடுகள்

(i) **புரிந்துணா்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்:** நிதியியல் உளவறிதல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் தொடா்பான தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கு இந்தோனேசியா நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனம், பிலிப்பைன்சின் பணம் தூயதாக்கலுக்கெதிரான சபை, நேபாளம் ரஸ்ரா வங்கியின் நிதியியல் தகவல் பிரிவு மற்றும் கம்போடியா தேசிய வங்கியின் நிதியியல் உளவறிதற் பிரிவுடன் 2009இல் நான்கு புரிந்துணா்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

(ii) **நிறுவன ரீதியிலான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணா்வு நிகழ்ச்சித் திட்டங்கள்:** பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கான நிதியிடல் தொடா்பான கொடுக்கல் வாங்கல்களை பகுப்பாய்வு செய்தல், கண்டுபிடித்தல் மற்றும் அறிவித்தல் தொடா்பாக உரிமம் பெற்ற வா்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள், பொலிஸ் திணைக்களம், கல்வி நிறுவனங்கள், மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 1,500 இற்கும் மேற்பட்ட பங்கேற்போரை உள்ளடக்கும் வகையில் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் பன்னிரண்டு பயிற்சி மற்றும் விழிப்புணா்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன.

(iii) **பன்னாட்டு உறவுகள்**

**(அ) எக்மன்ற் குழு:** 2006இல் சமா்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் நிதியியல் உளவறிதல் பிரிவு எக்மன்ற் குழுவின் உறுப்புரிமையை 2009 மே 26ம் நாளன்று பெற்றது. எக்மன்ற் குழு என்பது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலைக் கண்டுபிடிப்பதற்கும் ஒழிப்பதற்குமாக உறுப்பினா் நாடுகளுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் தகவலைப் பகிா்ந்து கொள்வதற்குமாக 1995இல் நிறுவப்பட்ட 116 உறுப்பினா்களைக் கொண்ட அமைப்பாகும். எக்மன்ற் குழுவின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டமை ஏனைய நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் நிதியியல் உளவறிதலின் பரிமாற்றத்துக்கு வசதிப்படுத்து வதற்கும் முக்கிய உறவுகளை வளா்ப்பதற்கும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழிப்பதற்கு உலகளாவிய ஒத்தழைப்பைப் பேணுவதற்கும் இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவை இயலச் செய்தது. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் எப்போதும் உலகளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்படுவதால் நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் உலகளாவிய ஒத்துழைப்பு அத்தகைய செயற்பாடுகளை முறியடிப்பதற்கு முக்கிய உபாயமாக விளங்குகிறது.

**(ஆ) பணம் தூயதாக்கல் தொடா்பான ஆசிய பசுபிக்குழு:** பணம் தூயதாக்கல் தொடா்பான ஆசிய பசுபிக் குழுவின் உறுப்பினா் நாடான இலங்கை அவுத்திரேலியாவில் 2009 யூலையில் நடைபெற்ற அதன் 12ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. இத்துடன், உலகளாவிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலின் பலதரப்பட்ட புதிய முறைகள், உபாயங்கள் மற்றும் போக்குகளைக் கலந்தாலோசனை செய்வதற்கு கம்போடியாவில் 2009 ஒத்தோபரில் நடைபெற்ற

ஆசிய பசுபிக் குழுவின் 12ஆவது வருடாந்தக் கோட்பாட்டுச் செயலமா்வில் நிதியியல் உளவறிதல் பிரிவு பங்குபற்றியது.

**(இ) ஏனைய நியாயாதிக்கங்களுக்கு உதவுதல்:** டென்மார்க், இந்தியா, நைஜீரியா, மசிடோனியா, மொறீசியஸ் மற்றும் பல எக்மன்ற் உறுப்பினர் நாடுகள், உட்பட பல எண்ணிக்கையான நியாயாதிக்கங்களுடன் தகவலைப் பகிர்ந்து கொள்ளல் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்குப் புறம்பாக, றோயல் கனடியன் மௌன்றட் பொலிஸ் மற்றும் அவுத்திரேலியா தூதுக் குழுக்களுடன் புலனாய்வைப் பகிர்வதற்கும் நிதியியல் உளவுப் பிரிவுகளின் முன்னேற்றம் தொடர்பான விடயத்தைக் கலந்தாலோசிப்பதற்கும் கிரமமான கூட்டம் நடத்தப்பட்டது.

## 11. நிதியியல் முறைமை உறுதிப்பாடு

மத்திய வங்கியின் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதில் உதவுவதற்கு 2007 சனவரியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டது. இது இலங்கையின் நிதியியல் முறைமை பாதுகாப்பானது என்பதையும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான அச்சுறுத்தல்கள் கண்டறியப்பட்டு குறைக்கப்படுவதையும் உறதிப்படுத்தவதற்கு தற்போது நடைபெற்றுவரும் அதன் கண்காணிப்பை இன்றியமையாததாக்கின்றது. திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக நிதியியல் முறைமைகளுக்கான இடர்நேர்வுகளை ஆரம்பக் கட்டத்திலேயே அடையாளம் காணுதல், நிதியியல் உறுதியின்மையைத் தவிர்ப்பதற்கு தடுப்பு வழிமுறைகைளை நடைமுறைப்படுத்துவதில் உதவுதல், பிரச்சனைகள் ஏற்படும்போது திருத்த நடவடிக்கைகளை முன் மொழிதல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவினதும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவினதும் பணியை ஒருங்கிணைத்தல் என்பன காணப்படுகின்றன. 2009இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 11.1 பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

எதிர்காலத்தில் நிதியியல் முறைமைகள் உறுதிப்பாட்டில் ஏற்படக்கூடிய சாதகமான இடர்நேர்வுகள் மற்றும் பொருள்சார் தொடர்பான கரிசனைகளை இனங்காண்பதற்கு பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமைத் தகவலினைத் தொகுப்பதிலும் அத்தகைய தகவலினை பகுப்பாய்வு செய்வதிலும் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு ஈடுபடுகிறது. இதன்படி, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு வெளியேயுள்ள ஏனைய நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதாந்த மற்றும் காலாண்டு தகவலின் அடிப்படையில் கண்காணிப்பை மேற்கொண்டது. இத்தகவல் தளம் (i) நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன், திரவத்தன்மை, சந்தை விலைகள், இலாபகரத் தன்மை மற்றும் மூலதனம் போன்ற நிதியியல் ஆற்றல் இடர்நேர்வுகள் (ii) வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பங்குச் சந்தைகள் (iii) கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகள் (iv) பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம் என்பன தொடர்பான பல எண்ணிக்கையான கூட்டுக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்தது. அத்தகைய தகவலின் நியம மதிப்பீட்டிற்கு மேலதிகமாக, திணைக்களம் அழுத்தப் பரீட்ச்சிப்புக்கள் மற்றும் வங்கித் தொழில் ஆற்றல் சுட்டெண்ணின் தொகுப்பு ஆகிய இரு தொழில்நுட்ப ஆய்வுகளையும் பகுப்பாய்களையும் மேம்படுத்துவதற்காக மேற்கொண்டது.

வங்கித் தொழில்துறை மீதான அழுத்தப் பரீட்சிப்புக்கள் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு தொடர்பான மோசமான அதிர்வுகளுக்கு அதன் மீள் எழுச்சியை மதிப்பிடுவதற்கு நடத்தப்பட்டன. காலாண்டு ரீதியில் அடிக்கடி மாறுதலுக்குள்ளாகும் பகுப்பாய்வைப் பயன்படுத்தி தனிக்காரணி அழுத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. கொடுகடன் இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு அதிர்வுகள் என்பவற்றை ஒருங்கிணைத்து விபரக் குறிப்பு பகுப்பாய்வு போன்று ஒருங்கிணைந்த அடிக்கடி மாறுதலுக்குள்ளாகும் பகுப்பாய்வு அழுத்தப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. வங்கித் தொழில்துறையின் ஒருங்கிணைந்த ஆற்றலைக் கணக்காணிப்பதற்கு காலாண்டு அடிப்படையில் மூலதனப் போதுமாந்தன்மை, இலாபகரம், சொத்துத்தரம், திரவத்தன்மை, சொத்து - பொறுப்பு ஒவ்வாத தன்மை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்காப்பின்மை தொடர்பான குறிகாட்டிகளிலிருந்து வங்கித் தொழில் ஆற்றல் சுட்டெண் தொகுக்கப்பட்டது.

மீளாய்விற்குரிய ஆண்டில், திணைக்களம் நான்கு நிதியியற் துறை இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கைகளை நாணயச்சபைக்குச் சமர்ப்பித்தது. இதற்கு மேலதிகமாக, திணைக்களம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் குழுமங்களின் ஒருங்கிணைந்த மேற்பார்வைக்கான முன்மொழிவுகள், ஓய்வூதிய நிதியங்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபையை நிறுவுதல் மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிப்படுகடன் பிணையங்கள் சந்தையின் ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தது.

### 11.2 நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு

இலங்கை மத்திய வங்கி 2004 இலிருந்து 5 வருடாந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வுகளை வெளியிட்டுள்ளது. 2009இல் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு 2008ஐ தொகுப்பதற்கும் வெளியிடுவதற்கும் ஒழுங்குகளை மேற்கொண்டது. இம் மீளாய்வு 2008 ஆறு அத்தியாயங்களையும் ஆறு சிறப்புக் குறிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. இம் மீளாய்வு 2008 நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் ஒட்டுமொத்த மதிப்பீடு, உள்ளார்ந்த வளம் மிக்க பாதிப்புக்குள்ளாகும் தன்மை மற்றும் இடர்நேர்வைத் தணிக்கும் வழிமுறைகள், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உள்நாட்டு நிதிச் சந்தைகளின் செயலாற்றம், வங்கித் தொழில்துறை செயலாற்றம் மற்றும் இடர்நேர்வுகள், ஏனைய நிதியியல் நிறுவனங்களிலான அபிவிருத்திகள் மற்றும் இடர்நேர்வுகள்(நிதி, குத்தகை மற்றும் காப்புறுதிக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள், ஓய்வூதிய

நிதியங்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் பங்குத் தரகர்கள்) மற்றும் முக்கிய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளாகத் தொழிற்படல், ஒழுங்கமைப்புமுறைக் கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்குகிறது. திணைக்களம் ஆண்டறிக்கை 2008இன் நிதியியல்துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு பற்றிய அத்தியாயம் மற்றும் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2009இன் தயாரிப்பதிலும் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

### 11.3 நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான குழுக்களின் ஒருங்கிணைப்பு

2009இல் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவிற்கான செயலகமாக தொடர்ந்து செயற்பட்டது.

#### (அ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்குப் பொறுப்பான துணை ஆளுநர் தலைமை தாங்குவதுடன் இது வங்கி மேற்பார்வை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், தகவல் தொழில்நுட்பம், பொருளாதார ஆராய்ச்சி, நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இக்குழு நிதியியல் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியிலுள்ள பல திணைக்களங்களின் முயற்சிகளின் ஒருங்கிணைப்பிற்கான மன்றமாக விளங்குகிறது. இக்குழு 2009இல் பன்னிரண்டு கூட்டங்களை நடத்தியது. இக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் பெரும்பாலும் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்களுக்கான கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்தை நிறுவுதல், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் பெறத்தக்க குத்தகைகளின் பிணையப்படுத்தலுக்கான உத்தரவாதத் திட்டம், வங்கித் தொழில் துறையின் உயர் கொடுக்கல் வாங்கல் செலவுகள், வங்கிகளால் வழங்கப்படும் தற்காலிக மேலதிகப் பற்று வசதிகள் மற்றும் வங்கித் தொழில் துறையிலான வட்டி வீதங்களை உள்ளடக்குகின்றன.

#### (ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு

2008இல் நாணயச் சபையால் நியமிக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு நிதியியல் துறைத் தெழிற்பாடுகள் மற்றும் பிரச்சனைகளில் நிபுணத்துவத்தையும், அனுபவத்தையும் கொண்ட மத்திய வங்கிக்கு வெளியேயான ஆறு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இக்குழு 2009இல் 11 தடவைகள் சந்தித்ததுடன் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்த நிதிக்கம்பனிகளைப் பட்டியலிடல், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கடன் வழங்கல்களிலான இடர்நேர்வுச் செறிவு மீதான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வரையறைகள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லாத பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் வைப்புத் திரட்டுக்கள் மீதான கட்டுப்பாடுகள், குழுமம் ஒன்றில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒன்றுக்கு உரிமத்தைக் கட்டுப்படுத்தல், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான கணக்காய்வாளர்களின் குழுவை நியமித்தல், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் ஒருங்கிணைந்த மேற்பார்வை, இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்புக்களைப் புதுப்பித்தல் தொடர்பாக தற்காலிக அரச உத்தரவாத்தை வழங்குதல் போன்ற பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பான பல முன்மொழிவுகளையும் கலந்தாலோசித்தது. இக்குழு வங்கித் தொழில் சட்டம் மற்றும் நிதிக் கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகளையும் மேற்கொண்டதுடன் இணையத்தள மோசடியைத் தவிர்ப்பதற்கு வங்கித் தொழில் துறைக்கான கணனி அவசரகால பதிலிறுத்தல் குழுவையும் நிறுவியது.

### 12. ஆளுநர் செயலகத் திணைக்களம்

உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தை குழப்ப நிலைமைகளின் காரணமாக 2009இல் ஆளுநர் அலுவலகத்தின் நடவடிக்கைகள் கணிசமானளவில் விரிவடைந்தமையானது, இப் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவதற்கு விரைந்த கவனிப்பினையும் நிபுணத்துவத்தினையும் இன்றியமையாததாக்கியது. இவற்றைக் கவனத்திற் கொண்டு, செயலகத் திணைக்களத்தின் ஒரு பகுதியாகத் தொழிற்பட்ட ஆளுநர் அலுவலகம் 2009 யூன் 29ஆம் நாளிலிருந்து ஆளுநர் செயலகத் திணைக்களம் என்ற பெயரில் வங்கியின் புதியதொரு திணைக்களமாக உருவாக்கப் பட்டிருக்கிறது. திணைக்களத்தின் இலக்கு யாதெனில் ஆளுநரின் தேவைக்கேற்ப விரிவான தொழிற்பாட்டு உதவிகளை வினைத்திறன் மிக்க முறையில் வழங்குவதேயாகும். இக்குறிக்கோளினை அடையும் விதத்தில் ஆளுநர் செயலகத் திணைக்களம், செயலக வேலைகள், உபசரணைப் பணிகள், ஆளுநரினால் வங்கி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகளைப் பின் தொடர்ந்து கண்காணிக்கும் நடவடிக்கைகள் ஆகிய பணிகளில் ஈடுபடுவதுடன் வங்கிக்கும் ஏனைய நிறுவனனங்களுக்கும் அதேபோன்று பொதுமக்களிடையேயும் காத்திரமான சிறந்த உறவுகளுக்கு வசதியளிப்பதுமாகும்.

ஆளுநர் செயலகத் திணைக்களத்திடம் ஆளுநரைச் சந்திப்பதற்கான முன் அனுமதிகளையும் அதனுடன் தொடர்பான கடிதத் தொடர்புகளையும் முகாமைப்படுத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இக்காலப்பகுதியில் ஆளுநர் மற்றைய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், வங்கிகளினதும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினதும் ஊடக நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், வர்த்தகத் தலைவர்கள் மற்றும் ப.நா.நிதியம், உலக வங்கி போன்ற பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான தூதுக் குழுக்கள் மற்றும் ஏனைய

வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள் என்பன உட்பட முக்கியமான விருந்தினர்களுடன் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான கூட்டங்களை நடத்தியிருக்கின்றார். இக் கூட்டங்கள் தொடர்பான அத்தகைய அனைத்து முன் அனுமதிகளும் அஞ்சல் வழித் தொடர்புகளும் சிறந்த முறையில் பின் தொடர்ந்து கவனிக்கப்பட்டதுடன் ஆளுநரின் நிகழ்ச்சி நிரல்கள் சுமுகமாக இடம்பெறுவதனை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் தொடர்பான தரப்பினருக்கு அவை அறிவிக்கப்பட்டன.

ஆளுநர் செயலகத் திணைக்களம், ஆளுநர், ஆளுநரின் மிக முக்கியமான விருந்தினர்கள் மற்றும் வங்கிக்கு அழைக்கப்பட்ட மிக முக்கிய விருந்தினர் ஆகியோருக்குப் பொருத்தமான உபசரணைப் பணிகளை வழங்கியது. ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயண ஒழுங்குகள் அனைத்தும் இக்காலப்பகுதியில் ஆளுநர் செயலகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய ஆளுநர் கொழும்புத் துறைமுகம், காலித்துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம், கெரவலப்பிட்டிய வலுச் செயற்றிட்டம் ஆகிய பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்கும் வங்கிக் கிளைகளைத் திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கும் வியாபார சமூகத்தினருடனான கூட்டங்களின் பொருட்டு பல்வேறு இடங்களுக்கும் கள விஜயங்களை மேற்கொண்டதுடன், ஆளுநரின் அத்தகைய விஜயங்களுக்குத் தேவையான பயண ஒழுங்குகளையும் உபசரணைப் பணிகளையும் ஆளுநர் செயலகத் திணைக்களம் மேற்கொண்டது. ஆளுநர் பன்னாட்டு நாணயக் கூட்டங்கள், வணிகத்துடன் தொடர்புபடாத பிரச்சார நடவடிக்கைகள், சார்க் நிதிய ஆளுநர்களின் கருத்தரங்கு மற்றும் ஏனைய பல பன்னாட்டு கருத்தரங்குகளிலும் ஒன்றில் பிரதம விருந்தினராகவோ அல்லது முதன்மை பேச்சாளராகவோ கலந்து கொண்டமை உட்பட வெளிநாடுகளில் இடம்பெற்ற பெரும் எண்ணிக்கையான அலுவல்சார் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். ஆளுநருக்கு அவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கான உபசரணைப் பணிகளை வழங்குகின்ற வேளையில் ஆளுநர் செயலகத் திணைக்களம் அவரின் விஜயங்கள் வெற்றிகரமாக அமைவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தேவையான தரவுகள், தகவல்கள் மற்றும் விரிவுரைகளுக்குத் தேவையான தரவுகளையும் வழங்குகின்றது. ஆளுநர் வெளிநாட்டில் இருக்கும் வேளைகளில் பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் அந்நேரத்தில் தேவைப்படும் முக்கியமான தகவல்கள் மீதான தரவுகளை கணனி முறையில் அதேநேரத்தில், உடனடியாக வழங்கி வருகின்றது. மேலும் ஆளுநரினதும் துணை ஆளுநர்களினதும் அனைத்து அலுவல்சார்ந்த விருந்துபசாரங்களையும் ஆளுநர் செயலகத் திணைக்களம் ஒழுங்கு செய்துவருகிறது.

கம்பனி முகாமைத்துவக் குழுக் கூட்டம், இடர் நேர்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம், உள்ளக ஒழுங்கு முறைப்படுத்துநர்கள் குழுக் கூட்டம், வங்கி முதன்மை நிறைவேற்று அலுவலர் கூட்டம் போன்ற ஆளுநரால் தலைமை தாங்கப்படும் கூட்டங்களுக்காக ஆளுநரால் கேட்டுக் கொள்ளப்பட்ட அவசியமான உள்ளீடுகளை ஆளுநரின் செயலகத் திணைக்களம் வழங்கியுள்ளது. மேலும், ஆளுநரின் செயலகத் திணைக்களம் வங்கியின் 2010 - 2014 ஆம் ஆண்டுகளுக்கான உபாயத் திட்டத்தினைத் தாயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் உதவியளித்திருக்கிறது.

ஆளுநர் கலந்து கொண்ட நிதியியல் ஆணைக்குழு, தேசிய பொருளாதார குழு என்பவற்றின் கூடட்ங்களுக்கும் உணவு பாதுகாப்புக்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு என்பன தொடர்பான அமைச்சரவைத் துணைக்குழுவின் கூட்டங்களுக்கும் தேவையான தகவல்களை ஆளுநர் செயலகத் திணைக்களம் வழங்கியுள்ளது. இதுதவிர, இவ்வாண்டுப் பகுதியில், ஆளுநர் செயலகத் திணைக்களம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் தரமிடல் முகவர்களுடன் கிரமமான செயற்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான தெளிவான பார்வையொன்றினை அவர்கள் பெற்றுக் கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் உரிய நேரத்தில் தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்கியது.

ப.நா.நிதியக் கடனினைப் பெறல் மற்றும் பன்னாட்டு முறி வழங்கல் ஆகிய செயற்பாடுகளின்போது ஆளுநர் செயலகத் திணைக்களத்தினால் தேவையான தொடர்பூட்டல்களும் அஞ்சல் தொடர்புகளும் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிட்ட இரண்டும் தொடர்பாக தொலைபேசியூடான மாநாடுகள் பலவும் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆளுநர் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கும் பெரும் எண்ணிக்கையான விளக்கவுரைகளை ஆற்றினார். இதற்குத் தேவையான உள்ளீடுகளும் செயலக ரீதியான உதவிகளும் ஆளுநர் செயலகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

ஆளுநரினால் மற்றைய திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் ஆளுநர் செயலகத் திணைக்களத்தினால் நெருக்கமாகக் கவனிக்கப்படுவதுடன் அவை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்பதனை உறுதிப்படுத்தவும் வேண்டும். அளுநர் செயலகத் திணைக்களம் குறிப்பாக ஊழியர் சேம நிதியக் கூட்டங்கள், நிதிக் கம்பனி விடயங்கள், வங்கித் தொழில் பிரச்சனைகள் மற்றும் ஏனைய பொருளாதாரப் பிரச்சனைகள் என்பன தொடர்பான பொதுமக்களின் விசாரணைகளுக்கு பதிலிறுத்துவதன் மூலம் அவர்களுக்கும் உதவுகின்றது.

## 13. மனித வளங்கள் முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, ஊழியர்களின் போட்டித் தன்மை மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள், உயர் தகைமையுள்ள அலுவலர்களின் ஆட்சேர்ப்புக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் சிறந்த தொழில் தருநர் - ஊழியர் உறவுகளைப் பேணுவதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கல் என்பனவற்றினூடாக வங்கியின் மனித மூலதனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு மனித வளங்கள் திணைக்களம் முகாமைத்துவத்திற்கு 2009இல் தொடர்ந்தும் உதவிகளை வழங்கியது. இது தொடர்பாக மனிதவளத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் வங்கியின் உபாயத் திட்டத்தில் அதனால் இனங்காணப்பட்ட மனிதவளத் தேவைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலான ஆட்சேர்ப்பு, செயலாற்ற முகாமைத்துவம், பதவி உயர்வுகள், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் மற்றும் தொழில் சுழற்சி என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 13.1 மனித வள அமைப்பு முறை

2009 இறுதியில் 530 உயர் வகுப்பு அலுவலர்கள், 599 உயர் வகுப்பல்லாத அலுவலர்கள், 125 சிற்றூழியர்கள் மற்றும் 9 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுமாக மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 1,263 ஆக விளங்கியது. வங்கி ஊழியரின் சராசரி வயது இவ்வாண்டு இறுதியில் 45 வருடங்களாகும். அட்டவனை II.8இல் காட்டப்பட்டவாறு உயர் அலுவலர் வகையிலுள்ள ஊழியர்களில் கிட்டத்தட்ட 83 சதவீதமானோர் முதல் பல்கலைக்கழகப் பட்டத்தையோ, பட்டப்பின்படிப்புப் பட்டத்தையோ அல்லது தொழில்சார் தகைமைகளையோ கொண்டுள்ளனர். 2009இல் 9 ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கையில் 41 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றனர். 2009இல் 5 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

### 13.2 ஆட்சேர்ப்பு

2008ஆம் ஆண்டினைப் போன்றே மனிதவளத் திணைக்களம் 2009இல் வங்கியில் அடையாளங் காணப்பட்ட திறமைகளுக் கிடையிலான இடைவெளிகளை நிரப்புவதற்கு புதிய ஆட்சேர்ப்பிற்கு உயர் முன்னுரிமையை அளித்தது. இவ்வாண்டில், முகாமைத்துவப் பயிலுனர் மற்றும் வங்கித் தொழில் உதவியாளர் மற்றும் சிற்றூழியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக முகாமைத்துவப் பயிலுனர் மற்றும் வங்கித் தொழில் உதவியாளர் பதவிகளுக்கு விண்ணபித்த பரீட்சார்த்திகளுக்கு போட்டிப் பரீட்சை நடத்துவதற்கு மனிதவளத் திணைக்களம் பரீட்சைத் திணைக்களத்தின் உதவியைப் பெற்றது. முகாமைத்துவப் பயிலுனர் பதவியைப் பொறுத்தமட்டில் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆரம்ப நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இவ்வாண்டில், பக்கவாட்டு ஆட்சேர்ப்பு செயல் முறைமையின் கீழ் வங்கியின் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப திறன் தேவைப்பாடுகளை, நிரப்புவதற்கு 7 சட்ட அலுவலர்கள், 1 நீதிமன்ற லிகிதர் மற்றும் 1 தொழில்நுட்ப அலுவலரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

வங்கியின் நிரந்தர தொழில்நிலைக்கு தகுதிகாண் அலுவலர்களாக 2007 மற்றும் 2008இல் 59 முகாமைத்துவப் பயிலுனர்கள், 118 வங்கித் தொழில் உதவியாளர்கள் மற்றும் 6 தகவல் தொழில் நுட்பவியலாளர்களைப் பயிலுனர்களாக உள்வாங்குவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்துடன், வங்கியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 42 பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் ஆங்கில சுருக்கொழுத்தாளர் - தட்டச்சாளர் நிரந்தர தொழில்நிலைக்குள் உள்வாங்கப்பட்டனர். மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கான மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவத் தாதி, ஊழியர் சேம நிதியம் மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கான தரவுப் பதிவுத் தொழிற்பாட்டாளர்களின் பணிகளை வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளும் எடுக்கப்பட்டன.

### 13.3 செயலாற்ற முகாமைத்துவ முறைமை

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது, தனிப்பட்ட அலுவலர்களின் செயலாற்றத்தை, வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணியை அடைவதற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பின் நியதிகளில் மதிப்பிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில், செயலாற்ற மதிப்பீட்டுச் செயல்முறை மேற்பார்வையாளரின்

**அட்டவணை II - 9**
**மனிதவள அமைப்பு - 2009.12.31இல் உள்ளவாறு**

| ஊழியர்களின் வகைகள் | ஊழியர்களின் எண்ணிக்கை | | | சராசரி வயது | கல்வி/ தொழில்சார் தகமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | | பட்டப்பின் படிப்பு/ முதற்பட்டம்/ தொழில்சார் தகமைகள் | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் | பட்டப்பின் படிப்பு, தொழில்சார் தகமைகள் | முதற்பட்டம், தொழில்சார் தகமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் தகமைகள் |
| (1) உயர் அலுவலர் வகுப்பு | | | | | | | | | | |
| (i) தரம் IV உம் அதற்கு மேலும் | 54 | 19 | 73 | 55 | 13 | 47 | 02 | 04 | 07 | 0 |
| (ii) தரம் III | 63 | 18 | 81 | 51 | 07 | 37 | 01 | 03 | 33 | 0 |
| (iii) தரம் II | 78 | 58 | 136 | 46 | 06 | 23 | 01 | 16 | 63 | 06 |
| (iv) தரம் I | 94 | 146 | 240 | 40 | 02 | 19 | 02 | 19 | 129 | 02 |
| (2) உயர் அலுவலர் அல்லாதோர் வகுப்பு | | | | | | | | | | |
| (i) தரம் V | 35 | 70 | 105 | 54 | 0 | 0 | 0 | 0 | 29 | 01 |
| (ii) தரம் IV | 77 | 52 | 129 | 49 | 0 | 0 | 0 | 0 | 11 | 01 |
| (iii) தரம் III | 78 | 18 | 96 | 48 | 0 | 0 | 0 | 0 | 01 | 03 |
| (iv) தரம் II | 100 | 84 | 184 | 31 | 0 | 0 | 0 | 0 | 01 | 01 |
| (v) தரம் I | 85 | 0 | 85 | 44 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (3) சிற்றூழியர் தரம் | | | | | | | | | | |
| (i) தரம் I, II மற்றும் III | 118 | 07 | 125 | 38 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (4) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | | | | | | | | | | |
| (i) அனைத்து வகைகளும் | 05 | 04 | 09 | 42 | 0 | 05 | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 787 | 476 | 1263 | 45 | 28 | 131 | 06 | 42 | 274 | 14 |

மூலம்: மனிதவள அபிவிருத்தி

ஆலோசனையுடன் இலக்குகளுக்கு பொருத்தமான நிறையுடன் ஊழியர்கள் தமது சொந்த இலக்குகளை நிர்ணயிப்பதுடன் ஆரம்பமாகிறது. இவ் இலக்குகளின் அடிப்படையில், ஒவ்வொரு இலக்கிற்கும் செயலாற்றத் தரமிடலை வழங்குவதன் மூலம் ஊழியர்கள் செயலாற்ற மதிப்பீட்டுப் படிவத்தின் சுய மதிப்பீட்டுப் பிரிவை பூர்த்தி செய்கிறார்கள்.

இறுதிச் செயலாற்ற மதிப்பிடலை அடையும் பொருட்டு ஊழியருக்கும் மேற்பார்வையாளருக்குமிடையே செயலாற்ற மதிப்பீடு தொடர்பாக கலந்தாலோசனை நடத்தப்படுகிறது. மேற்பார்வையாளர்களால் வழங்கப்பட்ட ஓட்டுமொத்த தரமிடல்கள் தொடர்பான திணைக்களத் தலைவர் மற்றும் முகாமைத்துவத்தால் மீளாய்வு செய்யப்படுகிறது. இத்துடன், ஊழியர், செயலாற்ற மதிப்பீட்டுப் படிவத்துடன் சேர்த்து கற்கை, பயிற்சி, மற்றும் தொழில்சார் விருத்தித் திட்டங்களை அவரது மதிப்பீட்டிற்காக மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்கிறார்.

அனைத்து ஊழியர்களுக்கான 2008ஆம் ஆண்டிற்கான செயலாற்ற மதிப்பீடு இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்யப்பட்டது. 2009ஆம் ஆண்டுக்காக ஏற்படுத்தப்பட்ட தனிநபர் மற்றும் திணைக்கள இலக்கும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட நேர இலக்குகளுடன் ஒத்த விதத்தில் மேற்கொள்ளப்பட்டது.

### 13.4 பதவியுயர்வுகள்

அனைத்து அலுவலர் உறுப்பினர்களுக்கும் உரிய நேரத்தில் கிடைக்கவேண்டிய அவர்களது பதவியுயர்வுகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு மனிதவளத் திணைக்களம் 2009இல் நடவடிக்கைகளை எடுத்தது. பதவியுயர்வுகளுக்கான மதிப்பீட்டுப் பிரமாணமாக பணியிலுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை, செயலாற்ற மதிப்பீட்டுத் தரமிடல் மற்றும் திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. 2009இல் மொத்தமாக 202 அலுவலக உறுப்பினர்களுக்கு அவர்களது தரம், வகுப்பு மற்றும் பதவி என்பவற்றில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இவற்றில், 23 திணைக்களப் பிரதித் தலைவர்கள் பதில் மேலதிகத் திணைக்களத் தலைவர்களாக உயர் பதவி தரம் iV இற்குப் பதவி உயர்த்தப்பட்டனர். இத்துடன் மனிதவளத் திணைக்களம் ஆறு திணைக்களத் தலைவர்களை உதவி ஆளுநர்களாக உயர்பதவி சிறப்புத் தரத்திற்கும், நான்கு உதவி ஆளுநர்களை துணை ஆளுநர் பதவிகளுக்கும் பதவி உயர்த்துவதற்கு வசதிப்படுத்தியது.

#### பயிற்சி

அலுவலர்களின் அடையாளங் காணப்பட்ட போட்டித் தன்மை இடைவெளிகளை நிரப்பல் மற்றும் பல்தேர்ச்சி அலுவலரை விருத்தி செய்யும் நோக்குடன் உளளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியை மனிதவளத் திணைக்களம் 2009இலும் தொடர்ந்து வழங்கியது. 2009இல் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மாநாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு குறுகிய கால நிகழ்ச்சித் திட்டங்களையும், பட்டப்பின் படிப்புக் கற்கைகளுக்கான வாய்ப்புக்களையும் உள்ளடக்குகிறது. கிட்டத்தட்ட அத்தகைய 1,174 பயிற்சி வாய்ப்புக்கள் இவ்வாண்டில் வழங்கப்பட்டன.

#### (அ) வெளிநாட்டுப் பயிற்சி

வெளிநாட்டில் பிரபல்யமான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பரந்த அளவிலான வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றுவதற்காக 2009இல் 141 அலுவலர்களுக்கு வங்கி வாய்ப்புக்களை வழங்கியது. வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களூடாக பெறப்பட்ட அறிவைப்பயன்படுத்துவதற்கு வங்கியில் வழங்கும் பணிகளின் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கோ அல்லது தற்போதைய செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கோ சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இந் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட பயிற்சித் துணைக்குழு 17 பயிற்சிக்கு முன்னரான மற்றும் பின்னரான கலந்தாலோசனைகளை 2009இல் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களுடன் நடத்தியது.

#### (ஆ) பட்டப்பின் படிப்புக் கற்கைகள்

வங்கி அதன் அலுவலர்கள் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டம் ஆகிய இரு பட்டப்பின் படிப்பு தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்து வசதிகளை வழங்கியது. இதன் புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா யப்பான் மற்றும் அவுத்திரேலியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்தான பட்டங்கள் வங்கியின் அறிவுசார்ந்த இயலளவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன்படி, 4 அலுவலர்கள் 2009இல் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தனர். இவ்வாண்டில் 2 அலுவலர்கள் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்பு கடமையைப் பொறுப்பேற்றிருக்கையில் ஒரு அலுவலர் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்தபின் கடமையைப் பொறுப்பேற்றார்.

#### (இ) உள்நாட்டுப் பயிற்சி

2009இல் வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்காக வங்கி, அலுவலர்களுக்கு 1,029 வாய்ப்புக்களை வழங்கியது. உள்நாட்டுப் பயிற்சியை வழங்குவதில், தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகள், வங்கி மேற்பார்வை, பேரண்டப் பொருளாதாரப் பகுப்பாய்வு, உள்ளகக் கணக்காய்வு, பொது முகாமைத்துவம் போன்ற துறைகளில் அறிவை அதிகரிப்பதற்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டன.

அட்டவணை II - 10

குறுகியகால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் - 2009

| துறை | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதாரம் மற்றும் கொடுப்பனவுக் கொள்கைகள் | 30 |
| நிதியியல் முறைமை மற்றும் ஒழுங்குவிதிகள் | 24 |
| இடர் முகாமைத்துவம் | 11 |
| நிதி | 9 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு முறைமை | 6 |
| அரச படுகடன் முகாமைத்துவம் | 6 |
| மத்திய வங்கித்தொழில் | 19 |
| மனிதவள முகாமைத்துவம் | 20 |
| ஏனையவை | 16 |
| **மொத்தம்** | **141** |

### 13.6 தொழில் சுழற்சி

பல தேர்ச்சிகள் கொண்ட அலுவலர்களை விருத்தி செய்தல் மற்றும் வங்கியின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றின் நோக்குடன் திணைக்களமொன்றில் ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணியாற்றிய ஊழியர்கள் ஏனைய திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டனர். அலுவலர்களின் போட்டித் தன்மை மட்டம் மற்றும் பலதரப்பட்ட திணைக்களங்களின் போட்டித் தன்மைத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு அலுவலர் சுழற்சி செய்யப்பட்டனர். இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், மொத்தமாக 32 அலுவலக உறுப்பினர்கள் 2009 தொழில் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.

### 13.7 தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டில் தொழிற் சங்கங்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையே நெருங்கிய உரையாடலினை மேற்கொள்வதற்கான வசதியை வழங்கியது. தேவையேற்படும்போது பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்கு முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்கு தொழிற் சங்கங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதன்படி, இவ்வாண்டில் 9 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இவ் உரையாடல் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், பயிற்சி நலன்புரி மற்றும் பொது நிருவாகம் தொடர்பான பல எண்ணிக்கையான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தை வசதிப்படுத்தியது. 2009இல், மனிதவளத் திணைக்களம் தொழிற் சங்கங்களுடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடத்தி 2009 - 2011 காலப்பகுதிக்கான சம்பள மீளாய்வு தொடர்பாக வங்கியின் அனைத்து தொழிற் சங்கங்களுடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு வசதிப்படுத்தியது.

### ஆளுநர் பங்கு பற்றிய கூட்டங்கள்

1. பெப்புருவரியில் 44ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாட்டிலும் ஆளுநர்கள் சபையின் 28ஆவது கூட்டத்திலும் கலந்து கொண்டார்.
2. மாச்சில் பிலிப்பைன்சில் நடைபெற்ற உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடியின் தாக்கம் தொடர்பான தெற்காசியக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
3. மாச்சில் ஐக்கிய அமெரிக்கா, டி.சி. வாஷிங்டனில் உள்ள பன்னாட்டு நாணய நிதிய தலைமை அலுவலகத்திற்கு விஜயம் செய்தார்.
4. ஏப்பிறல் மற்றும் மேயில் ஐக்கிய அமெரிக்கா, வாஷிங்டனில் பன்னாட்டு நாணய நிதியம்/ உலக வங்கியின் குளிர்காலக் கூட்டங்களில் கலந்து கொண்டதுடன் ஐக்கிய இராச்சியம், இத்தாலி மற்றும் லிபியாவிற்கு அலுவல்ரீதியாக விஜயம் மேற்கொண்டார்.
5. யூலையில் சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங்கில் நடைபெற்ற வர்த்தக மற்றும் பிரச்சாரங்களில் பங்கேற்பதற்கும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலண்டனில் நடைபெற்ற அலுவல்சார் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் சென்றார்
6. யூலை மற்றும் ஓகத்தில் இந்தியாவிலுள்ள மும்பைக்கு அலுவல்சார் விஜயங்களை மேற்கொண்டார்.
7. செத்தெம்பரில், ஐக்கிய இராச்சியத்திலுள்ள கேம்பிரிட்ஜ் ஜீசஸ் கல்லூரியில் நடைபெற்ற பொருளாதாரக் குற்றம் பற்றிய 27ஆவது சர்வதேச கூட்டத்தில் முக்கிய உரை ஆற்றினார்
8. ஒத்தோபரில் துருக்கியிலுள்ள ஸ்ரம்புல் இல் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம்/ உலக வங்கியின் வருடாந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.
9. ஒத்தோபரில் வங்காள தேசத்தில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்பு பற்றிய சார்க் பினான்ஸ் ஆளுநர் கூட்டத்திலும் தாய்லாந்திலுள்ள பாங்கொக்கில் அலுவல்சார் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.
10. ஒத்தோபர் மற்றும் நவெம்பரில் அவுத்திரேலியாவின் மெல்போனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அலுவல்சார் கூட்டங்களில் கலந்து கொள்ளச் சென்றார்.
11. நவெம்பரில் சென்னையில் நடைபெற்ற இந்தியா - ஆசியான் - வெள்ளி விழாக் கொண்டாட்டத்திலும் சென்னையிலுள்ள இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனத்திலும் கலந்து கொண்டார்.
12. நவெம்பரில் சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர் கூட்டத்தில் கலந்து கொள்வதற்குச் சென்றார்.

### பதவி உயர்வுகள்/நியமனங்கள்

1. நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் முனைவர் பி.பீ. ஜெயசுந்தர நிதி அமைச்சின் செயலாளராக பதவி வகிப்பதால் 2009 செத்தெம்பர் 28 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாணயச்சபையின் உறுப்பினராக வந்துள்ளார்.
2. பின்வரும் பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்கள் 2009 இல் மேற்கொள்ளப்பட்டன.

   I. திருமதி. எம்.ஏ.ஆர்.சி. கூரே 2009 மாச்சு 13 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   II. திரு. கே.ஜீ.டி.டி. தீரசிங்க 2009 மே 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்படார்.

   III. முனைவர். பி.டபிள்யூ.ஆர்.பி.ஏ.யு. ஹேரத் 2009 மே 27இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   IV. முனைவர் டி.எஸ். விஜேசிங்க 2009 யூலை 07 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   V. திரு. டபிள்யு.எம். கருணாரத்ன 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   VI. திருமதி பி. லியனகே 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   VII. திருமதி .ஜே.பி. மாம்பிட்டிய 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

VIII. திருமதி. சி.கே. நாணயக்கார 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

IX. திரு. பீ.டி.டபிள்யு.ஏ. சில்வா 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

X. முனைவர் பி.என். வீரசிங்க 2009 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

XI. திரு. எஸ்.எம்.ஏ. சிறிவர்த்தன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XII. செல்வி. ஏ.எஸ்.டீ. அல்விஸ் 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு புள்ளி விபரத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கபட்டார்.

XIII. திருமதி. ஆர்.பி. வீரசிங்க 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XIV. திருமதி. சி.எம்.டி.என்.கே. செனெவிரத்ன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XV. திரு. ரி.எம்.சந். முத்தாலிப் 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு ஆளுநரின் செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XVI. திரு.எச். அமரதுங்க 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XVII. திருமதி. பிறேமா விஜேயசிங்க 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார்

XVIII. திருமதி. கே. தசநாயக்க 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு ஆளுநரின் செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XIX. திரு.சி.பீ. பத்பேரிய 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XX. திரு. டி.கே. விஜேசூரிய 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு நிதியியல் உளவறிதற் பிரிவின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXI. திரு.ஏ.எம்.என். குணவர்த்தன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXII. திரு. கே.எல்.எல். பர்ணாந்து 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு பணிமனைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXIII. திரு. டபிள்யூ.ஆர்.ஏ. தர்மரத்ன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXIV. திரு. எச்.பீ.டீ. கருணாரத்ன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXV. திருமதி. என்.எச்.ஈ.ஆர். சிறிவர்த்தன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXVI. நிதி திட்டமிடல் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட திரு. எஸ்.ஆர். ஆட்டிக்கல 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு மேலதிக பதில் திணைக்களத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

XXVII. திருமதி. எச்.பி.ரி. விஜேயசூரிய 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்

XXVIII. திரு. பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXIX. திரு. கே.எம்.எம். சிறிவர்த்தன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IVஇற்குப் பதவி உயர்த்தப்பட்டு பொருளாார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXX. திரு.என்.டபிள்யூ.ஜீ.ஆர்.டி. நாணயக்கார 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXXI. திரு. ஏ.எம்.ஆர்.கே. அத்தனாயக்க 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IVஇற்குப் பதவி உயர்த்தப்பட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

XXXII. திரு. ரி.டி.எச். கருணாரத்ன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXXIII. திரு. எம்.எஸ்.கே. தர்மவர்த்தன 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர் பதவி அலுவலர் தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

3. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளர் திரு.ஈ.ஏ. எட்டியாராச்சி 2009 சனவரி 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4. நாணயத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளர் திரு. சி.பி.ஏ. கருணாதிலக 2009 மாச்சு 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எப்.சி.எஸ். மென்டிஸ் 2009 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் இதைத் தொடர்ந்து 2009 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

6. புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.எம்.ஜே.எஸ். அபேசிங்க 2009 யூன் 1இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் புள்ளி விபரத்திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் இதைத் தொடர்ந்து 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராகவும் 2009 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதே திணைக்களத்தின் கண்காணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

7. வங்கியல்லா நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. பி.எச்.ஓ. சந்திரவன்ச 2009 யூன் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கட்டுப்பாட்டாளராகவும் இதைத் தொடர்ந்து 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளராகவும் நியமிக்கப்பட்டார்.

8. பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எச்.எம். ஏகநாயக்க 2009 யூன் 09 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராகவும் இதைத் தொடர்ந்து 2009 யூலை 15இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதே திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

9. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. ரி.எம்.ஜே.வை.பி. பர்ணாந்து 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

10. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர். ஏ.ஏ. ஜயலத் 2009 ஓகத்து 11இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.கே.டீ. றணசிங்க 2009 ஓகத்து 11இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. யூ.எச்.ஈ. சில்வா 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பணிமனைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.கே.பீ. திஸ்ஸாகருண 2009 ஓகத்து 11இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஏ.ஏ.எம். தாசிம் 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் இதைத் தொடர்ந்து 2009 செத்தெம்பர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

15. நிதியியல் உளவறிதற் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் திரு.டி.எம். ரூபசிங்க 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிதியியல் உளவறிதற் பிரிவின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

16. நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திரு. எச்.ஏ. கருணாரத்ன 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படார்.

17. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. ஏ. கமலசிறி 2009 ஓகத்து 11 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் செயலகத் திணைக்களத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

18. ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திரு.டி. வசந்த 2009 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புள்ளி விபரத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### ஓய்வுபெறல்/இராஜினாமாக்கள்

1. திரு. எஸ். அபேசிங்க, அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளராகப் பதவியேற்றதையடுத்து 2009 செத்தெம்பர் 28 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நாணயச்சபையின் உறுப்பினராகத் தொழிற்படுவதிலிருந்து நிறுத்தப்பட்டார்.
2. திரு. திலக் டீ. சொய்சா நாணயச்சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவியின் பதவிக்காலம் முடிவடைந்ததால் 2009 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நாணயச்சபையின் உறுப்பினராகத் தொழிற்படுவதிலிருந்து நிறுத்தப்பட்டார்.
3. துணை ஆளுநர் திருமதி. எம்.ஏ.ஆர்.சி. கூரே 2009 மே 23 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
4. துணை ஆளுநர் முனைவர் திருமதி. ராணி ஜயமகா 2009 மே 27 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
5. துணை ஆளுநர் திரு. டபிள்யூ. ஏ. விஜேயவர்த்தன 2009 யூலை 07 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
6. உதவி ஆளுநர் திரு. எஸ்.எச்.ஏ.எம். அபேரத்ன 2009 சனவரி 15 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
7. நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கணக்காணிப்பாளர் திரு. ஜீ.டீ. குணரத்ன 2009 ஓகத்து 01 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
8. பணிமனைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர்.ஜே. பெரேரா 2009 ஓகத்து 11 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
9. புள்ளி விபரத் திணைக்களப் பணிப்பாளர் திரு. எஸ். சோமபால 2009 செத்தெம்பர் 01 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
10. உதவி ஆளுநர் முனைவர் எச்.என். தேனுவர 2009 ஒத்தோபர் 21 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.
11. துணை ஆளுநர் முனைவர் பி.டபிள்யூ. ஆர்.பீ.ஏ.யு. ஹேரத் 2009 ஒத்தோபர் 23ஆம் திகதி காலமானார்.

### விடுவிப்பில்/ விடுப்பிலுள்ள அலுவலர்கள்

1. உதவி ஆளுநர் திரு.கே.ஜி.டி. தீரசிங்க பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக
2. திரு. எஸ்.ஆர். ஆட்டிக்கல உயர் அலுவலர் தரம் IV. நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
3. திரு. பி. லொக்குறணமுக உயர் அலுவலர் தரம் III. நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
4. திரு.எச்.பி.எம். வசந்த குமார, உயர் அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
5. திரு.எம். மகிந்தசாலிய உயர் அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
6. திரு. கே. முனசிங்க, உயர் அலுவலர் தரம் I, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
7. திருமதி. எச்.பி.ஏ. பிரியசாந்தி, உயர் அலுவலர் தரம் I, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
8. திரு.ஜே.ஏ.ஏ. பிரியாந்த, உயர் அலுவலர் தரம் I, (தகுதிகாண் நிலை) சனாதிபதிச் செயலகத்திற்கு
9. திருமதி. டி.கே. உயன்கொடகே உயர் அலுவலர் தரம் I, பன்னாட்டு நாணய நிதியத்திற்கு
10. திருமதி. எச்.எம்.என்.எஸ். குணவர்த்தன, சட்ட அலுவலர் (ஒப்பந்தம்) நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
11. திரு.எஸ்.என்.டபிள்யூ. கருணாதாச, ஓட்டுநர்(சிற்றூழியர் தரம் III), நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
12. திருமதி. ஆர். தீரசிங்க, உயர் அலுவலர் தரம் IV அலுவலர் சம்பளமற்ற விடுப்பில்.

## 14. தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பொருத்தமான தொழில்நுட்பத் தீர்வுகளின் நடைமுறைப்படுத்தலூடாக பணியை வழங்குவதில் கூடிய வினைத்திறனை ஊக்குவிப்பதனூடாக உபாயம் மிக்க வியாபாரத்தைக் கொண்டு நடத்தக்கூடியவாறான அதன் பங்கைத் தொடர்ந்து வகித்தது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தால் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகளை மூன்று பாரிய துறைகளினுள் வகைப்படுத்தலாம். அவையாவன: (அ) பாதுகாப்பான வியாபாரப் பிரயோகங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல் (ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் (இ) இலங்கை மத்திய வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயத்துடன் தகவல் தொழில்நுட்ப உபாயம் இணைந்தும் செல்லும் விதத்தில் பெறுமதி கூட்டப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்கல்.

### 14.1. பாதுகாப்பான வியாபாரப் பிரயோகங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் நடைமுறையிலிருக்கும் பிரயோகங்களின் பேணலுக்கான உதவியைத் தொடர்ந்து வழங்கும் அதேவேளை, இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அவசர மற்றும் திட்டமிட்ட மென்பொருள் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தது. இலங்கை மத்திய வங்கியின் அனைத்துக் கொத்தணிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பின்வரும் பிரதான பிரயோகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- நாணயக் கொள்கையை நிறைவேற்றும் கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பொறிமுறையூடாக

தவணை மீள் கொள்வனவு மற்றும் டொலர் - பரிமாற்றல் ஏலங்களை வசதிப்படுத்தியது.

- பாதுகாப்பான வெப் பிரயோகங்களாக திரவத் தன்மை கண்காணிப்பு முறைமை மற்றும் ஐ.அ.டொலர் - இலங்கை ரூபா கொடுக்கல் வாங்கல்களை மீள வடிவமைத்தது.
- தேசிய கொடுப்பனவு சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வெளிச் செல்லும் தேறிய காசோலைகளை இறுவட்டு வடிவில் சமர்ப்பிப்பதற்கு உதவியது.
- லங்கா செற்றில்/ லங்கா செகுயர் கொடுக்கல் வாங்கல்களின் நேரடியான செயல் முறையை இயலச் செய்வதற்கு சுவிப்ற் செய்திகள் உருவாக்கச் செயல்முறை மற்றும் சுவிப்ற் கொடுப்பனவு நுழைவாயில் தொடர்பான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தன்னியக்கமாக்கல்.
- சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளால் அறிவிக்கப்பட்ட கிரமமான தகவலைச் சேகரிப்பதற்கு மத்திய தரவுத்தளப் பிரயோகத்தை விரிவுபடுத்தல்
- பல்வகை நாணயக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவும் விதத்தில் ஆசியத் தீர்ப்பனவு முறைமையைத் திருத்தி அமைத்தல்.
- அதிகரித்த வியாபாரத் தொழிற்படும் தன்மையை உள்வாங்குவதற்கு தரமுயர்த்தப்பட்ட லங்கா செற்றில்/ லங்கா செகுயர் பிரயோக மென்பொருள் மற்றும் அதனுடன் தொடர்பான கிடை முகங்களை (cas/css 3.5) நிறுவுதல்.
- பிரச்சனைக்குரிய நிதியியல் நிறுவனங்களின் புலன் விசாரணைகளுக்கு வசதிப்படுத்துவதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்கல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய புலன் விசாரணைகளைக் கையாள்வதற்கு தகவலைத் திரட்டும் மென்பொருளை அபிவிருத்தி செய்தல்.
- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களால் இலங்கை மத்திய வங்கிக்கு வெப்தள அடிப்படையில் நியதி அறிக்கைளைச் சமர்ப்பிதற்கான முறைத்தொகுதி உள்ளடங்கலான அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் புலனாய்வு மென்பொருள் தீர்வை நடைமுறைப்படுத்தல்.
- உள்ளகத் தொழிற்பாடுகள் மற்றும் கணக்கீட்டு முறைமையை இலகுபடுத்துவதன் மூலம் ஊழியர் சேம நிதியத்தின் உள்ளகத் தொழிற்பாடுகளுக்காக மீள இயக்குவதற்கான செயற்றிட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- பணிகளை நோக்காகக் கொண்ட கட்டமைப்பைப் பயன்படுத்தி ஊழியர் சேம நிதிய ஆர்வலர்களுக்கு விரிவு படுத்தப்பட்ட தகவல் பணிகள் வழங்கப்பட்டன.
- இலங்கை மத்திய வங்கியின் உள்ளகத் தொழிற்பாடுகளை தன்னியக்கப்படுத்துவதற்கான ஏனைய பல மென்பொருள் பிரயோகங்கள்.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைமையின் சராசரி தொழிற்பாட்டுக் கிடைப்பனவை எதிர்பார்க்கப்பட்ட நியமத்திற்கும் மேலாக 99.9 சதவீதத்தில் பேணக் கூடியதாக இருந்தது. ஊழியர் சேம நிதியம் முறைமை உள்ளிட்ட அனைத்து ஏனைய முறைமைகளின் கிடைப்பனவு இவ்வாண்டில் அநேகமாக 100 சதவீதத்தில் பேணப்பட்டது.

### 14.2 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவையான பணிகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் பரந்த செயற்பரப்பு வலையமைப்பை தொடர்ந்து நிருவகித்தது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைக்காக கணனியில் தேடுகைக்கு உதவுவதற்கும் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெப் அடிப்படையிலான பிரயோகங்களின் செயலாற்றத்தை அதிகரிப்பதற்கும் குத்தகைக்குப் பெறப்பட்ட இணைய இணைப்பின் இயலளவு 6 எம்பீபிஎஸ் இற்கு விரிவுபடுத்தப்பட்டமை பணிகள் மற்றும் பதிலிறுக்கும் நேரத்தை மேம்படுத்தச் செய்தது. வெளிக் குழுக்களால் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு சிதைவை ஏற்படுத்தும் முயற்சிகளைக் கண்டுபிடிப்பதையும் தவிர்ப்பதையும் மேலும் பலப்படுத்துவதற்கு வலையமைப்பு நுழைவாயிலில் நிறுவப்பட்ட தலையீட்டு தடுப்பு முறைமை இவ்வாண்டில் பல தடவைகள் புதுப்பிக்கப்பட்டன.

செயலக மின் - அஞ்சல் முறைமையை தொலைவிலிருந்து பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் மூத்த அலுவலர்கள், மாகாண அலுவலகங்களின் அலுவலர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வசதியளிப்பதற்கு மின் - அஞ்சல்தொடர்பூட்டல் முறைமை மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

### 14.3 பெறுமதி கூட்டப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிகள்

வெளியிலுள்ள தொடர்பான நிறுவனங்களுக்கு அதிகரித்த பெறுமதி கூட்டப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் தொலை நோக்கான “நாடு சுபீட்சத்தை அடைதல்” இனை நிறைவேற்றும் பொருட்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பணிபுரிந்தது. இதன்படி, உள்நாட்டு “சுவிப்ற்” இனைப் பயன்படுத்தும் குழுவினர், தேசிய நலத்துடனான செயற்றிட்டமான பொதுவான கொடுப்பனவு ஆளி செயற்றிட்டம், வங்கித் தொழில் மற்றும் நிதியியற் துறைக்கான உறுதிப்படுத்தும் அதிகார சபையை நிறுவுதல், நிதியியல் துறைக்கான பணம் தூ யதாக்கலுக்கெதிரான பொதுவான மென் பெருளைக் கொள்வனவு செய்தல் என்பவற்றிற்கு மதியுரைப் பணிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் வழங்கப்பட்டன. லங்கா செற்றில் பங்கேற்பாளர்கள், வெளிநாட்டு இணைத் தரப்பினர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய உள்ளகத் திணைக்களங்களின் பங்கேற்புடன் தொலைவில் அமைந்துள்ள அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து இரு தடங்கலற்ற வியாபாரத் திட்ட ஒத்திகைகள் நடத்தப்பட்டன.

தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப திறனை அதிகரிக்கும் நோக்குடன் அலுவலர்களின் நிபுணத்துவம் மற்றும்

தேர்ச்சிகளை ஏனைய நிதியியற்துறை அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அதன் அலுவலர்களை வள ஆளணியினர்களுக்கான வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிறுவனத்திற்கு விடுவிக்கும் நடைமுறையைத் தொடர்ந்து மேற்கொண்டது. மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் திணைக்கள இணைப்பு அலுவலர்களுக்கான உள்ளகப் பயிற்சி/விழிப்புணர்வு தொடர்களை நடாத்துவதில் ஈடுபட்டது.

அலுவலர்களுக்கு தடங்கலற்ற தகவல் தொழில்நுட்ப உதவிப் பணிகளை வழங்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்ப உதவிப்பீட வசதிகள் அனைத்து அலுவலக நாட்களிலும் 0700 மணியிலிருந்து 1830 மணிவரை வழங்கப்பட்டன. அதிகரித்த பாதுகாப்பினூடாக இலங்கை மத்திய வங்கியில் தகவல் தொழில்நுட்ப உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு பாதுகாப்பு நூல் ஒன்றும் தடங்கலற்ற வியாபாரத் துண்டுப்பிரசுரம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு உரிய அலுவலர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. தகவல் பாதுகாப்பு மீறப்படுவதை குறைப்பதற்கு ஒவ்வொரு திணைக்களத்திலும் தகவல் பாதுகாப்பு விழிப்பூட்டல் தொடர்கள் நடத்தப்பட்டன.

அலுவலர்களின் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் தேர்ச்சிகளை தரமுயர்த்துவதற்கு அலுவலர்களின் அனைத்து மட்டத்தையும் ஊக்குவிக்கும் வகையில் நவீன கணனிகள், மென்பொருள் பிரயோகங்கள்/பொதிகளின் ஆகப்பிந்திய வாசகங்கள் மற்றும் இணைய வசதிகளுக்கான நுழைவு என்பவற்றுடன் "பரிகனணக பியஸ" என அழைக்கப்படும் பொதுவான சுய நுழைவு/கற்கைப் பகுதி ஒன்று நிறுவப்பட்டது.

## 15. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

இலங்கை ரூபாவின் வெளிநாட்டு உறுதித் தன்மையினைப் பேணுவதற்கும், நாட்டின் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு சாத்தியமானளவிற்கு கூடியளவு வசதியை உறுதிப்படுத்துவதற்கும் நாணயச் சட்ட விதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் பேணப்படுவதை முகாமை செய்யும் பொறுப்பு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் நாணயச்சபையினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்படி திணைக்களம் உள்நாட்டில் வெளிநாட்டுச் சந்தையில் பங்கேற்றதுடன் உள்நாட்டுச் செலாவணி வீதத்திலான அளவுக்கதிகமான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் விதத்திலும் சந்தையைக் கண்காணிக்கிறது.

### 15.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

2009ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி அதன் பன்னாட்டு ஒதுக்கை முன்மதியுடன் கையாளக்கூடியதாக இருந்த அதேவேளையில், உள்நாட்டுச் செலாவணி வீதத்திலான அளவுக்கதிகமான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டதுடன் பன்னாட்டு ஒதுக்கின் முதலீட்டிலிருந்து சார்புரீதியில் உயர்வீதம் கொண்ட இலாபத்தை அடைந்தது. நாட்டில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நிலவிய குழப்பநிலை படிப்படியாக தணிந்து வருகின்றமை உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமைகள் படிப்படியாகக் குறைவடைந்தமை என்பன உள்நாட்டு அரச பிணையங்கள் சந்தைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீள வந்ததன் மூலம் வெளிநாட்டு நாணயத்தின் உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தன. பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் வசதி மற்றும் பன்னாட்டு முறிகளின் வழங்கலும் 2009 இறுதியில் இலங்கை வரலாற்றில் ஐ.அ.டொலர் 5 பில்லியன் கொண்ட அதன் உயர் மட்டத்திற்கு அதிகரித்த ஒதுக்கை மேம்படுத்துவதற்கு உதவிசெய்தது. உலகளாவிய நிதியியல் குழப்பநிலை 2009ஆம் ஆண்டிற்கும் கசிந்தமையாலும் உலகளாவிய பொருளாதாரங்களின் மீட்சிகள் எதிர்பார்த்ததைவிட மெதுவாகக் காணப்பட்டதாலும் இவ்வாண்டு ஒதுக்கு முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு இது இன்னுமொரு சவால்மிக்க ஆண்டாக விளங்கியது. இச் சூழ்நிலைகளில், பாரிய இறக்குமதிச் செலவுகள் மற்றும் பங்குச் சந்தையிலும் அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலும் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மீளப் பெறுகையால் ஏற்படும் கணிசமான வெளிப்பாய்ச்சல் காரணமாக பன்னாட்டு ஒதுக்கு தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியுற்ற இடர்ப்பாடான காலப்பகுதியாக இது விளங்குவதால் குறிப்பாக 2009ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பன்னாட்டு ஒதுக்கை முகாமை செய்வதில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் கடினமான பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மீளாய்விற்குரிய ஆண்டில், பன்னாட்டு ஒதுக்கின் முதலீடுகள் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களின்படி மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலர்கள்,யூரோ, இசுஸ்ரேலிங் பவுண், அவுத்திரேலிய டொலர்கள் போன்ற நாணயங்களையும் தங்கத்தையும் உள்ளடக்கிய வெளிநாட்டுச்செலாவணி ஒதுக்குகள் நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மற்றும் பணச் சந்தைக் கருவிகள் ஆகிய இரு சொத்து வகையில் முதலீடு செய்யப்பட்டன. வங்கியின் நிலையான வருமானப் பிணையங்களின் சொத்துப்பட்டியல் உயர்ந்தளவில் தரமிடப்பட்ட நாட்டிற்கான அரச பிணையங்கள், அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் அரச முகவர்களினதும் நாடுகளினதும் அதிகாரங்களுக்கப்பாற்பட்ட நிறுவனங்களினதும் பிணையங்கள் என்பவற்றினை உள்ளடக்கியிருந்தன. நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மற்றும் பணச்சந்தை இரண்டிலுமான முதலீடுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய சொத்துக்கள் தொடர்பான பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் என்பவற்றுக்கு உரிய கவனம் செலுத்தி, முகாமைத்துவத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகள் அமைப்பினுள் உயர்ந்த தரமிடப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட இணைக்கிணைத் தரப்பினூடாக மட்டும் மேற்கொள்ளப்பட்டன. வங்கிகளின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், படுகடன் பணி மீள் கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவத்தின் வரையறுக்கப்பட்ட பண்புகள், வருமானத்தை உருவாக்கும் ஆற்றல்கள் மற்றும் நாணயச்சபையின் விசேட பணிப்புரைகள் என்பன ஒதுக்குகள் சொத்துப் பட்டியலின் சொத்து மற்றும் நாணயத்தின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய விடயங்களாகக் கருதப்படுகின்றன.

வங்கியின் ஒட்டுமொத்த ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் 2009ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 100.9 மில்லியன் (ரூ.11,523 மில்லியன்) கொண்ட தேறிய வெளிநாட்டு வருமானத்தை உருவாக்கி மதிப்பிடப்பட்ட வருமானமான ஐ.அ.டொலர் 42.3 மில்லியனை விஞ்சிக் காணப்பட்டது. பாரிய பொருளாதாரங்களில் நிலவிய ஒப்பீட்டளவில் குறைவான வட்டி வீதங்களின் மத்தியிலும் நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மீதான மூலதன இலாபங்கள் வருமானத்தில் ஏற்பட்ட இவ் அதிகரிப்புக்கு கூடியளவில் பங்களிப்புச் செய்தன.

### 15.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் அவற்றின் முதலீடுகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடு அலுவலகத்தால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன. பன்னாட்டு ஒதுக்கு மற்றும் அவற்றின் முதலீடுகள் பல வகையான இடர்நேர்வுகளுக்கு உள்ளாகியுள்ளன. இவ் இடர்நேர்வு வகைகளினுள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பிரதான கூறுகளாகக் கருதப்படுகின்றன. செலாவணி வீதங்களிலான தளம்பல்கள் காரணமாக எழும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு அல்லது மூலதன இழப்பின் இடர்நேர்வு முக்கியமாக முதலீட்டு நாணயங்களை பன்முகப்படுத்து வதனூடாக கடடுப்படுத்தப்படுகிறது. வட்டி வீதங்களில் ஏற்படும் அசைவுகளால் ஏற்படும் வட்டிவீத இடர்நேர்வு, அல்லது வங்கியின் ஒதுக்குகள் சொத்துப் பட்டியலின் ஆபத்துக்குள்ளாகும் தன்மை சொத்துப்பட்டியல் நீடித்திருக்கும் காலத்தின் பொருத்தமான சீராக்கத்தினூடாக முகாமை செய்யப்படுகிறது. நிதியியற் குறிகாட்டிகள், தரமிடல்கள், மற்றும் சாதனங்களின் அடிப்படையில் இணைத் தரப்பினரின் ஒருங்கிணைந்த மதிப்பீட்டை வசதிப்படுத்தும் முறைமையான இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை கொடுகடன் இடர்நேர்வை முகாமை செய்வதற்கு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகிறது. நிர்ப்பந்தம் காரணமாக ஒடுக்குதல் ஏற்படுமிடத்து உள்ளாகும் மூலதன இழப்புக்களின் இடர்நேர்வான திரவத்தன்மை, இடர்நேர்வுத் திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலமும் உயர் திரவத்தன்மை வடிவில் சொத்துக்களின் போதியளவு விகிதாசாரத்தை பேணுவதன் மூலமும் முகாமைப்படுத்தப்பட்டது. மனிதத்தவறுகள், பழுதடைந்த முறைமைகள் மற்றும் பற்றாக்குறையான நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளால் தோன்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு சரிபார்க்கும் செயல்முறையைப் பயன்படுத்தல், வர்த்தகம் செய்யும் முறைமைக்கு மேம்பாடுகளை ஏற்படுத்தல் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களைப் புதுப்பித்தல் போன்ற வழிமுறைகளூடாக முகாமை செய்யப்பட்டன.

உலகளாவிய நிதியியல் நெருக்கடியூடாக விளைவிக்கப்பட்ட பாதகமான தாக்கத்தைத் தணிப்பதற்கு, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் பின்பற்றப்பட்ட பணச்சந்தை முதலீடுகளை மத்திய வங்கிகளுக்கு திசைதிருப்பல் மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் இடர்நேர்வுக்குள்ளாவதை சரியான நேரத்தில் இல்லாமற் செய்தல், கூடிய தளம்பலுள்ள சந்தை நிலைமைகளில் வர்த்தகம் செய்யும் செயற்பாடுகளை மட்டுப்படுத்தல், கொடுகடனையும் திரவத்தன்மை இடர்நேர்வையும் மதிப்பிடுதல் போன்ற பொருத்தமான முன்னெச்சரிக்கை வழிமுறைகள் 2009ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

நிதியியற் துறையின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அநேகமான பிரதான மத்திய வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுக்கு முன்னொருபோதும் இல்லாத உதவியை வழங்கியதால் 2008இல் நிலவிய உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக பாதிப்புக்குள்ளாகும் தன்மை 2009ஆம் ஆண்டில் பிற்பகுதியில் குறைவடைந்தது. இது இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளில் பணச்சந்தை முதலீடுகளை முதலீடு செய்வதை மீள ஆரம்பிப்பதற்கு மத்திய வங்கிக்கு வழியமைத்தது. இதன்படி, பணச்சந்தை முதலீடுகள் நாணயச் சபையின் ஒப்புதலுடன் 2009 ஒத்தோபரில் உயர்ந்தளவில் தரமிடப்பட்ட வர்த்தக வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டன.

யப்பான் யென் முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி பாங்க் ஒவ் யப்பானில் நொஸ்றோ கணக்கையும் பிணையங்கள் கட்டுக்காப்பு / தீர்ப்பனவுக் கணக்கையும் ஏற்படுத்தியது. இது எதிர்காலத்தில் யப்பானிய யென் முதலீடுகள் தொடர்பான கொடுகடன் இடர்நேர்வு பாதிப்புக்குள்ளாவதை குறிப்பிடத்தக்களவிற்கு குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியை இயலச் செய்யும்.

### 15.3 உள்நாட்டில் வெளிநாட்டுச் செலவணிச் சந்தை விருத்திகள்

உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டும் நாட்டின் செலாவணி வீதத்தின் ஒழுங்கு முறையான சீராக்கத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் செயற்பாடுகளில் தொடர்ந்து பங்குபற்றியதுடன் 2009இல் முக்கியமாக வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள் உள்ளிட்ட சந்தையின் நெருக்கமான கண்காணிப்பையும் தொடர்ந்து நடத்தியது.

**அட்டவணை - II.11**

**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு - 2009**

(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 263.50 | 186.30 | 111.85 | 313.16 | 874.81 |
| பெப்புருவரி | 260.00 | 191.96 | 121.25 | 324.46 | 897.67 |
| மாச்சு | 276.51 | 210.58 | 190.55 | 495.59 | 1173.23 |
| ஏப்பிறல் | 234.45 | 148.00 | 98.16 | 341.33 | 821.94 |
| மே | 424.42 | 67.32 | 69.85 | 355.15 | 916.74 |
| யூன் | 300.60 | 59.05 | 70.62 | 387.62 | 817.89 |
| யூலை | 266.05 | 126.45 | 99.25 | 451.90 | 943.65 |
| ஓகத்து | 316.35 | 94.50 | 100.52 | 413.76 | 925.13 |
| செத்தெம்பர் | 222.75 | 128.35 | 82.90 | 283.05 | 717.05 |
| ஒத்தோபர் | 247.25 | 132.40 | 61.15 | 451.03 | 891.83 |
| நவெம்பர் | 375.20 | 145.45 | 68.61 | 516.84 | 1106.10 |
| திசெம்பர் | 349.07 | 114.30 | 119.60 | 289.83 | 872.80 |
| **மொத்தம்** | **3,536.15** | **1,604.66** | **1,194.31** | **4,623.72** | **10,958.84** |

மூலம்: பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

முக்கியமாக இலங்கை ரூபாவின் பெறுமானத் தேய்வால் ஏற்பட்ட பாரிய இறக்குமதிச் செலவு காரணமாக 2009ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் செலாவணி வீதம் மீதான அழுத்தம் அதிகரித்தது. 2009இன் முதல் மூன்று மாதங்களில் செலாவணி வீதத்தின் தளம்பலைத் தணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தீவிர பங்கை ஆற்றியது. எனினும், குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல் காரணமாக 2009 ஏப்பிறல் மற்றும் மே முற்பகுதியில் ரூபா பிரதான நாணயங்களுக்கெதிராக தொடர்ந்து பெறுமதியில் தேய்வடைந்தது. மே மாத நடுப்பகுதியில் போர் முடிவுற்றமை, சென்மதி நிலுவை நிலைமை மேம்படுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் வசதிக்கான ஒழுங்குமுறைகள், அரச பிணையங்களில் அதிகரித்த வெளிநாட்டு முதலீடுகள், மற்றும் பன்னாட்டு முறி வழங்கலின் பெறுகைகள் என்பன இலங்கை ரூபா 2009இன் இரண்டாம் காலாண்டின் பிற்பகுதியிலிருந்து பெறுமதியில் உயர்வடைவதற்கு பங்களிப்புச் செய்தன. உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியினால் உட்செலுத்தப்பட்ட டொலர்களின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 830 மில்லியனாகவும் ஈர்க்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 3,122 மில்லியனாகவும் விளங்கி

**அட்டவணை - II .12**

**மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2009**

(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய |
|---|---|---|---|
| சனவரி | 20.50 | 272.20 | (251.70) |
| பெப்புருவரி | 10.50 | 250.48 | (239.98) |
| மாச்சு | 73.50 | 127.5 | (54.00) |
| ஏப்பிறல் | 37.25 | - | 37.25 |
| மே | 123.00 | - | 123.00 |
| யூன் | 290.00 | - | 290.00 |
| யூலை | 289.10 | - | 289.00 |
| ஓகத்து | 1,130.75 | - | 1,130.75 |
| செத்தெம்பர் | 437.15 | - | 437.15 |
| ஒத்தோபர் | 363.95 | 118.45 | 245.50 |
| நவெம்பர் | 286.90 | 28.10 | 258.80 |
| திசெம்பர் | 59.40 | 33.35 | 26.05 |
| **மொத்தம்** | **3,122.00** | **830.08** | **2,291.92** |

மூலம்: பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2009ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2,291 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவை விளைவித்தது.

இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் 2009இல் ஐ.அ.டொலருக்கெதிராக 1.07 சதவீதத்தால் பெறுமதியில் தேய்வடைந்தது. இது 2008இறுதியின் ஐ.அ.டொலர் ஒன்றுக்கான ரூ.113.1398 இலிருந்து 2009 இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கான ரூ.114.3844இற்கு நகர்ந்தது. 2008இல் ஐ.அ.டொலர் 14,131.77 மில்லியனாக விளங்கிய வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2009இல் ஐ.அ.டொலர் 10,958.84 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து முக்கியமாக பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான கொடுப்பனவுகள் 22.45 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினைப் பிரதிபலித்தது. சந்தைச் செயற்பாடுகளை அதிகரிக்கும் பொருட்டும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாடுகளை வசதிப்படுத்தும் பொருட்டும் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகை நிலைகள் அதிகரிக்கப்பட்டன. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்க்கு ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பற்றிய தகவலை வழங்கும் செயல்முறை முன்னைய ஆண்டுகளைப் போலவே 2009இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

## 16. முகாமைத்துவக் கணக்காய்வு

இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் ஆளுகை செய்முறையை மதிப்பீடு செய்வதற்கும் பயனுறுதியை மேம்படுத்துவதற்கும் முறைமையானதும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டதுமான அணுகுமுறையைக் ஏற்படுத்துவதன் மூலம் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் இலங்கை மத்திய வங்கிக்கு உதவுவதற்காக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் செயற்படுகிறது. மேற்கூறப்பட்டவற்றுடன் இணைந்து செல்லும் விதத்தில் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்கு பெறுமதியைக் கூட்டும் நோக்குடன் 2009இல் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதில் முகாமைத்துவத்திற்கு சுதந்திரமான குறிக்கோள் உறுதிகளையும் உசாத்துணைப் பணிகளையும் தொடர்ந்து வழங்கியது. இதன்படி, திணைக்களம் தற்போதைய முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் மதிப்பீடு செய்து கணனி முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் மேம்பாடுகளுக்காக ஆலோசனைகளையும் விதந்துரைப்புகளையும் வழங்கியது.

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் 2009இல் அதன் செயற்பாடுகளின் தரத்தையும் பயனுறுதியையும் அதிகரிப்பதற்கு பல நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியது. அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தில் ஒன்றாக பன்னாட்டு உள்ளக் கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கொலம்பஸ் அட்வைசரி வசதி மலேசியாவின் ஒத்துழைப்புடன் பன்னாட்டு உள்ளகக் கணக்காய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு மதிப்பீட்டு மீளாய்வு விளங்குகிறது. அத்துடன் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்காக இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு முறைமையியலை நோக்கி நகர்வதற்கு பல நடவடிக்கைகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் ஆரம்பித்தது. மேலும், வருடாந்த கணக்காய்வுத் திட்டம் 2010இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு முறைமையியலின் பகுதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

மேலே விபரிக்கப்பட்டவாறு கணக்காய்வுத் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட மேம்பாடுகள் பற்றி கவனம் செலுத்தும் அதே வேளையில் திணைக்களம் ஏனைய திணைக்களத் தொழிற்பாடுகளுக்கு பெறுமதி கூட்டப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் உசாத்துணைப் பணிகளை வழங்குவதன் மூலமும் ஒப்புதலளிக்கப்பட்ட வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தில்

கூறப்பட்ட கணக்காய்வு ஒப்படைகளை நடத்துவதனூடாக செயல்முறை மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளை வழங்குவதன் மூலமும் வங்கியின் உபாயத்திட்டம் 2009இல் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு வங்கியை வசதிப்படுத்துவதற்கு அதன் உள்நாட்டுக் கணக்காய்வுத் தொழிற்பாட்டை நிறைவேற்றியது. வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் 2009இல் எடுத்துக் கூறப்பட்ட கணக்காய்வு ஒப்படைகளுக்கு மேலதிகமாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் பணத்தரவுகளை அறிவிக்கும் முறைமையியலின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த செயல்முறை ஆய்வை திணைக்களம் செயற்படுத்தியது. அத்தகைய ஒப்படை தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் செல்லுபடியாகும் தன்மையை அதிகரித்ததுடன் ஒதுக்குப் பணத்தரவுகள் காலத்திற்குக் காலம் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டது. மேலும், 2009 யூன், யூலை மற்றும் செத்தெம்பரில் மூன்று பரீட்சயத் திகதிகளில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு அறிவிக்கப்பட்ட தரவை சரி பார்ப்பதில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் ஈடுபட்டது.

தகவல் முறைமைகள் கணக்காய்வுச் செயற்பாடுகளில் அதன் இயலளவுகளையும் போட்டித் தன்மையையும் அபிவிருத்தி செய்வதற்கு 2009ஆம் ஆண்டில் பல வழிமுறைகளை திணைக்களம் ஆரம்பித்தது. கணக்காய்வுக் கட்டளை மொழி மென் பொருளின் கொள்வனவு, கணக்காய்வு கட்டளை மொழியினூடாக கணனி மயப்படுத்தப்பட்ட முறைமைகளில் பாரிய தகவல் தரவுத் தளங்களை அடையும் வசதியைப் பெறல் மற்றும் தரவுகளைப் பெறுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் கணக்காய்வு கட்டுப்பாட்டு மொழி மென் பொருளை தொழிற்படுத்துவதில் தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்களைப் பயிற்றுவித்தல் என்பன முக்கிய முன்னெடுப்புக்களில் சிலவாகும். மேலும், நலன்புரிக் கடன் வழங்கும் முறைமையின் கணக்காய்வு, தகவல் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை மீளாய்வு செய்தல், தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் பயனுறுதியை மீளாய்வு செய்தல் மற்றும் பிரதேச அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கணக்காய்வு ஒப்படைகளை திணைக்களம் 2009இல் நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது. திணைக்களம் குறிப்பாக முறைமைப் பாதுகாப்பு மற்றும் இடர்நேர்வைத் தணித்தல் தொடர்பான மேம்பாடுகளுக்கு விதந்துரைப்புக்களை மேற்கொள்ளுவதன் மூலம் மேற்கூறிய முறைமைகள்/செய்முறைகளுக்கு பெறுமதியைச் சேர்க்கக் கூடியதாக இருந்தது.

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் ஒப்புதலளிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டம் 2009இல் எடுத்துரைக்கப்பட்ட அநேகமாக அனைத்து கணக்காய்வு ஒப்படைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்ததுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கான ஊழியர் சேம நிதிய மீளளிப்புக்கள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் வீடமைப்புக் கடன்களை வழங்கல் தொடர்பாக செயலகத் திணைக்களத்தினதும், நலன்புரித் திணைக்களத்தினதும் அனைத்து முன்கூட்டிய கணக்காய்வுத் தேவைகளையும் கவனித்தது. 2009இல் நடத்தப்பட்ட பாரிய கணக்காய்வு ஒப்படைகள் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தில் இலங்கை மத்திய வங்கியின் காசோலை தீர்ப்பனவு செயல்முறையின் மீளாய்வு, ஒதுக்குப் பண இலக்குகளை அடைவதற்கு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீளாய்வு, நிதியியற் கூற்றை முடித்து வைக்கும் செயல்முறை பற்றிய மீளாய்வு, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முதலீட்டுச் செயல்முறையின் மீளாய்வு, மாத்தறையில் உள்ள பிரதேச அலுவலகத்தின் நிர்மாணச் செயற்றிட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் கொள்வனவு வழிகாட்டல்களின் பயனுறுதி மற்றும் இணங்கிச் செல்லும் தன்மையின் மீளாய்வு, வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவின் செயல்முறையின் மீளாய்வு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் முன்னரங்க அலுவலகம் மற்றும் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவின் செயற்பாடுகள் பற்றிய செயல்முறை மீளாய்வு, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத்தில் எல்லைப் பயன்பாட்டின் மீளாய்வு, தங்க முதலீடு மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளின் பரீட்சிப்பு, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளின் மீளாய்வு, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியத்தின் கணக்காய்வு என்பவற்றை உள்ளடக்குகின்றன. கணக்காய்வுகளின் அவதானிப்புக்களும் விதந்துரைப்புக்களும் தொடர்பான திணைக்களங்களுக்கும் ஆளுநர், கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச்சபைக்கும் கிரமமாக அறிவிக்கப்பட்டது. தொடர்பான திணைக்களங்களால் கணக்காய்வு விதந்துரைப்புக்கள் பயனுறுதியுடன் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு தனியான கணக்காய்வு ஒப்படை தொடர்பான பின்தொடரும் கணக்காய்வும் நடத்தப்பட்டது.

திணைக்களம் 2009 யூன் வரை வங்கி முழுவதற்குமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையை தொடர்ந்து தரமுயர்த்தியதுடன் இதன்பின்பு இலங்கை மத்திய வங்கி இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு திணைக்களத்திற்கும் அதிகாரமளிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், நாணயத் திணைக்களம், நிதி மற்றும் நலன்புரித் திணைக்களம் ஆகிய நான்கு திணைக்களங்களைத் தெரிவு செய்வதன் மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்ட இடர்நேர்வைத் தாங்கக் கூடிய மட்டங்களினுள் பல முக்கிய வியாபார செயல்முறைகளின் குறிக்கோள்களை அடைவதற்கு முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் நடைமுறையிலுள்ள முறைமைகளை மீளாய்வு செய்ததன் மூலம் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டுக்கும் பங்களிப்புச் செய்தது.

தற்போதைய கணக்காய்வு நடைமுறைகள் இணங்கி ஒழுகுதலிலிருந்து இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகளுக்கு படிப்படியாக மாறிச் செல்வதற்கு 2009இல் நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. இம் மாறிச் செல்லும் முறைமையான இடர்நேர்வு தரமிடல் அணுகு முறையின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் கூடியளவு பாதிப்புள்ளாகக்கூடிய தொழிற்பாடுகளின் கணக்காய்வில் அதன் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் பெறுமதியை

அதிகரிக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தை வசதிப்படுத்தும். தேவையான நடவடிக்கைகள் 2010ஆண்டின் முற்பகுதியிலிருந்து எடுக்கப்படவுள்ளதுடன் இவை 2014வரை தொடரும். திணைக்களம் 2009இல் அலுவலரின் தேர்ச்சி/இயலளவு மட்டத்தைத் தொடர்ந்து தரமுயர்த்தியது. இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு, உள்ளக கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஏனைய கணக்காய்வுக் கருவிகளும் தொழில் நுட்பங்கள் தொடர்பாக அலுவலரின் அறிவைமேம்படுத்துவதற்கு உள்ளக செயலமர்வுகள் மற்றும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. வெளியிலிருந்து வந்த தகைமையும் அனுபவமும் கொண்ட உள்ளகக் கணக்காய்வாளரால் உள்ளகக் கணக்காய்வின் புதிய கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் பற்றி வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் பங்குபற்றியிருக்கையில் சில அலுவலர்கள் தகவல் முறைமைக் கணக்காய்வு உள்ளிட்ட உள்ளகக் கணக்காய்வு பற்றி வெளிநாடுகளில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 17. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் நியதிகளில், நிதியியல் முறைமையின் பாதுகாப்பு, வினைத்திறன், போட்டித் தன்மை மற்றும் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் தேசிய கொடுப்பனவு முறைமைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் நாட்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியிடம் சட்டரீதியான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாட்டாளராக, ஒழுங்குமுறைப்படுத்துனராக, மேற்பார்வையாளராக, வசதிப்படுத்துனராக மற்றும் பயன்பாட்டாளராக இலங்கை மத்திய வங்கி இருப்பதால் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக பாதுகாப்பான, ஆற்றல்மிக்க மற்றும் வினைத்திறன் மிக்க கொடுப்பனவு முறைமைகளை வழங்கும் பணியை இது மேற்கொள்கிறது. இக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் இத் திணைக்களம் நாட்டில் உயர் பெறுமதியுடைய வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளுக்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையையும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் திறந்த சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளையும் தொழிற்படுத்துகிறது. இத்துடன், உள்ளக மற்றும் வெளிநாட்டு நிதியங்கள் மற்றும் பிணையங்கள் சுவிப் கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தினூடாக வசதிப்படுத்தப்படுகிறது. அதேவேளையில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டும் முறைகள் மீதான நியாயமாகத் தோன்றும் இடர்நேர்வைத் தணிப்பதற்கும் இத்திணைக்களம் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் மேற்பார்வைச் செயற்பாடுகளை நிறைவேற்றியது. கடந்த காலத்தைப் போலவே, பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் ஒத்துழைப்பைப் பலப்படுத்தும் பொருட்டு திணைக்களம் இவ்வாண்டில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கொடுக்கல் வாங்கல்களின் உரிய நேரத்திலான தீர்ப்பனவை வசதிப்படுத்தியது. 2009 யூனில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் கூட்டத்தை நடத்தியது: சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பின் செயலகமாகவும் தொழிற்பட்டது.

### 17.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையைத் தொழிற்படுத்தல்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் நிதியியல் முறைமையின் மிக முக்கியமான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு நேரத்தையும், அதே நேர மொத்த அடிப்படையில் பங்கேற்பவர்களின் மூன்றாந்தரப்பு கொடுப்பனவையும், 2009ஆம் ஆண்டில் முறைமை தொழிற்படும் நேரங்கள் முழுவதும் பங்கேற்பவர்களுக்கு உதவிப்பீடப் பணிகள் உள்ளிட்ட இணைப்புப் பணிகளையும் நிறைவேற்றியது. இவ்வாண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு 232,567 ஆகவும், மொத்தப் பெறுமதி ரூ.33,155 பில்லியனாகவும் விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுமதி நியதிகளில் 32 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை 2009ஆம் ஆண்டில் அதன் ஆகக் கூடிய அளவான ரூ.295 பில்லியன் பெறுமதியான 1,465 கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தது. நாளொன்றுக்கு முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சராசரி அளவும், பெறுமதியும் முறையே 965ஆகவும் ரூ.138 பில்லியனாகவும் விளங்கின. கொடுப்பனவு முறைமையின் வசதிப்படுத்துனராக, இலங்கை மத்திய வங்கி அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு பங்கேற்பாளருக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியினூடாக கிட்டத்தட்ட ரூ.11.3 பில்லியன் கொண்ட தற்காலிக திரவத் தன்மையை வழங்கியது.

2009 இறுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கி, 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 7 வங்கியல்லா முதன்மை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் புதிய வைப்பக முறைமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. முதன்மை வணிகரான சம்பத் சுரக்கும் லிமிடெட் சம்பத் பாங்க் லிமிட்டெட்டுடன் இணைக்கப்பட்டமையால் லங்கா செற்றிளின் பங்கேற்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 2009 இறுதியில் 32ஆக விளங்கியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் முறைமைக் கிடைப்பனவு 2009ஆம் ஆண்டில் 99.9% ஆக விளங்கியது. எதிர்பாரா நிகழ்வுகளின் ஆயத்தத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ்வாண்டில் இரண்டாவது தலத்தில் இரு நேரடித் தொழிற்பாட்டுப் பிரிவுகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு பங்கேற்பு நிறுவனமும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அவற்றின் தொடர்பான நிறுவனங்களில் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலைத் தரமுயர்த்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்டன. வெவ்வேறு மட்டங்களில் மனிதத் தலையீட்டைக் குறைப்பதற்கும், அதேநேர மொத்த தீர்ப்பனவு போன்ற முறைமை ரீதியிலான முக்கிய கொடுப்பனவு முறைமைக்காக பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கியால் முன் வைக்கப்பட்ட 10 பிரதான தத்துவங்களுடன் முழுமையாக இணங்கியிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் முறைமையைத் தரமுயர்த்தும் செயற்பாடுகளுமே தொடர்ந்து இடம்பெற்றன.

இம்மேம்பாடுகள் செலவின் சமமான பங்கைத் தாங்கிக் கொள்வதற்கு இணங்கும் அனைத்துப் பங்கேற்பாளர்களினதும் செலவைப் பங்கிடும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. முறைமையூடாக லங்கா செற்றிளில் பங்கேற்பாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அதிகரித்த வசதிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவை மீளப்பெறும் பொறிமுறையைக் கவனத்திற் கொண்டு பங்கேற்பாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட கட்டணம் 2003இல் லங்கா செற்றிலின் முறைமை ஆரம்பமானபோது விதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கான ரூ.240 இலிருந்து 2009 பெப்புருவரி 1இல் நடைமுறைக்கு வரும் வகையில் கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கு ரூ.400 இற்கு அதிகரிக்கப்பட்டது.

### 17.2 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழான வணிகங்களின் தீர்ப்பனவுகள்

திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையினூடாக சுமூகமானதும், நம்பத்தகுந்ததுமான தீர்ப்பனவு செயல்முறையை வழங்குவதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் தொழிற்பாடுகளை இவ்வாண்டும் தொடர்ந்து மேற்கொண்டது. கடந்த காலத்தைப் போன்றே, திணைக்களம் அனைத்து பின்தள அலுவலகக் கொடுக்கல் வாங்கல்களை எந்தவொரு செலுத்தத் தவறிய அல்லது தண்டக் கட்டணமின்றி 100 சதவீத துல்லியத்துடன் தொடர்ந்து கையாண்டது. திணைக்களம் இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 50.87 பில்லியன் பெறுமதியான 7,185 தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை நிறைவேற்றியது.

வெளிநாட்டு ஒதுக்குகளின் முன்னெப்பொழுதும் இல்லாத வளர்ச்சியுடன், பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் 2009இன் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இவ் அதிகரிப்புடன் இணைந்து செல்லும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதன் மனிதவள மற்றும் தொழிற்பாட்டு இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், யூரோகிளியர் முறைமை மேம்பாடுகள் மற்றும் பன்னாட்டுத் திணைக்களத்தின் நவீனமயப்படுத்தும் ஒழுங்கு முறைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் நவீன செயல்முறையை எய்துவதற்கு தற்போதைய திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையைத் தரம் உயர்த்துவதில் இத் திணைக்களம் ஈடுபட்டது.

### 17.3 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பின்தள அலுவலகத் தொழிற்பாடுகளுக்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் பொறுப்பாகவிருக்கிறது. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் இவ்வாண்டில் ரூ.1,788 பில்லியன் பெறுமதியான ரூ. 2,931 மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.1,021.8 பில்லியன் பெறுமதியான 2,793 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.69.6 பில்லியன் பெறுமதியான 169 உடன் விற்பனைக் கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.1,779.5 பில்லியன் பெறுமதியான 1,601 இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களையும் நிறைவேற்றியது. இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியால் பிணையங்களின் எந்தவித நேரடிக் கொள்வனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் பங்கேற்பாளர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவத் தன்மை வசதியை லங்காசெற்றிள் முறைமையூடாக வழங்கி இதன் தீர்ப்பனவைக் கண்காணித்தது. இவ்வாண்டில் ரூ.2,732.8 பில்லியன் கொண்ட 8,207 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிக் கொடுக்கல் வாங்கல்கள் வழங்கப்பட்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

### 17.4 சுவிப்ற் தொடர்பூட்டல்கள்

2009இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மத்திய வங்கியின் சுவிப்ற் தொடர்பான முழுச்செயற்பாடுகளையும் கையாண்டது. திணைக்களம் சுவிப்ற் உட்கட்டமைப்பைத் தரமுயர்த்துவதில் ஈடுபட்டதன் மூலம் சுவிப்ற் இணையத்தள இணைப்பு மற்றும் இணைந்த அணுகுதல் வாசகம் அதிகரிக்கப்பட்டது.

2009இல் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட சுவிப்ற் செய்திகளின் மொத்த எண்ணிக்கை முறையே 1,217,136 ஆகவும்,716,021 ஆகவும் விளங்கின. 2009இல் பெறப்பட்ட மொத்தச் செய்திகளில் 167,059 இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கானதாகவும் எஞ்சியவை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களுக்கானதாகவும் காணப்பட்டன.

### 17.5 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கையால் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2008இன் ரூ.363 பில்லியனிலிருந்து 2009இல் ரூ.191 பில்லியனுக்கு 47.5 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் யாதெனில் இவ்வாண்டில் ஈரான் கொடுகடன் வசதி கிடைத்தமையால் ஆசியத் தீர்ப்பனவு பொறிமுறையூடாக பெற்றோலிய இறக்குமதிச் செலவுகள் கோரப்படவில்லை என்பதாகும். 2009இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாய் பெறுமதியும் 2008 உடன்

**அட்டவணை II.13**

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையினுடைய வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ கொடுக்கல் வாங்கல்கள்**

ரூ.பில்லியன்

| | 2008 | 2009 |
|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 363.3 | 190.7 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 72.3 | 63.2 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 525.8 | 337.5 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 598.1 | 400.7 |
| தேறிய ஆ.தீ.ஒன்றியத் தீர்ப்பனவுகள் | 315.2 | 158.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒப்பிடுகையில் ரூ.159 பில்லியனுக்கு 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 38ஆவது கூட்டம் கொழும்பில் 2009 யூன் 16ஆம் திகதி நடைபெற்றது. இக்கூட்டம் ஆசியத் தீர்ப்பனவு நடைமுறை விதிகளின்படி சுழற்சி முறையில் 2009/2010ஆம் ஆண்டுக்கான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணப்பாளர் சபையின் தலைவராக இருந்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பணிப்பாளர் சபை பின்வரும் விதந்துரைப்புக்களுக்கு ஏகமனதாக ஒப்புதலளித்தது.

1. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்புரிமையை விரிவாக்குவதற்கு: இது தொடர்பாக உள்ளார்ந்த வளமுள்ள உறுப்பினர்களை மதிப்பிடுவதற்கு தொழில்நுட்பக் குழுவை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்தியன் ரிசேர்வ் வங்கி குழுவைக் கூட்டுவதற்கு தானாகவே முன்வந்ததுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தை விரிவுபடுத்தும் வகையில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்தை இயலச் செய்யும் விதத்தில் மதிப்பீட்டு நடைமுறைகளை விருத்தி செய்யுமாறு உறுப்பினர் நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

2. ஆசியத் தீர்ப்பனவு பொறிமுறையை மேம்படுத்துவதற்கு இந்தியன் ரிசேர்வ் வங்கியால் கூட்டப்பட்ட தொழில்நுட்பக் குழு ஏனைய விடயங்களுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் எதிர்காலத் தொழிற்பாடு, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமையில் தற்போதைய செயற்பரப்புக்கு அப்பால் செயற்பரப்பை விரிவாக்குவதற்கான தேவை, பொருளாதாரத் தேவைகளிடையே நிதியியல் மற்றும் நாணய ஒத்துழைப்பை அதிகரித்தல், ஆசிய ரிசேர்வ் வங்கியை நிறுவுவதற்கான ஆலோசனை மற்றும் சாத்தியம் பற்றி ஆராய்தல் மற்றும் உறுப்பினர்களிடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்தல் என்பன பற்றியும் ஆய்வுசெய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. தபால் மூலம் வவுச்சர்கள் மற்றும் கூற்றுக்களை அனுப்புவதை குறைக்கும் பொருட்டு இலத்திரனியலால் ஒப்பமிட்ட மின் - வவுச்சர்கள் மற்றும் கூற்றுக்களை அறிமுகப்படுத்தல்.

4. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய மற்றும் நடைமுறை விதிகளை ஏற்படுத்தும் உடன்படிக்கையில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஆறு மாதங்கள் கொண்ட காலப்பகுதியை உள்ளடக்குவதல்.

5. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு மாலைதீவு நாணய அதிகாரசபையை அனுமதிப்பதற்கும் 01.01.2010இலிருந்து மாலைதீவுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத் தொழிற்பாட்டை ஆரம்பிப்பதற்கும்.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் சபையின் 39ஆவது கூட்டம் 2010இல் பூட்டானில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சுழற்சித் தத்துவங்களைப் பின்பற்றி 2010இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தலைமைப் பதவி பூட்டான் றோயல் நாணய அதிகாரசபையிடமும் துணைத் தலைமைப் பதவி இந்தியன் ரிசேர்வ் வங்கியிடமும் இருக்கும்.

**17.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை**

ஆண்டு முழுவதும் நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பொதுவான குறிக்கோளை அடைவதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. நாட்டில் கொடுப்பனவு அட்டைகள் கைத்தொழிலை தரப்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் மற்றும் தர நியமங்களுடன் இணைந்து செல்லும் வகையில் திணைக்களமானது சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞருடன் ஆலோசனையின்படி 2009 யூலை 31இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோர் ஒழுங்கு விதிகளிற்கு, அதி தேமதகு சனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ் ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பணி வழங்குவோரை ஒழுங்கு முறைப்படுத்தி நெறிப்படுத்துவதற்கும், இலங்கையில் தொழிற்படும் கொடுப்பனவு அட்டைகளை வழங்கும் ஒவ்வொரு பணி வழங்குனரும் அவர்களின் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து உரிமத்தைப் பெறுவதனை தேவைப்படுத்துவதுடன் கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்துனராக இலங்கை மத்திய வங்கிக்கும் அதிகாரமளிக்கிறது. ஒழுங்கு விதிகளில் தரப்பட்ட கொடுப்பனவு அட்டை என்பது காலத்திற்குக் காலம் பணத்தைப் பெறுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய கணக்கு, உள்ளடக்கப்பெறுமதி, அல்லது கூற்றொன்றை அணுகுவதற்கான குறியீடு ஒன்று அல்லது வேறு ஏதேனும் வழிவகைகள் உள்பட ஏதேனும் அட்டை, தகடு, கூப்பன், அல்லது வேறு உபாயம் என்ற பொருளாகும் என்பதுடன் பற்று, விதிப்பனவு, கடன் , மற்றும் உள்ளடக்கப் பெறுமதி அட்டையையும் உள்ளடக்கும் என வரைவிலக்கணம் செய்கிறது. இவ் ஒழுங்கு விதிகள், தேவையேற்படுமிடத்து கொடுப்பனவு அட்டை பண வழங்குவோர்க்கு பணிப்புரைகள், கட்டளைகள், வழிகாட்டல்கள், நிபந்தனைகள், சுற்றுநிருபங்கள். விதிகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான பணிவழங்குவோரின் மேற்பார்வை அதிகார சபையாக இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளித்துள்ளன.

ஒழுங்கு விதிகளின்படி, இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் அதிகாரத்தினைக் கொண்டிராத எந்தவொரு நபரும் கொடுப்பனவு அட்டடைகளின் பணி வழங்குனராக ஈடுபடவோ அல்லது தொழிற்படவோ அல்லது வேறொரு ஆளை ஈடுபடுத்தவோ தற்போதைய தகுதிவாய்ந்த நபர்கள் கொடுப்பனவு அட்டைகளின் பணிவழங்குனராகத் தொழிற்படுவதற்குத் தேவையான உரிமங்களைப் பெறுவதற்குரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குவிதிகள், இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வந்த காலப் பகுதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டன.

ஒழுங்கு விதிகளின்படி 2010இன் முதலாம் காலாண்டில், கொடுப்பனவு அட்டைகளின் வெற்றிகரமான பணி வழங்குவோருக்கு உரிமங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வாடிக்கையாளர்களைப்

பாதுகாக்கும் வழிமுறையாக, இத் தொழிலுள்ள அனைத்துப் பணி வழங்குவோருக்கும் ஒரேவிதமான சமவாய்ப்புக்களையும், பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் மட்டங்களை அதிகரிக்கும் பொருட்டு கொடுப்பனவு அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பணி வழங்குவோருக்கு வழிகாட்டலொன்றினை வழங்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் எதிர்பார்க்கிறது. கடன் அட்டை வியாபாரத்தின் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு இலங்கை கொடுப்பனவு அட்டைகள் கைத்தொழில் அமைப்பின் ஆலோசனையுடன் கடன் அட்டை வழங்குவோருக்கான தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது. நாட்டில் கடன் அட்டை வியாபாரத்தின் பாதுகாப்பான, பத்திரமான மற்றும் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை அடையும் குறிக்கோளுடன் 2010இன் முதலாம் காலாண்டில் கடன் அட்டை வழங்குனர்களுக்கு கடன்அட்டை தொழிற்பாட்டு வழிகாட்டல்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது போலவே, நடமாடும் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக கொடுப்பனவு அட்டைகளின் ஏனைய வகைகளுக்கான வழிகாட்டல்களும் தேவையைப் பொறுத்து வழங்கப்படும்.

லங்கா செற்றில் முறைமையின் தொழிற்பாட்டாளராக நாணயச்சட்ட விதியின் ஏற்பாடுகளின்கீழ் முறைக்கான முறைமை விதிகளை வடிவமைப்பதற்கும் புதுப்பிப்பதற்குமான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஆரம்பமான 2003 ஓகத்தில் முதல் முறை வழங்கப்பட்ட லங்கா செற்றில் முறைமை விதிகளை 2009இல் புதுப்பித்தது. இம் மீளாய்வு முதல் வெளியீட்டுக்குப் பின்பு முறைமை விதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்கள் மற்றும் இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முறைமை அதிகரிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. இலகுவில் அடைவதற்கும், முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவுகள் முறைமையின் தொழிற்பாடுகளுக்கான பிரதான கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகவும் முறைமை விதிகள் ஆவணம் இலங்கை மத்திய வங்கியின் வெப் தளத்தில் வெளியிடப்பட்டது. முன்னைய காலத்தைப் போன்றே, முறைமை விதிகளை பங்கேற்பாளர்கள் கடைப்பிடிப்பதை திணைக்களம் நெருக்கமாகக் கண்காணித்தது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு, அனைத்துப் பங்கேற்பாளர்களினதும் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் மற்றும் அனர்த்த மீட்புத் தலங்களை மேம்படுத்துவதற்கு மேற்பார்வை செய்வதன் மூலமும் விதந்துரைப்புக்களை மேற்கொள்வதன் மூலமும் இத் திணைக்களம் 2009இல் அதன் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள், 3 முதனிலை வணிகர்கள் மற்றும் இலங்கை நிதியியல் பணிகள் பணியகம் என்பனவற்றின் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மற்றும் அனர்த்த மீட்புத் தலங்களின் மதிப்பீடுகளின் முதலாம் கட்டம் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டது.

காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை பற்றி 2006இல் வழங்கப்பட்ட பொதுவான பணிப்புரைக்கு உரிமம் பெற்ற வங்கிகள் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீது பல வழிமுறைகளை விதித்ததுடன் காசோலைத் தேறல்தொடர்பாக ரி+1 விதிக்கு இணங்கியொழுகுவது தொடர்பான முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு அவற்றிற்கு அறிவுறுத்தப்பட்டது. வாடிக்கையாளர்கள் ரி+1 விதியின் நன்மைகளைப் பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரத் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் காசோலை தேறல் பற்றிய வாடிக்கையாளர் அளவீட்டை நாடு பூராவும் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர) 2009இல் நடத்தியது. 2010 சனவரி இறுதியில் இறுதிப்படுத்தத் திட்டமிட்டுள்ள அளவீட்டின் பெறுமதிகளின் அடிப்படையில் ரி+1 விதியுடன் அனைத்து வங்கிகளும் முழுமையாக இயங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு மேலதிக திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைக்கு கூடிய பெறுமதியை வழங்கும் வகையில் ஒப்பமிடல், புகுபதிகை இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்காக பயன்படுத்தக் கூடிய இலத்திரனியல் சான்றிதழ்களை வழங்குவதற்கு "லங்காசயின்"என்ற வர்த்தக குறியீட்டின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன், லங்கா கிளியர் பிறைவேற் லிமிட்டெட்டால் 2009 மேயில் இலங்கையின் முதலாவது சான்றிதழ்படுத்தல் அதிகாரசபை நிறுவப்பட்டமை நிதியியல் கைத்தொழிலில் இன்னுமொரு மைற்கல்லாகும். கொடுப்பனவுக் கருவிகளாக இலத்திரனியல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலத்திரனியல் கடத்தலின் ஒவ்வொரு கட்டத்திலும் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பைப் பேணுமாறு வேண்டப்பட்டது. இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களின் இலத்திரனியல் கடத்தலின் போது கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உறுதிப்படுத்தலின் இரகசியத்தை பேணுவதன் முக்கியத்துவத்தை கவனத்திற் கொண்டு சட்டப் பாதுகாப்பை வழங்கும் பொருட்டு மின் வர்த்தகப் பிரயோகங்கள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளில் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களை அங்கீகாரமளிப்பதற்கு "சான்றிதழ் அதிகாரசபை" அல்லது "சான்றிதழ்படுத்தும் அதிகார சபை" என்ற எண்ணக்கரு நிறுவப்பட்டது. இது நிதியியல் நிறுவனங்களின் மீதான பொதுமக்கள் நம்பகத்தன்மை, தரவுச் செய்திகளின் நேர்மை மற்றும் நம்பகத் தன்மை, இலத்திரனியல் ஆவணங்கள் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களில் இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது ஏனைய தொடர்பூட்டல்கள் / மற்றும் நிதியியல் நிறுவனங்களிடையேயான இலத்திரனியல் கொடுக்கல் வழிமுறைகள் மற்றும் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் தரவு மாற்றங்களின் மாற்றமுடியாத தன்மையினையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் தொழில்சார் தோற்றப்பாட்டை

வழங்குவதற்கு 2009இல் காலாண்டுக் கொடுப்பனவு செய்தித் திரட்டை மீள வடிவமைத்ததன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் தகவல் பரப்பலைத் தொடர்ந்து மேற்கொண்டது. இலங்கையில் கொடுப்பனவு முறைமைகள் பற்றி மாணவர்கள் மற்றும் வங்கியின் அலுவலர் உள்ளடங்கலாக பொது மக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை இவ்வாண்டிலும் தொடர்ந்து மேற்கொண்டது.

### 17.7 சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்பு

2009இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் உறுப்பினர் நாடுகள் சார்பில் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்புச் செயலகத்தை தொடர்ந்து தொழிற்படுத்தியது. சார்க் கொடுப்பனவுகள் சபை மற்றும் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பின் செயலாற்றம் பற்றி விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு சார்க் கொடுப்பனவுகள் செய்தித் திரட்டின் இரண்டு தொகுதிகள் பிரசுரிக்கப்பட்டதுடன் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பின் இணையத்தளம் பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இவ்வாண்டில் நேபாளத்திலுள்ள காத்மண்டுவிலும் பூட்டானிலுள்ள திம்புவிலும் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் கூட்டங்களை நடத்தும் நாடுகளின் சார்பில் அனைத்துச் செயலகப் பணி மற்றும் கூட்ட ஒழுங்கு முறைமைகளைத் திணைக்களம் தொடர்ந்து கவனித்தது. கொடுப்பனவு முன்னெடுப்பின் ஒரு பகுதியாக வங்காளதேச வங்கி மற்றும் பூட்டான் றோயல் நாணய அதிகாரசபை என்பவற்றிலிருந்தான அலுவலர்களுக்காக கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## 18. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் பின்வருவனவற்றை மேற்கொள்கிறது. (அ) உபாய திட்டமிடல் செய்முறையை ஒருங்கிணைத்தல் மற்றும் அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான வங்கியின் வருடாந்த உபாயத்திட்டத்தைப் புதுப்பித்தல், (ஆ) உபாயத் திட்டங்கள் தொடர்பான திணைக்களங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், (இ) புதிய கொள்கைகளைத் தேவைப்படுத்தும் தற்போதைய பிரச்சனைகள் தொடர்பாக சமகால கொள்கை மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(அ) உபாய ரீதியான திட்டமிடல் செயல்முறையை ஒருங்கிணைத்தல்:

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் 2010 - 2014 காலப்பகுதிக்கான உபாயத்திட்டத்தை வடிவமைப்பதற்கும் புதுப்பிப்பதற்குமாக, திணைக்களங்களின் சகல தலைவர்கள், அவர்களது பிரதிநிதிகள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பங்கேற்புடன் இரு நாள் உபாயத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தை 2009 செத்தெம்பர் 18 - 20 காலப்பகுதியில் தாஜ் எக்சோரிக்க ஒட்டல், பெந்தோட்டையில் ஏற்பாடு செய்தது. "விரைந்த வேகத்தில் சுபீட்சம்" என்ற தொனிப் பொருளின் கீழான புதிய உபாயத்திட்டம் 2007இல் ஆரம்பமான உபாயத் திட்டங்களின் தொடரில் நான்காவதாகும். 2009 - 2013 இற்கான இறுதி உபாயத் திட்டங்களின் கீழ் இலங்கை மத்திய வங்கி 91 சதவீதங் கொண்ட சராசரி வெற்றி விகிதத்தைப் பதிவு செய்தது. 2010 - 2014 இற்கான புதிய உபாயத் திட்டத்தில் இலக்குகளை விவேகமுள்ளதாக மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அதாவது பிரத்தியேகப் பண்புள்ள, அளவிடக் கூடிய, நடவடிக்கைகள் சார்ந்த, நடைமுறைச் சாத்தியமான மற்றும் காலம் மற்றும் மூலவளக் கட்டுப்பாடு ஆகிய இலக்குகளை அடைய முயற்சிக்கப்பட்டது. ஏழு கொத்தணிகளின் கீழ் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளுடன் சேர்ந்து இலக்குகளை அடைவதற்கான உபாயக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் பொறிமுறையை உபாயத்திட்டம் இனங்கண்டுள்ளது. அவையாவன: பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு. நாணய வெளியீடுகள் மற்றும் முகாமைத்துவ முகவர் பணிகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பணிகள், செயலகப் பணிகள், மற்றும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு என்பனவாம்.

### (ஆ) உபாயத் திட்டத்தின் கீழ் திணைக்களங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல்:

நடைமுறைப்படுத்தலுக்கு முன்பான காலம் மற்றும் திணைக்களச் செயலாற்றத்தினை காலாண்டு ரீதியில் கண்காணிப்புச் செய்தல் என்பன கண்காணிப்புச் செயற்பாட்டின் இரு முக்கிய அம்சங்களாகும். திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் முழு அலுவலர்களையும் ஈடுபடுத்தும் பொருட்டு உபாயத் திட்டம் தொடர்பாக கொத்தணி ரீதியிலான விழிப்புணர்வு கூட்டத்தொடர் ஆண்டின் ஆரம்பத்தில் நடத்தப்பட்டது. இது இத்திட்டத்தினுள் அலுவலர் தமது பதவிகளை மதிப்பிடுவதற்கும் சிறந்த பங்களிப்பை மேற்கொள்வதற்கும் இயலச் செய்தது.

உபாயத் திட்டங்களின் வெற்றிக்கான முக்கிய காரணிகளுள் ஒன்றாக நெருங்கிய கண்காணிப்பு விளங்கியது. காலாண்டு ரீதியிலான கண்காணிப்பின் கீழ், பொருத்தமான நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுபேறு தொடர்பாக ஒவ்வொரு திணைக்களத்தின் முன்னேற்றமும் மதிப்பிடப்பட்டு வங்கியின் நிருவாக முகாமைத்துவத்தை உள்ளடக்கிய உபாயத் திட்ட மீளாய்வுக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது. இது முன்னேற்றம் பற்றிய மீளாய்வை மேற்கொள்வதற்கும் திட்டத்தை நேரம் பிந்தாது பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கும் முகாமைத்துவத்தை இயலச் செய்தது.

### (இ) கொள்கை மீளாய்வு மற்றும் ஆய்வுகள்

இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள், பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கொள்கை மீளாய்வுத் துறைகள் முகாமைத்துவத்துடன் இணைந்து பூர்த்தி செய்யப்பட்டன. இத்துடன், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் வங்கியிலுள்ள திணைக்களக் கொள்கைகளின் பூரணமான பட்டியலைத் தயாரிக்கத் தொடங்கியது.

**சிறப்புக் குறிப்பு II.I** **இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டம்: 2010 - 2014**

உபாயத்திட்டமிடல் என்பது நிறுவனமொன்று அதன் இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் தொலைநோக்கை அடைவதற்கு அதை இயலச் செய்யும் உபாயங்களை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செயல்முறையாகும். சுருக்கமாகக் கூறுவதாயின், உபாயத்திட்டமிடல் நிறுவனம் ஒன்று நடுத்தர மற்றும் நீண்ட தவணையில் எங்கு முன்னேறிச் செல்கிறதென்பதையும், அங்கு செல்வதற்கும் பயன்படுத்தப்படும் பொறிமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதுடன் நிறுவனம் அப்போக்கை நோக்கி நகர்ந்துள்ளதா என்பதையும் மதிப்பிடுகிறது. ஜோயல் றோஸ் மற்றும் மைக்கல் கமி ஆகிய நன்கு பிரபல்யமான இரு உபாயத் திட்டமிடல் நிபுணர்களால் குறிப்பிட்டவாறு "உபாயம் இல்லாமல் நிறுவனம் ஒன்று சுக்கான் இல்லாத கப்பலைப் போல் வட்டப்பாதையில் சுற்றிச் சுற்றிச் செல்லும். இது நாடோடி போன்றது் இது போவதற்கு எந்த இடமும் கிடையாது."

உபாயத் திட்டமிடலின் நன்மைகள் அளவற்றவையாகும். உபாயத் திட்டமிடல் நிறுவனமொன்று கூடியளவு பொறுப்பு வாய்ந்ததாகவும் ஆற்றல்மிக்கதாகவும், அதன் சொந்தப் பாதையை ஆரம்பிக்கத்தக்கதாகவும் இருப்பதையும் மக்களுக்கு அதிகாரமளிப்பதையும் அனுமதிக்கிறது. இதேவேளை, உபாயத் திட்டமிடல் நிறுவனம் ஒன்று கூடியளவிற்கு பொறுப்புக் கூறுவதை அனுமதிப்பதுடன் அதன் செயற்பாடுகளில் சிறந்த கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது. உபாயத் திட்டமிடல் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வதன் மூலமாக முகாமையாளர்களும் ஊழியர்களும் நிறுவனத்திற்கு ஆதரவளிக்கின்ற கடப்பாடுமிக்கவர்களாக மாறுகின்றனர். இது அலுவலுர்களிடையே குழு மனப்பான்மையைக் கட்டியெழுப்பும் அதேவேளை நிறுவனத்தின் தெளிவான கவனத்தை வழங்கி கூடியளவு வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் உருவாக்குகிறது. இம் முக்கியமான நன்மைகளை அடையாளம் கண்ட பின் இலங்கை மத்திய வங்கி அதன் உபாயத் திட்டத்தை வடிவமைத்து ஆவணப்படுத்தத் தொடங்கியதன் மூலம் 2006இல் உபாயத் திட்டத்தை வடிவமைப்பதற்கான முக்கிய நடவடிக்கையை எடுத்தது.

வங்கி 2007-2011இன் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான அதன் முதலாவது உபாயத் திட்டத்தை வடிவமைத்தது. இதன் மூலம் வரலாற்றில் முதல் தடவையாக வங்கிக்கான தொலைநோக்கு மற்றும் பணியை இலங்கை மத்திய வங்கி அபிவிருத்தி செய்து சாதனைகளின் அளவை மதிப்பிடுவதற்கு அதன் தொலைநோக்கையும் பணியையும் அடையாளம் காணப்பட்ட முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை அடைவதற்கான உபாயங்களையும் செயற்பாடுகளையும் உருவாக்கியது. இதற்குப் பின்பு, வங்கி 90 சதவீதத்திற்கும் கூடுதலான ஒட்டுமொத்த வெற்றி விகிதத்துடன் உபாயத் திட்டங்களின் மூன்று சுழற்சிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது. 2010-2014 காலப்பகுதிக்கான தற்போதைய உபாயத் திட்டத் தொடரின் நான்காவதாகும்.

நடைமுறையில், உபாயத் திட்டமிடல் செயல்முறை மூன்று கட்டங்களைக் கொண்டுள்ளது உபாயத்தை உருவாக்கல், உபாயத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் உபாயத்தை மதிப்பிடல் என்பவையே அவை. உபாயத்தை உருவாக்கல், தொலைநோக்கு மற்றும் பணியை அபிவிருத்தி செய்தல், நிறுவனமொன்றின் வெளியக வாய்ப்புக்கள் மற்றும் இடர்நேர்வுகளை அடையாளம் காணல், உள்ளக பலம் மற்றும் பொறிமுறைகளைத் தீர்மானித்தல், நீண்ட தவணை இலக்குகளை ஏற்படுத்துதல், மேற்கூறப்பட்ட பணியைப் பின்தொடர்வதற்கான உபாயங்களை உருவாக்கல் என்பவற்றை உள்ளடக்குகிறது. உபாயத்தை நடைமுறைப்படுத்தல் வருடாந்தக் குறிக்கோள்களை நிறுவுதல், கொள்கைகளைத் திட்டமிடல், ஊழியர்களை தூண்டுதல் மற்றும் உருவாக்கப்பட்ட உபாயங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பவற்றைத் தேவைப்படுத்துகிறது. உபாயத்தை நடைமுறைப்படுத்துவதானது, உபாயத்திற்கு உதவும் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்தல், பயனுறுதிமிக்க நிறுவன அமைப்பை உருவாக்கல், வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல், தகவல் முறைமைகளை நிறுவனத்தின் செயலாற்றத்துடன் இணைத்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது. உபாய முகாமைத்துவத்தின் இச் "செயற்பாடுகளின் கட்டம்" இல் உருவாக்கப்பட்ட உபாயங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு ஊழியர்களையம் முகாமையாளர்களையும் திரட்டுவது அத்தியாவசியமாகும். உபாயத்தை மதிப்பிடல் உபாய முகாமைத்துவத்தின் இறுதியானதும் மிக முக்கியமானதுமான கட்டமாகும். இக் கட்டத்தில், முகாமையாளர் உபாயங்கள் நன்றாக தொழிற்படுகின்றதா என்பதையும் நிறுவனம் அதன் பணியை நோக்கி நகர்கிறதா என்பதையும் அறிய முடியும். தற்போதைய உபாயத்துக்கான தளங்களான வெளியக மற்றும் உள்ளகக் காரணிகளை மீளாய்வு செய்தல், செயற்பாட்டை அளவிடல் மற்றும் திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பன இக் கட்டத்தில் முகாமையாளர்கள் பின் தொடர்ந்து செல்லுவதற்கு தேவையான மூன்று முக்கிய குணாதியங்களாகும் (பிரெட் ஆர் டேவிட் 2008). உபாயத் திட்டமிடலில் பயன்படுத்தப்பட்ட முக்கிய தொழில்நுட்பங்களாவன பகுப்பாய்வு பலங்கள், குறைபாடுகள், மற்றும் அச்சுறுத்தல்கள் என்பனவற்றைக் குறிக்கும் SWOT பகுப்பாய்வு முறை மற்றும், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றைக் குறிக்கும் PEST பகுப்பாய்வுமுறை சமூக – கலாச்சாரம், தொழில்நுட்பம், பொருளாதார, சூழல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் காரணிகள் என்பவற்றைக் குறிக்கும் STEER பகுப்பாய்வுமுறை, சுற்றாடல், அரசியல், தகவல், சமூக, தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சட்டம் என்பவற்றைக் குறிக்கும் EPISTEL பகுப்பாய்வு முறை என்பனவாகும்.

இலங்கை மத்திய வங்கி 2006 இலிருந்து உபாயத் திட்டத்தை வடிவமைப்பதற்கும் கண்காணிப்பதற்கும் பல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. ஆரம்பத்தில், ஆண்டுதோறும் உபாயத் திட்டமிடல் செயல்முறையின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும், மீளாய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் கொள்கை மீளாய்வு கண்காணிப்புத் திணைக்களம் 2007இல் நிறுவப்பட்டது. தற்போதைய உபாயத் திட்டம் (2010 - 2014) பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு, நாணய வெளியீடுகள் மற்றும் முகாமைத்துவம், முகவர் பணிகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, செயலகப் பணிகள், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு ஆகிய வெவ்வேறான ஏழு கொத்தணிகளின் கீழான இலக்குகள், இலக்குகளை அடையும் பொறிமுறை, முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மற்றும் உபாயக் குறிக்கோள்களை உள்ளடக்குகிறது. பணியின் செயற்பரப்பெல்லை, சட்ட அதிகாரம் மற்றும் மூலங்களின் கிடைப்பனவைக் கவனத்திற் கொண்டு திணைக்களங்கள் அவற்றின் திணைக்கள செயற்பாட்டுத் திட்டங்களை தற்போது ஐந்து ஆண்டுகள் கொண்ட நடுத்தர தவணைக்கே வடிவமைக்கின்றன. இவ்வாரம்பத் திட்டங்கள் இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவம் மற்றும் அனைத்துத் திணைக்களத் தலைவர்களின் பங்கேற்புடன் வருடாந்த கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படுகிறது. இக் கூட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடர்நேர்வுகள் மற்றும் எதிர்நோக்க வேண்டிய தோற்றம் பெற்று வரும் சவால்களை கலந்தாலோசித்து பகுப்பாய்வு

**சிறப்புக் குறிப்பு தொடர்ச்சி**

செய்த பின்பு தொடர்பான திணைக்களத் தலைவர்களால் ஆரம்ப உபாயத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, உருமாற்றப்பட்டு மீளமைக்கப்படுகிறது. இவ்வுபாயத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இலக்குகள் SMART எண்ணக்கரு அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டன. இதன் கருத்து யாதெனில் இலக்குகள் குறித்துரைக்கக் கூடியதாகவும் அளவிடக் கூடியதாகவும் நடவடிக்கை சார்ந்ததாகவும் உண்மையாக நடக்கக் கூடியதாகவும் நேரம் மற்றும் வளக் கட்டுப்பாட்டைக் கொண்டதாகவும் இருக்கும். உபாயத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான திணைக்களத் தலைவர்களுடன் காலாண்டு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துவதன் மூலம் கொள்கை மீளாய்வு கண்காணிப்புத் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுகிறது. இத்திணைக்களம் ஆளுநர் தலைமையிலான மூத்த முகாமைத்துவத்தைக் கொண்டுள்ள உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் குழுவிற்கு அறிவிக்கப்படுகிறது. இக்குழுவின் தீர்மானங்கள் எந்தவித பின்னடைவுகள் மீதான நடவடிக்கைக்காக திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இச்செயல்முறை செயலாற்றக் குறிகாட்டிகளிலிருந்து அவதானிக்கப்பட்டவாறு பெரும் வெற்றியளித்துள்ளதாக நிரூபிக்கப்பட்டது. உபாயத் திட்டமிடலின் வெற்றிக்கான முக்கிய காரணங்களாக உபாயத் திட்டமிடல் பற்றி அலுவலர்களிடையே காணப்பட்ட மேம்பாடடைந்த விழிப்புணர்வு மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புச் செயல்முறையாக விளங்கியது. ஆரம்பத்திலிருந்த இரு உபாயத் திட்டங்களின் தொனிப்பொருள் "இலங்கையில் சுபீட்சத்தை அடைதல்" என்பதை அடிப்படையாகவும் மூன்றாவது "சாய்மனைக் கதிரைக்கு ஓய்வு கொடுப்போம்" என்பதாகும். இலங்கை மத்திய வங்கி அதன் பணியான "இலங்கையின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்யும் நம்பகத்தன்மை கொண்டதும் ஆற்றல்மிக்கதுமான மத்திய வங்கி" அடைவதை நோக்கி நகர்கின்றது என்பதை உபாயத் திட்டமிடல் செயல்முறையின் முன்னேற்றம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

உசாத்துணை: 1. பிறெட் ஆ. டேவிட் (2008), உபாய முகாமைத்துவம் (12ஆம் பதிவு), பிஎச்ஐ வோ்னிங் பிறைவேற் லிமிடெட், புது டெல்லி

2.http://www.rbi.org.in/scripts/Publication ReportDetails.aspx?ID=460)

இவ்வாண்டில், கொள்கை தொடர்பான ஆவணங்களின் மென்பொருள் பிரதிகளை சேமித்து வைப்பதற்காக அதே நேரத்திலான மின் கொள்கை மற்றும் நடைமுறை நூலகம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகத்தினை வங்கியின் மின் அஞ்சல் முறைமையூடாக அடையத்தக்கதாக இருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பான சட்டவாக்கம், ஒழுங்குவிதிகள், சுற்று நிருபங்கள் மற்றும் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகள் என்பவற்றின் மென்பிரதிகளையும் கொண்டுள்ளது.

## 19. பணிமனை

2009ஆம் ஆண்டில் பணிமனைத் திணைக்களம் புதிய நிருமாணப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன் வங்கிப் பணிமனைகள் சுத்தமாகப் பேணப்படுவதனையும் அதன் பணிமனையுடன் தொடர்பான பௌதீக சொத்துக்களையும் அதன் சூழல் சரியான முறையிலும் பாதுகாப்பாகவும் பேணப்படுவதனை மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டது. இதற்கு மேலதிகமாக, 2009ஆம் ஆண்டில் திணைக்களம் போக்குவரத்து, தொடர்பூட்டல் வசதிகள் மற்றும் வங்கியின் அலுவலர்களுக்கான வங்கி விடுமுறை பங்களாக்களை முகாமை செய்தல் தொடர்பான துணைப் பணிகளையும் வழங்கியது.

பணிமனைத் திணைக்களம் மாத்தளையில் புதிய மாகாண அலுவலகத்தின் நிர்மாணத்தை ரூ.50 மில்லியன் செலவில் பூர்த்தி செய்தது. இரண்டு மாடிகளைக் கொண்ட அலுவலகக் கட்டடம் கிட்டத்தட்ட 11,000 சதுரஅடி தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன் 160 ஆட்களுக்கான இருக்கை இயலளவுடனான நவீன கேட்போர் கூடத்தையும் உள்ளடக்கியுள்ளது. மாகாண அலுவலகம் இல.805, திருகோணமலை வீதி, மண்டன்டாவள, மாத்தளையில் அமைந்துள்ளது. மாகாண அலுவலகத் தொழிற்பாடுகள் புதிய கட்டடத்திற்கு 2009 பெப்புருவரி 1ஆம் நாளன்று கொண்டு செல்லப்பட்டன.

அநகாரிக தர்மபால மாவத்தையை அகலமாக்குவதற்காக மாத்தறை பிரதேச அலுவலகத்தின் ஒரு பகுதி இடிக்கப்பட்டது. இதன்படி, மேல்மாடிகளுக்கு பக்கபலமாக புதிய நவீன கட்டமைப்பு நிர்மாணிக்கப்பட்டதுடன் புதுப்பித்தல் ரூ.30 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டது.தென் பிராந்தியத்தில் வங்கியின் மாகாண மட்டத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு புதிய நவீன கட்டமைப்பு 2009 மார்சசு 01இல் கையளிக்கப்பட்டது.

பணிமனைத் திணைக்களம் சோமவதிய விகாரை வளவில் இயற்கை வனப்புக்களைக் கண்டுகளிக்கும் பங்களாவையும் பாதுகாப்பு அலுவலகத்தையும் 2009 மாச்சில் நிர்மாணிக்கத் தொடங்கியது. கிட்டத்தட்ட 6,000சதுர அடியை மொத்த தளப் பரப்பளவாகக் கொண்ட காட்சிகாண் பங்களாவும் மூன்று மாடி பாதுகாப்பு அலுவலகத்தையும் 2010 மாச்சில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்திலுள்ள நாணய நூதனசாலையின் நவீனமயமாக்கல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது. வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்தைச் சுற்றியும் அழகுபடுத்தல் வேலைகள் மற்றும் வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்தை சார்க் பிராந்தியத்திற்கான நவீன பன்னாட்டு பயிற்சி நிலையமாக தரமுயர்த்துவதற்கான வேலைகளின் ஒரு பகுதியாக கேட்போர் கூடத்தை திருத்தியமைக்கும் மற்றும் தரமுயர்த்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாணயத் திணைக்களத்தில் நாணயச்சரிபார்ப்பு மற்றும் பிரித்தல் எந்திரம் பொருத்தப்பட்டுள்ள அறையினது தூசியையும் துகள்களையும் குறைக்கும் பொருட்டு அந்த எந்திர அறை நவீனமயப்படுத்தப்பட்டது. உள்ளக தொழில்சார் நிபுணத்துவத்தின் உதவியுடன் சேர்ந்து பணிமனைத் திணைக்களம், இத் திட்டத்தினை திருப்திகரமாக பூரணப்படுத்துவதன் மூலம் நாணயத் திணைக்களத்தின் தொழில் சூழலை மேம்படுத்தக் கூடியதாக இருந்ததுடன் அதன் ஊழியர்களின் நல நிலையினையும் மேம்படுத்தியது.

2009இல் பணிமனைத் திணைக்களமானது தொல் பொருளியல் திணைக்களத்தின் ஆலோசனையுடன் சதாம்வீதி மணிக்கூண்டு கோபுரத்தின் உள்ளக திருத்த வேலைகளையும் வர்ணம் தீட்டுதலையும் திருப்திகரமாக நிறைவு செய்தது.

இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகளை விரிவாக்குதற்குத் தேவைப்பட்ட மேலதிக அலுவலகத்திற்கான இடவசதியைப் பெறும்பொருட்டு சேர் பாரன் ஜெயதிலக மாவத்தையிலுள்ள லொயிட்ஸ் கட்டடத்தினை மத்திய வங்கி கொள்வனவு செய்தததுடன் புதுப்பித்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. புதுப்பித்தல் வேலைகள் முடிவடைந்ததும் இக் கட்டடத்தில் ஊ.சே.நிதியத் திணைக்களம் அமையும். இப்புதுப்பித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் வடிவமைப்பு வேலைகளும் பணிமனைத் திணைக்களத்தினால் முழுமையாகப் பொறுப்பேற்கப்பட்டன.

நசனல் முயுச்சுவல் அசுரன்ஸ் பில்டிங் (முன்னர் கூ.மொ. வி. நிலையம் விளையாட்டுத் தொகுதி) கொள்வனவு செய்யப்பட்டது.

பணிமனைத் திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் மாகாண அலுவலகத்தினை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளைத் தொடங்கியிருக்கிறது. திருகோணமலை பிரதேச செயலகத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் 5 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதுடன் இக் காணியில் மாகாண அலுவலகத்தினை நிருமாணிக்கும் ஆரம்ப வேலைகளைத் தொடங்குவதற்கு காணியினை மாற்றல் செய்வது தொடர்பான முறையான ஆவணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அனைத்துப் பணிமனைகளினதும் வெளிப்புறத்தினை அழகுபடுத்தும் வேலைகள் தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## 20. மாகாண அலுவலகங்கள் கண்காணிப்பு

இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களின் உபாயக் குறிக்கோள்களின் ஒன்றாக மாகாண மட்டங்களில் சமமான அபிவிருத்தியை அடைவதற்கு உற்பத்தித்துறைகளுக்கு நிதியியல் உதவியை விரிவுபடுத்தல் விளங்குகிறது. அபிவிருத்தி வெளிப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு, இலக்கை நோக்காகக் கொண்ட மாகாண அலுவலகங்களின் தொழிற்பாடுகள்/செயலாற்றத்தின் மேம்பாட்டிற்காக இலங்கை மத்திய வங்கி பல நடவடிக்கைகளை எடுத்தது. இதன்படி இலங்கை மத்திய வங்கியின் கொள்கைக் குறிக்கோள்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் மாகாண அலுவலகங்களின் செயலாற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டு மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் என்ற தனியான திணைக்களம் 2009இல் நிறுவப்பட்டது. மேலும், நாணயச் சட்ட விதியின் 7ஆம் பிரிவின் நியதிகளில் தற்போதைய மாகாண அலுவலகங்களின் கீழ் வராதபோதிலும் உதவியை வேண்டிநிற்கும் பரந்த பூகோளப் பிரதேசத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு கூடுதலான மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்கு இலங்கை மத்திய வங்கி உத்தேசித்துள்ளது. 2010இல் திருகோணமலையிலும் வட மாகாணத்திலும் இரண்டு மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாகாண மட்டங்களில் மாகாண அலுவலகங்களின் விரிவடைந்த பங்கு, இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் கொடுகடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல், வாய்ப்புக்களைக் கொண்ட தொழில் முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், அபிவிருத்திப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல், அவர்களிடையே நிதியியல் உள்ளடக்கத்தின் ஊக்குவிப்பினூடாக குறைந்த வருமானக் குழுக்களின் வருமானம் உருவாக்கும் இயலளவை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்:

இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்கள், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள், சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவித்தல், அரச பிணையங்கள் மீதான முதலீடு, சேமிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தல், சட்டத்திற்கு முரணான நிதியியல் வியாபாரங்கள், போலி நாணயத் தாள்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கும் அதுபோல் வங்கியாளர்களுக்கும் நன்மையளிக்கக்கூடிய ஏனைய பொதுவானதும் தற்போதையப் பொருளாதார பிரச்சனைகள் போன்ற வேறுபட்ட விடயங்கள் பற்றி மாகாண அலுவலகங்களால் பொது மக்களிடையே விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. வீட்டுத்தோட்டம், விதை உற்பத்தி, அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பங்கள் மற்றும் மாகாணங்களில் உரிய நிறுவனங்களுடன் இணைந்து விஞ்ஞான ரீதியில் பாற்பண்ணைத் தொழில் செய்தல் போன்ற பரந்தளவிலான விடயத் துறைகளை உள்ளடக்கி தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. 2009இல் மாகாண அலுவலங்களில் நடாத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம் அட்டவணை II.14இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 14**
**2009இல் மாகாண அலுவலகங்களால் நடத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம்**

| மாகாண அலுவலகத்தின் பெயர் | நடத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் | | நடத்தப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற மக்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற மக்களின் எண்ணிக்கை |
| தென் மாகாணம் | 32 | 825 | 09 | 345 |
| வட மத்திய மாகாணம் | 131 | 5124 | 107 | 2554 |
| மத்திய மாகாணம் | 80 | 3393 | 50 | 1397 |
| அனைத்து மாகாண அலுவலகங்கள் | 243 | 9342 | 166 | 4296 |

### மாகாண அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயற்பாடுகள்:

2009ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தின் மாகாண அலுவலகம் ரூ.3,357 மில்லியன் பெறுமதியான 21,635 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் நுழைவதற்கு சோளப் பயிர்ச் செய்கையாளர்களை வசதிப்படுத்திய வேளையில் மத்திய மாகாணத்தின் மாகாண அலுவலகம் தெரிந்தெடுக்கப்பட்ட வாங்குனர்களுடன் ரூ.223 மில்லியன் பெறுமதியான 1,706 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் நுழைவதற்கு நெல், சோயா அவரை மற்றும் பெரிய வெங்காயம் பயிரிடும் வேளாண்மையாளர்களை வசதிப்படுத்தியது. மாகாணங்களில் தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏனைய விடயங்களுடன் உயர்விளைச்சல் வகைகளைக் கொண்ட விதைகளின் பயன்பாடு உள்ளடங்கலாக விஞ்ஞான ரீதியிலான பயிர்ச்செய்கை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு மாகாண அலுவலகங்கள் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டன. இது போலவே, மாகாணங்களின் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மாகாண அலுவலகங்கள் கால்நடை அபிவிருத்தித்துறையின் விலங்கு வளர்ப்புப் பணிகளையும் ஒருங்கிணைத்தது. மாகாண அலுவலகங்கள் இவ்வாண்டில் மாகாணத் தரவு/ தகவலைத் தொடர்ந்து சேகரித்ததுடன் உரிய மாகாணங்களின் சமூகப் பொருளாதாரத் தரவுத் தளத்தைப் பூரணப்படுத்தியது.

### ஏற்பாட்டு உதவி:

இலங்கை மத்திய வங்கிக்கு மாகாண அலுவலகங்களால் விரிவுபடுத்தப்பட்ட ஏற்பாட்டு உதவி, ஆய்வரங்குகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல், ஊழியர் சேம நிதியம் தொடர்பான உறுப்பினர் விசாரணைகளுக்குப் பதிலளித்தல், இலங்கை மத்திய வங்கியின் ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் வெளியீடுகளின் விற்பனை, நாணயச் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இத்துடன், மாகாண அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களை அமர்த்துவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் வேண்டுகோள்களுக்கிணங்க மாகாண அலுவலர்கள் அளவீடுகள் மற்றும் மாகாணங்களில் கள மட்டத்திலான புலன் விசாரணைகளை நடத்துவதற்கும் உதவின.

## 21. பொதுப்படுகடன்

பொதுப்படுகடன் திணைக்களம் அரசின் சார்பில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் வளங்களைத் திரட்டுவதற்கும், மதிநுட்பமான மட்டத்தில் பொதுப்படுகடனின் இடர்நேர்வைப் பேணுவதற்கும், 100 சதவீத துல்லியத்துடன் பொதுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் மதிநுட்பமான விதத்தில் பொதுப்படுகடனை முகாமை செய்யும் பொறுப்புக்களைத் தொடர்ந்து மேற்கொண்டது. இத்துடன், பொதுப்படுகடன் திணைக்களம் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படையான தன்மையை மேம்படுத்துவதன் மூலம் பொதுப்படுகடன் கொள்கையைப் பலப்படுத்தி முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணி உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் அரச பிணைங்களுக்கான சந்தையை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. 2009ஆம் ஆண்டில் திணைக்களம் அரசின் கடன்பாட்டுத் தேவைப்பாட்டைத் தீர்ப்பதற்கு நாணயச்சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட படுகடன் முகாமை உபாயத்தை பயனுறும் வகையில் நடைமுறைப்படுத்தியது. இதன்படி, திணைக்களம் வெவ்வேறான சந்தைப் பிரிவுகள் மற்றும் முதலீட்டாளர்களின் ஆவலைக் கவனத்திற் கொண்டு நடைமுறையிலிருக்கும் படுகடன் கருவிகளையும் அதுபோல் புதிய கருவிகளையும் வழங்கியது. இதற்கமைய, இவ்வாண்டில் திணைக்களம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால (10 ஆண்டுகள்) பிணையங்களைத் தொடர்ந்து வழங்கியது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது 5 ஆண்டு (நீண்டகால) நாட்டுக்கான பன்னாட்டு முறி 13 தடவைகளுக்கும் கூடுதலாக தேவைக்கதிகமாக உதவப்பட்டதுடன், இது நாட்டுக்கான எந்தவொரு ஐ.அ.டொலரிலான ஆகக் கூடியளவில் தேவைக்கதிகமாக உதவப்பட்ட நிதியில் ஒன்றாக விளங்கியது. இத்துடன், 2009இன் படுகடன் முகாமைத்துவ உபாயம் நடுத்தர தவணை பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயத்தைத் தொழிற்படுத்துவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவத் தொழில்நுட்பங்களின் பயனுறுதியான நடைமுறைப்படுத்தலில் கவனஞ் செலுத்தியது. திணைக்களம் பொதுப்படுகடன் முறைமையின் பன்முகப்படுத்தலை நடைமுறைப்படுத்தி பொதுப்படுகடன் முறைக்கான கட்டமைப்பைப் பலப்படுத்தி, அரச பிணையங்களை ஊக்குவிப்பதற்காக முதலீட்டாளர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தி, வெளிநாட்டிலுள்ள இலங்கையர் மற்றும் புலம் பெயர்ந்த வேலையாட்களுக்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளை ஆரம்பித்தது.

மத்திய வங்கியின் 2009 மற்றும் அதற்கப்பாலுக்குமான வழிகாட்டியில் அறிவிக்கப்பட்டவாறு, பொதுப்படுகடன் திணைக்களம் அதன் படுகடன் முகாமைத்துவத்தைப் பயனுறுதிமிக்க விதத்தில் நிறைவேற்றுவதில் கூடிய கவனஞ் செலுத்தியது. இவ்வாண்டில் உள்நாட்டுப்படுகடன் சொத்துப்பட்டியலின் காலம் திணைக்களத்தால் பின்பற்றப்பட்ட உபாயங்கள் காரணமாக 1.6 ஆண்டுகளிலிருந்து 1.8 ஆண்டுகளுக்கு மேம்பாடுற்று குறுகியகாலப் படுகடன் முதிர்ச்சிகளை நடுத்தர மற்றும் நீண்டகால முதிர்ச்சிகளுக்கு நகர்த்தியது. கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய விளைவு வளையியினூடாக அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சி அமைப்பை மேம்படுத்தும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம் 10ஆண்டுகள் வரையான நீண்டகால விளைவு வளையியை நிறுவியது. எனினும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் தீவிரமடைந்த உள்நாட்டுப் போர் காரணமாக ஏற்பட்ட அரசின் அளவுக்கதிகமான கடன்பாடுகளின் விளைவாகவும் கடந்த ஆண்டில் பன்னாட்டு நிதிய நெருக்கடியுடன் சேர்ந்து பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவும் இவ்வாண்டில் அரசின் கடன்பாட்டை ஆரம்ப இலக்கினுள் மட்டுப்படுத்துவது கடினமாக விளங்கியது. இதன்படி, ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட கடன்பாட்டு எல்லை இவ்வாண்டின் இறுதியில் திருத்தியமைக்கப்பட்டது. 2009இல் உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக அரசின் படுகடன் கணிசமானளவில் அதிகரித்துள்ளமை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலும் நிகழும் பொதுவான விடயமென்பதைக்

குறிப்பிடுவது மிகவும் முக்கியமானதாகும்.

உள்நாட்டுச் சந்தையில் அரச பிணையங்களுக்கான வட்டிவீத அமைப்பு ஆண்டின் தொடக்கத்தில் ஏறத்தாள 19.0 சதவீதத்தில் காணப்பட்டமைக்கு, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்களின் அதாவது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மீளப் பெறப்படமையினைத் தொடர்ந்து சந்தையில் திரவத் தன்மையில் பற்றாக்குறை ஏற்பட்டமையே காரணமாகும். இதனைத் தொடர்ந்து பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து அதற்கு இணையாக இறுக்கமான நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டமை மற்றும் பொருளாதாரத்தில் முதலீட்டாளர் நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டமை என்பனவற்றின் விளைவாக உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட வட்டிவீத அமைப்பு 554 அடிப்படைப் புள்ளிகளுக்கும் 991 அடிப்படைப் புள்ளிகளுக்குமிடையே கீழ்நோக்கிய நகர்வைக் காட்டியமை அரசின் கடன்பெறும் செலவைக் குறைத்தது.

கடந்த காலத்தைப் போலவே, பொதுப்படுகடன் திணைக்களம் பொதுப்படுகடன் சொத்துப் பட்டியலின் பணிக் கொடுப்பனவு செய்தல், அரச படுகடனை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் உள்ளடங்கலாக) பணிக் கொடுப்பனவு செய்வதில் 100 சதவீத துல்லியத்துடன் நேரம் பிந்தாது அதன் கடனைச் செலுத்தத் தவறாத நிலையை தொடர்ந்து பாதுகாக்கக் கூடியதாகவிருந்தது.

2009 மேயில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததால் ஏற்பட்ட சாதகமான தோற்றப்பாடு மற்றும் 2009 யூலையில் பன்னாட்டு நாணய நிதியத்தால் துணைநில் வசதிக்கு ஒப்புதலளிக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத் தன்மையுடன் திணைக்களம் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகளினூடாக 2009இல் ஐ.அ.டொலர் 1,768 மில்லியனை(ரூ.185 பில்லியன்) திரட்டக் கூடியதாக இருந்தது. வெளிநாட்டு முதலீடுகளின் இக்கணிசமான உட்பாய்ச்சல்களுடன் பொதுப்படுகடன் குறுகிய தவணை அரச படுகடனின் குறிப்பிடத்தக்களவு பங்கை இளைப்பாறச் செய்தது.

இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளில் அதன் நம்பகத் தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் தெளிவான தன்மையை மேம்படுத்தும் பொருட்டு சந்தைக்கு ஆகப் பிந்திய தகவலை வழங்குவதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தது. ஆற்றல்மிக்க படுகடன் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு இப்பண்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பொதுப்படுகடன் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தை தொடர்ந்து புதுப்பித்ததுடன் சந்தைப் பங்கேற்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்காக இலங்கையில் பொதுப்படுகடன் முகாமைத்துவம் பற்றி மாதாந்தத் தரவு செய்தித் திரட்டுக்களையும் அதன் வருடாந்த வெளியீட்டையும் வெளியிட்டது.

2009இல் கிரமமான தலத்திலேயான பரீட்சிப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு பலவற்றை நடத்துவதன் மூலம் பொதுப்படுகடன் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களம் பலவழிமுறைகளை எடுத்தது. மேலும், பொதுப்படுகடன் முறைமைகளால் எதிர்கொள்ளப்படும் வியாபாரச் செறிவு இடர்நேர்வைக் குறைப்பதற்கு பொதுப்படுகடன் செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதன் முதலாவது கட்டம் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் நேரம் பிந்தாது பதிவு செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு, திணைக்களம் மத்திய வைப்பக முறைமையில் பேணப்படும் பதிவுகளை நெருக்கமாகக் கண்காணித்து மேற்பார்வை செய்தது. இதன் காரணமாக, இவ்வாண்டில் மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படாமை பற்றி சில முறைப்பாடுகளையே திணைக்களம் செய்தது.

கூடியளவு போட்டித் தன்மை, இயக்க ஆற்றல் மற்றும் திரவத் தன்மையுள்ள பிணையங்கள் சந்தையை விருத்தி செய்வதற்கான தேவையை அறிந்ததன் மூலம் நாடு முழுவதும் அதுபோல் பன்னாட்டு ரீதியாகவும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் இவ்வாண்டில் முதலீட்டாளர் தளத்தை விரிவாக்குவதற்கும், பன்முகப்படுத்துவதற்கும் திணைக்களம் பல முயற்சிகளை மேற்கொண்டது. இந் நோக்கத்துக்காக பொதுப்படுகடன் திணைக்களம் தேசிய செய்தித் தாள்களில் விளம்பரங்களைப் வெளியிட்டது. நாடு முழுவதும் கருத்தரங்குகளை நடத்தியது. பல தொலைக்காட்சி/ வானொலி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றியது. ஏனைய அமைச்சுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருட்காட்சிகளில் பங்கு பற்றியது. இத்துடன், புலம் பெயர்ந்த இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலக்காகக் கொண்டு திணைக்களம் 2009இல் 21 வெளிநாட்டு முதலீட்டாளர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

### 21.1 2009 இன் அபிவிருத்திகள்

#### (அ) கடன்பாட்டு இலக்கும் உபாயமும்

2008ஆம் ஆண்டின், 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளில் பாராளுமன்றம் எதிர்பாராதவற்றுக்கான ரூ.25 பில்லியன் ஒதுக்கம் உள்ளிட்ட ஏட்டுப் பெறுமதி நியதிகளில் 2009இற்கான அரசின் மொத்தக் கடன்பாட்டு எல்லையான ரூ.840 பில்லியனுக்கு ஒப்புதலளித்தது. எனினும் அரசின் நிதியியற் தேவைப்பாடுகளில் ஏற்பட்ட எதிர்பார்க்கப்படாத அதிகரிப்பு மற்றும் அரசிறைச் சேகரிப்பிலான குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காரணமாக உண்மையான வருடாந்தக் கடன்பாடுகள் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட தொகையிலிருந்து கணிசமானளவில் வேறுபட்டுக் காணப்பட்டது. எனவே, ஒட்டு மொத்த கடன்பாட்டு எல்லை 2009 ஒத்தோபரில் ரூ.1,050 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இத் திருத்தியமைக்கப்பட்ட கடன்பாட்டு எல்லையில், ரூ.724 பில்லியன் உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்கையில் எஞ்சிய ரூ.326 பில்லியன் வெளிநாட்டு மூலங்களூடாகத் திரட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2009ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் பன்னாட்டு நிதியியல் நெருக்கடியின்

மோசமான தாக்கம் வெளிநாட்டு நிதியங்களைப் பெற்றுக் கொள்வதைக் கடினமாக்கியதுடன், அரச கடன்பாடுகள் பெரும்பாலும் உள்நாட்டு மூலங்களினூடாக மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2009 மேயில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபின்பு புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் 2009 யூலையில் பன்னாட்டு நாணய நிதியத்தால் துணைநில் ஒழுங்குமுறை வசதி பெறப்பட்டமை என்பவற்றுடன் அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அவதானிக்கப்பட்டது. 2009இல் ரூ.151 பில்லியன் மொத்த உள்பாய்ச்சலுடன் 2009 திசெம்பர் இறுதியில் அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் ரூ.185 பில்லியன் (முகப்புப் பெறுமதி நியதிகளில்) கொண்ட உயர் மட்டத்தைப்பதிவு செய்தது. மேலும் பொதுப்படுகடன் திணைக்களம் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட இலங்கையின் இரண்டாவது நாட்டுக்கான பன்னாட்டு முறியின் வழங்கலை பெரும் வெற்றியுடன் வழங்கக் கூடியதாக இருந்ததுடன் கடன்பெறும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூ.57 பில்லியனைச் சேர்த்தது. இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் எதிர்பார்த்தவாறு வெளிநாட்டு மூலங்களிலிருந்து வெளிநாட்டு நிதியங்கள் பெறப்பட்டமையால் கடன்பாடுகள் உள்நாட்டு மூலத்திலிருந்து வெளிநாட்டு மூலங்களுக்கு நகர்த்தப்பட்டன. இதன்படி, 2009இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகள் முறையே ரூ.653 பில்லியனாகவும், ரூ.356 பில்லியனாகவும் விளங்கின. இது 2009இல் சலுகை ரீதியிலான வெளிநாட்டு மூலங்களிலிருந்தான செயற்றிட்ட/ நிகழ்ச்சி திட்டங்களினூடான ரூ.147 பில்லியனையும் உள்ளடக்குகிறது.

உள்நாட்டுச் சந்தையிலான வட்டி வீதங்கள் 2009ஆம் ஆண்டில் கணிசமானளவில் கீழ் நோக்கி நகர்ந்தன. பொருளாதாரச் செயற்பாடுகளைத் தூண்டுவதற்கு பணவீக்கக் குறைப்புடன் இணங்கிச் செல்லும் வகையில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள், முதலீட்டாளர்களின் குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள், அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீட்டினூடான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல், சந்தையில் மேம்பட்ட திரவத் தன்மை நிலைமை, பொதுப்படுகடன் திணைக்களத்தால் பின்பற்றப்பட்ட படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் என்பன அரச பிணையங்கள் சந்தையில் வட்டிவீத அமைப்பைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும். வட்டிவீத அமைப்பின் குறைப்புடன், பொதுப்படுகடன் திணைக்களம் குறுகிய தவணை உள்நாட்டுப் படுகடன் கருவிகளை நடுத்தர தவணை மற்றும் நீண்ட தவணைப் படுகடன் கருவிகளுக்குப் படிப்படியாக நகர்த்தக் கூடியதாக இருந்தது. இதன்படி, 2009இல் ரூ.49 பில்லியன் திறைசேரி உண்டியல்களூடாகத் திரட்டப்பட்டதுடன் ரூ.510 பில்லியன் திறைசேரி முறிகளூடாகவும் திரட்டப்பட்டது. இத்துடன், 2009இல் ரூ.62 பில்லியன் (ஐ.அ.டொலர் 541 மில்லியன்) இலங்கை அபிவிருத்தி முறிகளூடாகக் கடன்பெறப்பட்டது. மேலும், உள்நாட்டுப் படுகடனிலிருந்து சந்தைப்படுத்தாத படுகடன் இருப்பைக் குறைக்கும் உபாயத்தைத் தொடர்ந்து மேற்கொண்டதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் ரூபாக் கடன்களூடான கடன்பாடுகளை மட்டுப்படுத்தியதன் மூலம் 2009இல் ரூபாக் கடன்களின் இருப்பை ரூ.17.7 பில்லியனால் குறைத்தது.

2009இல், பொதுப்படுகடன் திணைக்களம் 91 நாள் திறைசேரி உண்டியல் வழங்கலை மட்டுப்படுத்தி 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் திறைசேரி உண்டியல்களில் ஒரே நேரத்தில் பெருமளவு கடன்கள் முதிர்ச்சியடைவதால் ஏற்படும் அழுத்தத்தை தணிப்பதற்கான அதன் கடன்பெறும் உபாயத்தைத் தொடர்ந்து மேற்கொண்டது. அதன்படி, 3 மாத முதிர்ச்சிக் காலத்தைவிடக் குறைவான திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 2008இன் மொத்த திறைசேரி உண்டியல்கள் வழங்கலின் 32 சதவீதத்திலிருந்து 2009இல் 21 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மொத்த வழங்கலில் 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் முதிர்ச்சிக் காலத்துடனான திறைசேரி உண்டியல்களின் வழங்கல் முறையே 2008இன் 28 சதவீதம் மற்றும் 41 சதவீதத்திலிருந்து 34 சதவீதத்திற்கும் 44 சதவீதத்திற்கும் அதிகரித்தன. மேலும், அரச பிணையங்களில் வட்டிவீத அமைப்பின் கணிசமான குறைப்புடன் நடுத்தர தவணையிலிருந்து நீண்ட தவணைகளைக் கொண்ட முதிர்ச்சிக் காலங்களுடன் திறைசேரி முறைகளை வழங்கும் அதன் கடன்பெறும் உபாயத்தை பொதுப்படுகடன் திணைக்களம் வெற்றிகரமாக பின்பற்றக் கூடியதாகவிருந்ததுடன் 10 ஆண்டு வரையான நீண்ட தவணை விளைவு வளையியை ஏற்படுத்தியது. இதன்படி, 3 வருடங்களுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலத்துடனான திறைசேரி முறிகளின் வழங்கலின் அளவு 2008இன் 29 சதவீதத்திலிருந்து 2009இல் மொத்தத் திறைசேரி உண்டியல்கள் வழங்கலின் 50 சதவீதத்திற்கு அதிகரித்தது. 6 வருட முதிர்ச்சிக் காலத்துடனான திறைசேரி முறிகளின் மொத்த வழங்கல் 2009இல் மொத்தத் திறைசேரி முறி வழங்கலின் 20 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தது.

**(ஆ) படுகடன் கருவிகளின் வழங்கல்**

பொதுப்படுகடன் திணைக்களம் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான நிதியங்களைத் திரட்டுவதற்கு அரச பிணையங்களை வழங்குவதன் மூலம் முதனிலைச் சந்தைத் தொழிற்பாடுகளை தொடர்ந்து நடத்தியது. முன்னைய ஆண்டைப்போலவே, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல் நிதியத்தைத் திரட்டும் இரட்டை அணுகுமுறையைப் பின்பற்றி ஏலங்கள் மற்றும் தனிப்பட ரீதியில் வழங்குவதனூடாக மேற்கொள்ளப்பட்டது. திறைசேரி உண்டியல் நிகழ்ச்சித் திட்டத்தில், பொதுப்படுகடன் திணைக்களம் ரூ.821 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை 2009இல் வழங்கியது. இம் மொத்தத்தில் ரூ.749 பில்லியன் முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்களுக்காக மீள வழங்கப்பட்டிருக்கையில் புதிய வழங்கல்கள் ரூ.72 பில்லியனைத் திரட்டியது. இவ்வாண்டில் 52 திறைசேரி உண்டியல் ஏலங்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் ரூ.416 பில்லியன் திரட்டப்பட்டிருக்கையில் ரூ.215 பில்லியன் சந்தைத் தொழிற்பாட்டாளர்களிடம் நேரடியாக வைப்பினூடாகத் திரட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

நேரடியாக திரட்டப்பட்ட நிதியங்கள் 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் ஏலங்களூடாகத் திரட்டப்பட்ட நிதியங்கள் 64 சதவீதத்தால் அதிகரித்தன.

திறைசேரி முறி நிகழ்ச்சித் திட்டத்தில் 2009இல் திரட்டப்பட்ட மொத்த நிதியங்கள் ரூ.701 பில்லியனாக விளங்கின. பொதுப்படுகடன் திணைக்களம் இவ்வாண்டில் 81 ஏலங்களை நடத்தியதுடன் இதில் 17 ஏலங்களிலான விலைக்குறிப்பீடுகள் சந்தையால் குறிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்படாத உயர் வீதங்கள் காரணமாக முழுமையாக நிராகரிக்கப்பட்டன. இதனால், ஏலங்களினூடாக ரூ.52 பில்லியனை மட்டுமே திரட்டக்கூடியதாக இருந்தவிடத்து ரூ.649 பில்லியன் நேரடியாக வைப்பதனூடாகத் திரட்டப்பட்டன.

பொதுப்படுகடன் திணைக்களம் திரும்பத்திரும்ப முதிர்ச்சியடையும் முறிகளைக் கவனத்திற் கொண்டு 4 இலங்கை அபிவிருத்தி முறி ஏலங்களையும் நடத்தியது. ஏலங்கள் மற்றும் நேரடியாக வைப்பதனூடாகத் திரட்டப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 541.05 மில்லியனாக விளங்கியது. இந் நிதியங்கள் இலண்டன் வங்கிகளுக்கிடையேயான 6 மாதத்திற்கான வழங்கல் வீதத்துடன் 540 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 425 அடிப்படைப் புள்ளிகள் வரையில் மாறுபடும் நிறையேற்றப்பட்ட சராசரி மட்டத்தைக் கூட்டி இரண்டு தொடக்கம் 3 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சிக் காலத்துடன் திரட்டப்பட்டன.

மேலும், முதிர்ச்சியடையும் வெளிநாட்டு நாணயப் படுகடனின் பணிக் கொடுப்பனவுக்காக வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளூடாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் திரட்டப்பட்டது. இந் நிதியங்கள் 3 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலம் மற்றும் 400 அடிப்படைப் புள்ளிகள் கீழ்மட்ட வீதத்துடன் இலண்டன் வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதத்துடன் 300 அடிப்படைப் புள்ளிகளைக் கூட்டிய வீதத்தில் திரட்டப்பட்டன.

கடன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, பொர்துப்படுகடன் திணைக்களம் ஐந்து வருட முதிர்ச்சிக் காலப் பகுதியுடன் 7.40 சதவீத நிலையான கூப்பன் வீதத்துடன் ஐ.அ.டொலர் 500 மில்லியனுக்கான நாட்டுக்கான இரண்டாவது பன்னாட்டு முறியை வழங்கியது. பெரும்பாலும் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து அடையப்பட்ட சாதகமான பொருளாதாரத் தோற்றப்பாடு மற்றும் தரமிடல் முகவர்களால் இலங்கையின் நாட்டுக்கான தரமிடல் தரமுயர்த்தப்பட்டமை 2007இல் 8.40 சதவீத மட்டத்துடன் வழங்கப்பட்ட நாட்டுக்கான முதலாவது பன்னாட்டு முறியுடன் ஒப்பிடுகையில் இக் குறைந்த மட்டத்தை அடைவதற்குப் பங்களிப்புச் செய்தன.

**(இ) படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

2009ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் ரூ.800 பில்லியன் கொண்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களை தீர்ப்பனவு செய்தது. தீர்ப்பனவு செய்த மொத்தப் படுகடனில் ரூ.300 பில்லியன் வட்டியாக விளங்குகையில் மூலதன மீள் கொடுப்பனவுகள் ரூ.500 பில்லியனாக விளங்கின. 2009இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ.590 பில்லியனாக இருக்கையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுப்படுகடன் ரூ.210 பில்லியனாக விளங்கியது. இத்துடன் ரூ.667 பில்லியன் கொண்ட முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டில் மீள வழங்கப்பட்டன.

கிரமமான படுகடன் பணிக்கொடுப்பனவுத் தொழிற்பாட்டுக்கு மேலதிகமாக, பொதுப்படுகடன் திணைக்களம் படுக்கடன் பணிக்கொடுப்பனவுத் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய முகாமைக் கணக்காய்வைப் பூர்த்தி செய்தது. இக்கணக்காய்வில் கண்டறியப்பட்டவை அரசின் அலுவல்சார் வெளிநாட்டு மூலவளங்களின் திரட்டுனரான வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது.

**(ஈ) விளைவு வீதங்களும் இரண்டாந்தரச் சந்தையின் செயலாற்றமும்**

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் விளைவுகள் 554 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 991 அடிப்படைப் புள்ளிகள்வரை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. இது தோற்றம் பெற்றுவரும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நிலையுடன் இணங்கிக் காணப்பட்டது. விளைவு வளையியின் குறுகிய முடிவுகாலப் பகுதி, அதாவது 3 மாதங்களிலிருந்து 1 ஆண்டு வரையிலான விளைவு வீதம் 968 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 991 அடிப்படைப் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் 2 ஆண்டுக்கான விளைவு வீதங்கள் 946 அடிப்படைப் புள்ளிகளினால் 10.68 சதவீதத்திற்கும் 4 ஆண்டுக்கான விளைவு வீதங்கள் 721 அடிப்படைப் புள்ளிகளினால் 12.01 சதவீதத்திற்கும், 6 ஆண்டுக்கான விளைவு வீதங்களை 680 அடிப்படைப் புள்ளிகளினால் 12.08 சதவீதத்திற்கும், 10 ஆண்டுகளுக்கான விளைவு வீதங்கள் 554 அடிப்படைப் புள்ளிகளினால் 12.11 சதவீததிற்கும் வீழ்ச்சியடைந்தன.

புதுப்பிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பும் சந்தை விளைவு வீதங்களின் கணிசமான வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. விளைவு வீதங்களிலான வீழ்ச்சி முதனிலைச் சந்தை மற்றும் இரண்டாந்தரச் சந்தை இரண்டிலும் காணப்பட்டன. எனினும், இவ்வாண்டின் பிற்பகுதியில் குறுகிய தவணை முடிவில் (3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 1ஆண்டு) சிறிதளவால் அதிகரித்து இதுவரை காணப்பட்ட போக்கை நேர்மாறாக்கின. அநேகமான முதலீட்டாளர்கள் குறிப்பாக குறுந்தவணை இறுதியில் (3 மாதங்களிலிருந்து 1ஆண்டு) விளைவு வீதங்களில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி ஏற்றுக்கொள்ள முடியாததென்றும் முதனிலை ஏலத்திலான விளைவு வீதங்களில் ஏற்பட்ட சிறு அதிகரிப்பு திருத்தங்கள் ஏற்பட்டு வருவதனை காட்டுகின்றன என்றும் குறிப்பிட்டனர்.

**(உ) பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும் மத்திய வைப்பக முறைமையும்**

**லங்கா செக்குயர்**

2009இல் பொதுப்படுகடன் திணைக்களமானது 21 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லாத முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பக முறைமைகள் (தனியார்) லிமிடெட் என்பனவற்றை உள்ளடக்கிய அதன் பங்குபற்றுனர்களுடன் லங்கா செக்குயரின் தொழிற்பாடுகளை தொடர்ந்து பேணக் கூடியதாக இருந்தது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாக இடம்பெற்ற மொத்தக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூ.32.69 மில்லியனுக்கு 25.5 சதவீதத்தால் அதிகரித்தது. தீவிரமான முதலீட்டாளர் விழிப்பூட்டல் பிரசாரம் காரணமாக முதலீட்டாளர் தளம் விரிவடைந்தமையால் மத்திய வைப்பக முறைமையில் பேணப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 2008இன் 56,041 இலிருந்து 2009இல் 64,680 இற்கு மேலும் அதிகரித்தது. 2007இல் இலங்கை மத்திய வங்கியின் பரந்த வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட பிரயோகம் ரூ.5 மில்லியன் வரையான மீள் நிலைப்படுத்தும் இடைக்காலத்துக்கான கட்டணம் இலவசமாக வழங்கப்பட்டமையும் இவ் அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தது. லங்கா செக்குயர் முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்கு அதன் கூற்றுக்களை முதலீட்டாளர்களுக்கு தொடர்ந்து அனுப்பியது. லங்கா செக்குயர் இணைய வசதி முதலீட்டாளரின் மத்திய வைப்பக முறைமைக் கணக்கைக் கட்டணமின்றிப் பார்ப்பதற்கான அதேநேர வசதியை வழங்கியது.

**(ஊ) முதனிலை வணிகர்களது மேற்பார்வை**

தலத்திலேயான பரீட்சிப்புக்கள் மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினூடாக பொதுப்படுகடன் திணைக்களம் இவ்வாண்டில் அதன் முதன்மை வணிகர் மேற்பார்வைச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, நாட்டின் நிதியியல் துறையிலான பல சவால்களுக்கு மத்தியிலும் முதன்மை வணிகர் முறைமையில் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தியது. 2009இல் ஆறு கிரமமான தலத்திலேயான பரீட்சிப்புக்களும், நான்கு உடன் பரீட்சிப்புக்களும் நடத்தப்பட்ட வேளையில் தொடர்ச்சியான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. கிரமமான தலத்திலேயான பரீட்சிப்புக்கள் சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் மற்றும் ஏனைய இடர்நேர்வுகள் உள்ளிட்ட இடர்நேர்வுகளுக்கு முதனிலை வணிகர்கள் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை மதிப்பிடுவதிலும், மதிநுட்பமான மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகளையும் வருவாய்கள், மூலதன மற்றும் முகாமைத்துவம் போன்ற மூலவளங்களின் போதுமாந் தன்மையையும் பேணுவதிலும் கவனம் செலுத்தியது. அதிகாரிகளுக்கும் சந்தைப் பங்கேற்பாளருக்குமிடையே தொடர்ச்சியான நேரடிக் கலந்துரையாடலைப் பேணுவதற்கு பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கிரமமான கூட்டங்களை ஆண்டு முழுவதும் நடத்தியது. முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு பொருளாதாரத்தின் தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு நிதியற் சந்தைகள் மற்றும் இடர்நேர்வுக் காரணிகள் பற்றி அவர்களது சொந்தச் செயலாற்றத்தில் கவனம் செலுத்துமாறும் இக் கூட்டங்களில் தெரியப்படுத்தப்பட்டது. கைத்தொழிலின் அபிவிருத்திக்காக அவசியமான சந்தை பற்றிய அவர்களது கருத்துக்களை இக்கூட்டங்களில் கலந்தாலோசிப்பதன் மூலமும் முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் பங்களிப்புச் செய்தனர்.

தனியான உற்பத்திச் சந்தையில் ஈடுபடுவதன் மூலம் சந்தை இடர்நேர்வுக்கான அவற்றின் கூடியளவு பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் கவனத்திற் கொண்டு முதனிலை வணிகர் முறைமையை பன்முகப்படுத்துவதற்கு கொள்கைத் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பன்முகப்படுத்தலின் முதலாவது கட்டம் 2009 திசெம்பர் 02இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, அரச பிணையங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, முதனிலை வணிகர்கள் தற்போது சொத்துப்பட்டியலின் முகாமைத்துவப் பணிகள், செயற்றிட்ட மதிப்பீட்டுப் பணிகள், கடன் கூட்டுப் பணிகள், ஒன்று சேர்த்தல் மற்றும் கைப்பற்றுதல் தொடர்பான மதியுரைப் பணிகள், நிபுணத்துவப் பணிகள் போன்ற கட்டண ரீதியிலான வருமானத்தை உழைக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்தால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு இலங்கையில் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகார சபையால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும். வங்கித் தொழில் மற்றும் நிதி தொடர்பிலான அதன் சொந்தக் கம்பனிகளில் சாதாரண பங்குகளிலோ அல்லது தொகுதிக் கடனிலோ முதலிடுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலே கூறப்பட்ட முதனிலை வணிகர்களின் செயற்பாடுகளை இயலச் செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பரிவர்த்தனைகள் சட்டவிதி மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் சட்டவிதியின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள் இவ்வாண்டில் திருத்தப்பட்டன.

**(எ) அரச பிணையங்களின் சந்தை அபிவிருத்தி**

அரச பிணையங்களுக்கான முதலீட்டாளர் தளத்தை விரிவாக்கும் நோக்கில் அரச பிணையங்கள் சந்தையில் போட்டியை அதிகரிப்பதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் அதன் நாடுதழுவிய முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டது. இதன்படி, முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தொலைக்காட்சி, வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகமூடாகவும் கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதனூடாகவும் நடத்தப்பட்டன. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் 42 பொதுமக்கள் முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்தியப் பணிகளுடன் இணைந்து 83 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களையும், 5 தொலைக்காட்சி நேரலை கலந்துரையாடல்களையும், ஒருமாத தொலைக்காட்சி விளம்பரங்கள் நிகழ்ச்சித் திட்டத்தையும் ஏற்பாடு செய்தது.

மேலும் அரச பிணையங்கள் பற்றி பொதுமக்களின்

விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு பொதுப்படுகடன் திணைக்களம் 4 பொருட்காட்சிகள், 6 உள்நாட்டு அரசாங்கங்கள் மற்றும் 21 வெளிநாட்டு அரசாங்கள் பங்குபற்றியது. இத்துடன் திணைக்களம் வெளிநாட்டவர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கு 12 கூட்டங்களில் பங்குபற்றியது.

## 22. பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2009 ஆம் ஆண்டுப் பகுதியில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி துறைகளில் இணைப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் கொடுகடன் வழங்கலை வசதிப்படுத்தல் என்பனவற்றினூடாக பிரதேச அபிவிருத்தி முயற்சிகளை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. 2009 மே இல் வட மாகாணம் விடுவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து வடமாகாணத்திற்கு நிதியப் பாய்ச்சல் வருவதனை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் நிகழ்ச்சித் திட்டமொன்றினை தொடங்கியிருக்கிறது. அதேவேளை, 2008இல் கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் அப் பகுதியில் தொடங்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. வட்டி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகை ஆதரவும் அது நடைமுறைப்படுத்திய திட்டங்களின் கடன் வழங்கல் வீதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. திருத்தப்பட்ட வட்டி வீதங்கள் 2010 சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2009இல் நாட்டில் வேளாண்மை - வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கான புதிய கொடுகடன் தொடர்கள் தொடர்பாக கொடை வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன.

2009இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கீழே குறிப்பிடப்பட்ட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது அல்லது இணைத்தது. இக் கடன் திட்டங்கள் தொடர்பாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒன்றில் மீள்நிதியிடல் வழங்கப்பட்டிருந்தன அல்லது வட்டி உதவுதொகை செலுத்தப்பட்டன.

### 22.1 வட மாகாணத்தின் அபிவிருத்தி

2009 மேயில் வடமாகாணம் விடுவிக்கப்பட்டதுடன் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, நுண்பாக மற்றும் சிறு தொழில் முயற்சிகள் மற்றும் வர்த்தகம் ஏனைய சுய தொழில் வேலை வாய்ப்பு செயற்றிட்டங்களில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டிற்கான கொடுகடன் வசதிகளை வழங்கும் நோக்குடன் "வடக்கின் எழுச்சி" என்ற சிறப்புக் கடன் திட்டமொன்றினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின் குறிக்கோள் யாதெனில் இலங்கை வட மாகாணத்தில் வதியும் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியினை உத்வேகப்படுத்துவதேயாகும். இக் கடன் திட்டத்தின் கீழ், தகுதியுடைய கடன்பாட்டாளர்களுக்கு இம் மாகாணததில் தொழிற்படும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்க;டாக 9 சதவீத சலுகை வட்டி வீதத்தில் ரூ.3,000 மில்லியன் கொண்ட மொத்த தொகையொன்று ஒதுக்கப்பட்டது. கடன்பாட்டாளர்கள் இத் திட்டம் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் 90 சதவீதம் என்ற அடிப்படையில் உயர்ந்தபட்சம் ரூ.200,000 வரையான தொகையைப் பெற தகுதியுடையவராவர். இலங்கை மத்திய வங்கி, பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையில் 90 சதவீதத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் நிதியாக வழங்கும். கடன்பாட்டாளர்கள் ஆறுமாத சலுகைக் காலத்திற்கும் உரித்துடையவராவர். இத் திட்டத்தின் கீழ், பிரதேச அபிவிருத்தி திணைக்களம் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் அவர்களது வாழ்வாதாரங்களை தொடர்வதற்கு/ மீள ஆரம்பிப்பதற்கு உதவ வேண்டிய தேவையினையும் வலியுறுத்துகிறது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள கொடுகடன் வசதிகள் பற்றி ஐந்து மாவட்டங்களிலுமுள்ள மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. 2009 யூலையில் தொடங்கிய வடக்கின் எழுச்சிச் செயற்றிட்டத்தின் கீழ், திசெம்பர் இறுதி வரை ரூ.1,190 மில்லியன் தொகை கொண்ட 8,226 கடன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், 4,335 கடன்கள் தொடர்பாக ரூ.586 மில்லியன் கொண்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், உயர்ந்த எண்ணிக்கையும் (1,285) பெறுமதியும் (ரூ.215 மில்லியன்) கொண்ட கடன்கள் வர்த்தகம் மற்றும் சுய வேலை வாய்ப்பு நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. கடன்களின் வழங்கப்பட்ட ஏனைய நோக்கங்களாக வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் (ரூ.141 பெறுமதியான 1,081 கடன்கள்) விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி (ரூ.136 மில்லியன் கொண்ட 1,126 கடன்கள்) நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் (ரூ.56 மில்லியன் பெறுமதியான 496 கடன்கள்), மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் (ரூ.36 மில்லியன் பெறுமதியான 365 கடன்கள்) என்பன காணப்பட்டன.

### 22.2 கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்ட பின்னர் 2008இல் அம் மாகாணத்தில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொடங்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் 2009இலும் தொடர்ந்து இடம்பெற்று, பொருளாதார மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்தும் நடத்துவதற்கு நிதியியல் உதவிகள் தேவைப்பட்ட நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவிற்கு விஞ்சிக் காணப்பட்டது. மேலும், ஏற்கனவே காணப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் புறம்பாக, 2009 யூனில் கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் வசதிகளை வழங்குவதற்காக சுழலும் நிதியமொன்றினை நிறுவியது. இக் கடன் திட்டத்தின் நோக்கம் யாதெனில் இம் மாகாணத்தில் நீண்ட காலப் பயிர்களின் செய்கை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, வர்த்தகம், சுற்றுலா மற்றும் சுயதொழில் வளர்ப்பு செயற்றிட்டங்கள் என்பனவற்றில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதேயாகும். இந் நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியத்தின் மொத்த தொகை ரூ.1,000 மில்லியன்களாகும். இத் திட்டமானது உயர்ந்தபட்சம்

கடன்பாட்டாளர் ஒருவருக்கு ரூ.250,000 என்ற ரீதியில் தகுதி பெற்ற கடன்களில் 100 சதவீதத்திற்கு மீள்நிதியிடல் வசதிகளை தெரிந்தெடுக்கப்பட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கியது. இக் கடன் வசதியானது ஆறு மாத சலுகைக் காலத்துடன் 9 சதவீத சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ், எல்லாமாக ரூ. 326 மில்லியன் தொகை கொண்ட 2,262 கடன்கள் பதிவு செய்யப்பட்டவிடத்து 2009 திசெம்பர் இறுதியில் ரூ.147 மில்லியன் பெறுமதி கொண்ட 1,123 கடன்கள் வழங்கப்பட்டன. சுனாமிக்குப் பின்னரான கட்டுமான நடவடிக்கைகளுக்காக, கட்டுமானம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் செய்யப்படும் பொறிகளின் கொள்வனவிற்கு நிதியிடலை வழங்குகின்ற கட்டுமானத்துறை அபிவிருத்தி செயற்றிட்டமானது மாகாணம் முழுவதிலுமுள்ள தொடர்பான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமும் அடையாளம் காணப்பட்ட பங்கேற்கும் முகவர்கள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் உதவியுடன் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் கீழ் வறிய நன்மை பெறுநர்களை இலக்கிட்டிருந்தது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை 2009 இறுதியில் 27,086 ஆகக் காணப்பட்டது. இதில் 4,219 நன்மை பெறுநர்களுக்கு ரூ.175 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன.

### 22.3 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறை

இலங்கை மத்திய வங்கியின் விதந்துரைப்பின் பேரில் 2008 வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேளாண் - விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக் கடன் 2009 இலும் தொடர்ந்தும் செயற்பாட்டிலிருந்தது. இத் திட்டமானது நாட்டில் திரவப்பால் உற்பத்தியினை மேம்படுத்துவதனை முக்கிய இலக்காகக் கொண்டிருந்தது. பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்குப் புறம்பாக, இத் திட்டத்தின் கீழ் தனியார் துறையிலுள்ள நடுத்தர அளவு முதலீட்டாளர்களும் பொறிகள், கருவிகள் மற்றும் பால் பதனிடும் பொறித்தொகுதிகளின் கொள்வனவு, வேளாண் - பதனிடல் கைத்தொழில்களுக்கான பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு மற்றும் களஞ்சிய சாலைகள்/ தொழிற்சாலைகள் போன்றவற்றின் கட்டுமானம் என்பனவற்றிற்காக கடன்களைப் பெறுவதற்கு தகைமையுடையவர்களாவர். இவ்வாண்டுப் பகுதியில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தகுதியுடைய பெறுநர்களிடையே ரூ.519.3 மில்லியன்களை வழங்கக் கூடியனவாக இருந்தன. இது முன்னைய ஆண்டின் செயலாற்றத்தினைவிட 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டமானது, ஒரு புறத்தில், வேளாண்மையாளர்களுக்கு வேளாண்மைப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்கான கடன்களை வழங்குகின்றதுடன் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் கீழ் வாங்குநர்களுக்காக வேளாண்மைப் பண்டங்களை கொள்வனவு செய்வதற்கான கடன்களை வழங்குகின்றது. 2008/ 2009 பெரும்போகத்தில், இத்திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக் கடனாக ரூ.1,943 மில்லியன் 41,518 வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இது முன்னைய பயிர்ச் செய்கை ஆண்டின் தொடர்பான காலப்பகுதியைவிட 23.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பாக இருந்தது. மேலும் வேளாண்மைப் பண்டங்களின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூ.4,673 மில்லியன் முன்னைய ஆண்டினை விட 19.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. எனினும், சிறுபோகத்தில் நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்தொகை ரூ.1,026 மில்லியனுக்கு 13.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வேளாண்மைப் பண்டங்களின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன்களும் ரூ.3,223 மில்லியனுக்கு 16.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சிறுபோகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இப்பருவ காலத்தில் நெற்செய்கை 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கினை நெல் பிரசன்னப்படுத்தியது. அதேவேளை, கிருசி நவோதய திட்டத்தின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் அனுசரணை வழங்கப்பட்ட வட்டி உதவுதொகைத் திட்டக் கடன்களின் கீழ் சலுகை வட்டி வீதத்தில் நுண்பாக சிறிய தொழில் முயற்சிகளுக்கு நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன்களை வழங்கின. இத்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நியாயமான அளவு கடன்களைப் பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருந்தமை முக்கியமானதொரு அம்சமாகும்.

### 22.4 சிறிய நடுத்தர தொழில் முயற்சிக்கான நிதியிடலை ஊக்குவித்தல்

கட்டுமானத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழான கடன் பகிர்ந்தளிப்பு, 2009இல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுவரும் ரூ.440 மில்லியன் பெறுமதியான மீள்நிதியிடலுடன் இவ்வாண்டில் திருப்திகரமான முறையில் செயலாற்றியது. ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் சுனாமி தொடர்க் கொடுகடனின் கீழ், (ஒப்பந்தம் ஆ) இவ்வாண்டுப் பகுதியில் ரூ.605.5 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட மீள்நிதியிடல் விடுவிக்கப்பட்டது. 2009இல் சப்பிரகமுவா ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டம் மற்றும் மாத்தளை பிரதேச கிராமிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத்திட்டம் என்பன தொடர்பான மாவட்டங்களில் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. சப்பிரகமுவா ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டத்தின் கீழ், இவ்வாண்டுக் காலப்பகுதியில் கடன்கள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட மீள்நிதியிடலின் மொத்தப் பெறுமதி ரூ.6.9 மில்லியனாக விளங்கிய வேளையில் மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் சுழலும் நிதியின் கீழ் கடன்கள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட மீள்நிதியிடலின் மொத்தப் பெறுமதி ரூ.54.9 மில்லியனாகக் காணப்பட்டது.

### 22.5 வறுமை ஒழிப்பு

யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரினால் நிதியிடப்படும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டமான வறுமை ஒழிப்பு நுண்பாக, நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியத் திட்டம் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் என்பன 2009இல் நாடு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. இவ்வாண்டுப் பகுதியில்,

## அட்டவணை II.15

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புகள்

| செயற்றிட்டமும் நிறைவேற்றுக் காலமும் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு | கடன்பாட்டாளருக்கான ஆண்டு வட்டி வீதம் | பொருத்தமான விடத்து மீளப்பெறல் வீதம் |
|---|---|---|---|---|---|
| **1. வேளாண்மைத் துறை மற்றும் விலங்கு வளர்ப்பு** | | | | | |
| 1.1 இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 2006-2014 | இலங்கை அரசாங்கம் | நிரந்தரப்பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல், பதனிடல் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் | ரூபா 1.2 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.2 தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) 2006-2018 | இலங்கை அரசாங்கம் | தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல். இது தொடர்பில் தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான அடிப்படை உதவிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. | ரூபா 1.1 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.3 புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் சொந்த நிதியம் அரச வட்டி உதவு தொகை | சிறிய வேளாண்மையாளருக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டை வழங்குதல்.<br>- குறுகிய கால உற்பத்திக் கடன்கள்<br>- விதைகள் மற்றும் நாற்றுப்பொருட்களின் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களின் கொள்வனவு | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள் | 2009 யூலை வரை 8 சதவீதமும் அதற்குப் பின்பு 12 சதவீதமும் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.4 வேளாண்மை - கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2008 - 2010) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் சொந்த நிதியம் அரச வட்டி உதவு தொகை | பாற்பண்ணைத் தொழிலில் பின்வருவன வற்றுக்கு மூலதனத்தை வழங்குதல்<br>- மாட்டுத் தொழுவங்களை அமைத்தல்<br>- பசுக்களின் கொள்வனவு<br>- திடமான உணவு, விலங்கு மருத்துவ பணிகள் மற்றும் மருந்துகள் போன்றவற்றின் கொள்வனவு<br>- விலங்கு தீன் பயிரிடல்<br>- உயிரின வாயு தாங்கிகளை அமைத்தல்<br>- விலங்கு மருத்துவரால் விதந்துரைக்கப்பட்ட எந்தவொரு ஏனைய தேவைப்பாடுகள்<br><br>திரவப் பால் பதனிடல் கைத்தொழில்கள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலில் பின்வருவனவற்றுக்கு நிதியங்களை வழங்கல்<br>- தொழிற்சாலைக் கட்டடங்களின் நிர்மாணம்/ நவீனமயமாக்கம்<br>- நவீன பொறி மற்றும் கருவியின் கொள்வனவு<br>- களஞ்சியசாலை, குளிர் அறைகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள்<br>- தேவைப்பட்ட ஏனைய பணிகள், நியமங்களைப் பேணுவதற்கான கருவி | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள். மொத்த நிதி வழங்கல் ரூ.5,000 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப படுகிறது. | சிறு பாற்பண்ணை செயற்றிட்டக் கடன்களுக்கு - 12 சதவீதம் பால் மற்றும் பயிர் பதனிடலுக்கு - 14 சதவீதம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.5 | கிருசி நவோதய திட்டம் (2007 மாச்சு - 2010 பெப்புருவரி இறுதி) | பங்கேற்கும் நிதி நிறுவனங் களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகையும் | வேளாண்மை தொடர்பான கைத்தொழில் மற்றும் மிகச் சிறிய மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புச் செயற்பாடுகளுக்கான நடுத்தர காலக் கடன்களின் ஏற்பாடு | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அவற்றின் சொந்த நிதியங்களைப் பயன்படுத்தி வழங்கப் பட்டகடன்கள். தொழிற்பாட்டு காலப்பகுதியில் வழங்கப்படும் மொத்தக் கடன்கள் ரூ.3,000 மில்லியன் என எதிர் பார்க்கப்படுகிறது. | 2008 யூலை வரை 8 சதவீதம் அதன் பின்னர் 12 சதவீதம் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 2 | **சிறிய நடுத்தர தொழில்முயற்சித்துறை** | | | | | |
| 2.1 | மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007-2009) | வே.அ.ப.நி. | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல் | ரூபா 77 மில்லியன் | 10 சதவீதம் | 87 சதவீதம் |
| 2.2 | சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007-2010) | இலங்கை அரசாங்கம் | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்துதல் | ரூபா 100 மில்லியன் | 10 சதவீதம் | 93 சதவீதம் |
| 2.3 | சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்தம் பீ கடன் திட்டம் (2006 - 2014) | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | யூரோ 20 மில்லியன் | 9 சதவீதம் | 90 சதவீதத்திலும் கூடுதலான |
| 2.4 | சுசகன கடன்திட்டம் (கட்டம் II) | இலங்கை மத்திய வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு உதவுவதற்காக | ரூபா 500 மில்லியன் | 6 சதவீதம் | சலுகைக் காலப் பகுதியினுள் |
| 2.5 | கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007 - 2015) | ஏஜன்ஸ் பிரான்சைசஸ் டெவலப்மன்ட் | கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடல் | யூரோ 10 மில்லியன் | 9 சதவீதம் | 90 சதவீதத்திலும் கூடுதலான |
| 2.6 | வடக்கின் எழுச்சி சிறப்பு மீள் நிதியிடல் கடன் திட்டம் | இலங்கை மத்திய வங்கி | உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் மாகாணங்களில் குடியேற்றப்பட்ட ஏனையோர் அவர்களின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு | ரூபா. 3 பில்லியன் | 9 சதவீதம் | சலுகைக் காலப் பகுதியினுள் |
| 2.7 | "கிழக்கின் உதயம்" கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான சுழலும் நிதியம் | இலங்கை மத்திய வங்கி | | ரூபா. 1 பில்லியன் | 9 சதவீதம் | சலுகைக் காலப் பகுதியினுள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **3. நுண்பாக நிதியியல்துறை** | | | | | |
| 3.1 உலர்வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் (2006 - 2012) | வே.அ.ப.நி. | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர்களுக் கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கமும் | இலங்கை ரூபா 200 மில்லியன் | 10 சதவீதம் | சலுகைக் காலப் பகுதியினுள் |
| 3.2 சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | வே.அ.ப.நி. மற்றும் ஐ.அ. உதவி | நாட்டின் மத்திய பகுதியில் தேயிலை மற்றும் நிரந்தர பயிர்களைப்பயிரிடுகின்ற வசதி குறைந்த சிறு உடமையாளர்களினதும் மொனராகலை பிரதேசத்தின் இடைநில வலையத்திலுள்ள உயர்நிலத்தில் உணவுப் பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்கள் இறப்பரை பயிரிட விரும்பின் அவர்களது ஜீவனோபாயத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொலர் 40.7 மில்லியன் | 9 சதவீதம் | பகிர்ந்தளிப்பு ஆரம்பமாக இருக்கிறது |
| 3.3 சிறு வேளாண்மை யாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்ட சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல் | இலங்கை ரூபா 267 மில்லியன் | 16 சதவீதம்- 20 சதவீதம் | 90 சதவீதத் திற்கும் கூடுதலாக |
| 3.4 வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத் (சுழலும் நிதியம்) திட்டம் 2009-2013 | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல்<br><br>வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அடையாளம் காணப்பட்ட கடன்படுநர்களின் வறுமையை ஒழித்தல்<br><br>முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் | இலங்கை ரூபா 1,385 மில்லியன் | 16 சதவீதம் | 90 சதவீதத் திற்கும் கூடுதலாக |
| 3.5 வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல்<br>வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அடையாளம் காணப்பட்ட கடன்படுநர்களின் வறுமையை ஒழித்தல்<br>முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் | யப்பானிய யென் 2100 மில்லியன் | கூடியது 15.5 சதவீதம் | சலுகைக் காலப் பகுதியினுள் |

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - II இன் கீழ், பதிவு செய்யப்பட்ட நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 26,505 ஆகக் காணப்பட்டது. இவர்களில் 10,089 நன்மை பெறுநர்கள் அவர்களது வருமான உருவாக்க நடவடிக்கைகளை தொடங்குவதற்காக ரூ.513.9 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. 2009 சனவரியில் யப்பான பன்னாட்டு ஒத்துழைப்பு வங்கியினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம் II திட்டம் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் யாதெனில் வறிய மக்களின் வருமான மட்டத்தினை மேம்படுத்துவதும் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு கொடுகடனை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான வழமையான நிதியியல் பணிகளை உயர்த்துவதும் வருமான உருவாக்க வாய்ப்புக்களையும் நன்மைபெறுநர்களின் தேர்ச்சி அபிவிருத்தியினையும் அதிகரிப்பதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கு பங்களித்து பிரதேச ஏற்றத்தாழ்வுகளைத் தணித்து சமாதானத்தினைக் கட்டியெழுப்ப உதவுவதேயாகும். இப்புதிய திட்டமானது 14 மாவட்டங்களை, அதாவது, வடக்கிலுள்ள 5 மாவட்டங்கள், கிழக்கிலுள்ள 3 மாவட்டங்கள் , ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 6 மாவட்டங்களையும், புத்தளம், இரத்தினபுரி மாவட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டுக் காலப்பகுதியில், இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நன்மைபெறுநர்களின் எண்ணிக்கை 45,748 ஆக விளங்கின. இதில் 7,894 நன்மைபெறுநர்கள் ரூ.351 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களைப் பெற்றிருந்தன. அதேவேளை கிராமிய மக்களின் பொருளாதார நிலைமைகளையும் பொதுவான நலன்களையும் மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட திட்டமான சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமும் 2009இல் செயற்பாட்டிலிருந்ததுடன் ரூ.113.6 மில்லியன் பெறுமதியான கடன்கள் 4,534 நன்மைபெறுநர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 22.6 கொடுகடன் பற்றாக்குறையினை நிரப்புதல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆண்டுக் கட்டுப்பணத்தின் சேகரிப்பு, கோரல் விண்ணப்பங்களை செய்முறைப்படுத்தல், கோரல்களைக் கொடுப்பனவு செய்தல் அல்லது நிராகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் 12 கொடுகடன் நிரப்பல் திட்டங்கள் தொடர்பாக கோரலுக்கு பின்னான அறவீடுகளை கண்காணித்தல் போன்ற கொடுகடன் பற்றாக்குறையை நிரப்பும் தொழிற்பாடுகளுடன் தொடர்பான வழமையான நடவடிக்கைகளில் 2009இலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. 2009இல் இந்த 9 திட்டங்களின் கீழும் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ.66.4 மில்லியனாக இருந்தது. கொடுகடன் உத்தரவாத கோரல்களின் கொடுப்பனவு இவ்வாண்டில் ரூ.30.6 மில்லியனாகக் காணப்பட்டது. ஏனைய திட்டங்கள் தொடர்பான கொடுகடன் பகிர்ந்தளிப்பு முடிவுறுத்தப்பட்டுள்ளமையினால் புதிய கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பின் வழங்கல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## 23. செயலகம்

2009 இல் செயலகத் திணைக்களம், சரியான நேரத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் முறைமைகளினதும் நடைமுறைகளினதும் தொடர்ச்சியான மதிப்பீடும் தரமுயர்த்தலும், விடுப்பு, ஓய்வூதிய நிதியங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணம் போன்றவை தொடர்பான விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் நிருவகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக வங்கியின் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டை வசதிப்படுத்தியது.

திணைக்களம் இவ்வாண்டில் தரம், சரியான நேரம் மற்றும் போட்டி விலைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் ரூ.170.8 மில்லியன் பெறுமதியான மூலதனப் பொருட்கள் மற்றும் பணிகளையும் ரூ.55.9 மில்லியன் பெறுமதியான மூலதனமல்லாப் பொருட்களையும் கொள்வனவு செய்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே பயன்படுத்தும் திணைக்களங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு வங்கியின் கொள்வனவு முகாமைச் செயல்முறையைக் கண்காணிப்பதற்கு கொள்வனவைத் திட்டமிடல் மேலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் இவ்வாண்டில் வங்கியின் மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாட்டின் 91 சதவீத வழங்கலை வெற்றிகரமாக பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இத்துடன், திணைக்களம் வங்கியின் சகல சொத்துக்களுக்கான குறைந்த செலவுடன் அனைத்தையும் உள்ளடக்கும். காப்புறுதியைப் பெற்றுக் கொண்டது. இதேவேளை, செயலகத் திணைக்களம் மத்திய வங்கிப் பணிக்குப் பிரயோகிக்கத்தக்க ஆகப் பிந்திய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கும் மத்திய வங்கியின் கையேட்டை 2009 யூலை 01இலிருந்து தொழிற்பாட்டிற்கு வரும் வகையில் வெளியிட்டது. மத்திய வங்கி ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வுதியத் திட்டம், விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பன செயலகத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்டன. இத் திட்டங்களின் கீழ் மொத்தமாக 1,980 ஓய்வூதியக்காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இத் திட்டங்களுக்காக நடைமுறையிலிருக்கும் தரவுத் திணைக்களத்தின் தன்னியக்கவாக்கம் சேமநிதியத்தை விடுவிப்பதற்கான மென் பொருள் நிகழ்ச்சித் திட்டத்தின் அபிவிருத்தியுடன் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது.

வங்கியின் தொழிற்பாட்டுத் தன்மைகளுடன் தொடர்பான சட்ட ரீதியான விடயங்களை செயலகத் திணைக்களம் கவனிக்கும் விதத்தில் 2009ஆம் ஆண்டில் சட்டத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் செயலகத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டன. இதற்கமைய, இக்குறிக்கோள்களை அடையும் விதத்தில் வங்கிக்கு உதவுவதற்கான அதன் பங்கினை விரிவாக்கிக் கொண்டது. இதன் உதவி, வங்கியின் கொள்கைகளை வடிவமைத்து நடைமுறைக்கிடல் மற்றும் நீதி மன்றங்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மன்றங்களில் வங்கியின் உரிமையினை வலியுறுத்தி பாதுகாப்பது என்பனவற்றில் வழங்கப்பட்டது.

வங்கித் தொழில் மற்றும் நிதியியல்துறை தொடர்பாக சட்டங்கள் மற்றும் துணைச் சட்டங்களைத் தயாரிப்பதில் தீவிரமான உதவிகள் வழங்கப்பட்டன. நிதியியல் துறையில் காணப்பட்ட சவால்மிக்க சூழலானது பெருமளவிற்கு பொதுநலம் சார்ந்த அடிப்படைக் குறிக்கோள்களை எய்தும்

விதத்தில் முற் செயற்பாடு மற்றும் எதிர்விளைவுச் செயற்பாடு கலந்த நடவடிக்கைகளின் மூலம் கையாளப்பட்டது.

திணைக்களம் 2009இல் பல சமய மற்றும் ஞாபகார்த்த நிகழ்வுகளையும் நீண்டகாலப் பணிக்கான விழா மற்றும் சுதந்திர தின விழா போன்ற வருடாந்த விழாக்களையும் ஒழுங்கிணைந்து ஏற்பாடு செய்தது.

## 24. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் ஊழியர்கள், கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள், வருகை தருவோர் மற்றும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லும் நாணயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பைத் தொடர்ந்தும் பலப்படுத்தியது. கொழும்பு சனாதிபதி மாவத்தையிலுள்ள இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகத்திலும் மற்றும் ராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்திலும் நுழை சரக்கு மற்றும் பொதி ஸ்கானிங் புதிய பொறிகள் நிறுவப்பட்டன. மத்திய வங்கியின் உள் சுற்றுவட்ட பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலில் புதிய பாதுகாப்புக் கதவு மற்றும் பாதுகாப்பு அலுவலகம் என்பன கட்டப்பட்டன. ராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகள் நிலையத்திலுள்ள பாதுகாப்பு அலுவலகத்தின் நிருமாணம் பாதுகாப்புப் பணிகளுக்கு பெருமளவு வசதியளித்ததுடன் அதன் தோற்றத்தில் புதிய பொலிவொன்றினையும் ஏற்படுத்தியுள்ளது.

வர்த்தகப் பாதுகாப்பு அறிவில் பூரணமான அறிவினை பெறும் விதத்தில் முன்னேற்றமான பாதுகாப்பு முகாமைத்துவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முகாமையாளர்கள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் இரண்டு உயர் பதவி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இத்துடன், பன்னிரண்டு பாதுகாப்பு அலுவலர்களுக்கு அவர்களது தொடர்பான துறைகளில் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. தீ அணைத்தல் முதலுதவி உள்ளிட்ட அவசரகால நிலைமைகளைக் கையாளல் தொடர்பாக ஊழியர்களுக்கான எட்டு தீ விபத்து தொடர்பான ஒத்திகைகளும் ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்குமான ஆயுதப் பயிற்சி மற்றும் தீயணைப்பு இலங்கை இராணுவப் போதனாசிரியர்களின் உதவியுடன் நடத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் நெருக்கடி நேரத்திலான தொழிற்பாடுகளுக்கான இடையறாத வியாபாரத் திட்டத்திற்காக நடத்தப்பட்ட அனைத்து ஒத்திகைகளிலும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் 2009இல் தீவிரமாகப் பங்குபற்றியது.

## 25. புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2009 இலும் தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை, மற்றும் ஏனைய சமூக பொருளாதார துறைகளின் தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் தரவுகளைப் பரப்பும் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. புள்ளிவிபரத் திணைக்களம் ஊடகம் மற்றும் மத்திய வங்கியின் இணையத்தளத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகளை வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் வெளியிடுவதனூடாகவும் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நடத்தை பற்றி கிரமமான மாதாந்த பத்திரிகை வெளியீட்டை வெளியிடுவதனூடாகவும் சமூகப் பொருளாதார தரவு மற்றும் தகவலை கிரமமாக பொது மக்களுக்கு வெளியிட்டது.

மேலும் திணைக்களத்தின் அலுவலர்கள் இவ்வாண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆய்வரங்குகளுக்கான மூலவள ஆட்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றனர். இவ்வாண்டில் அநேகமான அலுவலர்கள் அவர்களது அறிவு மற்றும் தேர்ச்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் ஆய்வரங்குகளில் பங்கேற்றனர்.

### 25.1 புள்ளி விபர அளவீடுகள்

2006 இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இது கிட்டத்தட்ட 300 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியை உள்ளடக்கியிருப்பதுடன் அவர்களது பதில்கள் தொலைபேசி நேர்காணல், தலத்திலேயான நேர்காணல் மற்றும் மின்அஞ்சல் போன்ற பல்வேறு வழிகளூடாகச் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாத அளவீட்டின் பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயச்சபை ஆலோசனைக் குழுவிற்கு அடுத்துவரும் மாதத்தில் நடைபெறும் அவற்றின் மாதாந்தக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2006இல் ஆரம்பிக்கப்பட்ட காணி விலை அளவீடும் தொடர்ந்து நடைபெற்றது.

மேலும், இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க "T+1காசோலை தேறல் செய்யப்படும் கால எல்லை பின்பற்றுவது தொடர்பான வாடிக்கையாளர் அளவீடு" ஐ புள்ளிவிபரத் திணைக்களம் கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தியது. இவ் அளவீட்டின் குறிக்கோள் யாதெனில் காசோலை ஏற்றுக் கொள்ளல் மற்றும் அத்தகைய பெறுகைகளை வாடிக்கையாளர் கணக்குகளுக்கு வரவு வைத்தலுக்கான பணி விதிகள் மற்றும் நியம நேரங்கள் பற்றி 2007 திசெம்பர் 3ஆம் திகதியன்று கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பணிப்புரையினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கடைப்பிடிப்பது பற்றி வங்கியின் நடைமுறைக் கணக்கு வைத்திருப்போரிடமிருந்து அவர்களின் கருத்தினைக் கோரும் பின்னூட்டல்களைப் பெறுவதாகும். இத்துடன், இது புதிய முறைமை பற்றி வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வு மற்றும் திருப்தி பற்றிய தகவலையும் காசோலைதேறலில் ஏற்படும் தாமதத்திற்காக வங்கியால் வழங்கப்படும் காரணங்களையும் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய மாகாணங்களிலுள்ள சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் 100 நிலையங்களிலிருந்து 1,200 நடைமுறைக் கணக்குவைத்திருப் போரைக் கொண்ட மாதிரி தெரிந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் 12 நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் நேர் காணப்பட்டனர்.

உத்தேசிக்கப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூக

பொருளாதார அளவீடு 2011/12 இற்கான ஆரம்ப வேலையும் இவ்வாண்டில் தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட இன்னுமொரு முக்கிய பணியாக இலங்கையிலும் மாகாணங்களிலும் சுபீட்சத்தை அளவிடுவதற்காக திருத்தியமைக்கப்பட்ட சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுத்தல் விளங்கியது.

### 25.2 தேசிய மற்றும் மாகாண வருமானப் புள்ளிவிபரம்

பொருளாதாரத்தின் உண்மைத்துறையிலான அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் செயற்பாடும் தேசிய வருமானத்தை எதிர்வு கூறலும் 2009இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இது, நாட்டின் உற்பத்தி, நுகர்வு, சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளில் முதன்மை மற்றும் இரண்டாந்தரத் தரவின் சேகரிப்பு, அபிவிருத்திகளின் பகுப்பாய்வு மற்றும் எதிர்காலப் போக்குகளை எதிர்வுகூறல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

தேசிய கணக்கு மதிப்பீடுகளைத் தொகுத்தல் மற்றும் பரப்பும் பொறுப்பு நாட்டின் தேசிய புள்ளிவிபரப் பணியகமான தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் வசமுள்ளது. எனினும், புள்ளிவிபரத் திணைக்களம் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பிரிப்பின் அடிப்படையில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரத்தைத் தொடர்ந்து தொகுத்தும் வெளியிட்டும் வருகிறது.

### 25.3 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் ஆரம்பித்த நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை அதன் 31 ஆண்டுத் தொழிற்பாட்டை 2009இல் பூர்த்தி செய்தது. இது இவ்வாண்டில் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறைக்கான கூலி வீதங்கள் பற்றிய தகவலைத் தொடர்ந்து சேகரித்தது. தரவுச் சேகரிப்பு வடக்கு மற்றும் கிழக்கிலிருந்தான 18 நிலையங்கள் உட்பட, நாட்டில் தொழிற்படும் 101 தரவு சேகரிப்பு நிலையங்களுக்கான புள்ளிவிபரப் பரீட்சகர்களாகத் தொழிற்படும் அரச பாடசாலை ஆசிரியர்களின் நாடு பூராகவுள்ள வலைப்பின்னலூடாக நிறைவேற்றப்பட்டது. இம்முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவு விலைச் சுட்டெண்களைத் தொகுத்தல், கொள்கைத் தீர்மானங்களுக்கான விலை அசைவுகளின் எறிவுகள், விலைகள் மீது கொள்கை மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல், தேசிய செலவினம் மற்றும் வருமானத்தின் மதிப்பீடு என்பவற்றுக்காக பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. தரவுகள், விலைகள் மற்றும் கூலிகளில் பருவகால வேறுபாடு, தளம்பல் மற்றும் பிரதேச வேறுபாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் பயனுடையதாகும். இத்திட்டத்தின் கீழ், கூலித் தகவலைச் சேகரிப்பதற்கு உள்ளடக்கப்பட்ட துணைத்துறைகளாக நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயர்ச்செய்கை, சிறிய அளவிலான கட்டடவாக்கம் மற்றும் பணிகள் என்பன விளங்கின.

உற்பத்தி வேறுபாடு, சந்தையிலிருந்து தற்போதுள்ள உற்பத்திகள் மற்றும் வர்த்தகப் பெயர்கள் மீளப் பெறப்பட்டமை, புதிய உற்பத்திகள்/ பொருளாதாரச் செயற்பாடுகள் தோற்றம் பெற்றமை ஆகிய விடயங்களில் சந்தையில் ஏற்பட்டுள்ள தற்போதைய அபிவிருத்திகளைக் கவனத்திற் கொண்டு நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் புதிய தரவு சேகரிப்பு வடிவம் வடிவமைக்கப்பட்டது. தரவு சேகரிப்பின் துல்லியம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்கூட்டியே ஏற்படுத்தப்பட்ட நேர அட்டவணையின்படி கிரமமான கள மேற்பார்வையூடாக உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த காலத்தைப் போன்றே, அவர்களது தரவு சேகரிப்பில் துல்லியம், தரம், சரியான நேரம் தன்மை என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் மாகாண விலைச் சுட்டெண்களின் கணிப்பில் இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கிடையே விலை அபிவிருத்திகளிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் மீதான அவர்களின் உள்ளீட்டைப் பெறுவதற்காகவும் தரவு சேகரிப்போருக்கு புத்துயிர் அளிக்கும் பயிற்சியை வழங்கும் பொருட்டும் 2009இல் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் கண்டியில் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களில் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கத்தில் சமகால அபிவிருத்திகள் பற்றி சிறப்பு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆசிரிய பரீட்சகர்களால் வழங்கப்பட்ட பெறுமதிமிக்க பணியைப் பாராட்டுவதற்கும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்குமாக நாடு முழுவதுமுள்ள அனைத்து ஆசிரிய பரீட்சகர்களுக்காக சிறப்புக் கருத்தரங்கை நடாத்துவதற்காக இவ்வாண்டின் இறுதியில் இத்திணைக்களத்தால் முன்னேற்பாட்டு வேலை மேற்கொள்ளப்பட்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையில் 5 ஆண்டு பணியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான ஆய்வரங்கும் பரிசளிப்பு விழாவும் ராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் 2010 சனவரி 09 ஆம் நாளன்று வெற்றிகரமாக முடிவடைந்தது.

### 25.4 விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

திணைக்களம் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை கிரமமாகவும் தீவிரமாகவும் தொடர்ந்து கண்காணித்ததுடன் விலை அபிவிருத்திகளை பகுப்பாய்வு செய்து மாதாந்த பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டது. பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தை வசதிப்படுத்துவதற்கு, கொள்கை வகுப்போர்களுக்காக, விலை அபிவிருத்திகள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகளும் திணைக்களத்தால் தொடர்ந்து தயாரிக்கப்பட்டது. திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட குறுகியகால மற்றும் நீண்டகால பணவீக்கத்திற்கான எறிவுகள் விலை அசைவுகளின் எதிர்கால போக்கின் முதன்மைக் குறிகாட்டிகளாக பயன்படுத்தப்படும். இவ்வாண்டில், 2006/2007 இல் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் இறுதியாக நடத்தப்பட்ட வீட்டலகு மற்றும் செலவின அளவீட்டால் பிரதிபலிக்கப்பட்டவாறு நுகர்வோர் செலவின மாதிரியின் அடிப்படையில் கொநுவி யினை மீள் தளமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின் முன்னேற்றத்தையும் பிரச்சனைகளையும் கலந்தாலோசனை செய்வதற்கு திணைக்களம் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

மாகாண நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் தற்பொழுது குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக பரவலாக்கப்பட்ட நிருவாகத்தின் கீழ் கொள்கை வகுப்போரின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு திணைக்களம் முழு நாட்டையும்

உள்ளடக்கத்தக்க விதத்தில் கலப்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைத் தொகுத்து பகுப்பாய்வு செய்தது. திணைக்களம் 2003/04 இன் ஆகப் பிந்திய நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டின் அடிப்படையில் இம்மாகாண நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தொடர்ந்து தொகுத்தது. இச்சுட்டெண்களைத் தொகுப்பதற்குத் தேவையான விலைகள் ஒன்றில் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையூடாகவோ அல்லது திணைக்களத்தால் பயிற்றுவிக்கப்பட்டு தீவிரமாக மேற்பார்வை செய்யப்படும் வெளிமூலங்களிலிருந்து பரீட்சிப்பாளர்களூடாகவோ சேகரிக்கப்படுகின்றன. இதேவேளை, திணைக்களம் முதலாந்தர சந்தை மட்டத்தில் உற்பத்தியாளர் அல்லது மொத்த விற்பனை விலைகளிலான அசைவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணைத் தொடர்ந்து தொகுத்தது.

திணைக்களம் இலங்கைக்கான முறைசாராத் துறை கூலிவீதச் சுட்டெண்ணை நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட கூலித் தரவின் அடிப்படையில் தொகுத்தது.

தேசிய வருமான மதிப்பீடுகளைத் தொகுப்பதற்கும், நாட்டில் அரச துறைத் தொழில் நிலையின் மட்டங்களையும் போக்குகளையும் அறிவதற்கும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீடுகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வளவீடுகள் சேகரிக்கப்பட்ட தகவலை அரசின் தற்போதைய தொழில் நிலைக் கொள்கையின் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கும் அரச துறையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் அளவீடாகவும் பயன்படுத்தலாம். வெளிநாட்டுத் தொழில்நிலை, தொழில் உறவுகள் மற்றும் தொழிற் சந்தை சீர்திருத்தங்கள், மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய துறைகள் உள்ளடங்கலாக தொழிற்படை மற்றும் தொழிற்சந்தை பற்றி சேகரிக்கப்பட்ட தரவும் திணைக்களத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### 25.5 புள்ளி விபரங்களைப் பரப்புதல்

திணைக்களம் அதன் வருடாந்த வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரங்கள் - 2009 தொகுதி XXXI"ஐ 2009 ஏப்பிறலிலும் "இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு - 2009 தொகுதி XXXII" ஐ 2009 யூனிலும் வெளியிட்டது. இத்துடன், இலங்கை மத்திய வங்கியின் 2010இற்கான கையடக்கத் தினக்குறிப்பிலுள்ள புள்ளி விபரவியல் அட்டவணைகளும் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன.

## 26. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது, நாணயச் சபையின் 1988.12.12 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அதனால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக நிறுவப்பட்டது. நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையுடன் முக்கியமாகத் தொடர்புபட்டதும் நிதியியல் வியாபாரத்தின் அதிகாரமளிக்கப்படாத நடவடிக்கை தொடர்பானதுமான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்கிடும் பொறுப்புக்கள் இதனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. மேலும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் திணைக்களத்திடம் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் நிதி குத்தகைக்கு விடும் வியாபாரத்தினைக் கண்காணிப்பதற்கான ஒழுங்குவிதிகளை வழங்குகின்றது. மேலும் 2006 இலிருந்து நாட்டில் நுண்பாக நிதித் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைப் பொறிமுறையினை நிறுவுகின்ற பணியும் நாணயச் சபையினால் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் பதிவு செய்யப்பட்ட குத்தகை நிறுவனங்களினதும் பெயர்கள் 31.12.2009 இல் உள்ளவாறு இணைப்பு XXV-1இல் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

சரியான அதிகாரமின்றி பொதுமக்களிடமிருந்து நிதிகளைத் திரட்டிய சில நிறுவனங்கள் முறிவடைந்தமையானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக்கு விடும் கம்பனிகளில் பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கை தேய்வடையக் காரணமாகியதுடன் 2009ஆம் ஆண்டுப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக்கு விடும் கம்பனிகளில் கடுமையான திரவத்தன்மை தடைகளையும் செயலாற்றம் தொடர்பான இடர்பாடுகளையும் ஏற்படுத்தியதுடன், இத்துறைகளில் உறுதிப்பாட்டை பேணுவதில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு புதிய சவால்களையும் தோற்றுவித்தன.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் திணைக்களம், தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலத்திலான பரீட்சிப்புக்கள் என்பனவற்றினூடாக அவற்றின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேம்படுத்தியது. இது புதிய பணிப்புரைகளை விடுப்பதற்கும், திரவத்தன்மை தடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, ஏற்கனவேயுள்ள பணிப்புரைகளைத் திருத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தது. இவை நிதி மற்றும் குத்தகைத் துறைகளுக்கான அரசின் தூண்டல் பொதிகளின் அறிமுகம் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான வங்கிக் கடன் வசதிகள் தொடர்பான மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், முக்கியமான நியதிச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் நிதி மற்றும் குத்தகைக்கு விடல் வியாபாரங்களின் முன்மதியுடைய நடத்தை மீதான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனித் துறைகளினது பிரதான பங்குடமையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரங்கள் தொடர்பான பல வழக்குகள் மீது நீதிமன்றங்களுக்கு வசதியளிப்பதில் திணைக்களம் முக்கியமான பங்கொன்றினை ஆற்றியது.

### 26.1 பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு பணிப்புரைகளை வழங்குதல்

2009இல் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு

வழங்கப்பட்ட புதிய முன்மதியுடைய பணிப்புரைகள், வழிகாட்டல்கள், ஏற்கனவேயுள்ள முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கான திருத்தங்கள் என்பனவற்றின் தொகுப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது. இப்பணிப்புரைகளும் வழிகாட்டல்களும் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**i. 2008இல் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகள் 2009 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.**

இப்பணிப்புரையின் முக்கிய நோக்கம் யாதெனில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் பொதுவான ஆற்றலைப் பேணும் பொருட்டு நிதிக் கம்பனிகளுக்கான ஆரோக்கியமும் வீரியமும் கொண்ட முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை ஊக்குவிப்பதற்காக, தொடர்பான நிதிக் கம்பனியொன்றின் விடயங்களைப் பொறுத்தவரை பணிப்பாளர் சபையை கூடியளவு பொறுப்புடனும் வகை கூறும் தன்மையுடனும் நடந்து கொள்ளச் செய்வதேயாகும்.

**ii. குறைந்தபட்ச தேவைப்பாட்டு மட்டங்களைக் குறைக்கும் பொருட்டு பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் திரவச் சொத்துக்களின் மீதான திருத்தப்பட்ட பணிப்புரைகள்**

2005ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையினைப் பதிலீடு செய்யும் இப்புதிய பணிப்புரை, இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மைத் தடைகளைக் கட்டுப்படுத்துமொரு வழிமுறையாக, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியொன்றின் வெளிநின்ற கால மற்றும் தவணை சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராகப் பேணப்பட வேண்டிய திரவச் சொத்துக்களின் குறைந்தபட்ச மட்டத்தினை முறையே 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கும் குறைத்திருக்கிறது.

**iii. வைப்புக்களின் மீது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் செலுத்தக் கூடிய வட்டி வீதங்களின் மீதான திருத்தப்பட்ட பணிப்புரை**

இவ்வாண்டுக் காலப்பகுதியில், இப்பணிப்புரை இரு தடவைகள் திருத்தப்பட்டது. 2008ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையினைப் பதிலீடு செய்த முதலாவது திருத்தம், வைப்புக்கள் மீது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்படக்கூடிய வட்டி வீதத்தின் மேல் எல்லையினையும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியினால் விடுக்கப்பட்ட, முறிகள் அல்லது ஏனைய சாதனங்களின் கழிவிடல் வீதங்களையும் 2009 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தும் விதத்தில் 2 சதவீதப் புள்ளிகளால் அதிகரிப்பதன் பொருட்டு கொண்டு வரப்பட்டதாகும். 2009 செத்தெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த இரண்டாவது திருத்தமானது 12 மாத அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சிக் காலப்பகுதியைக் கொண்ட வைப்புக்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் செலுத்த வேண்டிய நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியலின் வீதம் 4 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதத்திற்கும் 12 மாதங்களுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலத்தினை கொண்ட வைப்புக்களைப் பொறுத்தவரை 6 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்குமான குறைப்பினைச் செய்தது. இத்திருத்தமானது சந்தை வட்டி வீதங்களின் அசைவினைப் பரிசீலனையில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தொன்றாகும்.

**iv. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் துறைகளுக்கான அரச தூண்டல் பொதியின் கீழான வசதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்**

இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளுக்கான அரச தூண்டல் பொதியினை நடைமுறைப்படுத்தும் ஒரு பகுதியாக இப் பணிப்புரை விடுக்கப்பட்டது. இதற்கமைய, இப்பொதியின் கீழ் வசதிகளைப் பெற எண்ணியிருக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் வினைத்திறன், கம்பனி ஆளுகை மற்றும் மற்றும் நிதியங்களைச் சரியாகப் பயன்படுத்துதல் என்பனவற்றினை மேம்படுத்துவதற்காக குறிப்பிட்ட சில தேவைப்பாடுகளை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**v. அறிக்கையிடும் தேவைப்பாடுகளின் மீது புதிய பணிப்புரைகளை விடுத்தல்**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் காலத்திற்குக் காலம் வங்கியல்லா நிதியியல் கம்பனிகளின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூற்றுகளுக்கான இறுதித் திகதியை குறித்துரைக்கின்ற இப் பணிப்புரை2001 திசெம்பர் 30ஆம் நாளன்று விடுக்கப்பட்டது.

**26.2 புதிய நிதிக் கம்பனிகளுக்கு உரிமமளித்தல் வழங்கலும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதலும்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் புதிய பதிவுகள், இணைப்புக்கள் மற்றும் அமைப்பியல் மாற்றங்களுக்கான விண்ணப்பங்களை தொடர்ந்தும் செயற்படுத்தி வந்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்று நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. மேலும், சில்வரீன் பிணையக் கம்பனி லிமிடெட், பீப்பிள்ஸ் மேர்சன்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட் எனவும், செலான் மேர்சன்ட் லீசிங் பிஎல்சி மக்கள் லீசிங் பினான்ஸ் பிஎல்சி எனவும் பினான்ஸ் அன்ட் கறண்டி கம்பனி லிமிடெட் ஜலன்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட் எனவும் பெயர்களை மாற்றிக் கொள்வதற்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**26.3 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்**

ஒவ்வொரு கம்பனியினதும் நிதியியல் நிலைமைகளையும் நிதியியல் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுகின்றமை பற்றியும் கண்டறியும் பொருட்டு உடனடியாக அறிக்கையிடல் முறைமையினூடாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர அறிக்கைகளினூடாக பெறப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 26.4 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் நியதிப் பரீட்சிப்புக்கள்

நிதிக் கம்பனிகளின் திரவத்தன்மை, சொத்துத்தரம், மூலதன போதுமாந்தன்மை, முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள், இலாபத்தன்மை, கணனி முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் கம்பனி ஆளுகையின் அந்தஸ்து என்பனவற்றினை மதிப்பிட்டுக் கொள்வதற்காக தலத்திலான அனைத்தையும் உள்ளடக்கிய பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2009இல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 14 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. மேலும் அனைத்தையும் உள்ளடக்கிய பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டிராத 17 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வரையறுக்கப்பட்ட செயற்பரப்புக்கள் அதாவது திரவத்தன்மை, கொடுகடன் நிருவாகம் சொத்துக்களின் சொத்துப்பட்டியல், மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் கணனி முறைமைக் கட்டுப்பாடுகள் போன்றவற்றினை மதிப்பிடுவதற்காக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. முழுமையான அனைத்தையும் உள்ளடக்கிய பரீட்சிப்புக்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட அளவிலான பரீட்சிப்புக்கள் இரண்டிலும் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் அறிவிக்கப்பட்டதுடன் குறைபாடுகள் தொடர்பாக அதாவது, முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை, நிதியங்களின் மாற்றல், வருவாய்கள், தரகு/ ஊக்குவிப்புக்களின் கொடுப்பனவு மற்றும் கம்பனி ஆளுகை விடயங்கள் என்பனவற்றை அவசரமாக சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவை பணிக்கப்பட்டன. தொடர்பான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையானது ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பான கரிசனைக்குரிய விடயங்களை குறித்துரைக்கப்பட்ட கால அவகாசமொன்றிற்குள் சீர் செய்து கொள்வதற்கான உறுதியான கடப்பாட்டினைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

### 26.5 பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடுகின்ற நிறுவனங்களைக் கண்காணித்தல்

2009 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடுகின்ற நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, 19 உரிமம் பெற்ற வங்கிகளையும் 34 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளையும் 21 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளையும் உள்ளடக்கி 74 ஆக விளங்கியது. இவ்வாண்டுப் பகுதியில் மூன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஒரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்பன நிதி குத்தகைக்கு விடல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பன்னிரண்டு மாதங்களுக்கிடையில் நிதி குத்தகைக்கு விடும் வியாபாரத்தினை ஆரம்பிக்கத் தவறியதன் காரணமாக அவற்றின் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டன.

### 26.6 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான பணிப்புரைகளின் விடுப்பு

இவ்வாண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நிதி குத்தகைக்கு விடல் சட்டத்தின் நியதிகளில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு பணிப்புரைகளை விடுத்தார். இப்பணிப்புரைகளின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

**i. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கான அரசாங்க தூண்டல் பொதியின் கீழான வசதிகளைப் பெறுவது தொடர்பாக குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.**

இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான அரச தூண்டல் பொதியின் நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக புதிய பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. பணிப்புக்களின் நியதிகளில், பொதியின் கீழ் வசதிகளைப் பெற்றுக் கொள்ள எண்ணியிருக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள், வினைத்திறன், கம்பனி ஆளுகை மற்றும் நிதியினை சரியான முறையில் பயன்படுத்தும் நோக்குடன் குறிப்பிட்ட சில தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**ii. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான வரையறைகள்**

பணிப்புரையானது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்றினால் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்றின் தொடர்பான தரப்பினருக்கும் அதன் பங்குகளுக்கெதிராக அல்லது பங்குகளை கொள்வனவு செய்வதற்காக அதன் துணைக் கம்பனிகளின் பங்குகளுக்கெதிராக, அத்துடன் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது ஊழியர் ஒருவரின் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாத மொன்றின் மீது அச்சிறப்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியினால் வழங்கப்படக்கூடிய கடன் வசதியின் மீது குறித்துரைக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

**iii. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் பணிப்பாளர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கட்டுப்பாடுகள்**

சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்றின் பணிப்பாளர்களுடன் அல்லது அவர்களது உறவினர்களுடன் தொடர்பான குத்தகைக் கம்பனி கொண்டிருக்கக்கூடிய வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் மீது பணிப்புரையானது குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

**iv. கம்பனி ஆளுகை**

உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளுக்கு இசைவாக விடுக்கப்பட்ட பணிப்புரை

2010 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. பணிப்புரையின் முக்கிய அம்சங்களாக பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள், பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு, பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவதற்கான பிரமாணம், சபைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தொழிற்பாடுகளின் முகாமைத்துவம், தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கடமைகளின் வேறாக்கல், சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்துகை என்பன காணப்பட்டன. புதிய தேவைப்பாடுகளுக்கு சுமூகமாக மாறிச் செல்வதற்கு வசதியளிப்பதற்காக பணிப்புரையின் பல்வேறு முக்கிய அம்சங்களின் மீது மாறிச் செல்வதற்கான இடைக்கால ஏற்பாடுகள் பல வழங்கப்பட்டிருந்தன. பணிப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஆரோக்கியமும் வீரியமும் மிக்க செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக கம்பனிகளின் விடயங்களில் பணிப்பாளர் சபையினை மிகப் பொறுப்புடனும் வகைகூறும் தன்மையுடனும் இருக்கச் செய்வதேயாகும்.

### 26.7 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் பரீட்சிப்புக்கள்

2009ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மாதாந்த அடிப்படையில் சிறப்பில்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், ஆறு தலத்திலான அனைத்தையும் உள்ளடக்கிய பரீட்சிப்புக்களையும் வரையறுக்கப்பட்ட செயற்பரப்புக்களைக் கொண்ட மூன்று பரீட்சிப்புக்களையும் நடத்தியது. தலத்திலான அனைத்தையுமுள்ளடக்கிய பரீட்சிப்புக்கள், நிதியியல் செயலாற்றம், குறிப்பிட்ட சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் உள்ளாகும் இடர்நேர்வுகள் மற்றும் நடைமுறையிலுள்ள முறைமை மற்றும் கடப்பாடுகளின் காத்திரமான தன்மையினை மதிப்பீடு செய்தல் என்பனவற்றின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன. சிறப்பாக அடையாளம் காணப்பட்ட துறைகளின் தொழிற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு தலத்திலான வரையறுக்கப்பட்ட அளவிலான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இப் பரீட்சிப்புக்களும் நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான துல்லியமான தன்மையினைக் கண்டறியவும் சிறப்பியல்பு பெற்ற குத்தகைக் கம்பனிகள் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுகின்றமையினை பரிசோதிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

### 26.8 முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம், நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1988 இலிருந்து நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு நிதிக் கம்பனிகள் அக்கம்பனிகளின் கடன் அளித்தோரினால் தொடுக்கப்பட்ட வழக்கின் விளைவாக ஒடுக்கிவிடும் நிலையில் இருக்கின்றன. இதனைத் தொடர்ந்து நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட கம்பனிகளை ஒடுக்கி விடுவதற்கான ஒடுக்கிவிடுவோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒடுக்கிவிடுதலின் கீழுள்ள 11 கம்பனிகளில் 5 கம்பனிகள் 2009 இறுதியில் முடிவுறுத்தப்பட்டன. ஆறு கம்பனிகளின் விடயத்தில் ஒடுக்கிவிடும் செயற்பாடுகள் இவ்வாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தன. இலங்கை மத்திய வங்கி 2009ஆம் ஆண்டில் முறிவடைந்த நிதிக் கம்பனிகளிடமிருந்து அக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்கள் தொடர்பாக ஏறத்தாழ ரூ.41.1 மில்லியனைச் சேகரிக்கக்கூடியதாக இருந்தது. முறிவடைந்த நிதிக் கம்பனிகளின் ஒழுங்கீனமான நடைமுறைகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட சட்ட நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், இக்கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 26.9 நிதி வியாபாரத்தின் அதிகாரமளிக்கப்படாத நடத்தை மீதான நடவடிக்கை

அதிகாரமளிக்கப்படாமல் நிதி வியாபாரத்தில் ஈடுபட்டன எனக் குற்றம் சாட்டப்பட்ட ஆட்கள் தொடர்பான புலனாய்வுகளை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2008இன் பிற்பகுதியில், நாணயச் சபையானது சில ஆட்கள் அதிகாரமளிக்கப்படாமல் நிதியியல் வியாபாரத்தினை கொண்டு நடத்தினார்கள் எனத் தீர்மானித்து நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் நடவடிக்கை எடுக்குமாறு வங்கியல்லா நிதியியல் கம்பனிகளின் மேற்பார்வைத் திணைக்களத்திற்குப் பணித்தது. இந்த ஆட்கள் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கும் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்று வழங்கப்பட்டது. எனினும், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுக தவறிவிட்டமையினால் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அவசியமான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2009ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 65 ஆட்கள் தொடர்பாக முறைப்பாடுகளைப் பெற்றதுடன், திணைக்களம் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆட்கள் தொடர்பான பரீட்சிப்புக்களையும் தொடங்கியது.

மேலும், 2009ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களம் ஏறத்தாழ 850 வாடிக்கையாளர் விசாரணைகள்/ தேவைப்பாடுகளுக்குப் பதிலிறுத்திருக்கிறது. அதேநேரம் பல்வேறு வழிகளில் பொதுமக்களிடம் நிதிகளைச் சேகரித்து அவற்றை மீளச் செலுத்தத் தவறிய குறிப்பிட்ட நிறுவனங்களுக்கெதிராக சில வைப்பாளர்கள்/ முதலீட்டாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தொடுத்திருக்கிறார்கள். அத்தகைய முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உச்ச நீதிமன்றம் நாணயச் சபைக்கு கட்டளையிட்டிருக்கிறது.

### 26.10 நீதிமன்றத்திற்கான உதவி

#### i. கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட் தொடர்பான நடவடிக்கை

2008இன் பிற்பகுதியில் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட் நிதியியல் பிரச்சனைகளை

இணைப்பு XXV-1

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட குத்தகை நிறுவனங்கள் (2009 இறுதியிலுள்ளவாறு)

### நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்**

1. அபான்ஸ் பினான்ரீயல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
6. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
7. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
8. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
9. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
10. கப்பிட்டல் றீச் லீசிங் லிமிடெட்
11. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
12. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
13. சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ரியல்டி லிமிடெட்
14. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
15. சிற்றிசன்ஸ் டிவெலப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்
16. கொமர்சல் கிறடிட் லிமிடெட்
17. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
18. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட்
19. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
20. எல் பீ பினான்ஸ் லிமிடெட்
21. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
22. மர்ச்சன்ட் கிறடிட் ஒப் சிறிலங்கா லிமிடெட்
23. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. நெக்ஸ்ற் பினான்ஸ் லிமிடெட்
25. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் செலான் மேர்ச்சன்ட் லீசிங் பிஎல்சி)
26. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ற் பினான்ஸ் கம்பனி லிமிடெட் (முன்னர் சில்வரின் பினாள்ஸ் கம்பனி லிமிட்டெட்)
27. செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிடெட்
28. சிங்கர் பினான்ஸ் லிமிடெட்
29. சிங்கபுத்ர பினான்ஸ் லிமிடெட்
30. ஸ்வர்ணமகால் பினான்ரீயல் ஸர்விஸஸ் லிமிடெட்
31. ஜலன்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட் (முன்னர் த பினான்ஸ் அன்ட் கரன்டி கம்பனி லிமிடெட்)
32. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
33. த மல்டி பினான்ஸ் கம்பனி லங்கா லிமிடெட்
34. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
35. வெலிபல் பினான்ஸ் லிமிடெட்

நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்

### நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்

**பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனங்கள்**

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. எம்சிபீ பாங்க் லிமிடெட்
2. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
3. ந'னல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
4. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
5. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
6. மக்கள் வங்கி
7. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்
8. இலங்கை வங்கி
9. சம்பத் வங்கி பிஎல்சி
10. செலான் வங்கி பிஎல்சி
11. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
2. டீஎவ்சீசீ பாங்க்
3. ரஜரட்ட அபிவிருத்தி வங்கி
4. றுகுண அபிவிருத்தி வங்கி
5. வயம்ப அபிவிருத்தி வங்கி
6. சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
7. சப்ரகமுவா அபிவிருத்தி வங்கி
8. லங்காபுத்திர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்

**(இ) பிம்புத் லங்கா இன்வஸ்மன்ட் லிமிடெட் தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளும்**

**(ஈ) சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் கம்பனிகள்**

1. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
2. அசற்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
3. கப்பிட்டல் றீச் கிறடிற் லிமிடெட்
4. சீலீஸ் பினான்சல் சேர்விசஸ் லிமிடெட்
5. சிலிங்கோ லீசிங் கொப்பிரேசன் லிமிடெட்
6. கொமர்சல் லீசிங் கம்பனி லிமிடெட்
7. கொப்பிறரட்டீவ் லீசிங் கம்பனி லிமிடெட்
8. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
9. இசுறு பினான்ஸ் கம்பனி லிமிடெட்
10. களுத்தோட்ட இன்வஸ்மன்ட்ஸ் அன்ட் லீசிங் லிமிடெட்
11. கொசிபா லீசிங் கம்பனி லிமிடெட்
12. லங்கா ஓறிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி
13. லிஸ்வின் இன்வஸ்மன்ட் லிமிடெட்
14. எல்ஓஎல்சி மைக்கிறோ கிறடிட் லிமிடெட்
15. மர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி
16. நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி (முன்னர் சிலிங்கோ பினான்ஸ் பிஎல்சி)
17. ஓறியன்ட் பினான்சல் சேர்விசஸ் கோப்பிரேசன் லிமிடெட்
18. பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிடெட்
19. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பாங்க் பிஎல்சி
20. சம்பத் லீசிங் அன்ட் பக்ரறிங் லிமிடெட்
21. செலான் மர்ச்சன்ட் பாங்க் பிஎல்சி

எதிர்நோக்கியதுடன் தமது கொடுகடன் அட்டைக்கெதிராக பிணைய வைப்புக்களைச் செய்திருந்த சில கொடுகடன் அட்டை உடமையாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர். அம்மனுக்களை 18.05.2009இல் பரிசீலித்த உச்ச நீதிமன்றம் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பரீட்சித்து முதலீட்டாளர்கள்/ வைப்பாளர்களுக்காக மீள வைப்புத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பட்டயக் கணக்காளர் மூவரடங்கிய குழுவொன்றினை நியமித்தது. 01.06.2009 அன்று குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையின் நியதிகளின்படி, குழுவின் தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியில், முதன்மைத் தொழிற்பாட்டு அலுவலர் மற்றும் தகுதி வாய்ந்த செயலாளர் ஆகியோருடன் கூடிய செயலகமொன்றினை ஏற்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் பணித்தது. இதற்கமைய, 2009 யூனில் செயலகமொன்று வங்கியல்லா நிதியியல்

மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட்டதுடன், இத் திணைக்களம் உச்ச நீதிமன்றத்தின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைச் செயற்பாடுகள் தொடர்பாக குழுவிற்கு வசதிகளையளித்தது. உச்ச நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் மீள்கொள்வனவுத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் குழுவானது கோல்டன் கீ கிறடிட் கார்ட் லிமிடெட்டின் அலுவலர்களுடனும் சிலிங்கோ குழுமத்துடனும் தொடர்பான மற்றைய கம்பனிகளுடனும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் 51 கூட்டங்களை நடத்தியது. மேலும், குழுவானது கணக்காய்வு நிறுவனமொன்றினால் கோல்டன் கீ கிறடிட் கார்ட் லிமிடெட் தொடர்பான புலனாய்வு கண்காய்வினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், மீள்கொடுப்பனவுத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துகின்றதொரு வழிமுறையாக சிறப்பு நோக்கங்களுக்கான ஒரு நிறுவனத்தினை உருவாக்கி தொடர்பான கம்பனிகளின் பங்குகள், முதலீடுகள் மற்றும் பங்குடமைகளை அதற்கு மாற்றல் செய்வது பற்றி குழுவிற்கு நிதியியல் ஆலோசனைகளை வழங்குவதற்கான கணக்காய்வு நிறுவனமொன்றும் நியமிக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில், கோல்டன் கீ கிறடிட் கார்ட் லிமிடெட்டின் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருந்த சில ஆட்களின் வங்கிக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவிருந்த காசு நிலுவைகளிலிருந்து ரூ.663 மில்லியன் கொண்ட நிதி சேகரிக்கப்பட்டதுடன், கோல்டன் கீ கிறடிட் கார்ட் லிமிடெட்டிற்கும் அதனுடன் தொடர்பான கம்பனிகளுக்கும் சொந்தமான சொத்துக்களை அறவிடுவதுடன் தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

குழுவானது ரூ. 1 மில்லியன் அல்லது அதற்குக் குறைவான பிணைய வைப்புக் கொண்ட மொத்தம் 3,863 அட்டை உடமையாளர்களில் 2,493 அட்டை உடமையாளர்களுக்கு சேர வேண்டிய தொகையில் ஒரு பகுதி மீள் கொடுப்பனவினை விதந்துரைத்தது. இப் பகுதிக் கொடுப்பனவு 31.12.2008 அன்று உள்ளவாறான வைப்பு நிலுவையில் ஒன்றில் 75 சதவீதம் அல்லது ரூ.100,000 இதில் எது குறைந்ததோ அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, இவ்வாண்டுப் பகுதியில் ரூ.241.4 மில்லியன் மீளச் செலுத்தப்பட்டது. ஆண்டின் இறுதியில், இதே அடிப்படையில் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனியின் மற்றைய முதலீட்டாளர்/ வைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் வேலைகளும் செயற்பாட்டிலிருந்தன.

**ii. மற்றைய கம்பனிகள் தொடர்பான நடவடிக்கைகள்**

சிலிங்கோ சிறீராம் கப்பிட்டல் மனேஜ்மன்ட் சேர்விஸ் கம்பனி (பிறைவேட்) லிமிடெட், சிலிங்கோ கப்பிட்டல் இன்வெஸ்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் மற்றும் சிஎல்சி அசெட் மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிடெட் என்பனவற்றின் சில வாடிக்கையாளர்களினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளில் திணைக்களம், அத்தகைய கம்பனிகளினால் நீதவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுத் திட்டத்தினை மதிப்பீடு செய்ததன் மூலம் உதவியளித்தது. மேலும், திணைக்களம் பினான்ஸ் அன்ட் புறெப்பர்டி டெவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் எவ்அன்ட்ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பன தொடர்பான வழக்கு விசாரணைகளிலும், அக்கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவு செய்வதற்கான உத்தேச நம்பிக்கை ஒழுங்குகளை மதிப்பிட்டு அவதானிப்புக்களை மேற்கொண்டதன் வாயிலாக உதவிகளை வழங்கியது.

### 26.11 அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரத்தினை ஒழிப்பதற்கான வரைவுச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள முக்கிய திருத்தங்கள்

அதிகாரமின்றி நிதி வியாபாரங்களை மேற்கொள்வதனையும் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளப்படுவதனையும் ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை வலுப்படுத்தும் பொருட்டு, நிதிக் கம்பனிகள் சட்டத்தினை நீக்குவதற்கும் அதற்குப் பதிலாகவும் கொண்டு வரப்பட விருக்கின்ற சட்ட வரைவிற்கு பல்வேறு வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளன. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரம்/ அதிகாரமின்றி வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பனவற்றை ஒழிப்பதற்கான சட்ட வரைவிற்கு முன்மொழியப்பட்டுள்ள முக்கிய திருத்தங்கள் பின்வருமாறு:

i. அதிகாரமின்றி வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் தண்டனைக்குரியதொரு குற்றமாக்கப்பட்டுள்ளது.

ii. “வைப்புக்களுக்கு” வரைவிலக்கணம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

iii. புலனாய்வு அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

iv. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரம்/ வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலை ஒழிப்பதற்கான அதிகாரங்களை அதிகரித்தல். இது பின்வருவனவற்றிற்கு நீதிமன்றக் கட்டளைகளைப் பெறுதலுக்கான அதிகாரங்களை உள்ளடக்குகிறது.

(அ) சட்டத்திற்கு மாறாக வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்கள்/ ஆட்கள் தொடர்பான தகவல்களையும் விபரங்களையும் வழங்குமாறு ஆளொருவரை நிர்ப்பந்தித்தல்.

(ஆ) அதிகாரமின்றி நிதியியல் வியாபாரங்களை/ வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் ஆட்களின் சொத்துக்களை முடக்குதல்.

(இ) அதிகாரமின்றி நிதியியல் வியாபாரங்களை/ வைப்புக்களை ஏற்றுக்கொள்கையில் ஈடுபடும் ஆளின் கடவுச்சீட்டினை பறிமுதல் செய்தல்

(ஈ) அதிகாரமின்றி நிதி வியாபாரம்/ வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற நிறுவனங்களின் பணிப்பாளர்களது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களைக் கோருதல்.

(உ) அதிகாரமின்றி நிதி வியாபாரம் / வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்கள் தொடர்பான தகவல்களை வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பணிப்பாளர் கேட்டுக் கொள்ளுமிடத்து பொலிஸ் மற்றும் பிரதேசச் செயலாளர்கள் வழங்குதல்.

(ஊ) அதிகாரமின்றி வைப்புக்களைத் திரட்டுவதற்காக விளம்பரப்படுத்துதல்/ அதிகாரமின்றி வைப்புக்களைத் திரட்டுவதற்கான விளம்பரங்களை பிரசுரித்தல் குற்றங்களாக்கப்பட்டுள்ளன.

v. நிறுவனமொன்றின் பெயரில் அல்லது வியாபாரத்தில் "நிதி", "நிதியிடல்" மற்றும் "நிதியியல்" என்ற சொற்களைப் பயன்படுத்துவதனைக் கட்டுப்படுத்தல்/ தடைசெய்தல் அத்துடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றின் சுருக்கப் பெயரை அல்லது முதலெழுத்தினை இன்னொரு கம்பனி பயன்படுத்துவதனைத் தடை செய்தல்.

vi. சட்டத்தின் கீழான தண்டனைகள் அதிகரிக்கப்பட்டதுடன் குற்றத்தினைப் புரிவதற்கு உடந்தையாக இருப்பதும் வரைவுச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகாரமின்றி நிதி வியாபாரங்களை மேற்கொள்வதும் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதும் உயர் நீதிமன்றத்தில் குற்றம் பகரத்தக்க தவறு என சட்டமா அதிபரினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### 26.12 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

நிதி வியாபாரங்களின் அதிகாரமளிக்கப்படாத நடத்தைகள் தொடர்பான விடயங்கள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்விற்கு திணைக்களம் பின்வரும் விதத்தில் தொடர்ந்தும் அறிவூட்டியது.

i. வைப்புக்களின் வரைவிலக்கணங்களை வழங்குகின்ற விளக்க குறிப்புக்கள் பல்வேறு கட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக்கொள்வது உட்பட நிதியியல் வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதற்கான நிறுவனங்களின்/ அமைப்புக்களின் வகைகள் மற்றும் நிதி வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதற்கான மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் என்பனவற்றைக் கொண்ட பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரித்தல்.

ii. பல்வேறுபட்ட முறைகளினூடாக பொதுமக்களிடையே "அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் மற்றும் நிறுவனங்களினால் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டும்" என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்களின் விநியோகம்.

iii. நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் அத்தகைய நிறுவனங்கள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்குமான வசதியினை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியில் அழைப்பு நிலையமொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

iv. பத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், விளக்கவுரைகளும் நடத்தப்பட்டதுடன் பொதுமக்களுக்கான கண்காட்சியில் காட்சிப்படுத்தும் நிலையங்களும் திறக்கப்பட்டன.

### 26.13 நுண்பாக நிதியியல் நிறுவனங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான பொறிமுறையினை நிறுவுதல்

தற்பொழுது நுண்பாக நிதி நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகார சபைகளினூடாக அல்லது ஒழுங்குகளினூடாக ஒழுங்குமுறைப் படுத்தப்படவோ கண்காணிக்கப்படவோ இல்லை. நுண்பாக நிதியியல் துறையின் முக்கியத்துவம் பன்முகத்தன்மை, சிக்கலான தன்மை என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு, நாட்டிலுள்ள நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக சுதந்திரமான அதிகாரசபையொன்றினை ஏற்படுத்துவதற்கு நாணயச் சபை விதந்துரைத்துள்ளது. தனியான சட்டவாக்க ஏற்பாடுகளின் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இத்துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்பொன்றினை வடிவமைப்பதில் கவனஞ் செலுத்தி வருகிறது.

## 27. நலன்புரி

மீளாய்விற்குரிய ஆண்டில், நலன்புரித் திணைக்களம் ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அவர்களது பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர் என மொத்தமாக 10,000 இற்கும் அதிகமானவர்களுக்கு நலன்புரி வசதிகளை வினைத்திறனுடன் வழங்கியது. வழங்கப்பட்ட வசதிகள் மருத்துவ நன்மைகள், உள்ளக மருத்துவ சிகிச்சை, சலுகை ரீதியிலான கடன் வசதிகள், உணவக வசதிகள் மற்றும் ஏனைய துணைப் பணிகளை உள்ளடக்குகின்றன. 2009ஆம் ஆண்டில் நலன்புரித் திணைக்களம் ஊழியர்களின் சார்பில் கடமை நேரம் தவிர்ந்த வேளைகளில் அவர்களுக்கு ஏற்படும் உடற் காயங்கள் மற்றும் இயற்கையான காரணங்கள்தவிர்ந்த மரணம் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் காப்புறுதிப் பூட்கைகள் பெறப்பட்டன.

உண்மைச் சொத்துச் சந்தை விலைகள் மற்றும் வீடுகளின் நிர்மாணச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பை கவனத்திற் கொண்டு வீடமைப்புக் கடன்களுக்கு வழங்கப்பட்ட கடனின் அளவு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, ஏற்கனவே இருக்கும் வீட்டிற்கான திருத்த வேலைகள் மற்றும் விரிவாக்கங்களுக்கு வழங்கப்பட்ட தொகையும் அதிகரிக்கப்பட்டது.

ஊர்திக்கடன்களுக்காக வழங்கப்பட்ட தொகையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2009இல் ஊர்திக் கடன்களை வழங்குவதற்கான பிரமாணத்தின் தகைமையும் இலகுபடுத்தப்பட்டது. வழங்கப்பட்ட வீடமைப்புக்

கடன்களின் எண்ணிக்கை 78ஆக இருக்கையில் ஊர்திக் கடன்களின் மொத்த எண்ணிக்கை 37ஆக விளங்கியது. இவ்விரு வகைக் கடன்களுக்கு மேலதிகமாக அலுவலர் நன்மைக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் மருத்துவக் கடன்கள் உட்பட ஊழியர் சேம நிதியத்தின் உத்தரவாதத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏனைய அலுவலர் நன்மைக் கடன்களின் எண்ணிக்கை 932 ஆகும். குறுகிய காலப்பகுதியினுள் கடன்களை விடுவிப்பதன் மூலம் திணைக்களம் கடன்களின் வினைத்திறன் மிக்க பகிர்ந்தளிப்பை தொடர்ந்து உறுதிப்படுத்தியது. 70 வயதைப் பூர்த்தி செய்த ஓய்வூதியம் பெறுவோர்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களை முழுமையாக அறவிட்டு அவர்களது வீட்டு உறுதியை விடுவிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களத்தால் வழங்கப்பட்ட பணிகளுடன் நன்மை பெறுவோர் மிகவும் திருப்தியடைந்துள்ளனர் என்பதை நலன்புரித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அளவீடு வெளிப்படுத்துகிறது.

ஏனைய துணைப் பணிகளைப் பொறுத்த மட்டில் புகையிரத ஆணைச் சீட்டுக்களை வழங்கும் முறைமை தன்னியக்கப் படுத்தப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் போர் முடிந்ததற்குப் பின்பு நாட்டில் நிலவும் சமாதான நிலைமை காரணமாக புகையிரத ஆணைச் சீட்டுக்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. வழங்கப்பட்ட ஆணைச் சீட்டுக்களின் எண்ணிக்கை 2008இன் 444 இலிருந்து 2009இல் 850இற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

உணவகப் பணிகளை மேம்படுத்தியதன் மூலம் அலுவலர்களுக்கு சுகாதாரமானதும் சுவைமிக்கதுமான உணவை வழங்குவதற்கு திணைக்களம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. அலுவலர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கும் உணவகப் பணிக்கு மேலதிகமாக ஏனைய திணைக்களங்களின் நாளாந்த கூட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்குத் தேவையான அனைத்து கோரிக்கைகளையும் அவற்றிற்கு பூரண திருப்தியளிக்கும் விதத்தில் மேற்கொண்டது.

குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களை மரியாதைப் பண்புடன் சென்று பார்த்ததுடன் போக்குவரத்து மற்றும் தொலைபேசி வசதிகள் போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட அவர்களின் மாதாந்தக் கொடுப்பனவை அதிகரித்ததன்மூலம் பார்வையற்ற குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் அதிகரிக்கப்பட்டன. அலுவலர்களின் நன்மைகருதி நலம் மற்றும் நலம் பேணல் தொடர்பான முக்கிய விடயங்கள் பற்றி மதியபோசன இடைவேளையின்போது விரிவுரைகளை நடத்துதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.